உ

கடவுள்துணை.

தாயுமானசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு.

இஃது

திருத்தணிகை

சரவணப்பெருமாளையர் அவர்கள்

பிரதிக்கிணங்க

பரிசோதிக்கப்பட்டு

உள. புஷ்பரதசெட்டியாரால்

தமது

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோற்பத்தி௵

ட

சிவமயம்.

நூலினுட்பிரிவு

பதிகம்.	பக்கம்.	பதிகம்.	பக்கம்.
திருவருள்விலாசப் பரசிவவணக்கம்	க	சிவன்செயல்	கஉஎ
		தன்னையொருவர்	க௩0
பரிபூரணானந்தம்	௩	ஆசையெனும்	க௩உ
பொருள்வணக்கம்	ச0	எனக்கெனச்செயல்	க௩க
சின்மயானந்தகுரு	கச	மண்டலத்தின்	கச௬
மௌனகுருவணக்கம்	உஉ	பாயப்புலி	கசஅ
கருணாகரக்கடவுள்	உஅ	உடல்பொய்யுறவு	சருகூ
சித்தர்கணம்	௩ரு	ஏசற்றவந்நிலை	கஎ௩
ஆனந்தமானபரம்	௬உ	காடுங்கரையும்	கஎரு
சுகவாரி	௬கூ	எடுத்ததேகம்	எ௬
எங்குநிறைகின்ற பொருள்	ருஎ	முகமெலாம்	கஎ௬
		திடமுறவே	கஎஎ
சச்சிதானந்தசிவம்	௬௪	தன்னை	கஎகூ
தேஜோமயானந்தம்	எக	ஆக்குவை	கஎகூ
சிற்சுகோதயவிலாசம்	எகூ	கற்புறுசிந்தை	கஎகூ
ஆகாரபுவனம்	அ௬	மலைவளர்காதலி	கஅ0
தேன்முகம்	கூஎ	அகிலாண்டநாயகி	கஅ௬
பன்மாலை	கூகூ	பெரியநாயகி	கஅஎ
நினைவொன்று	க0உ	தந்தைதாய்	கஅஅ
பொன்னைமாதரை	க0ரு	பெற்றவட்கே	கஅகூ
ஆரணம்	கஉ0	கல்லாலின்	ககூக
சொல்லற்கரிய	கஉ௩	பராபரக்கண்ணி	ககூ௬
வம்பனேன்	கஉரு	பைங்கிளிக்கண்ணி	உ௩க

நூலினுட்பிரிவு.

பதிகம்.	பக்கம்.	பதிகம்.	பக்கம்.
எந்நாட்கண்ணியில்		நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்	௨௫௮
தெய்வவணக்கம்	௨௩௭	காண்பேனோவென்கண்ணி	௨௬௦
குருமரபின் வணக்கம்	௨௩௮	ஆகாதோவென்கண்ணி	௨௬௩
அடியார்வணக்கம்	௨௪௦	இல்லையோவென்கண்ணி	௨௬௫
யாக்கையைப் பழித்தல்	௨௪௦	வேண்டாவோவென்கண்ணி	௨௬௬
மாதரைப்பழித்தல்	௨௪௨	நல்லறிவேயென்கண்ணி	௨௬௬
தத்துவமுறைமை	௨௪௩	பலவகைக்கண்ணி	௨௬௭
தன்னுண்மை	௨௪௬	நின்றநிலை	௨௬௯
அருளியல்பு	௨௪௬	பாடுகின்றபனுவல்	௨௭௦
பொருளியல்பு	௨௪௮	ஆனந்தக்களிப்பு	௨௭௦
ஆனந்தவியல்பு	௨௫௦	அகவல்	௨௭௫
அன்புநிலைமை	௨௫௧	வண்ணம்	௨௭௭
அன்பர்நெறி	௨௫௩		
அறிஞருரை	௨௫௪		
நிற்குநிலை	௨௫௫		

கடவுள் துணை.

தாயுமானசுவாமிகளது

சரித்திரச்சுருக்கம்.

தென்னாடுகள் பலவற்றினும் சிறந்து விளங்குகின்ற சோழமண்டலத்திலே உள்ள வேதாரணியமென்னும் வடமொழிப்பெயரையுடைய திருமறைக்காடாகிய சிவஸ்தலத்திலே சற்றேறக்குறைய - ௧௮௦ வருஷத்துக்கு முன்பாக வேளாண்குலதிலகராயும், குருலிங்கசங்கமபத்தியிலே சிறந்தவராயும், கேடிலியப்பப் பிள்ளையென்பவரொருவர் இருந்தார். அவராலே அந்தச் சிவஸ்தலவிசாரணை நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அக்காலத்திலே திரிசிரபுரத்திலே அரசாட்சிசெய்துகொண்டிருந்த விஜயரகுநாத சொக்கலிங்க நாயகரென்பவர் கேடிலியப்பப்பிள்ளையினுடைய நற்குணங்களையும் கணக்குவல்லமையையும் சிலர் சொல்லக்கேட்டு அவரை அழைப்பித்துப் பரீக்ஷித்து அவருக்குப் பெரிய சம்பிரதியுத்தியோகங்கொடுத்துத் தம்மிடத்தே வைத்துக்கொ

ண்டார். அந்தக் கேடிலியப்பப்பிள்ளையானவர் சந்ததியில்லாதவரா யிருந்த தமையனாருக்குத் தம்முடைய ஒரே பேறாகிய சிவசிதம்பரபிள்ளை யென்னும் குமாரனைக் கொடுத்துவிட்டிருந்ததினால் தமக்குச் சந்ததி உண்டாக அருள்செய்யும் படிக்கு அந்தத் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற தாயுமானேசுரரைத் தெரிசித்துக் கொண்டுவந்தார். அக்கடவுளது திருவருளினாலே ஓராண்பிள்ளை பிறந்தது. அதுகண்டு தகப்பனார் மகிழ்கூர்ந்து அக்கடவுளுக்குக் காணிக்கைமுதலானவை செலுத்திக் குமாரனுக்குத் தாயுமானவரென்கிற அக்கடவுளது பெயரைக்கொடுத்தார். அந்தத்தாயுமானவர் தந்தகப்பனாருக்கு மிகவும் மனமகிழ்ச்சியுண்டாகும்படிக்கு அவர்செய்யு முயற்சியளவிற்கு அதிகமான கீர்வாணம் தமிழ்முதலிய கல்விப்பயிற்சியிலே சிறந்தவரானார். உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் இவைமுதலிய நற்குணங்களெல்லாம் அவரோடுகூடவே வளர்ந்தன. ஓர் அஞ்ஞானியினது மனமானது நிலையில்லாத செல்வப்பொருளை எப்படி விரும்புமோ அப்படியே இவரது மனமானது தத்துவப்பொருளையே விரும்பினின்



றது. அப்படி யிருக்கையில் திருமூலநாயனார் மரபிலே எழுந்தருளிய மௌனதேசிகர் தாயுமானவரைச் சந்தித்து அவரது அதிதீவிரபக்குவத்தைக்கண்டு வேதாகமங்களின் முடிவான தத்துவப்பொருளை உபதேசித்தருளினார். அதுமுதலாகத் தாயுமானவர் தமது ஞானாசாரியரிடத்தே மிகுந்த பத்தி யுடையவராய் அவ்வுபதேசப்பொருளைச் சிந்தித்துத் தெளிந்து தினந்தோறும் தக்ஷிணாமூர்த்தி சன்னிதியிலே நிஷ்டை செய்து கொண்டு வந்தார். பின்பு தாயுமானவருக்குத் தகப்பனார் தேகவியோகத்தை அடைதலினாலே அவரது லௌகிகத்தொழிலை அரசனது வேண்டுதல்பற்றி அதில் விருப்பமில்லாதவரா யிருந்தும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அரசனானவன் அவரை முதலிலே ஞானவானென்று அறிந்திலனாகினும் கேடிலியப்பப் பிள்ளையினும் இவர் யோக்கியரென்று நன்குமதித்து மிகவுஞ் சிறப்புச்செய்து வைத்திருந்தான். ஆனால் கழைக்கூத்தனுடைய கருத்து உடல்காப்பிலும் அவனது செய்கை கூத்திலும் எப்படி வைக்கப்பட்டிருக்குமோ அப்படியே தாயுமானவரது கருத்துச் சிவத்திலும் அவரது செய்கை லௌகிகத்

திலும் வைக்கப்பட்டிருந்தன. இப்படிக்குச் சில நாள்கள்சென்றன. மேல் அரசன் அவரிடத்தேவி ளங்கிய அபூர்வமான சில செய்கைகளைக் கண்டு அவரதுமகிமையை அறிந்துகொண்டான். உட னே விவேகியாகிய அவ்வரசனுக்கு அவரைக்கு றித்து அச்சமும் அன்பும் உண்டாதலால் அவ ரை அழைப்பித்து உயர்ந்த ஆதனத்தின்மேல் இருந்தருளப்பண்ணி சுவாமீ அடியேன் இதுவ ரையிலே உமது மகிமையைக்கண்டுகொள்ளமா ட்டாதவனா யிருந்ததனாலே உமக்கு ஊழியம் செய்யத்தக்க நான் உம்மை எனது ஊழியத்திலே வைத்திருந்தேன். ஆயினும் இது பெரிய குற்ற மாகவின் கிருபாமூர்த்தியாகிய தேவரீர் இக்குற் றத்தைப் பொறுத்தருளி இன்றுமுதலாக அடி யேனால் ஆகவேண்டியவற்றைச் செய்வித்துக் கொண்டு நிஷ்டைக்குக் குறைவுபடாமல் இரு ந்தருளலாமென்று வேண்டுதல்செய்தான். அது கேட்டவுடனே தாயுமானவர் திருவுளமகிழ்ந்து அன்றுமுதலாக அலைவற்ற ஞானயோகத்திலே இருந்துகொண்டு கடவுளையும் குருவையும் அற் புத சின்மய மதுரமான தமிழ்ச்செம்பாடல்க ளைப் பாடித் துதிசெய்துகொண்டுவந்தார். இப்



படியிருக்கையில் அவ்வரசன் இறந்துபோய்வி ட்டான். அவ்வரசன் மனைவி தாயுமானவரது திருமேனியின்கண்ணேயுள்ள அழகைக்கேள் விப்பட்டு அவரை அழைப்பித்துக் கண்களிகூர நோக்கிக் கேள்விப்பட்டவளவினும் அதிகமாய் விளங்குதலால் உளமருண்டு அவரைத் தன்னர சாட்சிக்குத் தலைவராக்கவும் தன்னால் விரும்பப் பட்ட தகாதசெய்கைக்கு உடன்படுத்தவும், தா ன்கொண்ட கருத்தைக் குறிப்பித்தாள். அக்கரு த்தை அறிந்த தாயுமானவரோவென்றால் உட னே ஓருபாயவழியினாலே அங்கிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு அவள் அரசாட்சியினெல் லையைக் கடந்து இராமநாதபுரத்துச் சீமைக்கு எழுந்தருளினார். இதுசெய்தி சிவசிதம்பரபிள் ளையின் செவியை அடைந்ததனாலே அவரும் சி றியதாய் குமாரராகிய அருளையப்பிள்ளையும் தே டிக் கண்டுபிடித்துச் சந்ததிவிளங்க வேண்டுமெ ன்னும் கருத்தைக்கொண்டு திருக்கலியாணம் செய்யும்படி முயற்சிசெய்தார்கள். தாயுமான சுவாமிகளுக்கு அதுகாரியத்திலே சிறிதும் திரு வுளமில்லாதிருந்தும் தமையனரது வேண்டுதலி ன் மிகுதியினாலே உடன்படவேண்டியதாயிற்று.

உடனே பத்தினியார் ஓராண்பிள்ளையைப் பெற்றுவைத்துச் சிவபதம் அடைந்தார். அந்தப்பிள்ளைக்குக் கனகசபாபதிப்பிள்ளையென்றுபெயர் இடப்பட்டது. அதுமுதலாகத் தாயுமானசுவாமிகள் மௌனத்தோடு பரிசுத்த சிவஸ்தலங்தோறும் சஞ்சரித்துக்கொண்டு இவ்வுலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் மெய்ஞ்ஞான ஒளியைப்பெற்று அஞ்ஞானவிருளினின்று நீங்கி உய்யும்படிக்குப் பலவகைப்பட்ட அற்புதமான பாடல்களைச்செய்தருளினார். அருளையரென்பவரும் அவரிடத்தே தத்துவோபதேசம் பெற்றுக்கொண்டு அவரைவிட்டு நீங்காமல் பணிவிடை செய்து கொண்டு வந்தார்.

தாயுமானசுவாமிகள் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய சிவத்திலே கலந்தபின்பு அருளையசுவாமிகள் அகவற்பாவினாலே குருவைத் துதித்துச் சிவயோகத்திலேயிருந்து தமக்குப்பின் பக்குவப்பட்டுவரும் அடியார்களுக்கு அனுக்கிரகஞ்செய்யும்படி ஷை கனகசபாபதிப்பிள்ளைக்கு அபிஷேகம் செய்தருளினார். இக்குரு பரம்பரையில் தஞ்சைமாநகரத்துக்குக் கீழ்பால் அன்னப்பன்பேட்டையிலுள்ள மடத்



தில் இப்போது இருக்கின்ற அம்பலவாணசுவாமிகளுடைய அடியார்கூட்டத்திலே ஒருவராகியும் அந்த ஆதீனத்துக்கு உரியவராகியும் உள்ள எடுத்துக்கட்டி அருணாசலநாயனாரவர்களிடத்திலிருந்த ஆதீன புஸ்தகத்தையும் மற்றும் சில புஸ்தகங்களையும் அழைப்பித்து ஒப்பிட்டு அச்சிற் பதிப்பித்தேனென்றறிக.

தி. சு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தாயுமானசுவாமிகள் பாடல்.

திருவருள்விலாசப்பரசிவவணக்கம்.

ஆசிரியவிருத்தம்.

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
    யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
    யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
    தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
    தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
    வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
    யென்றைக்குமுள்ளதெதுமேற்

சகருல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம். (௯)

ஊரனந்தம்பெற்ற பேரனந்தஞ்சுற்று
முறவனந்தம்வினையினு
லுடலனந்தஞ்செயும் வினையனந்தங்கருத்
தோவனந்தம்பெறறபேர்
சீரனந்தஞ்சொர்க்க நரகமுமனந்தநற்
றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமு மனந்தமதனுல் ஞான
சிற்சத்தியாலுணர்ந்து
காரனந்தங்கோடி வருஷித்ததெனவன்பர்
கண்ணும்விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்த மழைபொழியுமுகிலெனக்
கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசி மறையனந்தஞ்சொலும்
பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவானந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம். (௨)

அத்துவிதவத்துவைச் சொற்ப்ரகாசத்தனியை
யருமறைகண்முரசறையவே
யறிவினுக்கறிவாகி யானந்தமயமான
வாதியையநாதியேக

தத்துவசொரூபத்தை மதசம்மதம்பெறாச்
  சாலம்பரகிதமான
சாசுவதபுட்கல நிராலம்பவாலம்ப
  சாந்தபதவ்யோமநிலையை
நித்தநிர்மலசகித நிஷ்ப்ரபஞ்சப்பொருளை
  நிர்விஷயசுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய்நின்றொளிர்
  நிரஞ்சனநிராமயத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்திணின்றிலகு
  திவ்யதேசோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரமதானபர
  தேவதையையஞ்சலிசெய்வாம். (௫)

பரிபூரணாநந்தம்.

வாசாகயிங்கரிய மன்றியொருசாதன
  மனோவாயுநிற்கும்வண்ணம்
வாலாயமாகவும் பழகியறியேன்றுறவு
  மார்க்கத்தினிச்சைபோல
நேசாநுசாரியாய் விவகரிப்பேனந்த
  நினைவையுமறந்தபோது
நித்திரைகொள்வேன்றேக நீங்குமெனவெண்ணிலோ
  நெஞ்சந்துடித்தயருவேன்
பேசாதவானந்த நிட்டைக்குமறிவிலாப்
  பேதைக்கும்வெகுதூரமே

பேய்க்குணமறிந்திந்த நாய்க்குமொருவழிபெரிய
பேரின்பநிட்டையருள்வாய்
பாசாடவிக்குளே செல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகுதேவதருவே
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (க)

தெரிவாகவூர்வன நடப்பனபறப்பன
செயற்கொண்டிருப்பனமுதற்
றேகங்களத்தனையு மோகங்கொள்பௌதிகஞ்
சென்மித்தவாங்கிறக்கும்
விரிவாயபூதங்க ளொன்றொடொன்றாயழியு
மேற்கொண்டசேடமதுவே
வெறுவெளிநிராலம்ப நிறைசூன்யமுபசாந்த
வேதவேதாந்தஞானம்
பிரியாதபேரொளி பிறக்கின்றவருளருட்
பெற்றோர்கள்பெற்றபெருமை
பிறவாமையென்றைக்கு மிறவாமையாய்வந்து
பேசாமையாகுமெனவே
பரிவாயெனக்குநீ யறிவிக்கவந்ததே
பரிபாககாலமலவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (உ)

ஆராயும்வேளையிற் பிரமாதியாலுலு
மையவொருசெயலுமில்லை

யமைதியொடுபேசாத பெருமைபெறுகுணசந்த்ர
ராமெனவிருந்தபேரு
ரோகவொருகோப மொருவேளைவரவந்த
நிறைவொன்றுமில்லாமலே
நெட்டுயிர்த்துத்தட் டழிந்துளறுவார்வசன
நிர்வாகனொன்றபேரும்
பூராயமாயொன்று பேசுமிடமொன்றைப்
புலம்புவார்சிவராத்திரிப்
போதுதுயிலோமென்ற விரதியருமறிதுயிற்
போலேயிருந்துதுயில்வார்
பாராதிதனிலுள்ள செயலெலாமுடிவிலே
பார்க்கினின்செயலல்லவோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௩)

அண்டபகிரண்டமும் மாயாவிகாரமே
யம்மாயையில்லாமையே
யாமெனவுமறிவுமுண் டப்பாலுமறிகின்ற
வறிவினையறிந்துபார்க்கி
னெண்டிசைவிளக்குமொரு தெய்வவருளல்லாம
லில்லையெனுநினைவுமுண்டிங்
கியானெனலதறத்துரிய நிறைவாகிநிற்பதே
யின்பமெனுமன்புமுண்டு
கண்டனவெலாமல்ல வென்றுகண்டனைசெய்து
கருவிகரணங்களோயக்

கன்றூடுமொருகண மிருக்கவென்றுற்பாழ்த்த
  கர்மங்கள்போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தாவெனும்பெயர்ப்
  பக்ஷராளிச்சிப்பனோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே. (௪)

சந்தரமுமெனதுசெய லினதுசெயலியானெனுந்
  தன்மைநினையன்றியில்லாத்
தன்மையால்வேறலேன் வேதாந்தசித்தாந்த
  சமரசசுபாவமிதுவே
யிந்தநிலைதெளியநா னெக்குருகிவாடிய
  வியற்கைதிருவுளமறியுமே
யிந்நிலையிலேசற் றிருக்கவென்றாண்மடமை
  யிதசத்ருவாகவந்து
சிந்தைகுடிகொள்ளுதே மலமாயைகன்மந்
  திரும்புமோதொடுவழக்காய்ச்
சென்மம்வருமோவெனவும் யோசிக்குதேமனது
  சிரத்தையெனும்வாளுமுதவிப்
பந்தமறமெய்ஞ்ஞான தீரமுந்தந்தெனைப்
  பாதுகாத்தருள்செய்குவாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே. (௫)

பூதலயமாகின்ற மாயைமுதலென்பர்சிலர்
  பொறிபுலனடங்குமிடமே

பொருளென்பர்சிலர்சரண முடிவென்பர்சிலர்குணம்
போனவிடமென்பர்சிலபேர்
நாதவடிவென்பர்சிலர் விந்துமயமென்பர்சிலர்
நட்டநடுவேயிருந்த
நாமென்பர்சிலருருவ மாமென்பர்சிலர்கருதி
நாடிலருளென்பர்சிலபேர்
பேதமறவுயிர்கெட்ட நிலையமென்றிடுவர்சிலர்
பேசினருவென்பர்சிலபேர்
பின்னுமுன்னுங்கெட்ட சூனியமதென்பர்சிலர்
பிறவுமேமொழிவரிவையாற்
பாதரசமாய்மனது சஞ்சலப்படுமலாற்
பரமசுகநிஷ்டைபெறுமோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௯)

அந்தகாரத்தையோ ரகமாக்கிமின்போலென்
னறிவைச்சுருக்கினவரா
ரவ்வறிவுதானுமே பற்றினதுபற்று
யழுந்தவுந்தலைமீதிலே
சொந்தமாயெழுதப் படித்ததார்மெய்ஞ்ஞான
சுகநிஷ்டைசேராமலே
சோற்றுத்துருத்தியைச் சதமெனவுமுண்டுண்டு
தூங்கவைத்தவரார்கொலோ
தந்தைதாய்முதலான வகிலப்ரபஞ்சந்
தனைத்தந்ததெனதாசையோ

தன்னையேநோவனோ பிறரையேநோவனோ
  தற்காலமதைநோவனோ
பந்தமானதுதந்த வினையையேநோவனோ
  பரமார்த்தமேதுமறியேன்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே. (எ)

வாராதெலாமொழிய வருவனவெலாமெய்த
  மனதுசாக்ஷியதாகவே
மருவுநிலைதந்ததும் வேதாந்தசித்தாந்த
  மரபுசமரசமாகவே
பூராயமாயுணர ஆகமதுதந்ததும்
  பொய்யுடலைநிலையன்றெனப்
போதநெறிதந்ததுஞ் சாசுவதவானந்த
  போகமேவீடென்னவே
நீராளமாயுருக வுள்ளன்புதந்தது
  நின்னதருளின்னுமின்னு
நின்னையேதுணையென்ற வென்னையேகாக்கவொரு
  நினைவுசற்றுண்டாகிலோ
பாராதியறியாத மோனமேயிடைவிடாப்
  பற்றாகநிற்கவருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
  பரிபூரணானந்தமே. (அ)

ஆழாழிகரையின்றி நிற்கவிலையோகொடிய
  வாலமமுதாகவிலையோ

வக்கடலின்மீதுவட வனலிற்கவில்லையோ
வந்தரத்தகிலகோடி
தாழாமணிலைநிற்க வில்லையோமேருவுந்
தனுவாகவளையவில்லையோ
சப்தமேகங்களும் வச்ரதரனாணையிற்
சஞ்சரித்திடவில்லையோ
வாழாதுவாழவே யிராமனடியாற்சிலையு
மடமங்கையாகவில்லையோ
மணிமந்த்ரமாதியால் வேண்டுசித்திகளுலக
மார்க்கத்தில்வைக்கவில்லையோ
பாழானவென்மனங் குவியவொருதந்திரம்
பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௧)

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங்கடன்மீதிலே
யாணைசெலவேநினைவ ரளகேசனிகராக
வம்பொன்மிகவைத்தபேரு
நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரு
நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற் பசிதீரவுண்பது
முறங்குவதுமாகமுடியு

முன்னாதேபோதுநா னென்னக்குளறியே
யொன்றைவிட்டொன்றுபற்றிப்
பாசக்கடற்குளே வீழாமன்மனதற்ற
பரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௧0)

பொருள்வணக்கம்.

நித்தியமாய்நிர்மலமாய் நிட்களமாய்நிராமயமாய்
நிறைவாய்நீங்காச்
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச் சமீபமுமாய்த்துரியநிறை
சுடராயெல்லாம்
வைத்திருந்ததாரகமா யானந்தமயமாகி
மனவாக்கெட்டாச்
சித்துருவாய்நின்றவொன்றைச் சுகாரம்பப்பெருவெளி
யைச் சிந்தைசெய்வாம். (௧)

யாதுமனநினையுமந்த நினைவுக்குநினைவாகி
யாதின்பாலும்
பேதமறநின்றுயிருக் குயிராகியன்பருக்கே
பேரானந்தக்
கோதிலமுதூற்றரும்பிக் குணங்குறியொன்றறத்தன்னை
க் கொடுத்துக்காட்டுந்
நீதில்பராபரமான சித்தாந்தப்பேரொளியைச்
சிந்தைசெய்வாம். (௨)

பெருவெளியாயைம்பூதம் பிறப்பிடமாய்ப்பேசாத
பெரியமோனம்
வருமிடமாய்மனமாதிக் கெட்டாதபேரின்ப
மயமாய்ஞானக்
குருவருளாற்காட்டிடவு மன்பரைக்கோத்தறவிழுங்கிக்
கொண்டப்பாலுந்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப் பொருளி
னையாஞ் சிந்தைசெய்வாம். (௩)

இகபரமுமுயிர்க்குயிரா யானெனதற்றவருறவை
யெந்நாளுஞ்
சுகபரிபூரணமான நிராலம்பகோசரத்தைத்
துரியவாழ்வை
யகமகிழவருந்தேனை முக்கனியைக்கற்கண்டை
யமிர்தைநாடி
மொகுமொகெனவிருவிழிநீர் முத்திறைப்பக்கரமலர்க
ண் முகிழ்த்துநிற்பாம். (௪)

சாதிகுலம்பிறப்பிறப்புப் பந்தமுத்தியருவுருவத்
தன்மைநாம
மேதுமின்றியெப்பொருட்கு மெவ்விடத்தும்பிரிவறநி
ன் றியக்கஞ்செய்யுஞ்
சோதியைமாத்தூவெளியை மனதவிழநிறைவான
துரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத் திருவருளேநினைவாகச்
சிந்தைசெய்வாம். (௫)

இந்திரசாலங்கனவு கானலினீரொனவுலக
மெமக்குத்தோன்றச்
சந்ததமுஞ்சிற்பரத்தா லழியாததற்பரத்தைச்
சார்ந்துவாழ்க
புந்திமகிழுறநாளுந் தடையறவானந்தவெள்ளம்
பொலிகவென்றே
வந்தருளுங்குருமௌனி மலர்த்தாளையனுதினமும்
வழுத்தல்செய்வாம். (சு)

பொருளாகக்கண்டபொரு ளெவைக்குமுதற்பொருளா
கிப் போதமாகித்
தெருளாகிக்கருதுமன்பர் மிடிதீரப்பருகவந்த
செழுந்தேனாகி
யருளானோர்க்ககம்புறமென் றன்னதபூரணவா
னந்தமாகி
யிருடீரவிளங்குபொரு ளியாதந்தப்பொருளினையா
மிறைஞ்சிநிற்பாம். (எ)

அருமறையின்சிரப்பொருளாய் விண்ணவர்மாமுனிவர்
சித்த ராதியானோர்
தெரிவரியபூரணமாய்க் காரணங்கற்பனைகடந்த
செல்வமாகிக்
கருதரியமலரின்மண மௌளிலெண்ணெயுடலுயிர்போ
ற் கலந்தெந்நாளுந்
துரியநடுவூடிருந்த பெரியபொருளியாததனைத்
தொழுதல்செய்வாம். (அ)

விண்ணாதிபூதமெல்லாந் தன்னகத்திலடக்கிவேறு
வெளியாய்ஞானக்
கண்ணாரக்கண்டவன்பர் கண்ணூடேயானந்தக்
கடலாய்வேறொன்
றெண்ணாதபடிக்கிரங்கித் தானாகச்செய்தருளு
மிறையையுன்றன்
றண்ணாருஞ்சாந்தவரு டனைநினைந்துகரமலர்க
டலைமேற்கொள்வாம். (க)

விண்ணிறைந்தவெளியாயென் மனவெளியிற்கலந்தறி
வாம் வெளியினூடுந்
தண்ணிறைந்தபேரமுதாய்ச் சதானந்தமானபெருந்
தகையேநின்பா
லுண்ணிறைந்தபேரன்பா லுள்ளுருகிமொழிகுளறி
யுவகையாகிக்
கண்ணிறைந்தபுனலுகுப்பக் கரமுகிழ்ப்பநின்னருளைக்
கருத்தில்வைப்பாம். (க0)

(வேறு.)

ஆதியந்தங்காட்டாதமுதலாயெம்மை
யடிமைக்காவளர்த்தெடுத்தவனைபோல
நீதிபெருங்குருவாகிமனவாக்கெட்டா
நிச்சயமாய்ச்சொச்சமதாய்நிமலமாகி
வாதமிடுஞ்சமயநெறிக்கரியதாகி
மௌனத்தோர்பால்வெளியாம்வயங்காநின்ற

சோதியையென்னுயிர்த்துணையைநாடிக்கண்ணீர்
சொரியவிருகரங்குவித்துத்தொழுதல்செய்வாம்.

அகரவுயிரொழுத்தனைத்துமாகிவேறு
யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகியல்லவாகிப்
பரமாகிச்சொல்லரியபான்மையாகித்
துகளறுசங்கற்பவிகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச்சுத்தமாகி
நிகரில்பசுபதியானபொருளைநாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பானினைதல்செய்வாம். (கஉ)

சின்மயானந்தகுரு.

அங்கைகொடுமலர்தூவி யங்கமதுபுளகிப்ப
வன்பினாலுருகிவிழிநீ
ராறுகவாராத முத்தியினதாவேச
வாசைக்கடற்குண்மூழ்கிச்
சங்கரசுயம்புவே சம்புவேயெனவுமொழி
தழுதழுத்திடவணங்குஞ்
சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கனேனையுந்
தண்ணருள்கொடுத்தாள்வையோ
துங்கமிகுபக்குவச் சனகன்முதன்முனிவோர்க
டொழுதருகில்வீற்றிருப்பச்

சொல்லரியநெறியையொரு சொல்லாலுணர்த்தியே
  சொரூபானுபூதிகாட்டிச்
செங்கமலபீடமேற் கல்லாலடிக்குள்வளர்
  சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
  சின்மயானந்தகுருவே. (க)

ஆக்கையெனுமிடிகரையை மெய்யென்றடாவிஞ
  ஞானத்துவிதவாஞ்சையாத
லரியகொம்பிற்றேனை முடவனிச்சித்தபடி
  யாகுமறிவவிழவின்பந்
தாக்கும்வகையேதிநாட் சரியைகிரியாயோக
  சாதனம்விடுத்ததெல்லாஞ்
சன்மார்க்கமல்லவிவை நிற்கவென்மார்க்கங்கள்
  சாராதபேரறிவதாய்
வாக்குமனமணுகாத பூரணப்பொருள்வந்து
  வாய்க்கும்படிக்குபாயம்
வருவித்துவட்டாத பேரின்பமானசுக
  வாரியினைவாய்மடுத்துத்
தேக்கித்திளைக்கநீ முன்னிற்பதென்றுகாண்
  சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
  சின்மயானந்தகுருவே. (உ)

ஔவியமிருக்கநா னென்கின்றவாணவ
  மடைந்திட்டிருக்கலோய

மருளின்மைகூடக் கலந்துள்ளிருக்கமே
லாசாபிசாசமுதலாம்
வெவ்வியகுணம்பல விருக்குமென்னறிவூடு
மெய்யனீவீற்றிருக்க
விதியில்லையென்னிலோ பூரணனெனும்பெயர்
விரிக்கினுரைவேறுமுளதோ
கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினாற்
கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை
கடிதகலவலியவரு ஞானசஞ்சீவியே
கதியானபூமிநடுவுட்
செவ்விதின்வளர்ந்தோங்கு திவ்யகுணமேருவே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (ரு)

ஐவகையெனும்பூத மாதியைவகுத்தது
ளசரசரபேதமான
யாவையும்வகுத்துநல் லறிவையும்வகுத்துமறை
யாதிநூலையும்வகுத்துச்
சைவமுதலாவளவில் சமயமும்வகுத்துமேற்
சமயங்கடந்தமோன
சமாசம்வகுத்தநீ யுன்னைநானணுகவுந்
தண்ணருள்வகுக்கவிலையோ
பொய்வளருநெஞ்சினர்கள் காணுதகாட்சியே
பொய்யிலாமெய்யரறிவிற்

போதபரிபூரண வகண்டிதாகாரமாய்ப்
போக்குவரவற்றபொருளே
தெய்வமறைமுடிவான பிரணவசொரூபியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௪)

ஐந்துவகையாகின்ற பூதபேதத்தினு
லாகின்றவாக்கைநீர்மே
லமர்கின்றகுமிழியென நிற்கின்றதென்னநா
னறியாதகாலமெல்லாம்
புந்திமகிழுறவுண் டுடுத்தின்பமாவதே
போந்தநெறியென்றிருந்தேன்
பூராயமாகநின தருள்வந்துணர்த்தவிவை
போனவழிதெரியவில்லை
யெந்தநிலைபேசினு மிணங்கவிலையல்லா
லிறப்பொடுபிறப்பையுள்ளே
யெண்ணினெஞ்சது பகீரெனுந்துயிலுரு
திருவிழியுமிரவுபகலாய்ச்
செந்தழலின்மெழுகான தங்கமிவையென்கொலோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௫)

காரிட்டவாணவக் கருவறையிலறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போற்

கட்டுண்டிருந்தவெமை வெளியில்விட்டெல்லாங்
காப்பிட்டதற்கிசைந்த
பேரிட்டுமெய்யென்று பேசுபாழ்ம்பொய்யுடல்
பெலக்கவிளையமுதமூட்டிப்
பெரியபுவனத்தினிடை போக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்
டேரிட்டதன்சுருதி மொழிதப்பினமனைவிட்
டிடருறவுறுக்கியிடர்தீர்த்
திரவுபகலில்லாத பேரின்பவீட்டினி
லிசைந்துதுயில்கொண்மினென்று
சீரிட்டவுலகன்னை வடிவானவெர்ளைதயே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௬)

கருமருவுகுகையனைய காயத்தினடுவுட்
களிம்புதோய்செம்பனையயான்
காண்டகவிருக்கநீ ஞானவனன்மூட்டியே
கனிவுபெறவுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின் னருளானகுளிகைகொடு
பரிசித்துவேதிசெய்து
பத்துமாற்றுத்தங்க மாக்கியேபணிகொண்ட
பக்ஷத்தையென்சொல்லுகே
னருமைபெறுபுகழ்பெற்ற வேதாந்தசித்தாந்த
மாதியாமந்தமீது

மத்தூவிதநிலையரா யென்னையாண்டுன்னடிமை
யானவர்களறிவினூடுந்
திருமருவுகல்லா லடிக்கீழும்வளர்கின்ற
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (எ)

கூடுதலுடன்பிரித லற்றுநிர்த்தொந்தமாய்க்
குவிதலுடன்விரிதலற்றுக்
குணமற்றுவரவினொடு போக்கற்றுநிலையான
குறியற்றுமலமுமற்று
நாடுதலுமற்றுமேல் கீழ்நடுப்பக்கமென
நண்ணுதலுமற்றுவிந்து
நாதமற்றைவகைப் பூதபேதமுமற்று
ஞாதுருவின்ஞானமற்று
வாடுதலுமற்றுமே லொன்றற்றிரண்டற்று
வாக்கற்றமனமுமற்று
மன்னுபரிபூரணச் சுகவாரிதன்னிலே
வாய்மடுத்துண்டவசமாய்த்
தேடுதலுமற்றவிட நிலையென்றமௌனியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (அ)

தாராதவருளெலாந் தந்தருளமௌனியாய்த்
தாயனையகருணைகாட்டித்

தாளிணையென்முடிசூட்டி யறிவிற்சமாதியே
சாசுவதசம்ப்ரதாய
மோ ராமன்மந்திரமு மூன்றுமன்முத்திநிலை
யொன்ரேமுடிரண்டெனும
லொளியெனவும்வெளியெனவு முருவெனவுநாதமா
மொலியெனவுமுணர்வுருமற்
பாராதுபார்ப்பதே யேதுசாதனமற்ற
பரமவனுபூதிவாய்க்கும்
பண்பென்றுணர்த்தியது பாராமலந்நிலை
பதிந்தநின்பழவடியர்தஞ்
சிராயிருக்கநின தருள்வேண்டுமையனே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (௬)

போதமாயாதிநடு வந்தமுமிலாததாய்ப்
புனிதமாயவிகாரமாய்ப்
போக்குவரவில்லாத வின்பமாய்நின்றநின்
பூரணம்புகலிடமதா
வாதரவுவையாம லறிவினைமறைப்பதுநி
னருள்பின்னுமறிவின்மைதீர்த்
தறிவித்துநிற்பதுநி னருளாகிலெளியனேற்
கறிவாவதேதறிவிலா
வேதம்வருவகையேது வினையேதுவினைதனக்
கீடானகாயமேதென்

ஸிச்சாசுதந்தரஞ் சிறிதுமிலையிகபர
  மிரண்டினுண்மலைவுதீரத்
தீதிலருள்கொண்டினி யுணர்த்தியெனையாள்வையோ
  சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
  சின்மயானந்தகுருவே. (கo)

பத்திநெறிநிலைநின்று நவகண்டபூமிப்
  பரப்பைவலமாகவந்தும்
பரவையிடைமூழ்கியு நதிகளிடைமூழ்கியும்
  பசிதாகமின்றியெழுநா
மத்தியிடைநின்றமுதிர் சருகுபுனல்வாயுவினை
  வன்பசிதனக்கடைத்து
மௌனத்திருந்துமுயர் மலைநுழைவுபுக்கியு
  மன்னுதசநாடிமுற்றுஞ்
சுத்திசெய்தும்மூல ப்ராணனோடங்கியைச்
  சோமவட்டத்தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டு மற்பவுடல்கற்பங்க
  போறுநிலைநிற்கவீறு
சித்திசெய்துஞ்ஞான மலதுகதிகூடுமோ
  சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
  சின்மயானந்தகுருவே. (கக)

மௌனகுருவணக்கம்.

ஆசைக்களத்தினை நீர்த்தூளிபடவுதறி
யாங்காரமுளையையெற்றி
அத்துவிதமதமாகி மதமாறுமாறுக
வங்கையின்விலாழியாக்கிப்
பாசவிருடன்னிழ லெனச்சுளித்தார்த்துமேற்
பார்த்துப்பரந்தமனதைப்
பாரித்தகவளமாய்ப் பூரிக்கவுண்டுமுக
படாமன்னமாயைநூறித்
தேசுபெறநீவைத்த சின்முத்திராங்குசச்
செங்கைக்குளேயடங்கிச்
சின்மயானந்தசுக வெள்ளம்படிந்துநின்
திருவருட்பூர்த்தியான
வாசமுறுசற்சார வீதென்னையொருஞான
மத்தகஜமெனவளர்த்தாய்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (க)

ஐந்துவகையாகின்ற பூதமுதனாதமு
மடங்கவெளியாகவெளிசெய்
தறியாமையறிவாதி பிறிவாகவறிவார்க
ளறிவாகநின்றநிலையிற்
சிந்தையறநில்லென்று சும்மாவிருத்திமேற்
சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநா னதுவாயிருக்கநீ
செய்சித்ரமிகநன்றுகா

ணந்தைவடவாற்பரம குருவாழ்கவாழவரு
ளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழ வேதாகமத்துணி
பிரண்டில்லையொன்றென்னவே
வந்தகுருவேவீறு சிவஞானசித்திநெறி
மௌனோபதேசகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (உ)

ஆதிக்கநல்கினவ ராரிந்தமாயைக்கெ
னறிவின்றியிடமில்லையோ
வந்தரப்புஷ்பமுங் கானலின்னீருமோ
ரவசரத்துபயோகமோ
போதித்தநிலையையு மயக்குதேயபயநான்
புக்கவருடோற்றிடாமற்
பொய்யானவுலகத்தை மெய்யாநிறுத்திஎன்
புந்திக்குளிந்த்ரஜாலஞ்
சாதிக்குதேயிதனை வெல்லவுமுபாயநீ
தந்தருள்வதென்றுபுகல்வாய்
சன்மதஸ்தாபனமும் வேதாந்தசித்தாந்த
சமரசநிர்வாகநிலையு
மாதிக்கொடண்டப் பரப்பெலாமறியவே
வந்தருளுஞானகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௩)

மின்னனையபொய்யுடலை நிலையென்றுமையிலகு
    விழிகொண்டுமையல்பூட்டு
மின்னார்களின்பமே மெய்யென்றும்வளர்மாட
    மேல்வீடுசொர்க்கமென்றும்
பொன்னையழியாதுவளர் பொருளென்றுபோற்றியிப்
    பொய்வேஷமிகுதிகாட்டிப்
பொறையறிவுதுறவீத லாதிநற்குணமெலாம்
    போக்கிலேபோகவிட்டுத்
தன்னிகரிலாபாதி பாழ்ம்பேய்பிடித்திடத்
    தரணிமிசைலோகாயதன்
சமயநடைசாராமல் வேதாந்தசித்தாந்த
    சமரசசிவானுபூதி
மன்னவொருசொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பி
    ன் வாழ்வித்தஞானகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
    மரபில்வருமௌனகுருவே. (ச)

போனகமிருக்கின்ற சாலையிடைவேண்டுவ
    புசித்தற்கிருக்குமதுபோற்
புருஷர்பெறுதர்மாதி வேதமுடனாகமம்
    புகலுமதினாலாம்பயன்
ஞானநெறிமுக்யநெறி காட்சியனுமானமுத
    லானவிதங்கடேர்ந்து
நானெனக்குளது படைபுடைபெயர்த்திடவு
    நான்குசாதனமுமோர்ந்திட்

டானநெறியாஞ்சரியை யாதிசோபானமுற்
றணுபக்ஷசம்புபக்ஷ
மாமிருவிகற்பமு மாயாதிசேவையு
மறிந்திரண்டொன்றென்னுமோர்
மானதவிகற்பமற வென்றுநிற்பதுநமது
மரபென்றபரமகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (ரு)

கல்லாதவறிவுமேற் கேளாதகேள்வியுங்
கருணைசிறிதேதுமில்லாக்
காட்சியுங்கொலைகளவு கட்காமமாட்சியாய்க்
காதலித்திடுநெஞ்சமும்
பொல்லாதபொய்ம்மொழியு மல்லாதுநன்மைகள்
பொருந்துகுணமேதுமறியேன்
புருஷர்வடிவானதே யல்லாதுகனவிலும்
புருஷார்த்தமேதுமில்லே
னெல்லாமறிந்தநீ யறியாததன்றெனக்
கெவ்வண்ணமுய்வண்ணமோ
விருளையிருளென்றவர்க் கொளிதாரகம்பெறு
மெனக்குநின்னருடாரகம்
வல்லானெனும்பெய ருனக்குள்ளதேயிந்த
வஞ்சகனையாளநினையாய்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (சா)

கானகமிலங்குபுலி பசுவொடுகுலாவுநின்
 கண்காணமதயானைநீ
கைகாட்டவுங்கையா னெகிடிக்கெனப்பெரிய
 கட்டைமிகவேந்திவருமே
போனகமமைந்ததென வக்காமதேனுநின்
 பொன்னடியினின்றுசொலுமே
புவிராஜர்கவிராஜர் தவராஜனென்றுனைப்
 போற்றிஜயபோற்றியென்பார்
ஞானகருணைகர முகங்கண்டபோதிலே
 , நவநாதசித்தர்களுமுன்
னட்பினைவிரும்புவார் சுகர்வாமதேவர்முதன்
 ஞானிகளுமுனைமெச்சுவார்
வானகமுமண்ணகமும் வந்தெதிர்வணங்கிடுமுன்
 மகிமையதுசொல்லவெளிதோ
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
 மரபில்வருமௌனகுருவே. (எ)

சருகுசலபக்ஷணிக ளொருகோடியல்லாற்
 சகோரபக்ஷிகள்போலவே
தவளநிலவொழுகமிர்த தாரையுண்டுழியாத
 தன்மையரனந்தகோடி
யிருவினைகளற்றிரவு பகலென்பதறியாத
 வேகாந்தமோனஞான
வின்பநிஷ்டையர்கோடி மணிமந்த்ரசித்திநிலை
 யெய்தினார்கள்கோடிசூழக்

குருமணியிழைத்திட்ட சிங்காதனத்தின்மிசை
 கொலுவீற்றிருக்குநின்னைக்
கும்பிட்டனந்தமுறை தெண்டமிட்டென்மனக்
 குறையெலாந்திரும்வண்ண
மருமலரெடுத்துனிரு தாளையர்ச்சிக்கவெனை
 வாவென்றழைப்பதெந்நாண்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
 மரபில்வருமௌனகுருவே. (அ)

ஆங்காரமானகுல வேடவெம்பேய்பாழ்த்த
 வாணவத்தினும்வலிதாகா
ணறிவினைமயக்கிடு நடுவறியவொட்டாதி
 யாதொன்றுதொடினுமதுவாய்த்
தாங்காதுமொழிபேசு மரிகரப்பிரமாதி
 தம்மொடுசமானமென்னுந்
தடையற்றதேரிலஞ் சுருவாணிபோலவே
 தன்னிலசையாதுநிற்கு
மீங்காரனக்குநிக ரென்னப்ரதாபித்
 திராவணாகாரமாகி
யிதயவெளியெங்கணுந் தன்னரசுநாடுசெய்
 திருக்குமிதனொடெநேரமும்
வாங்காவிலாவடிமை போராடமுடியுமோ
 மௌனோபதேசகுருவே
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
 மரபில்வருமௌனகுருவே. (௯)

பற்றுவெகுவிதமாகி யொன்றைவிட்டொன்றனைப்
பற்றியுழல்கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தைபெற்றநான் வெளியாகநின்னருள்
பகர்ந்துமறியேன்றுவிதமோ
சிற்றறிவதன்றியு மெவரோனுமொருமொழி
திடுக்கென்றுரைத்தபோது
சிந்தைசெவியாகவே பறையறையவுதரவெந்
தீநெஞ்சமளவளாவ
வுற்றுணரவுணர்வற்றுன் மற்றவெறியினர்போல
வுளறுவேன்முத்திமார்க்க
முணர்வதெப்படியின்ப துன்பஞ்சமானமா
யுறுவதெப்படியாயினு
மற்றெனக்கையநீ சொன்னவொருவார்த்தையினை
மலையிலக்கெனநம்பினேன்
மந்த்ரகுருவேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (௧௦)

கருணாகரக்கடவுள்.

நிர்க்குணநிராமய நிரஞ்சனநிராலம்ப
நிர்விஷயகைவல்யமா
நிஷ்களவசங்கசஞ் சலரகிதநிர்வசன
நிர்த்தொந்தநித்தமுக்த
தற்பரவிஸ்வாதீத வ்யோமபரிபூரண
சதானந்தஞானபகவ

சம்புசிவசங்கர சர்வேசவென்றுநான்
சர்வகாலமுநினைவனோ
வற்புதவகோசர நிவர்த்திபெறுமன்பருக்
கானந்தபூர்த்தியான
வத்துவிதநிச்சய சொரூபசாக்ஷாத்கார
வனுபூதியனுகூதமுங்
கற்பனையறக்காண முக்கணுடன்வடநிழற்
கண்ணூடிருந்தகுருவே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (௫)

மண்ணாதியைந்தொடு புறத்திலுளகருவியும்
வாக்காதிசுரோத்ராதியும்
வளர்கின்றசப்தாதி மனமாதிகலையாதி
மன்னுசுத்தாதியுடனே
தொண்ணூற்றொடாறுமற் றுள்ளனவுமெளனியாய்ச்
சொன்னவொருசொற்கொண்டதே
தூவெளியதாயகண் டானந்தசுகவாரி
தோற்றுமதையென்சொல்லுவேன்
பண்ணாருமிசையினொடு பாடிப்படித்தருட்
பான்மைநெறிநின்றுதவருப்
பக்குவவிசேஷராய் நெக்குநெக்குருகிப்
பணிந்தெழுந்திருகைகூப்பிக்
கண்ணாறுகரைபுரள நின்றவன்பரையெலாங்
கைவிடாக்காட்சியுறவே

கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
 கருணாகரக்கடவுளே. (உ)

எல்லாமுனடிமையே யெல்லாமுனுடைமையே
 யெல்லாமுனுடையசெயலே
யெங்கணும்வியாபிநீ யென்றுசொலுமியல்பென்
 றிருக்காதிவேதமெல்லாஞ்
சொல்லான்முழக்கியது மிக்கவுபகாரமாச்
 சொல்லிறந்தவரும்விண்டு
சொன்னவையுமிவைநல்ல குருவானபேருந்
 தொகுத்தநெறிதானுமிவையே
யல்லாமலில்லையென நன்றுவறிந்தே
 னறிந்தபடிநின்றுசுகநா
னாகாதவண்ணமே யிவ்வண்ணமாயினே
 னதுவுநினதருளென்னவே
கல்லாதவறிஞனுக் குள்ளேயுணர்த்தினை
 கதிக்குவகையேதுபுகலாய்
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
 கருணாகரக்கடவுளே. (௩)

பட்டப்பகற்பொழுதை யிருளென்றமருளர்தம்
 பக்ஷமோவெனதுபக்ஷம்
பார்த்தவிடமெங்கணுங் கோத்தநிலகுலையாது
 பரம்வெளியாகவொருசொற்
றிட்டமுடன்மௌனியா யருள்செய்திருக்கவுஞ்
 சேராமலாராகநான்

சிறவீடுகட்டியதி னடுசோற்றையுண்டுண்டு
தேக்குசிறியார்கள்போல
நட்டணையதாக்கற்ற கல்வியும்விவேகமு
நன்னிலயமாகவுன்னி
நானென்றுநீயென் றிரண்டில்லையென்னவே
நடுவேமுளைத்தமனதைக்
கட்டவறியாமலே வாடினேனெப்போது
கருணைக்குரித்தாவனோ
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (௪)

மெய்விடாநாவுள்ள மெய்யருளிருந்துநீ
மெய்யானமெய்யையெல்லா
மெய்யெனவுணர்த்தியது மெய்யிதற்கையமில்லை
மெய்யேதுமறியாவெறும்
பொய்விடாப்பொய்யினே னுள்ளத்திருந்துதான்
பொய்யானபொய்யையெல்லாம்
பொய்யெனுவண்ணமே புகலவைத்தாயெனிற்
புன்மையேனென்செய்குவென்
மைவிடாதெழுநீல கண்டகுருவேவிஷ்ணு
வடிவானஞானகுருவே
மலர்மேவிமறையோது நான்முகக்குருவே
மதங்கடொறுநின்றகுருவே
கைவிடாதேயென்ற வன்பருக்கன்பாய்க்
கருத்தூடுணர்த்துகுருவே

கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (௫)

பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே
பாவித்திறைஞ்சவாங்கே
பார்க்கின்றமலருடு நீயேயிருத்தியப்
பனிமலரொடுக்கமனமு
நண்ணேனலாமலிரு கைதான்குவிக்கவெனி
னாணுமென்னுளநிற்றி நீ
நான்கும்பிடும்போ தரைக்கும்பிடாதலா
ஞன்பூசைசெய்யன்முறையோ
விண்ணேவிணுதியாம் பூதமேநாதமே
வேதமேவேதாந்தமே
மேதக்கக்கேள்வியே கேள்வியாம்பூமிக்குள்
வித்தேயவித்தின்முளையே
கண்ணேகருத்தேயெ னெண்ணேயெழுத்தே
கதிக்கானமோனவடிவே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (௬)

சந்ததமும்வேதமொழி யாதொன்றுபற்றினது
தான்வந்துமுற்றுமெனலாற்
சகமீதிருந்தாலு மரணமுண்டென்பது
சதாநிஷ்டர்நினைவதில்லை
சிந்தையறியார்க்கிது போதிப்பதல்லவே
செப்பினும்வெகுதர்க்கமாந்

திவ்யகுணமார்க்கண்டர் சுகராதிமுனிவோர்கள்
சித்தாந்தநித்யரலவோ
விந்த்ராதிதேவதைகள் பிரமாதிகடவுள
ரிருக்காதிவேதமுனிவ
ரெண்ணரியகணநாதர் நவநாதசித்தர்க
ளிரவிமதியாதியோர்கள்
கந்தருவர்கின்னரர்கண் மற்றையர்களியாவருங்
கைகுவித்திடுதெய்வமே
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (எ)

துள்ளுமறியாமனது பலிகொடுத்தேன்கர்ம
அஷ்டதேவதைகளில்லை
அரியநிறைசாந்ததே வதையாமுனக்கே
தொழும்பனன்பபிஷேகநீ
ருள்ளுறையிலென்னாவி நைவேத்தியம்ப்ராண
னோங்குமதிதூபதீப
மொருகாலமன்றிது சதாகாலபூசையா
வொப்புவித்தேன்கருணைகூர்
தெள்ளிமறைவடியிட்ட வமுதப்பிழம்பே
தெளிந்ததேனேசீனியே
திவ்யரசமியாவுந் திரண்டொழுகுபாகே
தெவிட்டாதவானந்தமே
கள்ளனறிவூடுமே மௌனமௌனவெளியாய்க்
கலக்கவருநல்லவுறவே

கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
    கருணாகரக்கடவுளே. (௮)

உடல்குழையவென்பெலா நெக்குருகவிழிநீர்க
    ளூற்றெனவெதும்பியூற்ற
வூசிகாந்தத்தினைக் கண்டணுகல்போலவே
    யோருறவுமுன்னியுன்னிப்
படபடெனநெஞ்சம் பதைத்துண்ணடுக்குறப்
    பாடியாடிக்குதித்துப்
பனிமதிமுகத்திலே நிலவனையபுன்னகை
    பரப்பியார்த்தார்த்தெழுந்து
மடலவிழுமலரனைய கைவிரித்துக்கூப்பி
    வானேயவானிலின்ப
மழையேமழைத்தாரை வெள்ளமேநீடூழி
    வாழியெனவாழ்த்தியேத்துங்
கடன்மடைதிறந்தனைய வன்பரன்புக்கெளியை
    கன்னெஞ்சனுக்கெளியையோ
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
    கருணாகரக்கடவுளே. (௯)

இங்கற்றபடியங்கு மெனவறியுநல்லறிஞ
    ரெக்காலமும்முதவுவா
ரின்சொறவுறார்பொய்மை யாமிழுக்குறையா
    ரிரங்குவார்கொலைகள்பயிலார்

சங்கற்பசித்தரவ ருள்ளக்கருத்திலுறை
சாக்ஷிரீயிகபரத்துஞ்
சந்தானகற்பகத் தேவாயிருந்தே
சமஸ்தவின்பமுமுதவுவாய்
சிங்கத்தையொத்தெனப் பாயவருவினையினைச்
சேதிக்கவருசிம்புளே
சிந்தாகுலத்திமிர மகலவருபானுவே
தீனனேன்களையேறவே
சங்கற்றபேராசை வெள்ளத்தில்வாருட்
ககனவட்டக்கப்பலே
சருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. ௪௦

சித்தர்கணம்

திக்கொடுதிகந்தமும் மனவேகமென்னவே
சென்றோடியாடிவருவீர்
செம்பொன்மகமேருவொடு குணமேருவென்னவே
திகழ்துருவனளவளாவி
யுக்ரமிகுசக்ரதர னெனநிற்பீர்கையி
லுழுந்தமிழுமாசமனமா
வோரேழுகடலையும் பருகவல்லீரிந்த்ர
னுலகுமயிராவதமுமே
கைக்கெளியபந்தா வெடுத்துவிளையாடுவீர்
ககனவட்டத்தையெல்லாங்

கடுகிடையிருத்தியே யஷ்டகுலவெற்பையுங்
    காட்டுவீர்மேலுமேலு
மிக்கசித்திகளெலாம் வல்லநீரடிமைமுன்
    விளங்கவருசித்தியிலையோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. (௧)

பாட்டளிதுதைந்துவளர் கற்பகநனீழலைப்
    பாரினிடைவரவழைப்பீர்
பத்மநிதிசங்கநிதி யிருபாரிசத்திலும்
    பணிசெயுந்தொழிலாளர்போற்
கேட்டதுகொடுத்துவர நிற்கவைப்பீர்பிச்சை
    கேட்டுப்பிழைப்போரையுங்
கிரீடபதியாக்குவீர் கற்பாந்தவெள்ளமொரு
    கேணியிடைகுறுகவைப்பீ
ரோட்டினையெடுத்தா யிரத்தெட்டுமாற்றுக
    வொளிவிடும்பொன்னாக்குவீ
ருரகனுமிளைப்பாற யோகதண்டத்திலே
    யுலகுசுமையாகவருளான்
மீட்டிடவும்வல்லநீ ரொன்மனக்கல்லையனன்
    மெழுகாக்கிவைப்பதரிதோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. (௨)

பாரொடுநன்னீராதி யொன்றொடொன்றாகவே
    பற்றிலயமாகுபோது

பரவெளியின்மருவுவீர் கற்பார்தவெள்ளம்
பரந்திடினதற்குயீதே
நீரிலுகுறவண்டாய்த் துவண்டுசிவயோகநிலை
நிற்பீர்விகற்பமாகி
நெடியமுகிலேழும் பரந்துவருஷிக்கிலோ
நிலவுமதிமண்டலமதே
யூரொனவிளங்குவீர் பிரமாதிமுடிவில்விடை
யூர்தியருளாலுலவுவீ
ருலகங்கள்கீழ்மேல தாகப்பெருங்காற்
றுலாவினற்றூணையிறைன்
மேருவெனவசையாம னிற்கவல்லீருமது
மேதக்கசித்தியெளிதோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௩)

எண்ணரியபிறவிதனின் மானிடப்பிறவிதா
னியாதினும்மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ
வேதுவருமோவறிகிலேன்
கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட்
ககனவட்டத்தினின்று
காலூன்றிநின்றுபொழி யானந்தமுகிலொடு
கலந்துமதியவசமுறவே
பண்ணுவதுநன்மையிந் நிலைபதியுமட்டுமே
பதியாயிருந்ததேகப்

பைரவி துலையாமலே கௌரிகுண்டலியாயி
    பண்ணவிதனருளினாலே
விண்ணிலவுமத்தியமுத மொழியாதுபொழியவே
    வேண்டுவேனுமதடிமைநான்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. (௪)

பொய்திகழுமுலகநடை யென்சொல்கேனென் சொல்
    கேன் பொழுதுபோக்கேதென்னிலோ
பொய்யுடனிமித்தம் புசிப்புக்கலைந்திடல்
    புசித்தபின்கண்ணுறங்கல்
கைதவமலாமலிது செய்தவமதல்லவே
    கண்கெட்டபேர்க்கும்வெளியாய்க்
கண்டதிதுவிண்டிதைக் கண்டித்துநிற்றலெக்
    காலமோவதையறிகிலேன்
மைதிகழுமுகிலினங் குடைநிழற்றிடவட்ட
    வரையினெடுசெம்பொன்மேரு
மால்வரையின்முதுகூடும் யோகதண்டக்கோல்
    வரைந்துசயவிருதுகாட்டி
மெய்திகழுமஷ்டாங்க யோகபூமிக்குள்வளர்
    வேந்தரோகுணசாந்தரோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. (௫)

கைதுரகமுதலான சதுரங்கமனமாதி
    கேள்வியினிசைந்துநிற்பக்

செடிகொண்டதலமாறு மும்மண்டலத்திலுங்
    கிள்ளாக்குசெல்லமிக்க
தேசவிதமதாய்நின்ற நாதங்களோலிடச்
    சிங்காசனாதிபர்களாய்த்
திக்குத்திகந்தமும் பூரணமதிக்குடை
    திகழ்ந்திடவசந்தகால
மிசையமலர்மீதுறை மணம்போலவானந்த
    மிதயமேற்கொள்ளும்வண்ணை
மென்றைக்குமழியாத சிவராசயோகமா
    மிந்த்ராதிதேவர்களெலாம்
விஜயஜயஜயவென்ன வாசிசொலவேகொலு
    விருக்குறும்பெருமையெளிதோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
    வித்தகச்சித்தர்கணமே. (கூ)

ஆணிலேபெண்ணிலே யென்போலவொருபேதை
    யகிலத்தின்மிசையுள்ளதோ
வாடியசுறங்குபோ லோடியுழல்சிந்தையை
    யடக்கியொருகணமேனும்யான்
காணிலேன்றிருவருளை யல்லாதுமௌனியாய்க்
    கண்மூடியோடுமூச்சைக்
கட்டிக்கலாமதியை முட்டவேமூலவெங்
    கனலினையெழுப்பநினைவும்
பூணிலேனிற்றைநாட் கற்றதுங்கேட்டதும்
    போக்கிலேபோகவிட்டுப்

பொய்யுலகனையினே ஞயினுங்கடையான
புன்மையேனின்னமின்னம்
வீணிலேயலையாமன் மலையிலக்காகநீர்
வெளிப்படத்தோற்றல்வேண்டும்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (எ)

கன்னலமுதெனவுமுக் கனியெனவும்வாயூறு
கண்டெனவுமடியெடுத்துக்
கடவுளர்கடந்தல வழுதழுதுபேய்போற்
கருத்திலெழுகின்றதெல்லா
மென்னறியாமையறி வென்னுமிருபகுதியா
லீட்டுதமிழென்றமிழினுக்
கின்னல்பகராதுலக மாராமைமேலிட்
டிருத்தலாலித்தமிழையே
சொன்னவனியாவனவன் முத்திசித்திகளெலாந்
தோய்ந்தநெறியேபடித்தீர்
சொல்லுமெனவவர்நீங்கள் சொன்னவவையிற்சிறிது
தோய்ந்தகுணசாந்தனெனவே
மின்னல்பெறவேசொல்ல வச்சொல்கேட்டடிமைமன
ம் விகசிப்பதெந்நாளோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (அ)

பொற்பினொடுகைகாலில் வள்ளுகிர்படைத்தலாற்
போந்திடையொடுக்கமுறலாற்

பொலிவானவெண்ணீறு பூசியேயருள்கொண்டு
பூரித்தவெண்ணீர்மையா
லெற்படவிளங்குகக னத்திலிமையாவிழி
யிசைந்துமேனோக்கமுறலா
லிர்வுபகலிருளான கனதந்திபடநூறி
யிதயங்களித்திடுதலாற்
பற்பலவிதங்கொண்ட புலிகலையினுரியது
படைத்துப்ப்ரதாபமுறலாற்
பனிவெயில்கள்புகுதாம னெடியவான்றொடர்நெடிய
பருமரவனங்களாரும்
வெற்பினிடையுறைதலாற் றவராசசிங்கமென
மிக்கோருமைப்புகழ்வர்காண்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௧)

கல்லாதபேர்களே நல்லவர்கணல்லவர்கள்
கற்றுமறிவில்லாதவென்
கர்மத்தையென்சொல்கேன் மதியையென்சொல்லுகே
ன் கைவல்யஞானநீதி
நல்லோருரைக்கிலோ கர்மமுக்கியமென்று
நாட்டுவேன்கர்மமொருவ
னுட்டினாலோபழைய ஞானமுக்கியமென்று
நவிலுவேன்வடமொழியிலே
வல்லானொருத்தன்வர வுந்த்ராவிடத்திலே
வந்ததாவிவகரிப்பேன்

வல்லதமிழறஞர்வரி னங்஢னேவடமொழியின்
வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவ்வாயு மருட்டிவிடவகைவந்த
வித்தையென்முத்திதருமோ
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (௰)

ஆனந்தமானபரம்.

கொல்லாமையெத்தனை குணக்கேட்டைநீக்குமக்
குணமொன்றுமொன்றிலேன்பாற்
சோரமெத்தனைபக்ஷ பாதமெத்தனைவன்
குணங்களெத்தனைகொடியபாழ்ங்
கல்லாமையெத்தனை யகந்தையெத்தனைமனக்
கள்ளமெத்தனையுள்ளசற்
காரியஞ்சொல்லிடினு மறியாமையெத்தனை
கதிக்கென்றமைத்தவருளிற்
செல்லாமையெத்தனை விர்தாகோஷ்டியென்னிலோ
செல்வதெத்தனைமுயற்சி
சிந்தையெத்தனைசலன மிந்த்ரஜாலம்போன்ற
தேகத்தில்வாஞ்சைமுதலா
யல்லாமையெத்தனை யமைத்தனையுனக்கடிமை
யானேனிவைக்குமாளோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (க)

தெருளாகிமருளாகி யுழலுமனமாய்மனஞ்
சேர்ந்துவளர்சித்தாகியச்
சித்தெலாஞ்சூழ்ந்தசிவ சித்தாய்விசித்ரமாய்த்
திரமாகிநானாவிதப்
பொருளாகியப்பொருளை யறிபொறியுமாகியைம்
புலனுமாயைம்பூதமாய்ப்
புறமுமாயகமுமாய்த் தூரஞ்சமீபமாய்ப்
போக்கொடுவரத்துமாகி
யிருளாகியொளியாகி நன்மைதீமையுமாகி
யின்றாகிநாளையாகி
யென்றுமாயொன்றுமாய்ப் பலவுமாயாவுமா
யிவையல்லவாயநின்னை
யருளாகிநின்றவர்க ளறிவதல்லாலொருவ
ரறிவதற்கெளிதாகுமோ
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௨)

மாறுபடுதர்க்கந் தொடுக்கவறிவார்சாண்
வயிற்றின்பொருட்டதாக
மண்டலமும்விண்டலமு மொன்றாகிமனதுழல
மாலாகிநிற்கவறிவார்
வேறுபடுவேடங்கள் கொள்ளவறிவாரொன்றை
மெணமெணென்றகம்வேறதாம்
வித்தையறிவாரெமைப் போலவேசந்தைபோன்
மெய்ந்நூல்விரிக்கவறிவார்

திருப்புலிபோற்சீறி மூச்சைப்பிடித்துவிழி
செக்கச்சிவக்கவறிவார்
திரமென்றுதந்தம் மதத்தையேதாமதச்
செய்கைகொடுமூளாறவறிவா
ராறுசமயங்களொடும் வேறுவேறாகிவினை
யாடுமுனையாவரறிவா
ரண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௯)

காயிலையுதிர்ந்தகனி சருகுபுனன்மண்டிய
கடும்பசிதனக்கடைத்துங்
கார்வரையின்முழையிற் கருங்கல்போலசையாது
கண்மூடிநெடிதிருந்துந்
தீயினிடைவைகியுந் தோயமதின்மூழ்கியுந்
தேகங்களென்பெலும்பாய்த்
தெரியநின்றுஞ்சென்னி மயிர்கள்கூடாக்குருவி
தெற்றவெயிலூடிருந்தும்
வாயுவையடக்கியு மனதினையடக்கியு
மௌனத்திலேயிருந்து
மதிமண்டலத்திலே கனல்செல்லவமுதுண்டு
வனமூடிருந்துமறிஞ
ராயுமறைமுடிவான வருணடிஞரடிமை
யகிலத்தைநாடன்முறையோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௰)

சத்தமுமசத்தமுந் துக்கசுகபேதமுந்
தொந்தமுடனிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடுசூக்ஷமமு மாசையுநிராசையுஞ்
சொல்லுமொருசொல்லின்முடிவும்
பெத்தமொடுமுத்தியும் பாவமொடபாவமும்
பேதமொடபேதநிலையும்
பெருமையொடுசிறுமையு மருமையுடனெளிமையும்
பெண்ணினுடனாணுமற்று
நித்தமுமநித்தமு மஞ்சனநிரஞ்சனமு
நிஷ்களமுநிகழ்சகளமு
நீதியுமநீதியு மாதியொடநாதியு
நிர்விஷயவிஷயவடிவு
மத்தனையுநீயலதெ ளத்தனையுமில்லையெனின்
யாங்களுனையன்றியுண்டோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௫)

காராருமாணவக் காட்டைக்களைந்தறக்
கண்டகங்காரமென்னுங்
கல்லைப்பிளந்துநெஞ் சகமானபூமிவெளி
காணத்திருத்திமேன்மேற்
பாராதியறியாத மோனமாம்வித்தைப்
பதித்தன்புநீராகவே
பாய்ச்சியதுபயிராகு மட்டுமாமாயைவன்
பறவையணுகாதவண்ணம்

நேராகநின்றுவினை போகம்புசித்துண்ட
நின்னன்பர்கூட்டமெய்த
நினைவின்படிக்குநீ முன்னின்றுகாப்பதே
நின்னருட்பாரமென்று
மாராறுமறியாத சூதானவெளியில்வெளி
யாகின்றதுரியமயமே
னண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௬)

வானாதிபூதமா யகிலாண்டகோடியாய்
மலையாகிவளைகடலுமாய்
மதியாகியிரவியாய் மற்றுளவெலாமாகி
வான்கருணைவெள்ளமாகி
நானாகிநின்றவனை நீயாகிநின்றிடவு
நானென்பதற்றிடாதே
நானெனக்குளறி நானாவிகாரியாய்
நானறிந்தறியாமையாய்ப்
போனாலதிட்டவலி வெல்லவெளிதோபகற்
பொழுதுபுகுமுன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள்வான்றனை யெழுப்பவசமோவினி
ப் போதிப்பதெந்தநெறியை
யானாலுமென்கொடுமை யனியாயமனியாய
மார்பாலெடுத்துமொழிவே
னண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே (௭)

பொய்யினேன்புலையினேன் கொலையினேனின்னருள்
புலப்படவறிந்துநிலையாப்
புன்மையேன்கல்லாத தன்மையேனன்மைபோற்
பொருளலாப்பொருளைநாடும்
வெய்யனேன்வெகுளியேன் வெறியனேன்சிறியனேன்
வினையினேனென்றென்னைநீ
விட்டுவிடநினைவையேற் றட்டழிவதல்லாது
வேறுகதியேதுபுகலாய்
துய்யனேமெய்யனே யுயிரினுக்குயிரான
துணைவனேயிணையொன்றிலாத்
துரியனேதுரியமுங் காணுவதீதனே
சுருதிமுடிமீதிருந்த
வையனேயப்பனே யெனுமறிஞரறிவைவிட்
டகலாதகருணைவடிவே
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (௩)

எத்தனைவிதங்கடான் கற்கினுங்கேட்கினுமென்
னிதயமுமொடுங்கவில்லை
யானெனுமகந்தைதா னெள்ளளவுமாறவிலை
யாதினும்மபிமானமென்
சித்தமிசைகுடிகொண்ட தீமையோடிரக்கமென்
சென்மத்துநானறிகிலேன்
சீலமொடுதவவிரத மொருகனவிலாயினுந்
தரிசனங்கண்டுமறியேன்

பொய்த்தமொழியல்லான் மருந்துக்குமெய்ம்மொழி
புகன்றிடேன்பிறர்கேட்கவே
போதிப்பதல்லாது சும்மாவிருந்தருள்
பொருந்திடாப்பேதைநானே
யத்தனைகுணக்கேடர் கண்டதாக்கேட்டதா
வவனிமிசையுண்டோசொலா
யண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே.. (௯)

எக்காலமுந்தனக் கென்னவொருசெயலிலா
வேழைநீயென்றிருந்திட்
டெனதாவியுடல்பொருளு மௌனியாம்வந்தகை
யேற்றுநமதென்றவன்றே
பொய்க்காலதேசமும் பொய்ப்பொருளில்வாஞ்சையும்
பொய்யுடலைமெய்யென்னலும்
பொய்யுறவுபற்றலும் பொய்யாகுநானென்னல்
பொய்யினும்பொய்யாகையால்
மைக்காலிருட்டனைய விருளில்லையிருவினைகள்
வந்தேறவழியுமில்லை
மனமில்லையம்மனத் தினமில்லைவேறுமொரு
வரவில்லைபோக்குமில்லை
யக்காலமிக்கால மென்பதிலையெல்லா
மதீதமயமானதன்றோ
வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (க0)

சுகவாரி.

இன்னமுதுகனிபாகு கற்கண்டுசீனிதே
　னெனருசித்திடவலியவந்
தின்பங்கொடுத்தநினை யெந்நேரமுன்னன்ப
　ரிடையறாதுருகிநாடி
யுன்னியகருத்தவிழ வுளநெக்குருகியுடலெங்கு
　மோய்ந்தயர்ந்தவசமாகி
யுணர்வரியபேரின்ப வனுபூதியுணர்விலே
　யுணர்வார்களுள்ளபடிகாண்
கன்னிகையொருத்திசிற் றின்பம்வேம்பென்னினுங்
　கைக்கொள்வள்பக்குவத்திற்
கணவனருள்பெறின்முனே சொன்னவாறென்னெனக்
　கருதிநகையாவளதுபோற்
சொன்னபடிகேட்குமிப் பேதைக்குநின்கருணை
　தோற்றிற்சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
　சோதியேசுகவாரியே. (க)

அன்பின்வழியறியாத வென்னைத்தொடர்ந்தென்னை
　யறியாதபக்குவத்தே
யாசைப்பெருக்கைப் பெருக்கிக்கொடுத்துநா
　னற்றேனலந்தேனென
வென்புலமயங்கவே பித்தேற்றிவிட்டா
　யிரங்கியொருவழியாயினு
மின்பவெள்ளமாகவந் துள்ளங்களிக்கவே
　யெனைநீகலந்ததுண்டோ

தன்பருவமலருக்கு மணமுண்டுவண்டுண்டு
தண்முகைதனக்குமுண்டோ
தமியனேற்கிவ்வணந் திருவுளமிரங்காத
தன்மையாற்றனியிருந்து
துன்பமுறினெங்ஙனே யழியாதநின்னன்பர்
சுகம்வந்துவாய்க்குமுறையாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (உ)

கல்லேனுமையவொரு காலத்திலுருகுமென்
கன்னெஞ்சமுருகவிலையே
கருணைக்கிணங்காத வன்மையையுநான்முகன்
கற்பிக்கவொருகடவுளோ
வல்லான்வகுத்ததே வாய்க்காலெனும்பெரு
வழக்குக்கிழுக்குமுண்டோ
வானமாய்நின்றின்ப மழையாயிரங்கியெனை
வாழ்விப்பதுன்பரங்காண்
பொல்லாதசேயெனிற் றள்ளத்தமோ
புகலிடம்பிறிதுமுண்டோ
பொய்வார்த்தைசொல்லிலோ திருவருட்கயலுமாய்ப்
புன்மையேனுவனந்தோ
சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச்
சும்மாவிருக்கவருளாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௩)

என்பெலாநெக்குடைய ரோமஞ்சிலிர்ப்பவுட
    லிளகமனதழலின்மெழுகா
யிடையருதுருகவரு மழைபோலிரங்கியே
    யிருவிழிகணீரிறைப்ப
வன்பினுன்மூர்ச்சித்த வன்பருக்கங்ஙனே
    யமிர்தசஞ்சீவிபோல்வந்
தானந்தமழைபொழிவை யுள்ளன்பிலாதவெனை
    யார்க்காகவடிமைகொண்டாய்
புன்புலான்மயிர்தோ னரம்பென்புமொய்த்திடு
    புலைக்குடிலிலருவருப்புப்
பொய்யல்லவேயிதனை மெய்யென்றுநம்பியென்
    புந்திசெலுமோபாழிலே
துன்பமாயலையவோ வுலகநடையையவொரு
    சொற்பனத்திலும்வேண்டிலேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
    சோதியேசுகவாரியே. (அ)

வெந்நீர்பொருதெனுடல் காலின்முட்டைக்கவும்
    வெடுக்கென்றசைத்தெடுத்தால்
விழியிமைத்தங்ஙனே தண்ணருளைநாடுவேன்
    வேறொன்றையொருவர்சொல்லி
னந்நேரமையோவென் முகம்வாடிநிற்பதுவு
    மையநின்னருளறியுமே
யானுமெத்தப் பயந்தவனியானென்னை
    யாண்டநீகைவிடாதே

யிந்நேரமென்றிலை யுடற்சுமையதாகவு
    மெடுத்தாலிறக்கவென்றே
யெங்கெங்குமொருதீர்வை யாயமுண்டாயினு
    மிறைஞ்சுசுகராதியான
தொன்னீர்மையாளர்க்கு மானிடம்வகுத்தவரு
    டுணையென்றுநம்புகின்றேன்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
    சோதியேசுகவாரியே. (௭)

பற்றுவனவற்றிடு நிராசையென்றொருபூமி
    பற்றிப்பிடிக்குமியோகப்
பாங்கிற்பிராணலய மென்னுமொருபூமியிவை
    பற்றின்மனமறுமென்னவே
சுற்றையஞ்சடைமௌனி தானேகனிந்தகனி
    கனிவிக்கவந்தகனிபோற்
கண்டதிற்றெறியெனத் திருவுளக்கனிவினொடு
    கனிவாய்திறந்துமொன்றைப்
பெற்றவனுமல்லேன் பெறுதவனுமல்லேன்
    பெருக்கத்தவித்துளறியே
பெண்ணீர்மையென்னவிரு கண்ணீரிறைத்துநான்
    பேய்போலிருக்கவுலகஞ்
சுற்றிநகைசெய்யவே யுலையவிட்டாயெனிற்
    சொல்லவினிவாயுமுண்டோ
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
    சோதியேசுகவாரியே. (௮)

அரும்பொனேமணியே யென்பேயென்பான
வறிவேயெனதிவிளூறு
மானந்தவெள்ளமே யென்றென்றுபாடினே
ளுடினேளுடிநாடி
விரும்பியேகூவினே னுலறினேனலறினேன்
மெய்சிலிர்த்திருகைகூப்பி
விண்மாரியெனவெனிரு கண்மாரிபெய்யவே
வேசற்றயர்ந்தேனியா
னிரும்புநேர்நெஞ்சகக் கள்வனுனுமுனை
யிடைவிட்டுநின்றதுண்டோ
வென்றுநீயன்றநா னுன்னடிமையல்லவோ
யாதேனுமறியாவெறுந்
துரும்பனேனென்னினுங் கைவிடுதனீதியோ
தொண்டரொடுகூட்டுகண்டாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (எ)

பாராதியண்டங்க ளத்தனையும்வைக்கின்ற
பரவெளியினுண்மைகாட்டிப்
பற்றுமனவெளிகாட்டி மனவெளியினிற்றோய்ந்த
பாவியேன்பரிசுகாட்டித்
தாராளமாய்நிற்க நிச்சிந்தைகாட்டிச்
சதாகாலநிஷ்டையெனவே
சகசநிலைகாட்டினை சுகாதீதநிலையந்
தனைக்காட்டநாள்செல்லுமோ

காரார வெண்ணாரு மனந்தகோடிகணின்று
  காலூன்றிமழைபொழிதல்போற்
கால்வீசிமின்னிப் படர்ந்துபரவெளியெலாங்
  கம்மியானந்தவெள்ளஞ்
சோராதுபொழியவே கருணையின்முழங்கியே
  தொண்டரைக்கூவுமுகிலே
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
  சோதியேசுகவாரியே. (அ)

பேதித்தசமயமோ வொன்றுசொனபடியொன்று
  பேசாதுதுறவாகியே
பேசாதபெரியோர்க ணிருவிகற்பத்தினாற்
  பேசார்கள்பரமகுருவாய்ப்
போதிக்குமுக்கணிறை நேர்மையாய்க்கைக்கொண்டு
  போதிப்பதாச்சறிவிலே
போக்குவரவறவின்ப நீக்கமறவசனமாப்
  போதிப்பதெவரையனே
சாதித்தசாதனமு மியோகியர்கணமதென்று
  சங்கிப்பராதலாலே
தன்னிலேதானா யயர்ந்துவிடுவோமெனத்
  தனியிருந்திடினங்ஙனே
சோதிக்கமனமாயை தனையேவினாலடிமை
  சுகமாவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
  சோதியேசுகவாரியே. (க)

அண்டமுடிதன்னிலோ பகிரண்டமதனிலோ
வலரிமண்டலநடுவிலோ
வனனடுவிலோவமிர்த மதிநடுவிலோவன்ப
ரகமுருகிமலர்கடுவித்
தெண்டமிடவருமூர்த்தி நிலையிலோதிக்குத்
திகந்தத்திலோவெளியிலோ
திகழ்விந்துநாதநிலை தன்னிலோவேதாந்த
சித்தாந்தநிலைதன்னிலோ
கண்டபலபொருளிலோ காணுதநிலையெனக்
கண்டசூனியமதனிலோ
காலமொருமூன்றிலோ பிறவிநிலைதன்னிலோ
கருவிகரணங்களோய்ந்த
தொண்டர்களிடத்திலோ நீவீற்றிருப்பது
தொழும்பனேற்குளவுபுகலாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௧0)

எந்தநாள்கருணைக் குரித்தாகுநாளெனவு
மென்னிதயமெனேவாட்டுதே
யேதென்றுசொல்லுவேன் முன்னெடுபின்மலைவறவு
மிற்றைவரையாதுபெற்றேன்
பந்தமானதிவிட்ட மெழுகாகியுள்ளம்
பதைத்துப்பதைத்துருகவோ
பரமசுகமாவது பொறுப்பரியதுயரமாய்ப்
பலகாலுமூர்ச்சிப்பதோ

சிந்தையானதுமதிலை யென்னறிவிலறிவான
தெய்வநீயன்றியுளதோ
தேகநிலையல்லவே யுடைகப்பல்கப்பலாய்த்
திரையாழியூடுசெலுமோ
சொந்தமாயாண்டநீ யறியார்கள்போலவே
துன்பத்திலாழ்த்தன்முறையோ
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௧௧)

என்னாளுமுடலிலே யுயிராமுனைப்போ
லிருக்கவிலையோமனதெனு
மியானுமென்னட்பாம் பிராணனுமெமைச்சடம
தென்றுனைச்சித்தென்றுமே
யந்நாளிலெவனோ பிரித்தானதைக்கேட்ட
வன்றுமுதலின்றுவரையு
மநியாயமாயெமை யடைக்கிக்குறுக்கே
யடர்ந்தரசுபண்ணியெங்கண்
முன்னாகநீயென்ன கோட்டைகொண்டாயென்று
மூடமனமிகவுமேச
மூண்டெரியுமனலிட்ட மெழுகாயுளங்கருகன்
முறைமையோபதிஞயிரஞ்
சொன்னாலுநின்னரு ளிரங்கவிலையேயினிச்
சுகம்வருவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (௧௨)

எங்குநிறைகின்றபொருள்.

அவனன்றியோரணுவு மசையாதெனும்பெரிய
வாப்த்தர்மொழியொன்றுகண்டா
லறிவாவதேதுசில வறியாமையேதிவை
யறிந்தார்களறியார்களார்
மௌனமொடிருந்ததா ரென்போலுடம்பெலாம்
வாயாய்ப்பிதற்றுமவரார்
மனதெனவுமொருமாயை யெங்கேயிருந்துவரும்
வன்மையொடிரக்கமெங்கே
புவனம்படைப்பதென் கர்த்தவியமெவ்விடம்
பூதபேதங்களெவ்விடம்
பொய்மெயிதமகிதமேல் வருநன்மைதின்மையொடு
பொறைபொறுமையுமெவ்விட
மெவர்சிறியரெவர்பெரிய ரெவருறவரெவர்பகைஞ
ரியாதுமுனையன்றியுண்டோ
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (க)

அன்னேயனேயெனுஞ் சிலசமயநின்னையே
யையாவையாவென்னவே
யலறிடுஞ்சிலசமய மல்லாதுபேய்போல
வலறியேயொன்றுமிலவாய்ப்
பின்னேதுமறியாம லொன்றைவிட்டொன்றைப்
பிதற்றிடுஞ்சிலசமயமேற்
பேசரியவொளியென்றும் வெளியென்றுநாதாதி
பிறவுமேலிலயமென்றுந்

தன்னேரிலாததோ ரணுவென் றுமூவிதத்
தன்மையாங்காலமென் றுஞ்
சாற்றிடுஞ்சிலசமய மிவையாகிவேறதாய்ச்
சதாஞானவானந்தமா
யென்னையெனைகருணை விளையாட்டிருந்தவா
றெம்மனோர்புகலவெளிதோ
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (உ)

வேதமுடனாகம புராணமிதிகாசமுதல்
வேறுமுளகலைகளெல்லா
மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே
விரிவாவெடுத்துரைக்கு
மோதரியதுவிதமே யத்துவிதஞானத்தை
யுண்டுபணுஞானமாகு
மூகமனுபவவசன மூன்றுக்குமொவ்வுமீ
துபயவாதிகள்சம்மத
மாதலினெனக்கினிச் சரியையாதிகள்போது
மியாதொன்றுபாவிக்கநா
னதுவாதலாலுன்னை நானென்றுபாவிக்கி
னத்துவிதமார்க்கமுறலா
மேதுபாவித்திடினு மதுவாகிவந்தருள்செ
யெந்தைநீகுறையுமுண்டோ
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (ங)

சொல்லானதிற்சற்றும் வாராதபிள்ளையைத்
தொட்டில்வைத்தாட்டியாட்டித்
துடையினைக்கிள்ளல்போற் சங்கற்பமொன்றிற்
றொடுக்குந்தொடுத்தழிக்கும்
பொல்லாதவாதனை யெனுஞ்சப்தபூமியிடை
போந்துதலைசுற்றியாடும்
புருஷனிலடங்காத பூவைபோற்றனே
புறம்போந்துசஞ்சரிக்குங்
கல்லோடிரும்புக்கு மிகவன்மைகாட்டிடுங்
காணாதகேட்டவெல்லாங்
கண்டதாக்காட்டியே யணுவாச்சுரிக்கிடுங்
கபடநாடகசாலமோ
யெல்லாமும்வலதிந்த மனமாயையேழையா
மென்னாலடக்கவசமோ
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (சு)

கண்ணாரநீர்மல்கி யுள்ளநெக்குருகாத
கள்ளனேனானுமோ
கைகுவித்தாடியும் பாடியும்விடாமலே
கண்பனித்தாரைகாட்டி
யண்ணபரஞ்சோதி யப்பாவுனக்கடிமை
யானெனவுமேலெழுந்த
வன்பாகிநாடக நடித்ததோகுறைவில்லை
யகிலமுஞ்சிறிதறியுமேற்

றண்ணாருநின்னதரு ளறியாததல்லவே
சற்றேனுமினிதிரங்கிச்
சாசுவதமுத்திநிலை யீதென்றுணர்த்தியே
சகசநிலைதந்துவேறொன்
றெண்ணாமலுள்ளபடி சுகமாயிருக்கவே
யேழையேற்கருள்செய்கண்டா
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (ரு)

காகமானதுகோடி கூடுகின்றாலுமொரு
கல்லின்முன்னெதிர்நிற்குமோ
கர்மமானதுகோடி முன்னேசெய்தாலுநின்
கருணைப்ரவாகவருளைத்
தாகமாய்நாடினரை வாதிக்கவல்லதோ
தமியனேற்கருட்டாகமோ
சற்றுமிலையென்பதும் வெளியாச்சுவினையெலாஞ்
சங்கேதமாய்க்கூடியே
தேகமானதைமிகவும் வாட்டுதேதுன்பங்கள்
சேராமலியோகமார்க்க
சித்தியோவரவில்லை சகசநிஷ்டைக்குமென்
சிந்தைக்கும்வெகுதூரநா
னேகமாய்நின்றே டிருக்குநாளெந்தநா
ளிந்நாளின்முற்றுறுதோ
விகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (சா)

ஒருமைமனதாகியே யல்லலறநின்னருளி
 லொருவனுன்வந்திருக்கி
னுலகம்பொறுத்தோ மாயாவிசித்ரமென
 வோயுமோவிடமில்லையோ
வருளுடையநின்னன்பர் சங்கைசெய்திடுவரோ
 வலதுகிர்த்தியகர்த்தரா
யகிலம்படைத்தெம்மை யாள்கின்றபேர்சில
 ரடாதென்பரோவகன்ற
பெருமைபெறுபூரணங் குறையுமோபூதங்கள்
 பேய்க்கோலமாய்விதண்டை
பேசுமோவலதுதான் பரிபாககாலம்
 பிறக்கவில்லையோதொல்லையா
மிருமைசெறிசடவினை யெதிர்த்துவாய்பேசுமோ
 வேதுளவுசிறிதுபுகலா
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
 யெங்குநிறைகின்றபொருளே. (௭)

நில்லாதுதேகமெனு நினைவுண்டுதேகநிலை
 நின்றிடவுமௌனியாகி
நேரோயுபாயமொன் றருளினையையோவித்தை
 நின்றனுட்டிக்கவென்றற்
கல்லாதமனமோ வொடுங்கியுபரதிபெறக்
 காணவில்லையாகையாலே
கையேற்றுணும்புசிப் பொவ்வாதெநாளுமுன்
 காட்சியிலிருந்துகொண்டு

வல்லாளராயியம நியமாதிமேற்கொண்ட
மாதவர்க்கேவல்செய்து
மனதின்படிக்கெலாஞ் சித்திபெறலாஞானம்
வாய்க்குமொருமனுவெனக்கிங்
கில்லாமையொன்றினையு மில்லாமையாகவே
யிப்போதிரங்குகண்டா
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (அ)

மரவுரியுடுத்துமலை வனநெற்கொறித்துமுதிர்
வனசருகுவாயில்வந்தால்
வன்பசிதவிர்த்துமனல் வெயிலாதிமழையால்
வருந்தியும்மூலவனலைச்
சிரமளவெழுப்பியு நீரினிடைமூழ்கியுந்
தேகநமதல்லவென்று
சிற்சுகவபேகைூயாய் நின்னன்பர்யோகஞ்
செலுத்திஞரியாம்பாவியேம்
விரவுமறுசுவையினொடு வேண்டுவபுசித்தணையில்
வேண்டுவவெலாமுடுத்தி
மேடைமாளிகையாதி வீட்டினிடைவைகியே
வேறொருவருத்தமின்றி
யிரவுபகலேமழையர்கள் சையோகமாயினே
மெப்படிபிழைப்பதுனையா
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (க)

முத்தனையமூர லும் பவளவாயின்சொலு
முகத்திலகுபசுமஞ்சளு
மூர்ச்சிக்கவிரகசன் னதமேற்றவிருகும்ப
முலையின்மணிமாலைநால
வைத்தெனைமயக்கியிரு கண்வலையைவீசியே
மாயாவிலாசமோக
வாரிதியிலாழ்த்திடும் பாழானசிற்றிடை
மடந்தையர்கள்சிற்றின்பமோ
புத்தமிர்தபோகம் புசித்துவிழியிமையாத
பொன்னுட்டும்வந்ததென்முற்
போராட்டமல்லவோ பேரின்பமுத்தியிப்
பூமியிலிருந்துகாண
வெத்தனைவிகாதம்வரு மென்றுசுகர்சென்றநெறி
யிவ்வுலகமறியாததோ
விகபரமிரண்டினிலு முயிருனுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (க0)

உன்னிலையுமென்னிலையு மொருநிலையெனக்கிடந்
துளறிடுமவத்தையாகி
யுருவுதான்காட்டாத வாணவமுமொளிகண்
டொளிக்கின்றவிருளென்னவே
தன்னிலைமைகாட்டா தொருங்கவிருவினையினாற்
றருவுசுகதுக்கவேலை
தட்டழியமுற்றுமில் லாமாயையதனாற்
றடித்தகிலபேதமான

முன்னிலையொழிந்திட வகண்டிதாகாரமாய்
முதறிவுமேலுதிப்ப
முன்பினொடுகிழ்மே னடுப்பக்கமென்னுமன்
முற்றுமானந்தநிறைவே
யென்னிலைமையாய்நிற்க வியல்புகூரருள்வடிவ
மெந்நாளும்வாழிவாழி
யிகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (க0

சச்சிதானந்தசிவம்.

பாராதிககனப் பரப்புமுண்டோவென்று
பட்டர்வெளியதாகியெழுநாப்
பரிதிமதிகாணுச் சுயஞ்சோதியாயண்ட
பகிரண்டவுயிரொவைக்கு
நேராகவறிவா யகண்டமாயேகமாய்
நித்தமாய்நிர்த்தொந்தமாய்
நிர்க்குணவிலாசமாய் வாக்குமனமணுகாத
நிர்மலானந்தமயமாய்ப்
பேராதுநிற்றிநீ சும்மாவிருந்துதான்
பேரின்பமெய்திடாமற்
பேய்மனதையண்டியே தாயிலாப்பிள்ளைபோற்
பித்தாகவோமனதைநான்
சாராதபடியறிவி னிருவிகற்பாங்கமாஞ்
சாசுவதநிஷ்டையருளாய்

சர்வபரிபூரண வகண்டதத்துவமான
  சச்சிதானந்தசிவமே. (க)

குடக்கொடுகுணக்காதி திக்கினையுமுக்கூடு
  கொள்ளல்போலேந்தபூதங்
கூடுஞ்சுருங்கிலைச் சாலேகமோன்பது
  குலாவுநடைமனையைநாளும்
வடக்கயிறுவெண்ணாரம் பாவென்புதசையினன்
  மதவேள்விழாநடத்த
வைக்கின்றகைத்தேரா வெண்ணீர்செநீர்கணீர்
  மலநீர்புணீரிறைக்கும்
விடக்குத்துருத்தியைக் கருமருந்துக்கூட்டை
  வெட்டவெட்டத்தளிர்க்கும்
வேட்கைமரமுறுகின்ற சுடுகாட்டைமுடிவிலே
  மெய்போலிருந்துபொய்யாஞ்
சடக்கைச்சடக்கெனச் சதமென்றுசின்மயந்
  தானுகிநிற்பதென்றோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
  சச்சிதானந்தசிவமே. (உ)

பாகத்தினுற்கவிதை பாடிப்படிக்கவோ
  பத்திநெறியில்லைவேத
பாராயணப்பனுவன் மூவர்செய்பனுவலது
  பகரவோவிசையுமில்லை
யோகத்திலேசிறிது முயலவென்றுற்றேக
  மொவ்வாதிவுண்வெறுத்தா

னுயிர்வெறுத்திடலொக்கு மல்லாதுகிரியைக
ளுபாயத்தினுற்செய்யவோ
மோகத்திலேசிறிது மொழியவிலைமெய்ஞ்ஞான
மோனத்தினிற்கவென்றுன்
முற்றுதுபரிபாக சத்திகளனேகநின்
மூதறிவிலேயெழுந்த
தாகத்திலேவாய்க்கு மமிர்தப்ரவாகமே
தன்னந்தனிப்பெருமையே
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (௫)

இமையளவுபோதையொரு கற்பகாலம்பண்ணு
மிவ்வுலகமெவ்வுலகமோ
வென்றெண்ணம்வருவிக்கு மாதர்சிற்றின்பமோ
வெண்ணின்மகமேருவாக்கிச்
சுமையெடுமினென்றுதான் சும்மாடுமாயெமைச்
சுமையாளுமாக்கினாளுந்
தூர்ப்புத்திபண்ணியுள நற்புத்தியாவையுந்
தூறையிட்டிந்த்ரஜால
மமையவொருகூத்துஞ் சமைந்தாடுமணமாயை
யம்மம்மவெல்லலெளிதோ
வருள்பெற்றபேர்க்கெலா மொளிபெற்றுநிற்குநீ
தருளோவலாதுமருளோ
சமையநெறிகாணுத சாக்ஷிநீசூக்ஷமமாத்
தமியனேற்குளவுபுகலாய்

சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (௪)

இனியேதெமக்குனருள் வருமோவெனக்கருதி
யேங்குதேநெஞ்சமையோ
வின்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரொன்
றெண்ணவோதிடமில்லையே
யனியாயமாயிந்த வுடலைநானென்றுவரு
மந்தகற்காளாகவோ
வாடித்திரிந்துநான் கற்றதுங்கேட்டது
மவலமாய்ப்போதனன்றே
கனியேனும்வறியசெங் காயேனுமுதிர்சருகு
கந்தமூலங்களேனுங்
கனல்வாதைவந்தெய்தி னள்ளிப்புசித்துநான்
கண்மூடிமௌனியாகித்
தனியேயிருப்பதற் கெண்ணினேனெண்ணமிது
சாமிநீயறியாததோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (௫)

மத்தமதகரிமுகிற் குலமென்னநின்றிலகு
வாயிலுடன்மதியகடுதோய்
மாடகூடச்சிகர மொய்த்தசந்திரகாந்த
மணிமேடையுச்சிமீது
முத்தமிழ்முழக்கமுடன் முத்தநகையார்களொடு
முத்துமுத்தாய்க்குலாவி

மோகத்திருந்துமென் யோகத்தினிலைநின்று
மூச்சைப்பிடித்தடைத்துக்
கைத்தலககப்படை விரித்தபுலிசிங்கமொடு
கரடிநுழைநூழைகொண்ட
கானமலையுச்சியிற் குகையூடிருந்துமென்
கரதலாமலகமென்னச்
சத்தமறமோனநிலை பெற்றவர்களுய்வர்காண்
சனகாதிதுணிவிதன்றோ
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (கூ)

கைத்தலம்விளங்குமொரு நெல்லியங்கனியெனக்
கண்டவேதாகமத்தின்
காட்சிபுருஷார்த்தமதின் மாட்சிபெறுமுத்தியரு
கருதினனுமானமாதி
யுத்திபலவாநிரு விகற்பமேலில்லையா
லொன்றோடிரண்டென்னவோ
வுரையுமிலைநீயுமிலை நானுமிலையென்பது
முபாயநீயுண்டுநானுஞ்
சித்தமுளனுணில்லை யெனும்வசனநீயறிவை
தெரியார்கடெரியவசமோ
செப்புகேவலநீதி யொப்புவமையல்லவே
சின்முத்திராங்கமரபிற்
சத்தமறவெனையாண்ட குருமௌனிகையினுற்
றமியனேற்குதவுபொருளே

சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (௭)

காயாதமரமீது கல்லெறுசெல்லுமோ
கடவுணீயாங்களடியேங்
கர்மபந்தத்தினாற் சன்மபந்தம்பெறக்
கற்பித்ததுன்னதருளே
வாயாரவுண்டபேர் வாழ்த்துவதுநொந்தபேர்
வைவதுவுமெங்களுலகை
வாய்பாடுகிற்கநின் வைதிகவொழுங்குநினை
வாழ்த்தினாற்பெறுபேறுதா
னேயாதுபெறுவதொன முறையிட்டதாற்பின்னை
ருளாறுவதுகருமமன்று
மூபயநெறியீதென்னி லுசிதநெறியெந்தநெறி
யுலகிலேயிழுபொருக்குந்
தாயானகருணையு மனக்குண்டெனக்கினிச்
சஞ்சலங்கெடவருள்செய்வாய்
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (௮)

இன்னம்பிறப்பதற் கிடமென்னினிவ்வுடல
மிறவாதிருப்பமூலத்
தெழுமங்கியமிர்தொழுகு மதிமண்டலத்தினுற
வென்னம்மைகுண்டலினியாற்
பின்னம்பிறக்காது சேயெனவளர்த்திடப்
பேயேனைநல்கவேண்டும்

பிறவாதநெறியெனக் குண்டென்னினிம்மையே
பேசுகர்ப்பூரதீப
மின்னும்படிக்ககண் டாகாரவன்னைபால்
வினையேனையொப்புவித்து
வீட்டுநெறிகூட்டிடுதன் மிகவுநன்றிவையன்றி
விவகாரமுண்டென்னிலோ
தன்னந்தனிச்சிறிய னுற்றிலேன்போற்றிவளர்
சன்மார்க்கமுத்திமுதலே
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (கூ)

வேதாவையிவ்வணம் விதித்ததேதென்னினுன்
வினைப்பகுதியென்பனந்த
வினைபேசவறியாது நிற்கவிவைமனதால்
விளைந்ததான்மனதைநாடிற்
போதமேநிற்குமப் போதத்தைநாடிலோ
போதமுநின்னுல்விளக்கம்
பொய்யன்றுதெய்வமறை யாவுமேநீயென்று
போக்குவரவறநிகழ்த்து
மாதாரவாதேய முழுதுநீயாதலா
லகிலமீதென்னையாட்டி
யாடல்கண்டவனுநீ யாடுகின்றவனுநீ
யருளுநீமௌனஞான
தாதாவுநீபெற்ற தாய்தந்தைதாமுநீ
தமருநீயாவுநீகாண்

சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (கo)

கொந்தவிழ்மலர்ச்சோலை நன்னீழல்வைகினுங்
குளிர்தீம்புனற்கையள்ளிக்
கொள்ளுகினுமந்நீ ரிடைத்திளைத்தாடினுங்
குளிர்சந்தவாடைமடவார்
வந்துலவுகின்றதென முன்றிலிடையுலவவே
வசதிபெறும்போதும்வெள்ளை
வட்டமதிபட்டப் பகற்போலநிலவுதர
மகிழ்போதும்வேலையமுதம்
விந்தைபெறவறுசுவையில் வந்ததெனவமுதுண்ணும்
வேளையிலுமாலைகந்தம்
வெள்ளிலையடைக்காய் விரும்பிவேண்டியவண்ணம்
விளையாடிவிழிதுயிலினுஞ்
சந்ததமுநின்னருளை மறவாவரந்தந்து
தமியேனைரக்ஷைபுரிவாய்
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (கக)

தேசோமயானந்தம்.

மருமலர்ச்சோலைசெறி நன்னீழன்மலையாதி
மன்னுமுனிவர்க்கேவலாய்
மந்த்ரமாலிகைசொல்லு மியமநியமாதியா
மார்க்கத்தினின்றுகொண்டு

கருமருவுகாயத்தை நிர்மலமதாகவே
 கமலாசனைதிசேர்த்துக்
காலைப்பிடித்தனலை யம்மைகுண்டலியடிக்
 கலைமதியினூடுதாக்கி
யுருகிவருமமிர்தத்தை யுண்டுண்டுறங்காம
 லுணர்வானவிழியைநாடி
யொன்றோடிரண்டெனாச் சமரசசொரூபசுக
 முற்றிடவென்மனதின்வண்ணந்
திருவருண்முடிக்கவித் தேகமொடுகாண்பனோ
 தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
 தேசோமயானந்தமே. (௯)

இப்பிறவியென்னுமொ ரிருட்கடலின்மூழ்கிநா
 னென்னுமொருமகரவாய்ப்பட்
டிருவினையெனுந்திரையி னெற்றுண்டுபுற்புத
 மெனக்கொங்கைவரிசைகாட்டுந்
துப்பிதழ்மடந்தையர் மயற்சண்டமாருதச்
 சுழல்வந்துவந்தடிப்பச்
சோராதவாசையாங் காறுவானதி
 சுரந்ததெனமேலுமார்ப்பக்
கைப்பரிசுகாரர்போ லறிவானவங்கமுங்
 கைவிட்டுமதிமயங்கிக்
கள்ளவங்கக்காலர் வருவரென்றஞ்சியே
 கண்ணருவிகாட்டுமெளியேன்

செப்பரிய முத்தியாங் கரைசேரவுங்கருணை
 செய்வையோ சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
 தேசோமயானந்தமே, (௨)

தந்தைதாய்தமர்தார மகவென்னுமிவையெலாஞ்
 சந்தையிற்கூட்டமிதிலே
சந்தேகமில்லைமணி மாடமாளிகைமேடை
 சதுரங்கசேனையுடனே
வந்ததோர்வாழ்வுமோ இந்த்ரசாலக்கோலம்
 வஞ்சனைபொறாமைமோசம்
வைத்ததனமாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ
 வாழ்ந்தசனையிலாதனவே
பெற்றதாருஞ்சரி யெனத்தேர்ந்துதேர்ந்துமே
 யிரவுபகலில்லாவிடந்
தேகமாய்நின்றநின் னருள்வெள்ளமீதிலே
 யாரென்பதறவுமூழ்கிச்
சிந்தைதான்றெளியாது சுழலும்வகையென்கொலோ
 தேடரியசத்தாகியென்
சித்தமிசைக்குடிகொண்ட வறிவானதெய்வமே
 தேசோமயானந்தமே, (௩)

ஆடாமலோய்ந்திட்ட பம்பரம்போல்விசை
 யடங்கிமனம்வீழ்ந்ததோ
யறியாமையாகின்ற விருளகலவிருளொளியு
 மல்லாதிருந்தவெளியோ

கோடாதெனைக்கண் டெனக்குணிறைசாந்தவெளி
கூடியின்பாதீதமுங்
கூடினேனேசரியை கிரியையின்முயன்றநெறி
கூடினேனேவல்லனியா
னீடாகவேயாறு வீட்டினிரம்பியே
யிலகிவளர்பிராணனென்னு
மிருவிதியினைக்கட்டி யோகபரனாகாம
லேழைக்குடும்பனாகித்
தேடாதழிக்கவொரு மதிவந்ததென்கொலோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (௩)

பாடாதுபாடிப் படித்தளவில்சமயமும்
பஞ்சுபடுசொல்லனிவனைப்
பார்மினோபார்மினோ வென்றுசபைகூடவும்
பரமார்த்தமிதுவென்னவே
யாடாதுமாடிநெஞ் சுருகிநெக்காடவே
யமலமேயேகமேயெம்
மாதியேசோதியே யெங்குநிறைகடவுளே
யரசேயெனக்கூவிநான்
வாடாதுவாடுமென் முகவாட்டமுங்கண்டு
வாடாவெனக்கருணைநீ
வைத்திடாவண்ணமே சங்கேதமாவிந்த
வன்மையைவளர்ப்பித்ததார்

தேடாததேடுவோர் தேட்டற்றதேட்டமே
 தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
 தேசோமயானந்தமே. (௫)

பிரியாததண்ணருட் சிவஞானியாய்வந்து
 பேசரியவாசியாலே
பேரின்பவுண்மையை யளித்தனையென்மனதறப்
 பேரம்பலக்கடவுளா
யறிவாயிருந்திடு நாதவொலிகாட்டியே
 யமிர்தப்ரவாகசித்தி
யருளினையலாதுதிரு வம்பலமுமாகியெனை
 யாண்டனைபினெய்திநெறியாய்க்
குறிதானளித்தனைநன் மரவுரிகொளந்தணக்
 கோலமாயசபார்கலங்
கூறினபின்மௌனியாய்ச் சும்மாவிருக்கநெறி
 கூட்டினையெலாமிருக்கச்
சிறியேன் மயங்கிமிக வறிவின்மையாவதேனோ
 தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
 தேசோமயானந்தமே. (௬)

ஆராரெனக்கென்ன போதித்துமென்னவென்
 னறிவினைமயக்கவசமோ
வண்டகோடியையெலாங் கருப்பவறைபோலவு
 மடிக்கடிக்காவமைத்துப்

பேராமனின்றபர வெளியிலேமனவெளி
　　பிறங்குவதலாதொன்றினும்
பின்னமுறமருவாது நன்னயத்தாலினிப்
　　பேரின்பமுத்திநிலையுந்
தாராதுதள்ளவும் போகாதுளலது
　　தள்ளினும்போகேனியான்
றடையேதுமில்லையாண் டவனடிமையென்னுமிரு
　　தன்மையினுமென்வழக்குத்
தீராதுவிடுவதிலை நடுவானகடவுளே
　　தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
　　தேசோமயானந்தமே. (எ)

கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங்
　　கரடிவெம்புலிவாயையுங்
கட்டலாமொருசிங்க முதுகின்மேற்கொள்ளலாங்
　　கட்செவியெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம்வைத் தைந்துலோகத்தையும்
　　வேதித்துவிற்றுண்ணலாம்
வேறொருவர்காணும லுலகத்துலாவலாம்
　　விண்ணவரையேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையொ டிருக்கலாமற்றொரு
　　சரீரத்தினும்புகுதலாஞ்
சலமேனடக்கலாங் கனன்மேலிருக்கலாந்
　　தன்னிகரில்சித்திபெறலாஞ்

சிந்தையையடக்கியே சும்மாவிருக்கின்ற
திறமரிதுசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (௮)

எல்லாமறிந்தவரு மேதுமறியாதவரு
மில்லையெனுமிவ்வுலகமீ
தேதுமறியாதவ னெனப்பெயர்தரித்துமிக
வேழைக்குளேழையாகிக்
கல்லாதவறிவிற் கடைப்பட்டநானன்று
கைபிருதுவுண்மைஞானங்
சற்றிருந்தின்னருளி னுக்கென்னகைம்மாறு
காட்டுவேன்குற்றேவலாறு
னல்லார்த்தமேனியொடு குண்டுகட்பிறையெயிற்
றுபாசவடிவமான
வந்தகாநீயொரு பகட்டாற்பகட்டுவ
தடாதடாகாசநம்பாற்
செல்லாதடாவென்று பேசவாயுந்தந்த
செல்வமேசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (௯)

மின்போலு மிடையொடியு மொடியுமென மொழிதல்
போன் மென்சிலம்பொலிகளார்ப்ப
வீங்கிப்புடைத்துவிழு சுமையன்னகொங்கைமட
மின்னார்கள்பின்னேவலா

லென்போலலைந்தவர்கள் கற்றோர்கள்கல்லார்க
ளிருவர்களிலொருவருண்டோ
வென்செய்கேனம்மம்ம வென்பாவமென்கொடுமை
யேதென்றெடுத்துமொழிவே
னன்பால்வியந்துருகி யடியற்றமரமென்ன
வடியிலேவீழ்ந்துவீழ்ந்தெம்
மடிகளேயுமதடிமை யாங்களெனுநால்வருக்
கறமாதிபொருளுரைப்பத்
தென்பாலின்முகமாகி வடவாலிருக்கின்ற
செல்வமேசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (கo)

புத்தமிர்தபோகமுங் கற்பகநிழலிற்
பொலிவுறவிருக்குமியல்பும்
பொன்னுலகிலயிரா வதத்தேறுவரிசையும்
பூமண்டலாதிக்கமு
மத்தவெறியினர்வேண்டு மாலென்றுதள்ளவுமெ
மாலுமொருசுட்டுமறவே
வைக்கின்றவைப்பாளன் மௌனதேசிகனென்ன
வந்தநின்னருள்வாழிகாண்
சுத்தபரிபூரண வகண்டமேயேகமே
சுருதிமுடிவானபொருளே
சொல்லரியவுயிரினிடை யங்கங்குநின்றருள்
சுரந்துபொழிகருணைமுகிலே

சித்திநிலைமுத்திநிலை விளைகின்றபூமியே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (௬௧)

சிற்சுகோதயவிலாசம்.

காகமோடுகழு கலகைநாய்நரிகள்
சுற்றுசோறிடு துருத்தியைக்
காலிரண்டுநவ வாசல்பெற்றுவளர்
காமவேணடனசாலையை
மோகவாசைமுறி யிட்டபெட்டியைமு
மலமிருந்தொழுகுகேணியை
மொய்த்துவெங்கிருமி தத்துகும்பியை
முடங்கலார்கிடைசரக்கினை
மாகவிந்த்ரதனு மின்னையொத்திலக
வேதமோதியகுலாலனார்
வனையவெய்யதடி காரனானயமன்
வந்தடிக்குமொருமட்கலத்
தேகமானபொயை மெய்யெனக்கருதி
யையவையமிசைவாடவோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௧)

சுருதிகளோடுகுண மேதுமின்றியன
லொழுகநின்றிடுமிரும்பனற்

கூடலின்றியது வா்யிருந்தபடி
கொடியவாணவவறைக்குளே
யறிவதேதுமற வறிவிலாமைமய
மாயிருக்குமெனையருளிறை
லளவிலாததனு கரணமாதியை
யளித்தபோதுனையறிந்துநான்
பிறிவிலாதவண நின்றிடாதபடி
பலநிறங்கவருமுமலமாய்ப்
பெரியமாயையி லழுந்திநின்னரு
ப்ரசாதநல்லருண்மறந்திடுஞ்
சிறியனேனுமுனை வந்தணைந்துசுக
மாயிருப்பதினியென்றுகாண்
டெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (உ)

ஐந்துபூதமொரு காரணமொன
வடங்கவந்தபெருவானமே
யாதியந்தநடு வேறுமின்றியரு
ளாய்நிறைந்திலகுசோதியே
தொந்தரூபமுட னரூபமாதிகுறி
குணமிறந்துவளர்வஸ்துவே
துரியமேதுரிய வுயிரினுக்குணர்வு
தோன்றநின்றருள்சுபாவமே
யெந்தநாளுநடு வாகிநின்றொளிரு
மாதியேகருணைநிதியே

யெந்தையேயென விடைந்திடைந்துருகு
மெளியனேன்கவலைதீரவுஞ்
சிந்தையானதை யறிந்துநீயுனருள்
செய்யநானுமினியுய்வனோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (ரு)

ஐவரொன்றபுல வேடர்கொட்டம
டங்குமர்க்கடவன்முட்டியா
யடவிநின்றுமலை யருகினின்றுசரு
காதிதின்றுபனிவெயிலினுன்
மெய்வருந்துதவ மில்லைநற்சரியை
கிரியையோகமெனுமூன்றதாய்
மேவுகின்றசைவ யானநன்னெறி
விரும்பவில்லையுலகத்திலே
பொய்முடங்குதொழில் யாததற்குநல
சாதித்தொழினடத்திடும்
புத்திபூகமதி வற்றமூகமிவை
பொருளெனக்கருதுமருளனியான்
றெய்வநல்லருள் படைத்தவன்பரொடு
சேரவுங்கருணைகூர்வையோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (சா)

ஏகமானவுரு வானநீயருளி
னுலனேகவுருவாகியே

யெந்தநாளகில கோடிசிர்ஷ்டிசெய
விசையுநாள்வரையநாண்முத
லாகநாளது வரைக்குமுன்னடிமை
கூடவேசனனமானதோ
வனந்தமுண்டுகல சனனமீதிதனு
ளறியவேண்டுவனவறியலா
மோகமாதிதரு பாசமானதை
யறிந்துவிட்டுனையுமெனையுமே
முழுதுணர்ந்துபர மானவின்பவெள
மூழ்கவேண்டுமிதுவின்றியே
தேகமேநழுவி நானுமோநழுவின்
பின்னையுய்யும்வகையுள்ளதோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௫)

நியமலக்ஷணமு மியமலக்ஷணமு
மாசனத்திவிதபேதமு
நெடிதுணர்ந்திதய பத்மபீடமிசை
நின்றிலங்குமசபானலத்
தியலறிந்துவளர் மூலகுண்டலியை
யினிதிறைஞ்சியவளருளினு
லெல்லையற்றுவளர் சோதிமூலவன
லெங்கண்மோனமனுமுறையிலே
வயமிருந்துவரு மமிர்தமண்டல
மதிக்குளேமதியைவைத்துநான்

வாய்மடுத்தமிர்த வாரியைப்பருகி
மன்னுமாரமிர்தவடிவமாய்ச்
செயமிகுந்துவரு சித்தயோகநிலை
பெற்றுஞானநெறியடைவனோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௬)

எறிதிரைக்கட லிகர்த்தசெல்வமிக
வல்லலென்றொருவர்பின்செலா
இல்லையென்றுமுரை பேசிடாதுலகி
லெவருமாமெனமதிக்கவே
நெறியின்வைகிவளர் செல்வமும்மூவி
னோய்களற்றசுகவாழ்க்கையாய்
நியமமாதிநிலை நின்றுஞானநெறி
நிஷ்டைகூடவுமெந்நாளோமே
யறிவினின்றுகுரு வாயுணர்த்தியரு
மன்றிமோனகுருவாகியே
யகிலமீதுவர வந்தீரருளை
யையவையவினியென்சொல்கேன்
சிறியனேனைநம தடிமையென்றுனது
திருவுளத்தினிலிருந்ததோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௭)

எவ்வுயிர்த்திரளு மூலகிலென்னுயி
ரெனக்குழைந்துருகிநன்மையா

யிதமுரைப்பவென் தென்றயாவையு
மெடுத்தெறிந்துமதயானைபோற்
கவ்வையற்றநடை பயிலவன்பரடி
கண்டதேவருளின்வடிவமாக்
கண்டயாவையு மகண்டமென்னவிரு
கைகுவித்துமலர்தூவியே
பவ்வவெண்டிரை கொடுத்ததண்டரளம்
விழியுதிர்ப்பமொழிகுளறியே
பாடியாடியு ளுடைந்துடைந்தெழுது
பார்வையொத்தசைதலின்றியே
இவ்யவன்புருவ மாகியன்பரொடு
மின்பவீட்டினிலிருப்பனோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௮)

மத்தர்பேயரொடு பாலர்தன்மையது
மருவியேதுரியவடிவமாய்
மன்னுதேசமொடு காலமாதியை
மறந்துநின்னடியரடியிலே
பத்தியாய்நெடிது நம்புமென்னையொரு
மையறந்தகிலமாயையைப்
பாருபாரென நடத்தவந்ததென
பாரதத்தினுமிதுள்ளதோ
சுத்தநித்தவியல் பாருமோவுனது
விசுவமாயைநடுவாகவே

சொல்லவேணும்வகை நல்லகாதிகதை
சொல்லுமாயையினுமில்லையென்
சித்தமிப்படி மயங்குமோவருளை
நம்பினோர்கள்பெறுபேறிதோ
தெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௯)

பன்முகச்சமய நெறிபடைத்தவரு
மியாங்களேகடவுளென்றிடும்
பாநகத்தவரும் வாததர்க்கமிடு
படிறருந்தலைவணங்கிடத்
தன்முகத்திலுயிர் வரவழைக்குமெம
தருமனும்பகடுமேய்க்கியாய்த்
தனியிருப்பவட நீழலூடுவளர்
சனகனாதிமுனிவோர்கடஞ்
சொன்மயக்கமது தீரவங்கைகொடு
மோனஞானமதுணர்த்திய
சுத்தசித்தவரு ளியல்பதாகவுமா
சோமசேகரகிர்பானுவாய்த்
தென்முகத்தின்முக மாயிருந்தகொளு
மெம்முகத்தினும்வணங்குவேன்
றெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (௧௦)

ஆகாரபுவனம்.

சிதம்பரரகசியம்.

ஆகாரபுவனமின்பாகாரமாக
வங்ஙனேயொருமொழியாலகண்டாகார
யோகானுபூதிபெற்றவன்பராவிக்
குறுதுணையேயென்னளவுமுகந்தநட்பே
வாகாரும்படிக்கிசைகிண்கிணிவாயென்ன
மலர்ந்தமலரிடைவாசம்வயங்குமாபோற்
றேகாதியுலகமெங்குங்கலந்துதானே
திகழனந்தானந்தமயத்தெய்வக்குன்றே. (க)

அனந்தபதவுயிர்கோடாநுமும்பிராயென்று
மானந்தநிலையாகியளவைக்கெட்டாத்
தனந்தனிச்சின்மாத்திரமாய்க்கீழ்மேல்காட்டாச்
சதசத்தாயருட்கோயிற்றழைத்ததேவே
யினம்பிரிந்தமான்போறனிமையாவண்ண
மின்பமுறவன்பர்பக்கலிருத்திவைத்துக்
கனந்தருமாகனமேதண்ணருளிற்றுனே
கனிபலித்தவானந்தக்கட்டிப்பேறே. (உ)

பேறனைத்துமணுவெனவேயுதறித்தள்ளப்
பேரின்பமாகவந்தபெருக்கேபேசா
வீறனைத்துமிந்நெறிக்கேயென்னவென்னை
மேவென்றவரத்தேபாழ்வெய்யமாயைக்
கூறனைத்துங்கடந்தவெல்லைச்சேடமாகிக்
குறைவற்றநின்றிடுநிறைவேகுலவாநின்ற

வாறனைத்தும்புகுங்கடல்போற்சமயகோடி
யத்தனையுந்தொடர்ந்துபுகுமாதிநட்பே. (௩)

ஆதியந்தமெனுமெழுவாயீறற்றோங்கி
யருமறையின்னமுங்காணாதரற்றநாணு
பேதமதங்களுமலையமலைபோல்வாதப்
பெற்றியரும்வாய்வாதப்பேயராகச்
சாதகமோனத்திலன்னவடவானீழற்
றண்ணருட்சந்திரமௌலிதடக்கைக்கேற்க
வேதகசின்மாத்திரமாயெம்மனோர்க்கும்
வெளியாகவந்தவொன்றேவிமலவாழ்வே. (௪)

விமலமுதற்குணமாகிநூற்றெட்டாகி
வேதமெய்த்தெடுத்துரைத்தவிருத்திக்கேற்க
வமையுமிலக்கணவடிவாயதுவும்போதா
தப்பாலுக்கப்பாலாயருட்கண்ணாகிச்
சமமுமுடன்கலப்புமவிழ்ந்துமியாங்காணத்
தண்ணருடன்றெமைக்காக்குஞ்சாக்ஷிப்பேறே
யிமையளவுமுபகாரமல்லால்வேறொன்
றியக்காநிர்க்குணக்கடலாயிருந்தவொன்றே. (௫)

ஒன்றாகிப்பலவாகிப்பலவாக்கண்ட
வொளியாகிவெளியாகியுருவுமாகி
நன்றாகித்தீதாகிமற்றுமாகி
நாசமுடனுற்பத்திநண்ணாதாகி
யின்றாகிநாளையுமாய்மேலுமான
வெந்தையேயெம்மானேயென்றென்றேங்கிக்

கன்றுகிக்கதறினர்க்குச்சேதாவாகிக்
கடிதினில்வந்தருள்கூருங்கருணைவிண்ணே. (கூ)

அருள்பழுத்தபழச்சுவையேகரும்பேதேனே
யாரமிர்தேயென்கண்ணேயரியவான
பொருளனைத்துந்தரும்பொருளேகருணைநீங்காப்
பூரணமாய்நின்றவொன்றேபுனிதவாழ்வே
கருதரியகருத்ததனுட்கருத்தாய்மேவிக்
காலமுந்தேசமும்வகுத்துக்கருவியாதி
விரிவினையுங்கூட்டியுயிர்த்திரளையாட்டும்
விழுப்பொருளேயான்சொலும்விண்ணப்பங்கேளே.

விண்ணவரிந்திரன்முதலோர்நாரதாதி
விளங்குசப்தருஷிகள்கன்வீணைவல்லோ
ரெண்ணரியசித்தர்மனுவாதிவேந்த
ரிருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக்
கண்ணகன்ஞாலம்மதிக்கத்தானேயுள்ளங்
கையினெல்லிக்கனிபோலக்காட்சியாகத்
திண்ணியநல்லறிவாலிச்சமயத்தன்றே
செப்பரியசித்திமுத்திசேர்ந்தாரொன்றும். (அ)

செப்பரியசமயநெறியெல்லாந்தன்றன்
றெய்வமேதெய்வமெனுஞ்செயற்கையான
வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பா
லடுத்ததந்நூல்களும்விரித்தேயனுமானாதி
யொப்பவிரித்துரைப்பரிங்ஙன்பொய்மெய்யென்ன
வொன்றிலையொன்றெனப்பார்ப்பதொவ்வாதார்க்கு

மிப்பரிசாஞ்சமயமுமாயல்லவாகி
யாதுசமயமும்வணங்குமியல்பதாகி. (கூ)

இயல்பென்றுந்திரியாமலியமமாதி
யெண்குணமுங்காட்டியன்பாலின்பமாகிப்
பயனருளப்பொருள்கள்பரிவாரமாகிப்
பண்புறவுஞ்சௌபானபக்ஷங்காட்டி
மயலறுமந்திரஞ்சிக்ஷைசோதிடாதி
மற்றங்கநூல்வணங்கமௌனமோலி
யயர்வறச்சென்னியில்வைத்தாரசாங்கத்தி
லமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ. (கo)

அந்தோவீதிசயமிச்சமயம்போலின்
றறிஞரெல்லாநடுவறியவணிமாவாதி
வந்தாடித்திரிபவர்க்கும்பேசாமோனம்
வைத்திருந்தமாதவர்க்குமற்றுமற்று
மிந்த்ராதிபோகநலம்பெற்றபேர்க்கு
மிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை
சந்தானகற்பகம்போலருளைக்காட்டத்
தக்கநெறியிந்நெறியேதான்சன்மார்க்கம். (கக)

சன்மார்க்கஞானமதின்பொருளும்வீறு
சமயசங்கேதப்பொருளுந்தானொன்றாகப்
பன்மார்க்கநெறியினிலுங்கண்டதில்லை
பகர்வரியதில்லைமன்றுட்பார்த்தபோதங்
கென்மார்க்கமிருக்குதெல்லாம்வெளியேயென்ன
வெச்சமயத்தவர்களும்வந்திறைஞ்சாநிற்பர்

கன்மார்க்கநெஞ்சமுளவெனக்குந்தானே
கண்டவுடனுணர்ந்தங்காண்டலாகும். (௧௨)

காண்டல்பெறப்புறத்தினுள்ளபடியேயுள்ளுங்
காட்சிமெய்ந்நூல்சொலும்பதியாங்கடவுளேநீ
நீண்டநெடுமையுமகலக்குறுக்குங்காட்டா
நிறைபரிபூரணவறிவாய்நித்தமாகி
வேண்டுவிருப்பொடுவெறுப்புச்சமீபந்தூரம்
விலகலணுகுதன்முதலாம்விவகாரங்கள்
பூண்டவளவைகண்மனவாக்காதியெல்லாம்
பொருந்தாமலகம்புறமும்புணர்க்கையாகி. (௧௩)

ஆகியசற்காரியவூகத்துக்கேற்ற
வமலமாய்நடுவாகியனந்தசத்தி
யோகமுறுமானந்தமயமதாகி
யுயிர்க்குயிராயெந்நாளுமோங்காநிற்ப
மோகவிருண்மாயைவினையுயிர்கட்கெல்லா
மொய்த்ததென்கொலுபகாரமுயற்சியாகப்
பாகமிகவருளவொருசத்திவந்து
பதிந்ததென்கொலென்னுமப் பான்மையென்கொல்.

நானென்னுமோரகந்தையெவர்க்கும்வந்து
நலிந்தவுடன்சகமாயைநாளுமாகித்
தான்வந்துதொடருமித்தால்வளருந்துன்பச்
சாகரத்தின்பெருமையெவர்சாற்றவல்லா
ரூனென்றுமுடலென்றுங்கரணமென்று
முள்ளென்றும்புறமென்றுமொழியாநின்ற

வானென்றுங் காலென்றுந் தீயொன்று
மண்ணென்றுமலையென்றும்வனமதென்றும். (௧௫)

மலைமலையாங்காட்சிகண்காணுமையாகி
மறப்பென்றுநினைப்பென்றுமாயாவாரி
யலையலையாயடிக்குமின்பதுன்பமென்று
மதைவிளைக்கும்வினைகளென்றுமதனைத்தீர்க்கத்
தலைபலவாஞ்சமயமென்றுந்தெய்வமென்றுஞ்
சாதகமொன்றும்மதற்குச்சாதகியாகக்
கலைபலவாநெறியென்றுந்தர்க்கமென்றுங்
கடலுறுநுண்மணலெண்ணிக்காணும்போதும். (௧௬)

காணரியவல்லலெல்லாந்தானேகட்டுக்
கட்டாகவிளையுமதைக்கட்டோடேதான்
வீணினிற்கர்ப்பூரமலைபடுதீப்பட்ட
வித்தையெனக்காணவொருவிவேகங்காட்ட
வூணுறக்கமின்பதுன்பம்பேருமாகி
யொவ்விடவுமெனைப்போலவுருவங்காட்டி
கோணறவோர்மான்காட்டிமானையீர்க்குங்
கொள்கையெனவருண்மௌனகுருவாய்வந்து. ( )

வந்தெனுடல்பொருளாவிமூன்றுந்தன்கை
வசமெனவேயத்துவமார்க்கநோக்கி
யைந்துபுலனைம்பூதங்கரணமாகி
யடுத்தகுணமத்தனையுமல்லையல்லை
யிந்தவுடலறிவறியாமையுநீயல்லை
யாதொன்றுபற்றினதனியல்பாய்நின்று

பந்தமறும்பளிங்கனையசித்துநீயுன்
  பக்குவங்கண்டறிவிக்கும்பான்மையேம்யாம். (கஅ)

அறிவாகியானந்தமயமாயென்று
  மழியாதநிலையாகியாதின்பாலும்
பிறியாமற்றண்ணருளேகோயிலான
  பெரியபரம்பதியதனைப்பெறவேவேண்டி
னெறியாகக்கூறுவன்கேளொந்தராரு
  நிர்க்குணநிற்குளம்வாய்த்துநீடுவாழ்க
செறிவானவறியாமையெல்லாநீங்க
  சிற்சுகம்பெற்றிடுகபந்தந்தீர்கவென்றே. (ககூ)

பந்தமறுமெய்ஞ்ஞானமானமோனப்
  பண்பொன்றையருளியந்தப்பண்புக்கேதான்
சிந்தையில்லைநானென்னும்பான்மையில்லை
  தேசமில்லைகாலமில்லைதிக்குமில்லை
தொந்தமில்லைநீக்கமில்லைபிரிவுமில்லை
  சொல்லுமில்லையிராப்பகலாந்தோற்றமில்லை
யந்தமில்லையாதியில்லைநடுவுமில்லை
  யகமுமில்லைபுறமுமில்லையனைத்துமில்லை. (உ0)

இல்லையில்லையென்னின்றொன்றுமில்லாதல்ல
  வியல்பாகியென்றுமுள்ளவியற்கையாகிச்
சொல்லரியதன்மையதாயான்றுனென்னத்
  தோன்றுதெல்லாம்விழுக்குஞ்சொரூபமாகி
யல்லையுண்டபகல்போலவவித்தையெல்லா
  மடையவுண்டுதடையறவுன்னறிவைத்தானே

வெல்லவுண்டிங்குன்னையுந்தானாகக்கொண்டு
வேதகமாய்ப்பேசாமைவிளக்குந்தானே. (௨௧)

தானானதன்மயமேயல்லாலொன்றைத்
தலையெடுக்கவொட்டாதுதலைப்பட்டாங்கே
போனாலுங்கர்ப்பூரதீபம்போலப்
போயொளிப்பதல்லாதுபுலம்வேறின்று
ஞானாகாரத்தினொடுஞேயமற்ற
ஞாதுருவுநழுவாமனழுவிநிற்கு
மானாலுமிதன்பெருமையெவர்க்கார்சொல்வா
ரதுவானாலதுவாவாரதுவேசொல்லும். (௨௨)

அதுவென்றாலெதுவெனவொன்றடுக்குஞ்சங்கை
யாதலினாலதுவெனலுமறவேவிட்டு
மதுவுண்டவண்டெனவுஞ்சனகனாதி
மன்னவர்கள்சுகர்முதலோர்வாழ்ந்தாவொன்றும்
பதியிந்தநிலையெனவுமென்னையாண்ட
படிக்குநிருவிகற்பத்தாற்பரமானந்த
கதிகண்டுகொள்ளவுநின்னருள்கூரிந்தக்
கதியன்றியுறங்கேன்மேற்கருமம்பாரேன். (௨௩)

பாராதிவிண்ணனைத்துநீயோசிந்தை
பரியமடலாவெழுதிப்பார்த்துப்பார்த்து
வாராயோவென்ப்ராணநாதாவென்பேன்
வளைத்துவளைத்தெனைநீயாவைத்துக்கொண்டு
பூரயமாமேலொன்றறியாவண்ணம்
புண்ணார்போனெஞ்சம்புலம்பியுள்ளோ

நீராளமாயுருகிக்கண்ணீர்சோர
நெட்டுயிர்த்துமெய்மறந்தோர்நிலையாய்நிற்பேன். ()
ஆயுமறிவாகியுன்னைப்பிரியாவண்ணை
மணைந்துசுகம்பெற்றவன்பரையோவென்னத்
தீயகொலைச்சமயத்துஞ்செல்லச்சிந்தை
தெளிந்திடவுஞ்சமாதானஞ்செய்வேன்வாழ்வான்
காயிலைபுன்சருகாதியருந்தக்கானங்
கடன்மலையெங்கேயெனவுங்கவலையாவேன்
வாயில்கும்பம்போற்கிடந்துபுரள்வேன்வானின்
மதிகதிரைமுன்னிலையாவைத்துநேரோ. (உரு)
நேரோதானிரவுபகல்கோடாவண்ண
நித்தம்வரவுங்களையிந்நிலைக்கேவைத்தா
ராரோயங்கவர்பெருமையென்னேயென்பே
னடிக்கின்றகாற்றேநீயாராலேதான்
பேராதேசுழல்கின்றாயென்பேன்வந்து
பெய்கின்றமுகில்காளெம்பெருமானும்போற்
றாராளமாக்கருணைபொழியச்செய்யுஞ்
சாதகமென்னேகருதிச்சாற்றுமென்பேன். (உசா)
கருதரியவிண்ணேநீயெங்குமாகிக்
கலந்தனையேயுன்முடிவின்காட்சியாக
வருபொருளெப்படியிருக்குஞ்சொல்லாயென்பேன்
மண்ணேயுன்முடிவிலெதுவயங்குமாங்கே
துரியவறிவுடைச்சேடனீற்றினுண்மை
சொல்லானோசொல்லென்பேன்சுருதியேநீ

யொருவனைப்போலனைவருக்குமுண்மையாமுன்
னுரையன்றோவுன்முடிவையுரைநீயென்பேன். (உள)

உரையிறந்துபெருமைபெற்றுத்திரைக்கைநீட்டி
யொலிக்கின்றகடலேயிவ்வுலகஞ்சூழக்
கரையுமின்றியுன்னைவைத்தாரியாரோயென்பேன்
கானகத்திற்பைங்கிளிகாள்கமலமேவும்
வரிசிறைவண்டினங்காளோதிமங்காடூ
மார்க்கமன்றோநீங்களிருவரையிலேயும்
பெரியபரிபூரணமாம்பொருளைக்கண்டு
பேசியதுண்டோவொருவாற்பேசுமென்பேன். (உஅ)

ஒருவனவன்யானைகெடக்குடத்துட்செங்கை
யோட்டுதல்போலுன்பேதையுப்போடப்பை
மருவவிட்டுங்கர்ப்பூர மதனிற்றீபம்
வயங்கவிட்டுமைக்கியமுன்னிவருந்திரிற்பே
னருளுடையபரமென்றோவன்றுதானே
யாளுளனென்றும்மெனக்கேயாணவாகி
பெருகுவினைக்கட்டென்றுமென்னாற்கட்டிப்
பேசியதன்றேயருளாற்பேசிற்றன்றே. (உகூ)

அன்றுமுதலின்றைவரைச்சனனகோடி
யடைந்தடைந்திங்கியாதனையாலழித்ததல்லா
லின்றைவரைமூர்த்தியின்றேயெடுத்ததேக
மெய்ப்போதோநெறியாதேயிப்போதேதான்
றுன்றுமனக்கவலைகெடப்புலோகமேயனைத்
தொழும்புகொளச்சிகாழித்துரையேதூறு

சென்றிடவேபொருளைவைத்தநாவலோய்நந்
சிவனப்பாவென்றவருட்செல்வத்தேவே. (௩௦

தேவர்தொழும்வாதவூர்த்தேவேயென்பேன்
றிருமூலத்தேவேயிச்சகத்தோர்முத்திக்
காவலுறச்சிவவென்வாக்குடனேவந்த
வரசேசும்மாவிருந்துன்னருளைச்சாரப்
பூவுலகில்வளரருணகிரியேமற்றைப்
புண்ணியர்காளோவென்பேன்புரையொன்றில்லா
வோவியம்போலசைவறவுந்தானேநிற்பே
னேதரிய துயர்கெடவேயுரைக்குமுன்னே. (௩௧)

ஓதரியசுகர்போலவேனென்ன
வொருவரிலையோவெனவுமுரைப்பேன்றனே
பேதமபேசங்கெடவுமொருபேசாமை
பிறவாதோவாலடியிற்பெரியமோன
நாதனெருதரமுலகம்பார்க்கவிச்சை
நண்ணேனேவென்றென்றேநாறுவாகிக்
காதன்மிகுமணியிழையாரொனவாடுற்றேன்
கருத்தறிந்துபுரப்பதுன்மேற்கடன்முக்காலும். ( )

காலமொடுதேசவர்த்தமானமாகி
கலந்துநின்றநிலைவாழிகருணைவாழி
மாலறவுஞ்சைவமுதன்மதங்களாகி
மதாதீதமானவருண்மரபுவாழி

சாலமிகுமெளியேனிவ்வழுக்குப்பேசத்
தயவுவைத்துவளர்த்தவருட்டன்மைவாழி
யாலடியிற்பரமகுருவாழிவாழி
யகண்டிதாகாரவருளடியார்வாழி. (௫௫)

தேன்முகம்.

தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்
மேவு, நான்முகத்தேவேநின்றூட்டி யவகிலமாயை,
கான்முயற்கொம்பேயென்கோ கானலம்புனலேயென்
கோ, வான்முகமுளரியென்கோமற்றென்கோவிளம்ப
ல்வேண்டும். (௧)

வேண்டிவபடைத்தாய்நுந்தைவிதிப்படிபுரந்தானத்
தைக், காண்டகவழித்தான்முக்கட் கடவுடானினையவா
ற்று, லாண்டவனெவனேவென்னவறிகிலாதகிலமீயே,
யீண்டியவல்லதீரவெம்மனோர்க்கியம்புகண்டாய். (௨)

கண்டனையல்லவென்றே கழித்திடுமிறுதிக்கண்ணே,
கொண்டதுபரமானந்தக்கோதிலாமுத்தியத்தாற், பண்
டையிற் படைப்புங்காப்பும் பறந்தன மாயையோடே,
வெண்டலைவிழிகைகாலில்விளங்கிடநின்றனையாவன். ()

விளங்கவெண்ணீறுபூசிவிரிசடைக்கங்கைதாங்கித்,
துளங்குநன்னுதற்கண்டோன்றச்சுழல்வளிநெடுமூச்சா
கக், களங்கமிலுருவந்தானேககனமாய்ப்பொலியப்பூ
மி, வளர்ந்ததாளென்னவுள்ளமன்றெனமறையொன்
றின்றி. (௩)

மறைமுழக்கொலிப்பத்தானேவரதமோடபயக்கை
ண், முறைமையினேங்கநாதமுரசெனக்கறங்கவெங்
ங், குறைவிலாவணநிறைந்துகோதிலா நடனஞ்செ
வா, னிறையவனெனலாமியார்க்குமிதயசம் மதமீதை
லால். (ரு

அல்லலாந்தொழில்படைத்தேயடிக்கடியுருவெடு
தே, மல்லன்மாஞாலங்காக்கவருபவர்கடவுளென்னிற்
ரெல்லையாம்பிறவிவேலைதொலைந்திடா திருணீங்கா
நல்லதுமாயைதானுநானெனவந்துநிற்கும். (கூ

நானெனநிற்குஞானஞானமன்றந்தஞான, மோன
மாயிருக்கவொட்டாமோனமின்றாகவேதான், றேனெ
னருசிக்குமன்பாற்சிந்தைகைந்துருகும்வண்ணம், வா
னெனநிறைந்தானந்தமாகடல்வளைவதின்றே. (எ)

இன்றெனவிருப்போமென்னினென்றுஞ்சூனியமா
முத்தி, நன்றெடுதீதுமன்றிநாமுன்னேபெறுமவித்தை,
நின்றதுபெத்தந்தானேநிரந்தரமுத்தியென்னி, னென்
றொருவகைநான்கேட்கவுணர்வில்லைகுருவுமில்லை. (அ)

இல்லையென்றிடினிப்பூமியிருந்தவாறிருப்போமென்
னி, னல்லவன்சாருவாகனன்சொலுநெறிக்குவீணிற்,
றொல்லையே ஞகமாதி தொடுப்பதேன் மயக்கமேதிங்,
கொல்லவந்திருமினென்னவுறவுசெய்திடுவனந்தோ. ()

அந்தணர்நால்வர்காணவருட்குருவாகிவந்த, வெந்
தையேயெல்லாந்தானென் றியம்பினனைமைப்படைத்

து, தந்தைநீயெம்மைக்காக்குந் தலைவனேநுந்தையன்றோ, பந்தமில்சித்திமுத்தி படைக்கநின்னருள்பாலிப்பாய். (௧௦)

பன்மாலை

பன்மாலைத்திரளிருக்கத்தமையுணர்ந்தோர்
பாமாலைக்கேநீதான்பக்ஷமென்று
நன்மாலையாவெடுத்துச்சொன்னார்நல்லோர்
நலமறிந்துகல்லாதநானுஞ்சொன்னேன்
சொன்மாலைமாலையாக்கண்ணீர்சோரத்
தொண்டனேனெந்நாளுந்துதித்துநிற்பே
னென்மாலையறிந்திங்கேவாவாவென்றே
யெனைக்கலப்பாய்திருக்கருணையெம்பிரானே. (௧)

கருணைமொழிசிறிதில்லேனீதலில்லேன்
கண்ணீர்கம்பலையென்றன்கருத்துக்கேற்க
வொருபொழுதும்பெற்றறியேனென்னையாரு
மொருவாவுன்னடிமைநானொருத்தனுக்கோ
விருவினையுமுக்குணமுங்கரணநான்கு
மிடர்செயுமைம்புலனுங்காமாதியாறும்
வரவரவுமேழைக்கோட்டதான
மகத்தொடும்வந்தெதிர்த்தவடிவமன்றே. (௨)

வடிவனைத்துந்தந்தவடிவில்லாச்சுத்த
வான்பொருளேயெளியனேன்மனமாமாயைக்

குடிகெடுக்கத்துசங்கட்டிக்கொண்டமோன
குருவேயென்றெய்வமேகோதிலாத
படியெனக்கானந்தவெள்ளம்வந்துதேக்கும்
படியெனக்குன்றிருக்கருணைபற்றுமாறே
யடியெடுத்தென்முடியிலின்னம்வைக்கவேண்டு
மடிமுடியொன்றில்லாதவகண்டவாழ்வே. (௩)

வாழ்வனைத்துமயக்கமெனத்தேர்ந்தேன்றேர்ந்த
வாறேநானப்பாலோர்வழிபாராமற்
றாழ்வுபெற்றிங்கிருந்தேனீதென்னமாயந்
தடையுற்றான்மேற்கதியுந்தடையதாமே
யூழ்வலியோவல்லதுன்றன்றிருக்கூத்தோவிங்
கொருதமியேன்மேற்குறையோவுணர்த்தாயின்னம்
பாழவதிப்படவெனக்குமுடியாதெல்லாம்
படைத்தளித்துத்துடைக்கவல்லபரிசினானே. (௪)

நானிங்கெனுமகந்தையெனக்கேன்வைத்தாய்
நல்வினைதீவினையெனவேநடுவேநாட்டி
யூனாருமுடற்சுமையென்மீதேன்வைத்தா
யுயிரெனவுமென்னையொன்றா வுள்ளேன்வைத்தா
யானாமையாயகிலநிகிலபேத
மனத்தினுள்ளார்ந்தானாகியறிவானந்தத்
தேனாகிப்பாலாகிக்கனியாய்க்கன்னற்
செழும்பாகாய்க்கற்கண்டாய்த்திகழ்ந்தவொன்றே.)

ஒன்றியொன்றிநின்றுநின்றுமென்னையென்னை
யுன்னியுன்னும்பொருளலைநீயுன்பாலன்பா

னின்றதன்மைக்கிரங்கும்வைராக்கியனல்லே
னிவர்த்தியைவேண்டுமிந்தநீலனுக்கே
யென்றுமென்றுமிந்நெறியோர்குணமுமில்லை
யிருக்குவார்கைப்பிள்ளையேதோவேதோ
கன்றுமனத்துடனூடுதழைதின்றற்போற்
கல்வியுங்கேள்வியுமாகிக்கலக்குற்றேனே. (சு)

உற்றதுணைநீயல்லாற்பற்றுவேறொன்
றுன்னேன்பன்னூலகத்தோடியாடிக்
கற்றதுங்கேட்டதுமிதனுக்கேதுவாருங்
கற்பதுங்கேட்பதுமமையுங்காணுநீத
நற்றுணையேயருட்டாயேயின்பமான
நாதாந்தபரம்பொருளேநாரணாதி
சுற்றமுமாய்நல்லன்பர்தமைச்சேயாகத்
தொழும்புகொள்ளுங்கருணைமேசோதிக்குன்றே. ()

குன்றுதழுவுருவாயருவாய்ஞானக்
கொழுந்தாகியறுசமயக்கூத்துமாடி
நின்றுயேமாயையெனுந்திரையைநீக்கி
நின்னையாரறியவல்லார்நினைப்போர்நெஞ்ச
மன்றுகவின்பக்கூத்தாடவல்ல
மணியேயென்கண்ணேமாமருந்தேநால்வர்க்
கன்றுலின்கீழிருந்துமோனஞான
மமைத்தசின்முத்திரைக்கடலேயமரரேறே. (அ)

திரையில்லாக்கடல்போலச்சலனந்தீர்ந்து
தெளிந்துருகும்பொன்போலச்செகத்தையெல்லாங்

களையவேகனிந்திருக்குமுகத்திலேநீ
கனிந்தபரமானந்தக்கட்டியிந்நாள்
வளையிலேவரக்காணேனென்றாற்கட்டி
வார்த்தைசொன்னாற்சுகம்வருமோவஞ்சனேனை
யிளையிலேயிருத்திநிருவிகற்பமான
வின்பநிஷ்டைகொடுப்பதையாவெந்நாளோ. (௯)

எந்நாளுனக்கடிமையானநாளோ
வெந்நாளோகதிவருநாளெளியனேன்றன்
சிந்தைநாளதுவரைக்குமயங்கிற்றல்லாற் [ற்
றெளிந்ததுண்டோமௌனியாய்த்தெளியவோர்சொ
றந்தநாண்முதலின்பக்கால்சற்றல்லாற்
றடையறவானந்தவெள்ளந்தானேபொங்கி
வந்தநாளில்லைமெத்தவலைந்தேனுன்னை
மறவாவின்பத்தாலேவாழ்கின்றேனே. (௧0)

நினைவொன்று.

ஞானிகளிடம்பொருளேவல்.

நினைவொன்றுநினையாமனிற்கினகமென்பார்
நிற்குமிடமேயருளாநிஷ்டையருளொட்டுந்
தனையென்றுமறந்திருப்பவருள்வடிவானதுமேற்
றட்டியெழுந்திருக்குமின்பந்தன்மயமேயதுவாம்
பினையொன்றுமிலையந்தவின்பமெனுநிலையம்
பெற்றாரேபிறவாமைபெற்றார்மற்றுந்தான்

மனையென்றுமகவென்றுஞ்சுற்றமென்றுமசுத்த
வாதனையாமாசையொழிமன்றொருசொற்கொண்டே.

ஒருமொழியேபலமொழிக்குமிடங்கொடுக்குமந்த
வொருமொழியே மலமொழிக்கு மொழிக்கு மென
மொழிந்த, குருமொழியேமலையிலக்கு மற்றைமொழி
யெல்லாங், கோடின்றிவட்டாடல்கொள்வதொக்கு
ங்கண்டாய், கருமொழியிங்குனக்கில்லைமொழிக்குமொ
ழிருசிக்கக், கரும்பனையசொற்கொடுனைக்காட்டவுங்
கண்டனைமேற், றருமொழியிங்குனக்கில்லையுன்னைவிட்
டுநீங்காத், தற்பரமாயானந்தப்பொற்பொதுவாய்நி
ல்லே. (௨)

நில்லாதவாக்கைநிலையென்றனையேகண்டாய்
நேயவருண்மெய்யன்றேநிலையமதாநிற்கக்
கல்லாதேயென்படித்தாய்கற்றதெல்லாமூடங்
கற்றதெல்லாமூடமென்றேகண்டனையுமன்று
சொல்லாலேபயனில்லைசொன்முடிவைத்தானே
தொடர்ந்துபிடிமார்க்கடம்போற்றொட்டதுபற்றுநில்
லெல்லாருமறிந்திடவேவாய்ப்பறைகொண்டடிநீ
யிராப்பகலில்லாவிடமேயெமக்கிடமென்றறிந்தே. ( )

இடம்பொருளேவலைக்குறித்துமடம்புகுந்தாயெனவே
யெங்கேநீயகப்பட்டாயிங்கேநீவாடா
மடம்பெறுபாழ்நெஞ்சாலேயஞ்சாதேநிராசை
மன்னிடமேயிடமந்தமாநிலத்தேபொருளுந்

திடம்பெறவேநிற்கினெல்லாவுலகமும்வந்தேவல்
செய்யுமிந்தநிலைநின்றோர்சனகன்முதன்முனிவர்
கடம்பெறுமாமதயானையென்னவுநீபாசக்
கட்டானநிகளபந்தக்கட்டவிழப்பாரோ. (௪)

பாராதியண்டமெலாம்படர்கானற்சலம்போற்
பார்த்தனையேமுடிவின்றுபாரொதுதானின்ற
தாராலுமறியாதசத்தன்றேவதுவா
யங்கிருநீயெங்கிருந்துமதுவாவைகண்டாய்
பூராயமாகவுநீமற்றொன்றைவிரித்துப்
புலம்பாதேசஞ்சலமாப்புத்தியைநாட்டாதே
யோராதேயொன்றையுநீமுன்னிலைவையாதே
யுள்ளபடிமுடியுமெலாமுள்ளபடிகாணே. (௫)

உள்ளபடியென்னவுநீமற்றொன்றைத்தொடர்ந்திட்
டுளங்கருதவேண்டாநிஷ்களங்கமதியாகிக்
கள்ளமனத்துறவைவிட்டெல்லாந்துறந்ததுறவோர்
கற்பித்தமொழிப்படியேகங்குல்பகலற்ற
வெள்ளவெளிக்கடன்மூழ்கியின்பமயப்பொருளாய்
விரவியெடுத்தெடுத்தெடுத்துவிள்ளவும்வாயின்றிக்
கொள்ளைகொண்டகண்ணீருங்கம்பலையுமாகிக்
கும்பிட்டுச்சகம்பொயெனத்தம்பட்டமடியே. (௬)

அடிமுடியுநடுவுமற்றபரவெளிமேற்கொண்டா
லத்துவிதவானந்தசித்தமுண்டாநமது
குடிமுழுதம்பிழைக்குமொருகுறையுமில்லையெடுத்த
கோலமெல்லாநன்றாகுங்குறைவுநிறைவறவே

விடியுமுதயம்போலவருளுதயம்பெற்ற
    வித்தகரோடுங்கூடிவிளையாடலொடும்
படிமுழுதும்விண்முழுதுந்தாளுங்கனியாப்
    பாலருடனுன்மத்தர்பிசாசர்குணம்வருமே. (எ)

வரும்போமென்பனவுமின்றி யென்றுமொருபடித்தாய்
    வாறுதிகத்துவைதவளர்க்கருங்கிவெளியா
யிரும்போகல்லோமாமோவென்றுநெஞ்சைக் [க்
    கனன்மேலிட்டமெழுகாவுருக்கு மின்பவெள்ளமாகி
கரும்போகண்டோசீனிசருக்கரையோதேனோ [ர்வா
    கனியமிர்தோவெனருசிக்குங் கருத்தவிழ்த்தோருணை
ாரும்போதன்மனைக்காட்டுங்காமரசங்கன்னி [ம்.
    யறிவாரோவபக்குவர்க்கோ வங்கலந்தான்விளங்கு

தானேயுமிவ்வுலகமொருமுதலுமாகாத்
    தன்மையிறும்படைத்தளிக்குந்தலைமையனுவானை
கோறுகவொருமுதலிங்குண்டெனவும்பூகங்
    கூட்டியனுஞ்சகமுடிவிற்குலவுறமெய்ஞ்ஞான
வாறுகவம்முதலேயிற்குநிலைநம்மான்
    மதிப்பரிதாமெனமோனம்வைத்தனுமுன்மனமே
யாறுலுமனஞ்சடமென்றழுங்காதேயுண்மை
    யறிவித்தவிடங்குருவாமருளிலதொன்றிலையே. (அ)

பொன்னைமாதரை.

பொன்னைமாதரைப்பூமியைநாடிடே
னென்னைநாடியவென்னுயிர்நாதனே

யுன்னைநாடுவனுன்னருட்டுவெளி
தன்னைநாடுவன்றன்னந்தனியனே. (க)

தன்னதென்றுரைசாற்றுவனவெலா
நின்னதென்றனைநின்னிடத்தேதந்தே
னின்னமென்னையிடருறச்கூட்டிடுற்
பின்னையுய்கிலன்பேதையருவியே. (உ)

ஆவியேயுனையானறிவாய்நின்று
சேவியேன்களச்சிந்தைதிறைகொடேன்
பாவியேனுளபான்மையைக்கண்டுநீ
கூவியாளெனையாட்கொண்டகோலமே. (ங)

கோலமின்றிக்குணமின்றிநின்னருட்
சீலமின்றிச்சிறியன்பிழைப்பனோ
வாலமுண்டுமமிர்தருவாய்வந்த
காலமெந்தைகதிநிலைகாண்பதே. (ச)

காணுங்கண்ணிற்கலந்தகண்ணேயுனைச்
சேணும்பாருந்திரிபவர்காண்பரோ
வாணும்பெண்ணுமதுவெனும்பான்மையும்
பூணுங்கோலம்பொருந்தியுணிற்கவே. (ரு)

நிற்குநன்னிலைநிற்கப்பெற்றாருள்
வர்க்கமன்றிமனிதரன்றேயையா
தூர்க்குணக்கடற்சோங்கன்னபாவியேற்
கெற்குணங்கண்டெனபெயர்சொல்வதே. (சா)

சொல்லையுன்னித்துடித்ததலாலரு
ளெல்லையுன்னியெனையங்குவைத்திலேன்
வல்லைநீயென்னைவாவென்றிடாவிடிற்
கல்லையாமிக்கருமிநடக்கையே. (௭)

கையுமெய்யுங்கருத்துக்கிசையவே
யையதந்ததற்கையமினியுண்டோ
பொய்யனேனிந்தைப்பொய்கெடப்பூரண
மெய்யதாமின்பமென்றுவிளைவதே. (௮)

என்றுமுன்னையிதயவெளிக்குளே
துன்றவைத்தனளேயருட்சோதிநீ
நின்றதன்மைநிலைக்கென்னைநேர்மையா
நன்றுதீதறவைத்தநடுவதே. (௯)

வைத்ததேகம்வருந்தவருந்திடும்
பித்தனுணருள்பெற்றுந்திடமிலேன்
சித்தமோனசிவசின்மயானந்தம்
வைத்தவையவருட்செம்பொற்சோதியே. (௧0)

செம்பொன்மேனிச்செழுஞ்சுடரோ முழு
வம்பனேனுனைவாழ்த்துமதியின்றி
யிம்பர்வாழ்வினுக்கிச்சைவைத்தேன்மன
நம்பிவாவெனினுனென்கொல்செய்வதே. (௧௧)

செய்யுஞ்செய்கையுஞ்சிந்திக்குஞ்சிந்தையு
மையநின்னதென்றெண்ணுமறிவின்றி

வெய்யகாமவெகுளிமயக்கமாம்
பொய்யிலேசுழன்றேனென்னபுன்மையே. (கஉ)

புன்புலானரம்பென்புடைப்பொய்யுட
லன்பர்யார்க்குமருவருப்பல்லவோ
வென்பொலாமணியேயிறையேயித்தாற்
றுன்பமன்றிச்சுகமொன்றுமில்லையே. (கங)

இல்லையுண்டென்றெவர்பக்கமாயினுஞ்
சொல்லவோவறியாததொழும்பன்யான்
செல்லவேறொருதிக்கறியேனெலாம்
வல்லநீயெனைவாழ்விக்கவேண்டுமே. (கச)

வேண்டுஞ்சீரருண்மெய்யன்பர்க்கேயன்பு
பூண்டநானென்புலமறியாததோ
வாண்டநீயுன்னடியவனென்று
தூண்டுவேனன்றித்தொண்டனென்சொல்வதே. (கரு)

எனக்குளேயுயிரொன்ன விருந்தநீ
மனக்கிலேசத்தைமாற்றல்வழக்கன்றோ
கனத்தசீரருட்காட்சியலாதொன்றை
நினைக்கவோவறியாதென்றனெஞ்சமே. (கசா)

நெஞ்சுகந்துனைநேசித்தமார்க்கண்டர்க்
கஞ்சலென்றவருளறிந்தேதையயா
தஞ்சமென்றுன்சரணடைந்தேனெங்குஞ்
செஞ்செவேநின்றசிற்சுகவாரியே. (கஎ)

வாரியேழுமலையும்பிறவுந்தான்
ஈரிதானநின்சின்மயத்தேயென்று
லாரிலேயுளதாவித்திரளதை
யோரிலேனெனையாண்டவொருவனே. (கஅ)

ஒருவனொன்றுளத்துள்ளுங்குறிப்பறிந்
தருள்வரோவெனையாளுடையண்ணலே
மருளனேன்பட்டவாதைவிரிக்கிறேன்
பெருகுநாளினிப்பேசவிதியின்றே. (ககூ)

இன்றுனக்கன்பிழைத்திலனென்றே
யன்றுதொட்டெனையாளரசேயென்று
நின்றாற்றியநீலனைக்கைவிட்டான்
மன்றமெப்படிநின்னருள்வாழ்த்துமே. (உ0)

வாழ்த்துநின்னருள்வாரம்வைத்தாலன்றிப்
பாழ்த்தநிந்தைப்பதகனுழல்வனோ
சூழ்ந்துநின்றதொழும்பரையாளாக்கத்
தாழ்த்துமுக்கணருட்செம்பொற்சோதியே. உக)

சோதியேசுடரோசுகமேயனை
நீதியேநிசமேநிறைவேநிலை
யாதியேயுனையானடைந்தேனகம்
வாதியாதருள்வாயருள்வானையே. (உஉ)

வானைப்போலவனைக்கொண்டானந்தத்
தேனைத்தந்தெனைச்சேர்ந்துகலந்தமெய்ந்

ஞானத்தெய்வத்தைநாடுவனுனெனும்
ஈனப்பாழ்கெடவென்றுமிருப்பனே. (உ௩)

இரும்பைக்காந்தமிழுக்கின்றவாறெனைத்
திரும்பிப்பார்க்கவொட்டாமற்றிருவடிக்
கரும்பைத்தந்துகண்ணீர்கம்பலையெலா
மரும்பச்செய்யெனதன்னையொப்பாமனே. (உ௪)

அன்னையப்பனென்றுவித்துணையெனுந்
தன்னையொப்பற்றசற்குருவென்பதென்
னென்னைப்பூரணவின்பவெளிக்குளே
துன்னவைத்தசுடரொனத்தக்கதே. (உ௫)

தக்ககேள்விமிற்சார்ந்தநற்பூமியின்
மிக்கதாகவிளங்குமுதலொன்றே
யெக்கணுந்தொழயாவையும்பூத்துக்காய்த்
தொக்கநின்றுமொன்றாய்நிறைவானதே. (உ௬)

ஆனமானசமயங்களாறுக்குந்
தானமாய்நின்றுநன்மயங்காட்டிய
ஞானபூரணநாதனைநாடியே
தீனனேனின்பந்தேக்கித்திளைப்பனே. (உ௭)

தேக்கியின்பந்திளைக்கத்திளைக்கவே
யாக்கமாயெனக்கானந்தமாகியே
போக்கிரேறுவரவற்றபூரணந்
தாக்கிநின்றவாதன்மயமாமதே. (உ௮)

அதுவென்றுன்னுமதுவுமறநின்ற
முதியஞானிகண்மோனப்பொருளது
வெதுவென்றெண்ணியிறைஞ்சுவனேழையேன்
மதியுணின்றின்பவாரிவழங்குமே. (உகூ)

வாரிக்கொண்டெனைவாய்மடுத்தின்பமாய்ப்
பாரிற்கண்டவையாவும்பருகினை
யோரிற்கண்டிடுமூமன்கனவென
யாருக்குஞ்சொலவாயிலையையனே. (௩0)

ஐயமற்றவரிவருணர்க்கெலாங்
கையிலாமலைக்கனியாகிய
மெய்யனேயிந்தமேதினிமீதுழல்
பொய்யனேற்குப்புகலிடமெங்ஙனே. (௩க)

எங்ஙனேயுய்யயானெனதென்பதற்
றங்ஙனேயுன்னருண்மயமாகிலேன்
றிங்கள்பாதிதிகழப்பணியணி
கங்கைவார்சடைக்கண்ணுதலெந்தையே. (௩உ)

கண்ணிற்காண்பதுன்காட்சிகையாற்றொழில்
பண்ணல்பூசைப்பகர்வதுமந்திரம்
மண்ணுடைந்தும்வழங்குயிர்யாவுமே
யண்ணலேநின்னருள்வடிவாகுமே. (௩௩)

வடிவெலாநின்வடிவெனவாழ்த்திடாக்
கடியனேனுமுன்காரணங்காண்பனோ

நெடியவானென வெங்குநிறைந்தொளி
ரடிகளேயரசேயருளத்தனே. (௩௪)

அத்தனேயகண்டானந்தனேயருட்
சுத்தனேயெனவுன்னைத்தொடர்ந்திலேன்
மத்தனென்பெறுமாமலமாயவான்
கத்தனேகல்வியாதறுகற்கவே. (௩௫)

கற்றுமென்பலன்கற்றிடுநூன்முறை
சொற்றசொற்கள்சுகாரம்பமோநெறி
நிற்றல்வேண்டுநிருவிகற்பச்சுகம்
பெற்றபேர்பெற்றபேசாப்பெருமையே. (௩௬)

பெருமைக்கேயிறுமாந்துபிதற்றிய
கருமிக்கையகதியுமுண்டாங்கொலோ
வருமைச்சீரன்பர்க்கன்னையொப்பாகவே
வருமப்பேரொளியேயுன்மனுந்தமே. (௩௭)

உன்மனிக்குளொளிர்பரஞ்சோதியாஞ்
சின்மயப்பொருளேபழஞ்செல்வமே
புன்மலத்துப்புழுவனபாவியேன்
கன்மனத்தைக்கரைக்கக்கடவதே. (௩௮)

கரையிலின்பக்கடலமுதேயிரு
வரையினுனைவந்துகலந்திலே
னுரையிலாவின்பமுள்ளவர்போலவித்
தரையிலேநடித்தேனென்னதன்மையே. (௩௯)

மையுலாம்விழிமாதர்கடோதகப்
பொய்யிலாழும்புலையினிப்பூணை காண்
கையிலாமலகக்கனிபோன்றவென்
னையனேயெனையாளுடையண்ணலே. (௬௦)

அண்ணலேயுன்னடியவர்போலருட்
கண்ணினாலுனைக்காணவும்வாவெனப்
பண்ணினாலென்பசுத்துவம்போயுயும்
வண்ணமாகமனோலயம்வாய்க்குமே. (௬௧)

வாய்க்குங்கைக்குமௌனமௌனமென்
றேய்க்குஞ்சொற்கொண்டிராப்பகலற்றிடா
நாய்க்குமின்பமுண்டோநல்லடியரைத்
தோய்க்குமானந்தத்துவெளிவெள்ளமே. (௬௨)

தூயதான துரியவறிவெனுந்
தாயுநீயின்பத்தந்தையுநீயென்றாற்
சேயதாமிந்தச்சீவத்திரளன்றோ
வாயும்பேரொளியானவகண்டமே. (௬௩)

அகண்டமென்னவருமறையாகமம்
புகன்றநின்றன்மைபோதத்தடங்குமோ
செகங்களெங்குந்திரிந்துநன்மோனத்தை
யுகந்தபேருனையொன்றுவரையனே. (௬௪)

ஐயனேயுனையன்றியொருதெய்வங்
கையினாற்றொழவுங்கருதேன்கண்டாய்

அ

பொய்யனாகிலும்பொய்யுரையேன்சுத்த
மெய்யனாமுனக்கேவெளியாகுமே. (௪௫)

வெளியினின்றவெளியாய்விளங்கிய
வொளியினின்றவொளியாமுன்றன்னைநான்
றெளிவுதந்தகல்லாலடித்தேவென்று
களிபொருந்தவன்றேகற்றகல்வியே. (௪௬)

கல்லையுற்றகருத்தினர்கார்நிறந்
தல்லையொத்தகுழலினராசையா
லெல்லையற்றமயல்கொளவோவெழிற்
றில்லையிற்றிகழுந்திருப்பாதனே. (௪௭)

திருவருட்டெய்வச்செல்விமலைமக
ளொருவிருக்கின்றமேனியொருபாங்
குருவைமுக்கணங்கோவைப்பணிந்தேச
கருவிருக்கின்றகன்மமிங்கில்லையே. (௪௮)

கன்மமேதுசுவர்நரகேதுமேற்
சென்மமேதெனைத்தீண்டக்கடவதோ
வென்மனேறாதமெய்த்தும்படிக்கரு
ணன்மைகூர்முக்கணாதனிருக்கவே. (௪௯)

நாதகீதனென்னாதன்முக்கட்பிரான்
வேதவேதியன்வெள்விடையூர்திமெய்ப்
போதமாய்நின்றபுண்ணியன்பூந்திருப்
பாதமேகதிமற்றிலைபாழ்நெஞ்சே. (௫௦)

மற்றுனக்குமயக்கமென்வன்னெஞ்சே
கற்றைவார்சடைக்கண்ணுதலோனருள்
பெற்றபேரவரோபெரியோரொலா
முற்றுமோர்ந்தவர்மூதுரையர்த்தமே. (௫க)

உரையிறந்துளத்துள்ளவிகாரமாந்
திரைகடந்தவர்தேடுமுக்கட்பிரான்
பணிநிறைந்தபரப்பெண்ணனங்கனே
கரைகடந்தின்பமாகக்கலப்பனே. (௫உ)

கலந்துமுத்திகருதிலுங்கேட்பினு
நிலங்களாதியுநின்றமைப்போலவே
யலைந்துபோயினமென்றுமருமறை
மலர்ந்தவாய்முக்கண்மாணிக்கச்சோதியே. (௫ங)

சோதியாதெனைத்தொண்டருட்கூட்டியே
போதியாதவெல்லாமெனப்போதிக்க
வாதிகாலத்திலுன்னடிகாந்தவ
மேதுநான்முயன்றேன்முக்கணெந்தையே. (௫௪)

எந்தநாளைக்குமின்றருடாயென
வந்தநீரருள்வாழ்கவென்றுன்றுவேன்
சிந்தைநோக்கந்தெரிந்துருகிப்பலாந்
தந்துகாக்குந்தயாமுக்கணாதியே. (௫௫)

கண்ணகன்றவிக்காசினிபூடெங்கும்
பெண்ணொடாண்முதலாமெண்பிறவியை

யெண்ணவோவரிதேழைகதிபெறும்
வண்ணமுக்கண்மணிவந்துகாக்குமே. (௫௬)

காக்குநின்னருட்காட்சியல்லாலொரு
போக்குமில்லையென்புந்திக்கிலேசத்தை
நீக்கியாளுகைநின்பரமன்பினா
ராக்கமேமுக்கணானந்தமூர்த்தியே. (௫௭)

ஆனந்தங்கதியென்னவென்றுணர்ந்து
மோனஞ்சொன்னமுறைபெறமுக்கணாங்
கோனிங்கீந்தகுறிப்பதனால்வெறுந்
தீனன்செய்கைதிருவருட்செய்கையே. (௫௮)

கையினாற்றொழுதேத்திக்கசிந்துள
மெய்யினாலுனைக்காணவிரும்பினே
னையனேயரசேயருளேயருட்
டையலோர்புறம்வாழ்சகநாதனே. (௫௯)

சகத்தின்வாழ்வைச்சதமெனவெண்ணியே
மிகுத்ததீமைவிளையவிளைக்கின்றே
னகத்துளாரமுதாமையநின்முத்தி
சுகத்தினான்வந்துதோய்வதெக்காலமே. (௬௦)

காலமூன்றுங்கடந்தொளிராநின்ற
சீலமேநின்றிருவருளாலிந்த்ர
சாலமாமிச்சகமெனவெண்ணிநின்
கோலநாடுதலென்றுகொடியனே. (௬௧)

கொடியவெவ்வினைக்கூற்றைத்துரந்திடு
மடிகளாம்பொருளோநினைக்கன்பின்றிப்
படியிலேழைமைபற்றுகின்றேன்வெறு
மிடியினேன்கதிமேவும்விதியின்றே. (௬௨)

விதியையும்விதித்தென்னைவிதித்திட்ட
மதியையும்விதித்தம்மதிமாயையிற்
பதியவைத்தபசுபதிநின்னருட்
கதியையெப்படிக்கண்டுகளிப்பதே. (௬௩)

கண்டகண்ணுக்குக்காட்டுங்கதிரெனப்
பண்டுநின்றுமென்பானின்றுணர்த்திடு
மண்டனேயுனக்கோர்பதிறுயிரந்
தெண்டனென்பொய்மைதீர்த்திடல்வேண்டுமே. (௬௪)

வேண்டும்யாவுமிறந்துவெளியிடைத்
தூண்டுவாரற்றசோதிப்பிரானின்பாற்
பூண்டவன்பர்தம்பொற்பணிவாய்க்குமே
மீண்டுசன்மமெடுப்பனனந்தமே. (௬௫)

எடுத்ததேகமிறக்குமுனேயெனைக்
கொடுத்துநின்னையுங்கூடவுங்காண்பனோ
வடுத்தபேரறிவாயறியாமையைக்
கெடுத்தவின்பக்கிளர்மணிக்குன்றமே. (௬௬)

குன்றிடாதகொழுஞ்சுடரோமணி
மன்றுளாடியமாணிக்கமேயுனை

யன்றியார் துணையாருறவர்கதி
யென்றுநீயெனக்கின்னருள்செய்வதே. (கூஎ)

அருளெலாந்திரண்டோர்வடிவாகிய
பொருளெலாம்வல்லபொற்பெர்துநாதவென்
மருளெலாங்கெடுத்தேயுளமன்னலா
விருளெலாமிரிந்தெங்கொளித்திட்டதே. (கூஅ)

எங்குமென்னையிகலுறவாட்டியே
பங்கஞ்செய்தபழவினைபற்றற்று
லங்கணுவுன்னடியிணையன்றியே
தங்கவேறிடமுண்டோசகத்திலே. (கூகூ)

உண்டவர்க்கன்றியுட்பசியோயுமோ
கண்டவர்க்கன்றிக்காதலடங்குமோ
தொண்டருக்கெளியானென்றுதோன்றுவான்
வண்டமிழ்க்கிசைவாகமதிக்கவே. (எ0)

மதியுங்கங்கையுங்கொன்றையுமத்தமும்
பொதியுஞ்சென்னிப்புனிதநின்பொன்னடிக்
கதியைவிட்டிந்தக்காமத்திலாழ்ந்தவென்
விதியையெண்ணிவிழிதுயிலாதன்றே. (எக)

அன்றெனச்சொலவாமெனவற்புத
நன்றெனச்சொலநண்ணியநன்மையை
யொன்றெனச்சொனவொண்பொருளேயொளி
யின்றெனக்கருள்வாயிருளேகவே. (எஉ)

இருவரோபுகழ்ந்தேத்தற்கினியரா
மொருவரோதுணையென்றுணராய்நெஞ்சே
வருவரோகொடுங்காலர்கள்வந்தெதிர்
பொருவரோயவர்க்கென்கொல்புகல்வதே. (எ௩)

புகழுங்கல்வியும்போதமும்பொய்யிலா
வகமும்வாய்மையுமன்புமளித்தவே
சகவிலாசத்துணைப்பொருட்டோற்றமாந்
ககனமேனியைக்கண்டனைகண்களே. (எ௪)

கன்றுணின்றவொளியைக்கருத்தினை
வின்றுணின்றுவிளங்கியமெய்யினை
பொன்னனியென்னனியிரவும்பகலுமே
நன்றுநின்றவர்நான்றொழுந்தெய்வமே. (எ௫)

தெய்வம்வேறுளதென்பவர்சிந்தனை
நைவொன்பதுநற்பாதற்பா
சைவசிற்சிவனையுனைச்சார்ந்தவ
ருய்வொன்பதும்யானுணர்ந்தேறுற்றே. (எ௬)

உற்றவேனைக்குறுதுணையாயித்தக்
சுற்றமோநமைக்காக்குஞ்சொலாய்நெஞ்சே
கற்றைவார்சடைக்கண்ணுதல்பாதமே
பற்றதாயிற்பரசுகம்பற்றுமே. (எ௭)

பற்றலாம்பொருளேபரம்பற்றினு
முற்றமாதவர்க்குண்மையைநல்குமே

மற்றும்வேறுளமார்க்கமெலாமெடுத்
தெற்றுவாய்மனமேகதியெய்தவே. (எஉ)

ஆரணம்.

ஆரணமார்க்கத்தாகமவாசி
யற்புதமாய்நடந்தருளுங்
காரணமுணர்த்துங்கையுநின்மெய்யுங்
கண்கண்மூன்றுடையவெண்கண்ணே
பூரணவறிவிற்கண்டிலமதனாற்
போற்றியிப்புந்தியோடிருந்து
தாரணியுள்ளமட்டுமேவணங்கத்
தமியனேன்வேண்டிடத்தருமே. (க)

இடமொருமடவாளுலகனைக்கீந்திட்
டெவ்வுலகத்தையுமீன்றுந்
தடமுறுமகிலமடங்குநாளம்மை
தன்னையுமொழித்துவிண்ணெனவே
படருறுசோதிக்கருணையங்கடலே
பாவிருட்படுகரிற்கிடக்கக்
கடனதோவினைப்புமறப்பெனுந்திரையைக்
கவர்ந்தெனைவளர்ப்பதுன்கடனே. (உ)

வளம்பெறுஞானவாரிவாய்மடுத்து
மண்ணையும்விண்ணையுந்தெரியா
தளம்பெறுந்துரும்பொத்தாவியோடாக்கை
யானந்தமாகவேயலந்தேன்

களம்பெறுவஞ்சநெஞ்சினர்காணுக்
காட்சியேசாக்ஷியேயறிரு
ருளம்பெறுந்துணையேபொதுவினடிக்கு
முண்மையேயுள்ளவாறிதுவே. (௩)

உள்ளமேநீங்காவென்னைவாவாவென்
றலப்பிலாவானந்தமான
வெள்ளமேபொழியுங்கருணைவான்முகிலே
வெப்பிலாத்தண்ணருள்விளக்கே
கள்ளமேதுரக்குந்தூவெளிப்பரப்பே
கருவெனக்கிடந்தபாழ்மாயப்
பள்ளமேவீழாதெனைக்கரையேற்றிப்
பாலிப்பதுன்னருட்பரமே. (௪)

பரம்பரமாகிப்பக்குவம்பழுத்த
பழவடியார்க்கருள்பழுத்துச்
சுரந்தினிதிரங்குந்தானகற்பகமே
சோதியேதொண்டனேனின்னை
யிரந்துநெஞ்சுடைந்துகண்டுயில்பொருமை
யிருந்துமென்கனிவிருட்டைக்
கரந்துநின்கண்ணூற்றுயில்பெறல்வேண்டிக்
கருதினேன்கருத்திதுதானே. (௫)

கருத்தினுட்கருத்தாயிருந்துநீயுணர்த்துங்
காரணங்கண்டுசும்மாதான்
வருத்தமற்றிருந்துசுகம்பெறுவண்ணம்
வருந்தினேன்மதியின்மைதீர்ப்பாய்

ொருத்தராருளப்பாடுணர்பவர்யாவ
    ருலகவர்பன்னெறியெனக்குப்
பொருத்தமோசொல்லாய்மௌனசற்குருவே
    போற்றிநின்பொன்னடிப்போதே. (௬)

அடியெனுமதுவுமருளெனுமதுவு
    மறிந்திடினிர்க்குணநிறைவு
முடியெனுமதுவும்பொருளெனுமதுவு
    மொழிந்திடிற்சுகமனமாயைக்
குடிகெடவேண்டிற்பணியறநிற்றல்
    குணமெனப்புன்னகைகாட்டிப்
படிமிசைமௌனியாகிநீயாளப்
    பாக்கியமென்செய்தேன்பரனே. (௭)

என்செயலின்றியாவுநின்செயலென்
    றெண்ணுவேனெவ்வொருகாலம்
புன்செயன்மாயைமயக்கினென்செயலாப்
    பொருந்துவேனஃதொருகாலம்
பின்செயல்யாதுநினைவின்றிக்கிடப்பேன்
    பித்தனேனன்னிலைபெறநின்
நன்செயலாகமுடித்திடல்வேண்டுஞ்
    சச்சிதானந்தசற்குருவே. (௮)

குருவுருவாகிமௌனியாய்மௌனக்
    கொள்கையையுணர்த்தினையதனாற்
கருவுருவாவதெனக்கிலையிந்தக்
    காயமோபொய்யெனக்கண்ட

இருவுருவாளரனுபவநிலையுஞ்
சேருமோவாவலோமெத்த
வருவுருவாகியல்லவாய்ச்சமய
மளவிடாவானந்தவடிவே. (கூ)

வடிவிலாவடிவாய்மனநினைவணுகா
மார்க்கமாய்நீக்கருஞ்சுகமாய்
முடிவிலாவீட்டின்வாழ்க்கைவேண்டினர்க்குன்
மோனமல்லால்வழியுண்டோ
படியிருளகலச்சின்மயம்பூத்த
பசுந்தொம்பையடக்கியோர்கல்லா
லடியிலேயிருந்தவானந்தவரசே
யன்பரைப்பருகுமாரமுதே. (க0)

சொல்லற்கரிய.

சொல்லற்கரியபரம்பொருளைச்சுகவாரிதியே சுடர்க் கொழுந்தே, வெல்லற்கரியமயலிலைவிட்டெங்கொ ளித்தாயாகெட்டேன், கல்லிற்பசியநாருரித்தக்கதிக்கிற் பெரியகடலடைக்கு, மல்லிற்கரியவந்தகனார்க்காளாக் கினையோவறியேனே. (க)

அறிவிற்கறிவதாரகமென்றறிந்தேயறிவோடறியா மை, வெறியிற்புகுதாதோர்படித்தாய்நின்றநிலையுந்தெ ரியாது, குறியற்றகண்டாகிதமயக்கோதிலமுதேநினைக் குறுகிப், பிறிவற்றிருக்கவேண்டாவோபேயேற்கினிநீ பேசாயே. (உ)

பேசாவனுபூதியையடியேன்பெற்றுப்பிழைக்கப்பேரா
ருளாற், றேசோமயந்தந்தினியொருகாற்சித்தத்திருளு
ந்தீர்ப்பாயோ, பாசாடவியைக்கடந்தவன்பர்பற்றுமக
ண்டப்பரப்பான, வீசாபொதுவினடமாடுமிறைவாகு
றையாவின்னமுதே. (௩)

இன்பக்கடலிற்புகுந்திடுவானிரவும்பகலுந்தோற்று
ம, லன்பிற்கரைந்துகரைந்துருகியண்ணாவரசேயெனக்
கூவிப், பின்புற்றழுஞ்சேயெனவிழிநீர்பெருக்கிப்பெரு
க்கிப்பித்தாகித், துன்பக்கடல்விட்டகல்வேனோசொரு
பானந்தச்சுடர்க்கொழுந்தே. (௪)

கொழுந்துதிகழ்வெண்பிறைச்சடிலக்கோவேமன்றி
ற்கூத்தாடற், கெழுந்தசுடரேயிமயவரையென்றாய்கண்
ணுக்கினியானே, தொழுந்தெய்வமுநீகுருவுநீதுணைநீத
ந்தைதாயுநீ, யழுந்தும்பவநீநன்மையுநீயாவியாக்கைநீ
தானே. (௫)

தானேயகண்டாகாரமயந்தன்னிலெழுந்துபொதுந
டஞ்செய், வானேமாயப்பிறப்பறுப்பான்வந்துன்னடி
க்கேகரங்கூப்பித், தேனேயென்னைப்பருகவல்லதெள்
ளாரமுதேசிவலோகக், கோனேயெனுஞ்சொன்னினது
செவிகொள்ளாதென்றோகூறாயே. (௬)

கூறுநின்றவிடர்க்கவலைக்குடும்பக்கூத்தாட்டிளைந்துது
டு, மாறுநின்றபாவியைநீவாவென்றழைத்தாலாகாதோ,
நீறார்மேனிமுக்கணுடை நிமலாவடியார் நினைவினிடை,

யாருய்ப்பெருகும்பெருங்கருணை யரசேயென்னையாள் வானே. (எ)

வானேமுதலாம்பெரும்பூதம்வகுத்துப்புரந்துமாற்ற வல்ல, கோனேயென்னைப்புரக்குநெறிகுறித்தாயிலையே கொடியேனைத், தானேபடைத்திங்கென்னபலன்றன் னைப்படைத்தாயுன்கருத்தை, நானேதென்றிங்கறியே னேநம்பினேன்கண்டருள்வாயே. (அ)

கண்டார்கண்டகாட்சியுநீகாணார்காணுக்கள்வனுநீ, ப ண்டாருயிர்நீயாக்கையுநீபலவாஞ்சமயப்பகுதியுநீ, யெ ண்டோண்முக்கட்செம்மேனி யெந்தாய்நினக்கேயெவ் வாறு, தொண்டாய்ப்பணிவரவர்பணிநீகூட்டிக்கொள் வதெவ்வாறே. (கூ)

கூட்டியெனதென்றிடுஞ்சுமையைச்சுமத்தியெனையு ஞ்சுமையாளாக், கூட்டிப்பிடித்துவினைவழியேகூத்தா ட்டினையேநினதருளால், வீட்டைக்கருதுமப்போதுவெ ளியாமுலைகவியப்பனைத்து, மேட்டுக்கடங்காச்சொற்ப னம்போலெலந்தாயிருந்ததென்சொல்வேன். (கO)

வம்பனேன்.

வம்பனேன்கள்ளங்கண்டு மன்னருள்வெள்ளராய, வும்பர்பாலேவல்செய்யென் றுணர்த்திலையோகோவா ரேோர், தம்பிரானேநீசெய்த தயவுக்குங்கைம்மாறுண் டோ, வெம்பிரானுய்ந்தேனுய்ந்தே னினியொன்றுங்கு றைவிலேனே. (க)

குறைவிலாநிறைவாய்ஞானக் கோதிலானந்தவெள்ளத், துறையிலேபடிந்துமூழ்கித் துளைந்துநான்றோன்றாவாறுள், ளுறையிலேயுணர்த்திமோன வொண்சுடர் வைவாடந்த, விறைவனேயுனைப்பிரிந்திங் கிருக்கிலேனி ருக்கிலேனே. (௨)

இருநிலமாதிநாத மீறதாமிவைகடந்த
பெருநிலமாயதூய பேரொளிப்பிழம்பாய்நின்றங்
கருதருமகண்டானந்தக் கடவுணின்காட்சிகாண, வருக
வென்றழைத்தாலன்றி வாழ்வுண்டோவஞ்சனேற்கே. (௩)

வஞ்சனையழுக்காறு வைத்திடும்பாண்டமான
நெஞ்சனைவலிதின்மேன்மே னெக்குநெக்குருகப்பண்
ணி, யஞ்சலிசெய்யுங்கைய மருவிநீர்விழியுமாகத்
தஞ்சமென்றிரங்கிக்காக்கத் தற்பராபரமுனக்கே. (௪)

உனக்குநானடித்தொண்டாகி யுன்னடிக்கன்புசெய்ய
வெனக்குநீதோற்றியஞ்சே லென்றுநாளொன்றுகாணோ
மனக்கிலேசங்கடீர்ந்த மாதவர்க்கெண்டற்கேருந்
தனக்குநேரில்லாவொன்றே சச்சிதானந்தவாழ்வே. (௫)

வாழ்வெனாவயங்கியென்னை வசஞ்செய்துமருட்டும் பாழ்த்த, [illegible] ருன்னையுந்திட்டி வேனோ, தாழ்வெனுஞ்சமயமின்றித் தனையுணர்ந்தோர் கட்கெல்லாஞ், சூழ்வெளிப்பொருளேமுக்கட் சோதி யேபராபரமே. (௬)

ஏறுவாம்பரியாவாடை யிருங்கலையுரியாவென்று
நாறுநற்சாந்தநீறு நஞ்சமேயமுதாக்கொண்ட
கூறருந்துணைத்தோயுன்றன் குரைகழல்குறுகினல்லா
லாறுமோதாபசோப மகலுமோவல்லருனே. (எ)

ஞானமுந்தவமும்யோகத் தன்மையுமுணராவென்பான்
ஞானமுந்தெவிட்டாவின்ப நன்மையுநல்குவாயோ
பானலங்கவர்ந்திருஞ்சொற் பச்சிளங்கிள்ளைகாண
வானவரிறைஞ்சமன்றுள் வயங்கியநடத்திறைனே. (அ)

நடத்திடிவ்வுலகையெல்லா நாதநீநிறைந்ததன்மை
திடத்துடனறிந்தானந்தத் தெள்ளமுதருந்திடாதே
விடத்தினானையகாம வேட்கையிலழுந்திமாயைச், சட
த்தினைமெய்யென்றெண்ணித் தளரவோதனியனேனே.

தனிவளர்பொருளேமாறாத் தண்ணருங்கருணைபூத்த
வினியகற்பகமேமுக்க ணெந்தையேநினைக்கன்றின்றி
நனிபெருஞ்சூழல்காட்டி நயனமேற்கரியகூந்தல்
வனிதையர்மயக்கிலாழ்ந்து வருந்தவோவம்பனேனே.

சிவன்செயல்.

சிவன்செயலாலேயாதும் வருமெ[illegible]தேதேறனு, மனக்குறிக்கையெல்லா மகற்றி[illegible]றைசெவ்வான், சனக்குச்சொன்னமுடிபடைத்தக் [illegible]ட்டிலேயகப்பட்டை யோ, பசைத்தீயிட்டி[illegible] பதைக்கின்றேன்பாவி யேனே. (க)

பாவியேனினியென்செய்கேன் பரமனேயணிந்துன் பாதஞ், சேவியேன்விழிநீர்மல்கச் சிவசிவவென்றுதே ம்பி,யாவியேநிறையவந்த வமுதமேயென்னேனந்தோ, சாவியோஞ்சமயத்தாழ்ந்து சகத்திடைத்தவிக்கின்றே னே. (உ

இடைந்திடைந்தேங்கிமெய்புளகிப்ப வெழுந்தெழு தையநின்சரண, மடைந்தனனினிநீகைவிடேலுனக்கே யபயமென்றஞ்சலிசெய்துள், ளுடைந்துடைந்தெழு சித்திரப்பாவையொத்துநானசைவறநிற்பத், தொடர் துநீயெனையாட்கொள்ளுநாளென்றோ சோதியேயாதி நாயகனே. (ங

ஆதியாய்நடுவா யந்தமாய்ப்பந்தம்யாவுமற்றகம்பு நிறைந்த, சோதியாய்ச்சுகமாயிருந்தவெம்பெருமான றெண்டனேன்சுகத்திலேயிருக்கப், போதியாவண்ண ங்கைவிடன்முறையோ புன்மையேனென்செய்கேன் னமோ, வாதியாநின்றதன்றியும்புலன்சேர்வாயிலே தீயினுங்கொடிதே. (ச

வாயிலோரைந்திற்புலனெனும்வேடர்வந்தெனையீர் துவெங்காமத், தீயிலேவெதுப்பியுயிரொடுந்தின்னக் ந்தைநைந்துருகிமெய்ம்மறந்து, தாயிலாச்சேய்போ லைந்தலைப்பட்டேனருயினுங்கருணையாமன்று, ஞாய மாகியொளிவிடுமணியேயநாதனேஞானவாரிதியே. (ரு

ஞானமேவடிவாய்த்தேடுவார்தேடு நாட்டமேநா டத்துணிநிறைந்த, வானமே[illegible]க்குவந்துவந்தோங்

மார்க்கமேமருளர்தாமறியா, மோனமேமுதலேமுத்தி நல்வித்தே முடிவிலாவின்பமேசெய்யுந், தானமேதவமேநின்னை நானினைந்தேன் றமியனேன்றனை மறப்பதற்கே. (௬)

மறமலியுலகவாழ்க்கையேவேண்டும் வந்துநின்னன்பர்தம்பணியா, மறமதுகிடைக்கினன்றியானந்த வற்புதநிட்டையினிமித்தந், துறவதுவேண்டு மௌனியாயெனக்குத் தூயநல்லருடரினின்னம், பிறவியும்வேண்டும் யானெனதிறக்கப் பெற்றவர்பெற்றிடும்பேறே. (௭)

பெற்றவர்பெற்றபெருந்தவக்குன்றே பெருகியகருணைவாரிதியே, நற்றவத்துணையேயானந்தக்கடலே ஞாதுருஞானஞேயங்க, ளற்றவர்க்கருதநட்புடைக்கலப்பே யனேகமாய்நின்னடிக்கன்பு, கற்றதுங்கேள்விகேட்டதுநின்னைக் கண்டிடும்பொருட்டன்றோகாணே. (௮)

அன்றுநால்வருக்குமொளிநெறிகாட்டு மன்புடைச்சோதியேசெம்பொன், மன்றுண்முக்கண்ணுங்காளகண்டமுமாய் வயங்கியவானமேயென்னுட், டுன்றுகூரிருளைத்துரந்திடுமதியே துன்பமுமின்பமுமாகி, நின்றவாதனையைக் கடந்தவர்நினைவே நேசமேநின்பரம்யானே. (௯)

யானெனல்காணேன்பூரணநிறைவில் யாதினுமிருந்தபேரொளிநீ, தானெனநிற்குஞ்சமத்துறவென்னைத் தன்னவனாக்கவுந்தகுங்காண், வானெனவயங்கியொன்

றிரண்டென்னுமார்க்கமாநெறிதந்துமாருத், தேனென
ருசித்துளன்பரைக்கலந்தசெல்வமேசிற்பரசிவமே.(க௦

தன்னையொருவர்.

தன்னையொருவர்க்கறிவரிதாய்த் தானேதானுயொ
ருநிறைந், துன்னற்கரியபரவெளியாயுலவாவமுதாயெ
ளிவிளக்கா, யென்னுட்கலந்தாயானறியா திருந்தாய்
றைவாவினியேனு, நின்னைப்பெறுமாறெனக்கருளா வ
லையைக்கொடுக்கநினையாயோ. (க

நினையுநினைவுக்கெட்டாத நெறிபெற்றுணர்ந்தநெ
யாளா, வினையைக்களைக்கும்பரமவின்ப வெள்ளப்பெ
ருக்கேநினதருளான், மனைவிபுதல்வரன்னைபிதா மாடு
டென்றிடுமயக்கந், தனையுமறந்திங்குனைமறவாத் தல
மைவருமோதமியேற்கே. (உ

வரும்போமென்னுமிருநிலைமைமன்றுதொருதன்
த்தாகிக், கரும்போதேனுமுக்கனியோவென்னவெ
னுட்கலந்துநலந், தரும்பேரின்பப்பொருளோநின் றன
னைநினைந்துநெக்குருகே, விரும்போகல்லோமரமே
வென்னிதயமியாதென்றறியேனே. (ங

அறியுந்தரமோநானுன்னையறிவுக்கறிவாய்நிற்கை
ஞற், பிறியுந்தரமோநீயென்னைப் பெம்மானேபேரின்
மதாய்ச், செறியும்பொருணீநின்னையன்றிச் செறியா

பொருளுன்பெறும்பேற்றை, நெறிநின்றுழுகவிசாரித் தா னினக்கோவில்லையெனக்காமே. (௪)

எனதென்பதும்பொய்யானெனல்பொய் யெல்லாமி றந்தவிடங்காட்டு, நினதென்பதும்பொய்நீயெனல்பொ ய் நிற்குநிலைக்கேநேசித்தேன், மனதென்பதுமோவெ ன்வசமாய் வாராதையநின்னருளோ, தனதென்பதுக் குமிடங்காணேன் றமியேனெவ்வாறுய்வேனே. (௫)

உய்யும்படிக்குன்றிருக்கருணை யொன்றைக்கொடுத் தாளுடையாய்பாழ்ம், பொய்யுமவாவுமழுக்காறும் பு டைபட்டோடுநன்னெறியா, மெய்யுமறிவுபெறும்பேறு ம் விளங்குமெனக்குன்னடியார்பாற், செய்யும்பணியுங் கைகூடுஞ் சிந்தைத்துயரந்தீர்ந்திடுமே. (௬)

சிந்தைத்துயரொன்றுருபாவி சினந்துசினந்துபோர் முயங்க, நிந்தைக்கிடமாய்ச்சகவாழ்வை நிலையென்று ணர்ந்தேநிற்கின்றே, னெந்தப்படியுன்னருள்வாய்க்கு மெனக்கெப்படிநீயருள்செய்வாய், பந்தத்துயரற்றவர் க்கெளிய பரமானந்தப்பழம்பொருளே. (௭)

பொருளைப்பூவைப்பூவையரைப் பொருளென்றெண் ணுமொருபாவி, யிருளைத்துரந்திட்டொளிநெறியை யெ ன்னுட்பதிப்பதென்றுகொலோ, தெருளத்தெருளவன் பர்நெஞ்சந் தித்தித்துருகத்தெவிட்டாத, வருளைப்பொ ழியுங்குணமுகிலே யறிவானந்தத்தாரமுதே. (அ)

ஆராவமிர்தம்விரும்பினர்க ளறியவிடத்தையமிர்தா
க்கும், பேரானந்தசித்தனெனும் பெரியோயாவிக்குரி
யோய்கேள், காரார்கிரகவலையினிடைக்கட்டுண்டிருந்த
கலைகளெல்லா, மூராலொருநாள்கையுணவேற் றுண்
டாலெனக்கிங்கொழிந்திடுமே. (௯)

எனக்கென்றிருந்தவுடல்பொருளும் யானுநினவென்
றீந்தவண்ண, மனைத்துமிருந்துமிலதாக வருளாய்நில்
லாதழிவழக்காய், மனத்துட்புகுந்துமயங்கவுமென் ம
திக்குட்களங்கம்வந்ததென்னோ, தனக்கொன்றுவமை
யறநிறைந்த தனியேதன்னந்தனிமுதலே. (௧0)

ஆசையெனும்.

ஆசையெனும்பெருங்காற்றூ டிலவம்பஞ்செனவுமன
தலையுங்கால, மோசம்வருமிதனாலேகற்றதுங் கேட்ட
துந்தூர்ந்துமுத்திக்கான, நேசமுநல்வாசமும்போய்ப்
புலனாயிற்கொடுமைபற்றிநிற்பரந்தோ, தேசுபழுத்தரு
ள்பழுத்த பராபரமே நிராசையின்றேற் றெய்வமுண்
டோ. (௧)

இரப்பானங்கொருவனவன்வேண்டுவகேட்டருள்செ
யெனவேசற்றேதான், புரப்பான்றனருணாடி யிருப்பதுவா
போலெங்குநிறைபொருளேகேளாய், மரப்பான்மைநெ
ஞ்சினன்யான் வேண்டுவகேட்டிரங்கெனவேமௌனத்
தோடந், தரப்பான்மையருணிறைவி லிருப்பதுவோப
ராபரமேசகசநிட்டை. (௨)

சாட்டையிற்பம்பரசாலம்போலெலா
மாட்டுவானிறையெனவறிந்துநெஞ்சமே
தேட்டமொன்றறவருட்செயலினிற்றியேல்
வீட்டறந்துறவறமிரண்டுமேன்மையே. (ங)

தன்னெஞ்சநினைப்பொழியா தறிவிலிநான்ஞானமெனுந்தன்மைபேச, வுன்னெஞ்சமகிழ்ந்தொருசொல் லுரைத்தனையேயதனையுன்னியுருகேனையா, வன்னெஞ்சோவிரங்காதமரநெஞ்சோ விருப்புநெஞ்சோவைரமானா, கன்னெஞ்சோவலதுமண்ணாங்கட்டிநெஞ்சோ வெனதுநெஞ்சங்கருநிற்றுனே. (ச)

வாழிசோபனம்வாழிநல்லன்பர்கள்
சூழவந்தருடோற்றமுஞ்சோபன
மாழிபோலருளையன்மௌனத்தா
லேழையேன்பெற்றவின்பமுஞ்சோபனம். (ரு)

கொடுக்கின்றோர்கள்பாற் குறைவையாதியானெனுங்குதர்க்கம், விடுக்கின்றோர்கள்பாற் பிரிவிலாதுள்ளன்புமிடாதே, யடுக்கின்றோர்களுக் கிரங்கிடுந்தண்டமிழளங்க, நெருடுக்கின்றோர்களைச்சோதியாதபரஞ்சோதி.

உலகமாயையிலேயெளியேன்றனையுழலவிட்டனையேயுடையாயரு, ளிலகுபேரின்பவீட்டினிலென்னையுமிருத்திவைப்பதெக்காலஞ்சொலாயெழிற், றிலகவாணுதற்பைந்தொடிகண்ணிணைதேக்க நாடகஞ்செய்தடியார்க்கெலா, மலமிலாவினைதீர்க்கத்துசங்கட்டு மப்பனேயருளானந்தசோதியே. (எ)

முன்னிலைச்சுட்டொழிதியெனப்பலகாலுநெஞ்சே நான் மொழிந்தேனே நின், றன்னிலையைக்காட்டாதே யென்னையொன்றாச்சூட்டாதேசரணான்போந்த, வந்நிலையேநிலையந்தநிலையிலே சித்திமுத்தியனைத்துந்தோன்று, நன்னிலையீதன்றியிலைசுகமென்றே சுகர்முதலோர் நாடினாரோ. (அ)

அத்துவிதம்பெறும்பேறென் றறியாமல்யானெனும் பேயகந்தையோடு, மத்தமதியினர்போல மனங்கிடப்ப வின்னமின்னம்வருந்துவேனோ, சுத்தபரிபூரணமாய்நின்மலமாயகண்டிதமாய்ச்சொரூபானந்த, சத்திகணீங்காதவணந்தன்மயமாயருள்பழுத்துத் தழைத்தவொன்றே. (௯)

தந்தைதாயுநீயென்னுயிர்த்துணையுநீ சஞ்சலமதுதீர்க்க, வந்ததேசிகவடிவுநீயுனையலான் மற்றொருதுணைகாணே, னந்தமாதியுமளப்பருஞ்சோதியே யாதியேயடியார்தஞ், சிந்தைமேவியதாயுமானவனெனுஞ் சிரகிரிப் பெருமானே. (௧௦)

காதிலோலையைவரைந்துமேற் குமிழையுங்கறுவிவேள்கருநீலப், போதுபோன்றிடுங்கண்ணியர்மயக்கி லெப்போதுமேதளராமன், மாதுகாதலிபங்கனையபங்கனை மாடமாளிகைசூழுஞ், சேதுமேவியராமநாயகன்றனைச் சிந்தைசெய்மடநெஞ்சே. (௧௧)

அண்டமுமாய்ப்பிண்டமுமாயளவிலாத வாருயிருக் கோருயிராயமர்ந்தாயானாற், கண்டவரார்கேட்டவரா

ருன்றாலுன்னைக் காண்பதல்லாலென்னறிவாற்காணப் போமோ, வண்டுளபமணிமார்பன்புதல்வனோடு மனைவியொடுங்குடியிருந்துவணங்கிப்போற்றும், புண்டரிகபுரத்தினினாதாந்தமௌன போதாந்தநடம்புரியும்புனித வாழ்வே. (கஉ)

பொறியிற்செறியைம்புலக்கனியைப் புந்திக்கவராற் புகுந்திழுத்து, மறுகிச்சுழலுமனக்குரங்கு மாளவாளா விருப்பேனோ, வறிவுக்கறிவாய்ப்பூரணமா யகண்டானந்தமயமாகிப், பிறிவற்றிருக்கும்பெருங்கருணைப் பெம்மானேயெம்பெருமானே. (கங)

உரையுணர்விறந்துதம்மை யுணர்பவருணர்வினூடே, கரையிலாவின்பவெள்ளங் காட்டிடுமுகிலேமாருப், பரையெனுங்கிரணஞ்சூழ்ந்த பானுவேநின்னைப்பற்றித், திரையிலாநீர்போற்சித்தந் தெளிவனோசிறியனேனே.()

கேவலசகலமின்றிக்கீழொடுமேலாயெங்கு
மேவியவருளின்கண்ணாய்மேவிடமேலாயின்பந்
தாவிடவின்பாதீதத்தனியிடையிருத்திவைத்த
தேவெனுமௌனிசெம்பொற் சேவடிசிந்தைசெய்வாம்.

நேற்றுளாரின்றுமாளாநின்றனரதனைக்கண்டும்
போற்றிலேனின்னையந்தோபோக்கினேன்வீணேகால
மாற்றிலேன்கண்டானந்த வண்ணலேயளவின்மாயைச்
சேற்றிலேயின்னம்வீழ்ந்துதிளைக்கவோசிறியனேனே.()

போதமென்பதேவிளக்கொவ்வு மவித்தைபொய்யிருளாந், தீதிலாவிளக்கெடுத்திருட்டைவுஞ்சிக்கா, தாதலாலறிவாய்நின்றவிடத்தறியாமை, யேதுமில்லையென்றெம்பிரான்சுருதியேயியம்பும். (கஎ)

சுருதியேசிவாகமங்களேயுங்களாற்சொல்லு
மொருதனிப்பொருளளையீதென்னவாயுண்டோ
பொருதிரைக்கடனுண்மணலெண்ணினும்புகலக்
கருதவெட்டிடாநிறைபொருளளையார்காண்பார். ( )

மின்னைப்போன்றனவகிலமென்றறிந்து மெய்ப்பொருளா, முன்னைப்போன்றநற் பரம்பொருளில்லையென்றோர்ந்து, பொன்னைப்போன்றநின் போதங்கொண்டென் பணிபொருந்தா, வென்னைப்போன்றுளவேழையாயவிங்கெவரோ. (க௯)

தாயுந்தந்தையுமெனக்குறவாவனுஞ்சாற்றி
னுயுநீயுநின்னருளுநின்னடியருமன்றோ
பேயனேன்றிருவடியிணைத்தாமரைபிடித்தே
னுயனேயெனையாளுடைமுக்கணுயகனே. (உ0)

காந்தம[illegible]யெதிர்காணிற் கருந்தாதுசெல்லுமந்தக் காந்தத்தொன்[illegible] தேய்ந்தவிடமெங்கேதானங்கேதான் சலிப்பறவுமிருக்கும[illegible]போற், சாந்தபதப்பரம்பொருளே பற்றுபொருளிருக்கு ம[illegible]தாற்சலிக்குஞ்சித்தம், வாய்ந்தபொருளில்லையெனிற் [illegible]சாமைநின்றநிலைவாய்க்குமன்றே. (உக)

பொற்புறுங்கருத்தேயகமாயதிற்பொருந்தக்
கற்பின்மங்கையனைவிழிகதவுபோற்கவினச்
சொற்பனத்தினுஞ்சோர்வின்றியிருந்தநான்சோர்ந்து
நிற்பதற்கிந்தவினைவந்தவாறென்கொனிமலா. (௨௨)

வந்தவாறிந்தவினைவழியிதுவெனமதிக்கத்
தந்தவாறுண்டோவுள்ளுணர்விலையன்றித்தமியே
னுந்தவாறுகண்டிரங்கவுமிலைகற்றநூலா
லெந்தவாறினித்துறப்பராவுய்குவேனேழை. (௨௩)

சொல்லாலும்பொருளாலு மளவையாலுந் தொடரா வொன்றுவருணெறியைத்தொடர்ந்துநாடி, நல்லார்களவையகத்தேயிருக்கவைத்தாய்நன்னர்நெஞ்சந்தன்னையழுக்கறுக்குவேனோ, வில்லாளியாயுலகோடுயிராயீன்றிட் டெண்ணரியயோகினுக்குமிவனேயென்னக், கல்லாலின்கீழிருந்தசெக்கர்மேனிக் கற்பகமேபராபரமேகைலைவாழ்வே. (௨௪)

சாக்கிரமாறுதலினிலிந்திரியம்பத்துஞ் சத்தாதிவசனாதிவாயுபத்து, நீக்கமிலந்தக்கரணம்புருடனோடு நின்றாறுமூப்பானைந்துநிலவுங்கண்டத், தாக்கியசொற்பனமதனில்வாயுபத்து மடுத்தனசத்தாதிவசனாதியாக, நோக்குகரணம்புருடனுடனேகூட ருவல்லிருபத்தைந்தானண்ணியோரே. (௨௫)

சுழுத்தியிதயந்தனிற்பிராணஞ்சித்தஞ் சொல்லரியபுருடனுடன்மூன்றதாகும், வழுத்தியநாபியிற்றுரியம்பி

ராணேடு மன்னுபுருடனுங்கூடவயங்காநிற்கு, மழுத்திடுமூலந்தன்னிற்றுரியாதீத மதனிடையேபுருடனென்றியமருஞானம், பழுத்திடும்பக்குவரறிவரவத்தையைந்திற் பாங்குபெறக்கருவிநிற்கும்பரிசுதானே. (உசு)

இடத்தைக்காத்திட்டசுவானெனப்புன்புலாலிறைச்சிச், சடத்தைக்காத்திட்டநாயினேனுன்னன்பர்தயங்கு மடத்தைக்காத்திட்டசேடத்தால்விசேடமாய்வாழ, விடத்தைக்காத்திட்டகண்டத்தோய்நின்னருள்வேண்டும்

வாதனைப்பழக்கத்தினுன்மனமந்தமனத்தா
லோதவந்திடுமுறையுறைப்படிதொழிலுளவா
மேதமம்மனமாயையென்றிடிற்கண்டவெல்லா
மாதரஞ்செயாப்பொய்யதற்கையமுண்டாமோ. (உஅ)

ஐயவாதனைப்பழக்கமேமனநினைவதுதான்
வையமீதினிற்பரம்பரையாதினுமருவு
மெய்யினின்றெளிர்பெரியவர்சார்வுற்றுவிளங்கிப்
பொய்யதென்பதையொருவிமெய்யுணருதல்போதம்.()

குலமிலான்குணங்குறியிலான்குறைவிலான்கொடிதாம், புலமிலான்றனக்கென்னவோர்பற்றிலான்பொருந்து, மிலமிலான்மைந்தர்மனைவியில்லானெவனவன்சஞ், சலமிலான்முத்திதரும்பரசிவனெனத்தகுமே.(௩0)

கடத்தைமண்ணெனவுடைந்தபோதோவிந்தக்கருமச், சடத்தைப்பொய்யெனவிறந்துபோதோசொலத்தருமம், விடத்தைநல்லமிர்தாவுண்டு பொற்பொதுவெளிக்

கே, நடத்தைக்காட்டியெவ்வுயிரையுநடப்பிக்குநலத்
தோய். (௫௧)

நானெனவுநீயெனவுமிருதன்மைநாடாமனடுவேசும்
மா, தானமருநிலையிதுவேசத்தியஞ்சத்தியமெனநீதமி
யேனற்கு, மோனகுருவாகியுங்கைகாட்டினையேதிரும்
பவுநான்முளைத்துத்தோன்றி, மானதமார்க்கம்புரிந்திங்
கலைந்தேனேபரந்தேனேவஞ்சனேனே. (௫௨)

தன்மயஞ்சுபாவஞ்சுத்தந்தண்ணருள்வடிவஞ்சாந்த
மின்மயமானவண்டவெளியுருவானபூர்த்தி
யென்மயமெனக்குக்காட்டாதெனையபகரிக்கவந்த
சின்மயமகண்டாகாரந்தக்ஷிணாமூர்த்தம். (௫௩)

சிற்றரும்பனசிற்றறிவாளனேதெளிந்தான்
மற்றரும்பெனமலரெனப்பேரறிவாகிக்
கற்றரும்பியகேள்வியான்மதித்திடக்கதிச்சீர்
முற்றரும்பியமௌனியாய்ப்பாத்திடைமுளைப்பான். ()

மயக்குகின்றனைதெளிவெனவிருநெறிவகுப்பா
னயக்குமொன்றன்பாலொன்றிலையெனலவழக்கே
யியக்கமுற்றிடுமயக்கத்திற்றெளிவுறலினிதாம்
பயக்கவல்லதோர்தெளிவுடையவர்க்கெய்தல்பண்போ.

அருள்வடிவேழுமூர்த்தமவைகள்சோபானமென்
றே, சுருதிசொல்லியவாற்றுலேதொழுந்தெய்வமெல்
லாமொன்றே, மருளெனக்கில்லைமுன்பின்வருநெறிக்கி

வ்வழக்குத், தெருளின்முன்னிலையாமுன்னைச்சேர்ந்தி யான்றெளிகின்றேனே. (௩௭)

எத்தனைப்பிறப்போவெத்தனையிறப்போவெளியனே ற்கிதுவரையமைத்த, தத்தனையெல்லாமறிந்தநீயறிவை யறிவிலியறிகிலேனந்தோ, சித்தமும்வாக்குந்தேகமுமி னவேசென்மமுமினியெனலாற்ற, வைத்திடிங்கென் னைநின்னடிக்குடியாமறைமுடியிருந்தவான்பொருளே.

வான்பொருளாகியெங்குநீயிருப்பவந்தெனைக்கொடு த்துநீயாகா, தேன்பொருள்போலக்கிடக்கின்றேனமு ன்னையிருவினைவாதனையன்றோ, தீன்பொருளான வமி ர்தமேநின்னைச்சிந்தையிற்பாவனைசெய்யு, நான்பொரு ளானேனல்லனல்லநேசநானிறந்திருப்பதுநாட்டம். ( )

நாட்டமூன்றுடையசெந்நிறமணியேநடுவுறுநாயக விளக்கே, கோட்டமில்குணத்தோர்க்கெளியநிர்க்குண மேகோதிலாவமிர்தமேநின்னை, வாட்டமினெஞ்சந்தி ண்ணமாச்சேர்த்துவாய்மடுத்தருந்தினருங்கே, பாட் டளிநறவமுண்டயர்ந்ததுபோற் பற்றயர்ந்திருப்பதெந் நாளோ. (௩௯)

என்னுடையுயிரோயென்னுளத்தறிவே யென்னுடைய ன்பெனுநெறியாய்,கன்னன்முக்கனிதேன்கண்டமிர்தெ ன்னக்கலந்தெனைமேவிடக்கருணை, மன்னியவுறவேயுன் னைநான்பிரியாவண்ணமென்மனமெனுங்கருவி, துன்ன துவழியற்றென்னுழைக்கிடப்பத் தண்ணருள்வாமது வேண்டும். (௪௦)

எனக்கெனச்செயல்.

எனக்கெனச்செயல்வேறிலையாவுமிங்கொருநின்
றனக்கெனத்தகுமுடல்பொருளாவியுந்தந்தேன்
மனத்தகத்துளவழுக்கெலாமாற்றியெம்பிரானீ
நினைத்ததெப்படியப்படியருளுதனீதம். (க)

உளவறிந்தெலாநின்செயலாமெனவுணர்ந்தோர்க்
களவிலானந்தமளித்தனையறிவிலாப்புன்மைக்
களவுநாயினேற்கிவ்வணமமைத்தனைகருத்துத்
தளருந்தன்மையிங்காரொடும்புகலுவேன்றக்கோய். (உ)

என்னைத்தானின்னவண்ணமென்றறிகிலாவேழை
தன்னைத்தானறிந்திடவருள்புரிதியேற்றக்கோய்
பின்னைத்தானின்றனருள்பெற்றமாதவப்பெரியோர்
நின்னைத்தானிகரானெனவாழ்த்துவர்நெறியால். (௩)

ஒருமின்றித்தன்னடியிணைக்கன்புதானீட்டுங்
காதலன்பர்க்குக்கதிநிலையீதெனக்காட்டும்
போதநித்தியபுண்ணியவெண்ணரும்புவன
நாதநாற்பரநானெவ்வாறுய்குவேனவிலாய். (௪)

வேதமெத்தனையத்தனைசிரத்திலும்விளங்கும்
பாதநித்தியபராம்பரநிரந்தரபரம
நாதநாற்பரசிற்பரவடிவமாய்நடிக்கு
நீதநிர்க்குணநினையன்றியொன்றுநானினையேன். (௫)

நெறிகடாம்பலபலவுமாயந்தந்தநெறிக்காஞ்
செறியுந்தெய்வமும்பலபலவாகவுஞ்செறிந்தா
லறியுந்தன்மையிங்காருனையறிவினாலறிந்தோர்
பிறியுந்தன்மையில்லாவகைகலக்கின்றபெரியோய். (௬)

பெரியவண்டங்களெத்தனையமைத்ததிற்பிறங்கு
முரியபல்லுயிரெத்தனையமைத்ததிற்குறுதி
வருவதெத்தனையமைத்தனையமைத்தருள்வளர்க்கு
மரியதத்துவவெனக்கிந்தவண்ணமேனமைத்தாய். (எ)

கணமதேனுநின்காரணந்தன்னையேகருத்தி
லுணருமாதவர்க்கானந்தமுதவினையொன்றுங்
குணமிலாதபொய்வஞ்சனுக்கெந்தைநிர்க்குணமா
மணமுலாமலர்ப்பதந்தரின்யாருனைமறுப்பார். (அ)

சன்னன்முக்கனிகண்டுதேன்சருக்கரைகலந்த
தென்னமுத்தியிற்கலந்தவர்க்கின்பமாயிருக்கு
நன்னலத்தநின்னற்பதந்துணையெனாநம்பச் [வேன்.
சொன்னவர்க்கெனுலாங்கைம்மாறில்லையென்சொல்

தந்தைதாய்தமர்மகவெனுமவையெலாஞ்சகத்திற்
பந்தமாமென்றேயருமறைவாயினூற்பகர்ந்த
வெந்தைநீயெனையின்னமவ்வல்லலிலிருத்திச்
சிந்தைதான்றெளிந்தெவ்வணமுய்வணஞ்செப்பாய். (கo)

துய்யன்றண்ணருள்வடிவினன்பொறுமையாற்றுல
ங்கு, மெய்யனென்றுனையையனேயடைந்தனன்மெத்
து, நொய்யனுண்ணியவறிவிலனென்னைநாருக்கும்,
பொய்யனென்றெனைப்புறம்விடினென்செய்வேன்புரு
லாய். (கக)

ஒன்றதாய்ப்பலவாயுயிர்த்திரட்கெலாமுமுதி
யென்றதாயென்றுமுள்ளதாயெவற்றினுமிசைய

நின்றதாய்நிலைநின்றிடுமறிஞுவென்னெஞ்ச
மன்றதாயின்பவுருக்கொடுநடித்திடின்வாழ்வேன். (கஉ)

தனியிருந்தருட்சகசமேபொருந்திடத்தமியேற்
கினியிரங்குதல்கடனிதுசமயமென்னிதயக்
கனிவுமப்படியாயினதாதலாற்கருணைப்
புனிதநீயறியாததொன்றுள்ளதோபுகலாய். (கங)

திருந்துசீரடித்தாமரைக்கன்புதான்செய்யப்
பொருந்துநாணல்லபுண்ணியஞ்செய்யுநாள்பொருந்தா
திருந்தநாள்வெகுதீவினையிழைத்தநாளென்று
லருந்தவாவுனைப்பொருந்துநாளெந்தநாளடிமை. (கச)

பின்னுமுன்னுமாய்நடுவுமாயாவினும்பெரிய
தென்னுந்தன்மையாயெவ்வுயிர்த்திரளையுமியக்கி
மன்னுந்தண்ணருள்வடிவமேயுனக்கன்புவைத்துந்
துன்னுமின்னலேன்யானெனுமகந்தையேன்சொல்லாய்

பின்னையன்னபொய்வாழ்க்கையேநிலையெனமெய்யா
முன்னைநான்மறந்தெவ்வணமுய்வணமுறாயாய்
முன்னைவல்வினைவேரறமுடித்தென்றுமுடியாத்
தன்னைத்தன்னடியார்க்கருள்புரிந்திடுந்தக்கோய். (க௬)

எம்பராபரவெம்முயிர்த்துணைவவென்றிறைஞ்சு
மும்பரிம்பர்க்குமுளக்கணேநடிக்கின்றுயன்ற
னம்பொன்மாமலர்ப்பதத்தையேதுணையெனவடிமை
நம்பினேனினிப்புரப்பதெக்காலமோநவிலாய். (கஎ)

பாடியாடிநின் றிரங்கிநின்பதமலர்முடிமேற்
சூடிவாழ்ந்தன ரமலநின்னடியர்யான்றொழும்ப
ஞடியேயிந்தவுலகத்தைமெய்யெனநம்பித்
தேடினேன்வெறுந்தீமையேயென்னினிச்செய்வேன். ()

களவுவஞ்சனை காமமென்றிவையெலாங்காட்டு
மளவுமாயையிங்கானெனக்கமைத்தனளாயா
வுளவிலேயெனக்குள்ளவாறுணர்த்தினுன்னடிமை
வளருமாமதிபோன்மதிதளர்வின்றிவாழ்வேன். (கக)

வானநாயகவானவர்நாயகவளங்கூர்
ஞானநாயகநான்மறைநாயகநலஞ்சேர்
மோனநாயகநின்னடிக்கன்பின்றிமுற்றுந்
தீனனுயகம்வாடவோவென்செய்வேன்செப்பாய். (உ0)

ஏதமற்றவர்க்கின்பமேபொழிகின்றவிறையே
பாதகக்கருங்கன்மனங்கோயிலாப்பரிந்து
சூதகத்தனுயாதினுமிச்சைமேற்சென்றும்
வாதனைக்கிடமாயினேனெவ்வணம்வாழ்வேன். (உக)

தெளிவொடுகைகையோவறிகிலானறிவிலான்றிறீ...
மளியிலானிவன்றிருவருட்கயலெனவறிந்தோ [லா
வெளியனுக்கினையென்செய்வேனென்செய்வேனென்
வொளியுமாய்நிறைவெளியுமாயாவுமாமுரவோய். (உஉ)

கண்ணினுண்மணியென்னவேதொழுமன்பர்க்குத்
ணண்ணுகின்றநின்னருளெனக்கெந்நாளையுறுமு

மண்ணுவிண்ணுமற்றுள்ளனபூதமுமாறுப்
பெண்ணுமாணுமாயல்லவாய்நிற்கின்றபெரியோய். ()

சகமெலாந்தனிபுரந்தனைதகவுடைத்தக்கோ
ரகமெலாநிறைந்தானந்தமாயினையளவின்
மகமெலாம்புரிந்தோரைவாழ்வித்தனைமாறு
விகமெலாமெனைப்பிறந்திடச்செய்ததேனெந்தாய். ()

ஏய்ந்தநல்லருள்பெற்றவர்க்கேவலாயெளியேன்
வாய்ந்தபேரன்புவளர்க்கவுங்கருணைநீவளர்ப்பா
யாய்ந்தமாமறையெத்தனையத்தனையறிவாற் [ய்.
றேய்ந்தபேர்கட்குந்தோன்றிலாத்தோன்றலாந்தூயோ

ஊக்கநின்னருட்கேள்வியோசிறிதின்றித்தமியேன்
மிக்கதெய்வமேநின்னின்பவெள்ளத்தில்வீழே
னொக்கருய்ந்தமைதமகவெனும்பாசக்கட்டுடனே [தேன்.
துக்கவெள்ளத்திலாழ்கின்றேனென்செய்வான்றுணிந்

பவம்புரிந்திடும்பாவியேற்கருணிலைபதியத்
தவஞ்செயும்படித்தயவுசெய்தருள்வதேகருமம
மவம்புரிந்திடார்க்கானந்தவமிர்தத்தையளிக்க
நவங்கொடுத்துவந்திரையெறிகடலெனுநலத்தோய். ()

உற்றுணர்ந்தெலாநீயலதில்லையென்றுனையே
பற்றுகின்றனரெந்தைநின்னடியர்யான்பாவி
முற்றுமாயமாஞ்சகத்தையேமெய்யெனமுதரு
னற்றிருந்திடத்தொழில்செய்வான்றனைநிகரானேன். ()

மண்டலத்தின்.

மண்டலத்தின்மிசையொருவன்செய்தவித்தையதோ
வெனவும்வாராது, யண்டமவையடுக்கடுக்காயந்தர
த்தினிறுத்துமவதானம்போல, வெண்டருநல்லகிலாண்
டகோடியைத்தன்னருள்வெளியிலிலகவைத்துக், கொ
ண்டுநின்றவற்புதத்தை யெவராலுநிச்சயிக்கக் கூடா
வொன்றை. (க)

ஒன்றிரண்டாய்விவகரிக்கும் விவகாரங்கடந்தேழாம்
யோகபூமி, நின்றுதெளிந்தவர்பேசாமௌனநியாயந்
தைநிறைநிறைவைத்தன்னை, யன்றியொருபொருளில
தாவெப்பொருட்குந்தான்முதலாயசலமாகி, யென்று
முள்ள வின்பத்தைத்தண்ணென்றசாந்தபதவியற்கைத
ன்னை. (உ)

பதமூன்றுங்கடந்தவர்க்குமேலானஞானபதப்பரிசு
காட்டிச், சதமாகிநிராலம்பசாக்ஷியதா யாரம்பத்தன்
மையாகி, விதமியாவுங்கடந்தவித்தையெனுமிருளைக்கி
ண்டெழுந்துவிமலமாகி, ம[illegible]மாலுங்காணாதவானந்தசா
கரத்தைமௌனவாழ்வை. (ங)

வாழ்வினைத்தந்தந்தவின்பமாகடலைநல்லமிர்தைமணி
யைப்பொன்னைத், தாழ்வறவென்னுளத்திருந்தத்துவ
த்தையத்துவிதசாரந்தன்னைச், சூழ்பெரும்பேரொளி
யையொளிபரந்தபரவெளியை யின்பச்சுகத்தைமாறா,
வேழுலகுங் கலந்தின்றாய்நாளையாயென்றுமாமியற்கை
தன்னை. (ச)

தன்னையறிந்தவர்தம்மைத்தானாகச்செய்தருளுஞ்சம
த்தைலோக; மின்னைநிகர்த்திடவழியாச்சொரூபானந்த

ச்சுடரைவேதமாதி, யென்னையறிவரிதென்னச்சமய
கோடிகளிடையவிடையருத, பொன்னைவிரித்திடுமூலக
த்தும்பருமிம்பரும்பரவும்புனிதமெய்மையை. (ரு)

பரவரியபரசிவமாயதுவெனலாய்நானெனலாய்ப்பா
சசாலம், விரவிநின்றவிசித்திரத்தையைக்யபதத்தினிதி
ருந்தவிவேகந்தன்னை, யிரவுபகனினைப்புமறப்பெனுந்
தொந்தமறியார்களிதயம்வேதச், சிரமெனவாழ்பராப
ரத்தையானந்தநீங்காதசிதாகாசத்தை. (சா)

அத்துவிதவனுபவத்தையனந்தமறையின்னமின்னம
தியேயென்று, நித்தியத்தைநிராமயத்தைநிர்க்குணத்
தைத்தன்னருளானினைவுக்குள்ளே, வைத்துவைத்துப்
பார்ப்பவரைத்தானுகவெந்நாளும் வளர்த்துக்காக்குஞ்
சித்தினைமாதாவெளியைத்தன்மயமாமானந்தத் தெய்வ
ந்தன்னை. (எ)

தன்னிலேதானுகநினைந்துகளித்தவிழ்ந்துசுகமாதி
யாகப், பொன்னிலேபணிபோலுமாயைதருமனமேயு
ள்புகாதடைந்தா, வென்னிலேயானிறைப்பேனென
க்கினியாருன்போல்வாரில்லையில்லை, யுன்னிலோதிருவ
ருளுக்கொப்பாவாயென்னுயிர்க்கோருறவுமாவாய். (அ)

உறவுடலையெடுத்தவரிற்பிரமாநந்தேயனுமுனையொழிந்
துதன்னாற், கறவுமரிதரிதன்றேருவிகபரமுமுன்னையன்றி
யாவதுண்டோ, வறிதிலுன்னையசத்தென்னல்வழக்கன்
றுசத்தெனவும்வாழ்த்துவேனென், சிறுமைகெட்பெ
ருமையினின்சென்மமேதயத்தினினீசெல்லல்வேண்டும்

வேண்டியநாளொன்றேனும்பழகியநீயெனைப்பிரிந்தவி
சாரத்தாலே, மாண்டுகிடக்கினுமந்தவெல்லையையும்பூர
ணமாவணக்கஞ்செய்வே, னுண்டகுருமௌனிதன்னரு
ளியானெனாதற்றவனாகுவேன்பூவிற், காண்டகவெ
ண்சித்திமுத்தி யெனக்குண்டா முன்னாலென்கவலைதீர்
வேன். (ய)

தீராதவென்சனனவழக்கெல்லாந்தீருமிந்தச்சனனத்
தோடே, யாரேனுமறிவரியசீவன்முத்தியுண்டாகுமைய
வையோ, காரேனுங்கற்பகப்பூங்காவேனுமுனக்குவமை
காட்டப்போமோ, பாராதியாகவெழுமண்டலத்தினின்
மகிமைபகரலாமோ. (யக)

பாயப்புலி.

பாயப்புலிமுனமான்கன்றைக்காட்டும்படியகில
மாயைப்பெரும்படைக்கே யிலக்காவெனைவைத்தனை
யோ, நீயெப்படிவகுத்தாலுநன்றேநின்பெருங்கருணை,
தாயொத்தடியர்க்கருள்சச்சிதானந்ததற்பரமே. (க)

தற்பரமாஞ்சிற்பரமாகிமன்றந்தனினடித்தா
நிற்பரம்போருகன்மால்பணிநீதனொன்னெஞ்சகமாங்
கற்பரந்தாங்குகனாந்திடவாறெத்தகாட்சிநல்கும்
பொற்பரமாயென்வினைக்கருந்தாதைப்பொடிசெய்ததே

செய்யுந்தவஞ்சற்றுமில்லாதநானுன்றிருவடிக்கே
கொய்யும்புதுமலரிட்டுமெய்யன்பர்குழாத்துடனே

கையுஞ்சிரமிசைக்கூப்பிநின்றாடிக்கசிந்துருகி
யுய்யும்படிக்கருள்செய்வதென்றோபுலியூரத்தனே. (௩)

அத்தனைச்சிற்றம்பலவனையென்னுயிராகிநின்ற
சுத்தனைச்சுத்தவெளியானவனைச்சுகவடிவா
நித்தனைநித்தநிராதாரமாகியநின்மலனை
எத்தனைநாள்செல்லு மோமனமேகண்டிறைஞ்சுதற்கே.

கண்டாருளத்தினிற்காலூன்றிப்பெய்யுங்கருணைமுகி
லண்டார்புரத்துக்குமன்பர்வினைக்குமசனிதன்னைக்
கொண்டாடினோர்முனங்கூத்தாடுமத்தன்றன்கோலமெல்
லாம், விண்டாலம்மாவொன்றுங்காணாதுவெட்டவெறு
வெளியே. (௫)

வெளியானநீயென்மனவெளியூடுவிரவினையா, வொ
ளியாருங்கண்ணுமிரவியும்போனின்றுலாவுவன்கா, ணை
ளியாருங்கொன்றைச் சடையாடவம்புலியாடக்கங்கை
த், துளியாடமன்றுணடமாடுமுக்கட்சுடர்க்கொழுந்தே.

கொழுந்தாதுறைமலர்க்கோதையர்மோகக்குளைகடலி
லழுந்தாதவண்ணநின் பாதப்புணைதந்தருள்வதென்றோ
வெழுந்தாதரவுசெயெம்பெருமானென் றிறைஞ்சிவிண்
ணோர், தொழுந்தாதையேவெண்பொடிபூத்தமேனிச்சு
கப்பொருளே. (௭)

சுகமாகுஞானத்திருமேனியாநல்லதொண்டர்தங்க
ளகமேபொற்கோயிலெனமகிழ்ந்தேமன்றுளாடியகற்
பகமேயுன்பொன்னடிநீழல்கண்டாலன்றிப்பாவிக்கிந்த
ச், செகமாயையானவருங்கோடைநீங்குந்திறமிலையே.

நீங்காதுயிருக்குயிராகிநின்றநினையறிந்தே,தூங்காம
ற்றூங்கினல்லாதேயெனக்குச்சுகமுமுண்டோ, வோங்
காரமாமைந் தெழுத்தாற்புவனத்தை யுண்டுபண்ணிப்,
பாங்காநடத்தும்பொருளேயகண்டபரசிவமே. (௯)

சிவமாகிநான்முகக்கோவந்தமாமறைசெப்புகின்ற
நவமாயிலங்கியவொன்றேயிரண்டற்றநன்மைபெறு
தவமேதருமைப்புலப்பொறிக்கேயென்னறிவுபொல்லா
ப், பவமேவிளைக்கவென்றேவெளிமானெனப்பாய்ந்த
துவே. (௰)

ஆறொத்திலங்குசமயங்களாறுக்குமாழ்கடலாய்
வீறிப்பரந்தபரமானவானந்தவெள்ளமொன்று
தேறித்தெளிந்துநிலைபெற்றமாதவர்சித்தத்திலே
யூறிப்பரந்தண்டகோடியெல்லாநின்றுலாவியதே. (௰௧)

நடக்கினுமோடினுநிற்கினும்வேறொருநாட்டமின்றிக்
கிடக்கினுஞ்செவ்விருக்கினுநல்லருட்கேள்வியிலே
தொடக்குமென்னெஞ்சமனமற்றபூரணத் தொட்டிக்கு
ளே;முடக்குவன்யான்பரமானந்தநித்திரைமூடிடுமே.()

எண்ணாததெண்ணிய நெஞ்சேயயொழியென்னிர
ண்டு, கண்ணேயுறங்குறங்கென்றுணைமுக்கட்கருணைப்
பிரான், றண்ணார்கருணைமௌனத்திறன்முத்திசாதிக்க
லா, நண்ணாததொன்றில்லையெல்லாநலமுநமக்குளவே.

நானென்றொருமுதலுண்டென்றநான்றலைநாணவெ
ன்னுட், டானென்றொருமுதல்பூரணமாகத் தலைப்பட்

டொப்பி, லானந்தந்தென்னறிவையெல்லாமுண்டவ
சநல்கி,மோனந்தனைவிளைத்தாலினியாதுமொழிகுவதே.

ஞானந்தவஞ்சற்றுமில்லாதநானுண்மைதானறிந்து
மோனம்பொருளெனக் கண்டிடச்சற்குருமோனனுமா
ய்த், தினன்றனக்கிங்கிரங்கினையேயினிச்சிந்தைக்கென்
று, மானந்தந்தானல்லவோபரமேசச்சிதானந்தமே. ()

எனக்கோர்சுதந்தரமில்லையப்பாவெனக்கெய்ப்பில்
வைப்பாய், மனக்கோதகற்றும்பரம் பொருளேயென்
னைவாழ்வித்திட, நினக்கேபரநின்னைநீங்காதபூரணநின்
கருணை, தனக்கேபரமினிச்சும்மாவிருக்கத் தருமென்
றுமே. (௰௬)

இடம்பெறுவீடின்றோர்செய்சகமுமிருநிதியு, முடம்
பைவிட்டாருயிர்போம்போதுகூடியுடன்வருமோ, மட
ம்பெறுமாயைமன்மேயினியிங்குவாமௌனி, திடம்பெ
றவைத்தமௌனஞ்சகாயந்தெரிந்துகொள்ளே. (௰௭)

நாற்றச்சடலத்தையொன்பதுவாசனடைமனையைச்,
சோற்றுப் பசையினை மும்மலபாண்டத் தொடக்கறு
மைய, யாற்றுப்பெருக் கன்னகன்மப்பெருக்கையடர்கிரு
மிச், சேற்றைத்துணையென்றநாய்க்குமுண்டோகதிசே
ர்வதுவே. (௰௮)

பொய்யாருலகநிலையல்லகானற்புனலெனவே
மெய்யாவறிந்தென்னவென்றலிதனைவிடப்படுமோ
கையான்மௌனந்தெரித்தேகல்லாணிழற்கண்ணிருந்த
வையாவப்பாவென்னரசேமுக்கண்ணுடையாரமுதே ()

ஆராவமுதெனமோனம்வகித்துக்கல்லானிழற்கீழ்ப்
பேராதுநால்வருடன்வாழ்முக்கண்ணுடைப்பேரரசே
நீராயுருகவுள்ளன்புதந்தேசுகநிட்டையைநீ
தாராவிடினென்பெருமூச்சுத்தானத்தனஞ்சயனே. ( )

வாயுண்டுவாழ்த்தமௌனஞ்செய்போதுமௌனவரு
ட், டாயுண்டுசேயென்னவென்னைப்புரக்கச்சதானந்த
மா, நீயுண்டுநின்னைச்சரண்புகநானுண்டென் னெஞ்சு
மையா, தீயுண்டிருந்தமெழுகலவோகதிசேர்வதற்கே.( )

கல்லாலெதிர்ந்துங்கைவில்லாலடித்துங்கனிமதுரச்
சொல்லாற்றுதித்துநற்பச்சிலைதூவியுந்தொண்டரின
மெல்லாம்பிழைத்த னரன்பற்றநானினியேதுசெய்வே
ன், கொல்லாவிரதியர்நேர்நின்றமுக்கட்குருமணியே.( )

முன்னிலைச்சுட்டொழிநெஞ்சேநின்போதமுளைக்கிலை
யோ, பின்னிலைச்சன்மம்பிறக்குங்கண்டாயிருப்பேய்த்
தனமேன், றன்னிலையேநில்லுதானேதனிச்சச்சிதானந்
தமா, நன்னிலைவாய்க்குமெண்சித்தியுங் காணுநமதல்ல
வே. (உ௩)

சொல்லான்மௌனமௌனமென்றேசொல்லிச்சொ
ல்லிக்கொண்ட, தல்லான்மனமறப் பூரணநிட்டையி
லாழ்ந்ததுண்டோ, கல்லாதமூடனினியென்செய்வேன்
சகற்காரணமாம், வல்லாளனைமௌனசதானந்தமாக்
டலே. (உ௪)

ஆரணமாகமமெல்லாமுரைத்தவருண்மௌன
காரணமூலங்கல்லாலடிக்கேயுண்டுகாணப்பெற்றுற்

பாரணங்கொடுசூழ்னெஞ்சமாகியபாதரச
மாரணமாய்விடுமெண்சித்திமுத்தியும்வாய்த்திடுமே. ()

சித்தமவுனியடயான்மவுனிநந்திபகுண்ட
சுத்தமவுனியெனுமூவருக்குந்தொழும்புசெய்து
சத்தமவுனமுநன்மூன்றுமௌனமுந்தான்படைத்தே
வித்தமவுனமல்லாலறியேன்மற்றைநிட்டைகளே. ()

கண்டேனினைநருளவ்வருளாய்நின்றுகாண்பதெல்லா
முண்டேயறுவுநினைநாக்கினேனுவட்டாதவின்ப [க்
மொண்டேயருந்தியிளைப்பாறினேனல்லமுத்திபெற்று
கொண்டேன்பராபரமேயெனக்கேதுங்குறையில்லையே

மேற்கொண்டவாயுவுங்கீழ்ப்படமூலத்துவெந்தழலைச்
சூற்கொண்டமேகமெனவூனைமின்றுசொரிவதையென்
மேற்கண்டதன்றுமௌனோபதேசியளிக்கையினிப்
பாற்கண்டுகொண்டனன்மேலேயமிர்தம்பருகுவனே.()

சொல்லாற்றொடர்பொருளாற்றொடராப்பரஞ்சோ
தியின்னை, யல்லாளர்கண்டவழிகண்டிலேன்சகமார்க்க
த்திலுஞ், செல்லாதென்சிந்தைநடுவேகிடந்து திகைத்
துவிம்மி, யல்லானதும்பகலானதும்வாய்விட்டரற்றுவ
னே. (உக)

அறியாதவென்னையறிவாயுநீயென்றகம்புறமும்
பிறியாதறிவித்தபேரறிவாஞ்சுத்தபேரொளியோ
குறியாதவானந்தக்கோவேவமுதருள்குண்டலியோ
சிறியேன்படுந்துயர்கண்டுகல்லானிழற்சேர்ந்ததுவே.()

எல்லாமுதவுமுனையொன்றிற்பாவனையேனுஞ்செய் து
புல்லாயினுமொருபச்சிலையாயினும்போட்டிறைஞ்சி
நில்லேனல்யோகநெறியுஞ்செயேனருணீதியொன்றுங்
கல்லேனெவ்வாறுபரமேபரகதிகாண்பதுவே. (௩௧)

ஒன்றுந்தெரிந்திடவில்லையென்றுள்ளத்தொருவவெ
னக், கொன்றுந்தெரிந்த விதையவைகேளிரவும்பகலுங்
குன்றுங்குழியும்வனமுமலையுங்குகைகடலு
மன்றுமனையுமனமாதிதத்துவமாயையுமே. (௩௨)

பழுதுண்டுபோவையர்மோகவிகாரப்பரவையிடை
விழுகின்றபாவிக்குநின்றுட்புணையைவியந்தளித்தான்
றெழுகின்றவன்பருளங்கனிகூரத்துலங்குமன்று
ளெழுகின்றவானந்தக்கூத்தனென்கண்மணியென்னப்
பனே. (௩௩)

அழுக்கார்ந்தநெஞ்சுடையேனுக்கையாநின்னருள்வ
ழங்கி, னிழுக்காருமென்றெண்ணியோவிரங்காதவியல்
புகண்டாய், முழுக்காதலாகி விழிநீர்பெருக்கியழுத்த
ரெனுங், குழுக்காணநின்றுநடமாடுந்தில்லைக்கொழுஞ்சு
டரே. (௩௪)

ஆலம்படைத்தவிழியார்கண்மால்கொண்டவர்செயி
ந்தா, சாலம்படைத்துத்தளர்ந்தனேயென்றுந்தன்
னருள்கூர், கோலம்படைத்துக்கல்லாலடிக்கீழ்வைகுங்
கோவுக்கன்பாங், காலப்படைக்கத்தவம்படையாதென்
கொல்கன்னெஞ்சமே. (௩௫)

சும்மாவிருக்கச்சுகஞ்சுகமென்றுசுருதியெல்லா மம்மாநிரந்தரஞ்சொல்லவுங்கேட்டுமறிவின்றியே யெம்மான்மௌனி மொழியையுந்தப்பி யென்பேதைமையால், வெம்மாயக்காட்டிலலைந்தேனந்தோவென்விதிவசமே. (௫௬)

தினமேசெலச்செலவாழ்நாளுநீங்கச்செகத்திருள் சொற், பனமேயெனவெளிகண்டேயிருக்கவும்பாசபந்த, வினமேதுணையென்றிருந்தோநமன்வரினென்செய்குவோ, மனமேநம்போலவுண்டோசுத்தமூடரிவ்வையகத்தே. (௫௭)

கடலெனுந்தொல்லைமலையெனுந்தொல்லைகன்மமதற் குடலெனுந்தொல்லையத்தொல்லைகடலுண்மணலொக்குமித்தச் சடலத்தைநான்விடுமுன்னேயுனைவந்துசாரவிருட் படலத்தைமாற்றப்படாதோநிறைந்தபராபரமே. (௫௮)

நினையுநினைவுநினையன்றியில்லைநினைத்திடுங்கால் வினையென்றொருமுத னின்னையல்லாது விளைவதுண்டோ, தனையுந்தெளிந்துன்னைச் சார்ந்தோர்களுள்ளச் செந்தாமரையா,மனையும்பொன்மன்றமுநின்றிடுஞ்சோதிமணிவிளக்கே. (௫௯)

உள்ளத்தையுமிங்கெனையுநின்கையினிலொப்புவித்தும், கள்ளத்தைச்செய்யும்வினையால்வருந்தக்கணக்குமுண்டோ, பள்ளத்தில்வீழும்புனல்போற்படிந்தன்பரமவின்ப, வெள்ளத்தின்மூழ்கினர்க்கேயெளிதாந்தில்லை வித்தகனே. (௬௰)

கள்ளம்பொருந்துமட நெஞ்சமேகொடுங்காலர்வந்தா
லுள்ளன்பவர்கட்குண்டோவில்லையேயுலகின்றவன்னை,
வள்ளம்பொருந்துமலரடிகாணமன்றுமின்ப [யே.
வெள்ளச்செம்பாதப் புணையேயல்லாற்கதி வேறில்லை

தன்மயமானசுபாவத்தின்மெள்ளத்தலைப்படுங்கான்
மின்மயமானசகம்யாதுமைத்தென்வெளியிலுய்த்த
சின்மயமுத்திரைக் கையேமெய்யாகத் தெளிந்தநெஞ்
சே, நின்மயமென்மயமெல்லாநிறைந்தநிராமயமே. ( )

ஆயுங்கலையுஞ்சுருதியுங்காண்டற்கரியவுனைத்
தோயும்படிக்குக்கருணைசெய்வாய்சுகவான்பொருளே
தாயும்பிதாவுந்தமருங்குருவுந்தனிமுதலு
நீயும்பரையுமென்றேயுணர்ந்தேனிதுநிச்சயமே. (சரு)

அல்லும்பகலுமுனக்கேயபயமபயமென்று
சொல்லுஞ்சொலின்னந்தெரிந்ததன்றேதுதிப்பார்கண்
மனக், கல்லுங்கரைக்கு மௌனவுனது கருணையென்
பாற், செல்லும்பொழுதல்லவோசெல்லுவேனந்தசிற்சு
கத்தே. (சசா)

எல்லாஞ்சிவன்செயலென்றறிந்தாலவனின்னருளே
யல்லாற்புகலிடம்வேறுமுண்டோவதுவேநிலையா
நில்லாயுன்றற்றமியேற்குக்கதியுண்டிங்கீனிலத்திற்
பொல்லாமயக்கத்திலாழ்ந்தாவதென்னபுகனெஞ்சமே.

ஒளியேயொளியினுணர்வேயுணர்விறுவகைபொங்குங்
களியேகளிக்குங் கருத்தேகருத்தைக் கவளங்கொண்ட

வெளியேவெளியின்விளைசுகமேசுகர்வீறுகண்டுந்
தெளியேன்றெளிந்த வரைப்போற்றிடேனென்னசெய்
குவனே. (௬௬)

மறக்கின்றதன்மையிறத்தலொப்பாகுமனமதொன்
றிற், பிறக்கின்றதன்மைபிறத்தலொப்பாகுமிப்பேய்ப்
பிறவி, யிறக்கின்றவெல்லைக்களவில்லையேயிந்தச்சன்ம
வல்லை, துறக்கின்றநாளெந்தநாள்பரமேநின்றொழும்ப
னுக்கே. (௬௭)

காட்டியவந்தக்கரணமுமாயையிக்காயமென்று
கூட்டியகோலமுநானுவியங்கத்துறையிதனு
ளூட்டியநான்றனக்கென்றோரறிவற்றநானிவற்றைக்
கூட்டிநின்றாட்டினையேபரமேநல்லகூத்திதுவே. (௬௮)

பொல்லாதமாமர்க்கடமனமேயெனைப்போலடுத்து,
வெல்லாற்றையும்பற்றிக்கொண்டனையே யென்னைநின்
மயமா, நில்லாயருள்வெளிநீநானிற்பேனருணிட்டை
யொரு, சொல்லாற்பதிந்துபரிபூரணானந்தந்தோய்குவ
னே.

வாராய்நெஞ்சேயுன்றன் றுன்மார்க்கம்யாவையும்
வைத்துக்கட்டிங், காராயடிக்கடிசுற்றுகின்றாயுன்னவ
லமதிக், கோராயிரம்புத்திசொன்னாலுமோர்கிலையோ
கெடுவாய், பாராயுனைக்கொல்லுவேன்வெல்லுவேனரு
ட்பாங்குகொண்டே. (௫௰)

மாதத்திலேயொருதிங்களுண்டாகிமடிவதைநின்
போதத்திலேசற்றும் வைத்திலேயேவெறும் புன்மைநெ

ஞ்சே, வேதத்திலேதர்க்கவாதத்திலேவிளங்காதுவிந்து
நாதத்திலேயடங்காதந்தவான்பொருளுடிக்கொள்ளே.

எங்கும்வியாபித்துணர்வாயுனக்கென்னிதயத்துளே
தங்குந்துயரந்தெரியாதவண்ணந்தடைசெய்ததா
ரங்கங்குழைந்துள்ளுருகுமன்பாளர்க்கணைகடந்து
பொங்குங்கருணைக்கடலேசம்பூரணபோதத்தனே. ( )

வையகமாதர்சுகத்தையும்பொன்னையுமாயமலை [யு
மெய்யையுமெய்யென்று நின்னடியார்தம்விவேகத்தை
மையமில்வீட்டையுமெய்ந்நூலையும் பொய்யதாகவெ
ண்ணும்; பொய்யர்தந்நட்பைவிடுவதென்றோபரிபூரண
மே. (௫௧)

அளியுங்கனியொத்துருகிவினையாறுந்துயர்வுறுவேன்
றெளியும்படிக்கிப்பரியாககாலமுண்டிந்திக்குமோ
வொளியுங்கருணையுமாருவின்பழமோருருவாய்
வெளிவந்தடியர்களிக்கநின்றிடும்விழுப்பொருளே. ( )

அடையார்புரஞ்செற்றதேவேநின்பொன்னடிக்கன்பு
சற்றும், படையாதவென்னைப்படைத்திந்தப்பாரிற்பட
ர்ந்தவினைத், தடையாற்றலையிட்டுநெஞ்சம்புண்ணாகத்
தளரவைத்தா, யுடையாயுடையபடியன்றியான்செய்த
தொன்றிலையே. (௫௩)

ஆடுங்கறங்குந்திரிகையும்போலவலைந்தலைந்து
காடுங்கரையுந்திரிவதல்லாநின்கருணைவந்து
கூடும்படிக்குத்தவமுயலாதகொடியரெமன்
றேடும்பொழுதென்னசெய்வார்பராநந்தசிற்சுடரே. ( )

கற்றும்பலபலகேள்விகள்கேட்டுங்கறங்கெனவே
சுற்றுந்தொழில்கற்றுச் சிற்றின்பத்தூடுசுழலினென்று
ங்,குற்றங்குறைந்துகுணமேலிடுமன்பர்கூட்டத்தையே
முற்றுந்துணையெனநம்புகண்டாய்சுத்தமூடநெஞ்சே ()

நீயெனநானெனவேறில்லையென்றுநினைவருளத்
தாயெனமோனகுருவாகிவந்துதடுத்தடிமைச்
சேயெனக்காத்தனையேபரமேநின்றிருவருளுக்
கேயென்னசெய்யுங்கைம்மாறுளதோசுத்தவேழையனே

ஆத்திரம்வந்தவர்போலலையாமலரோகஞ்ட [திம்
காத்திருந்தென்னையே யன்னைபோலுங்கருணைவைத்
மாத்திரமுன்னின்றுணர்த்தினையேமௌனுயினிநான்
சாத்திரஞ்சொன்னபடியியமாதியுஞ்சாதிப்பனே. (௫௯)

உடல்பொய்யுறவு.

உடல்பொய்யுறவாயினுண்மையுறவாகக்
கடவாராார்தண்ணருளேகண்டாய் - திடமுடனே
யுற்றுப்பார்மோனவொருசொல்லேயுண்மைநன்றாய்ப்
பற்றிப்பார்மற்றவெல்லாம்பாழ். (௧)

பாராதிபூதமெல்லாம்பார்க்குங்காலப்பரத்தின்
சீராகநிற்குந்திறங்கண்டாய் - நேராக
நிற்குந்திருவருளினெஞ்சேயாநிற்பதல்லாற்
கற்குநெறியாதினிமேற்காண். (௨)

மாயாசகத்தைமதியாதார்மண்முதலா
யேயானதத்துவத்திலெய்துவரோ - நேயானு
பூதிநிலைநிற்கப்பொருந்துவர்களன்னவர்த.
நித்யையேயோர்மனமேநீ. (௯)

இகமுழுதும்பொய்யெனவே யெய்ந்துணர்ந்தாலாங்கே
மிகவளரவந்தவருண்மெய்யே - யகநெகிழப்
பாரீரொருசொற்படியேயனுபவத்தைச்
சேரீரதுவேதிறம். (௧௦)

ஆரணங்களாகமங்களியாவுமேயானந்த
பூரணமேயுண்மைப்பொருளென்னுங்-காரணத்தை [ப்
யோராரேயோவுள்ளுள்ளே யுற்றுணர்ந்தவ்வுண்மையினை
பாராரேயோநெஞ்சேபகர். (௧௧)

நேராயம்மௌனநிலைநில்லாமல்வாய்பேசி
யாராயலைந்தீர்நீராகெடுவீர் - சேரீர்
திரையுந்திரையுநதிசென்னியனைநாவாற்
கரையுங்கரையுமனக்கல். (௧௨)

அற்பமனமேயகிலவாழ்வத்தனையுஞ்
சொற்பனங்கண்டாயுண்மைசொன்னேனுன் - கற்பனை
நில்லாவிடத்தேயெனைச்சும்மாவைத்திருக்கக் [பொன்
கல்லாய்நீதானோர்கவி. (௧௩)

ஏதுந்திருவருளினிச்சையாமென்றெனறப்
போதும்பொருந்தும்புனிதர்பாற் - றீதுநெறி
செல்லுமோசெல்லாதேசெல்லுமிடமின்பமலாற்
சொல்லுமோவேதத்தொனி. (௧௪)

கல்லேறுஞ்சில்லேறுங்கட்டியேறும்போலச்
சொல்லேறப்பாழ்த்ததனைச்செவிகொண் - டல்லேறு
நெஞ்சமெனநிற்கவைத்தாய்நீதியோதற்பரமே
வஞ்சனல்லேனீயேமதி. (௧௫)

அப்பொருளுமான்மாவுமாரணநூல்சொன்னபடி
தப்பிலாச்சித்தொன்றுஞ்சார்தியினா - லெப்படியுந்
தேறிற்றுவிதஞ்சிவாகமமேசொல்லுநிட்டை
யாருமிடத்தத்துவிதமாம். (௧௬)

வேதமுதலாய்விளங்குஞ்சிவவடிவாம்
போதநிலையிற்பொருந்தாம - லேதமிகு
மோகாதியல்லலிலேமூழ்கினையேநெஞ்சேயித்
தேகாதிமெய்யோதெளி. (௧௭)

நோக்கற்கரிதானநுண்ணியவான்மோனநிலை
தாக்கற்குபாயஞ்சமைத்தபிரான் - காக்குமுயி
ரத்தனைக்குநானடிமையாதலினால்யானெனதென்
றித்தனைக்கும்பேசவிடமில். (௧௮)

ஒன்றுமறநில்லென்றுணர்த்தியநம்மோனகுரு
தன்றுணைத்தாணீடூழிதாம்வாழ்க - வென்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்
கே, கைக்குவருமின்பக்கனி. (௧௯)

மனத்தாலும்வாக்காலுமன்னவொண்ணாமோன
வினத்தாரோநல்லவினத்தார் - கனத்தபுகழ்
கொண்டவருமன்னவரோகூறரியமுத்திநெறி
கண்டவருமன்னவரோகாண். (௨௦)

கண்ணொளியேமோனக்கரும்பேகவலையறப்
பண்ணொளிக்குமுள்ளொளியாம்பான்மையினை - நண்
சித்தமிரங்கிலதென்சித்தந்தெளியாவே [ணிடவுன்
றித்தனைக்குமாதரவுமில். (௨௧)

அறியாமைசாரினதுவாயறிவா
நெறியானபோததுவாய்நிற்குங் - குறியாற்
சதசத்தருளுணர்த்தத்தாலுணராநின்ற
விதமுற்றறிவெனும்பேர்மெய். (௨௨)

குருலிங்கசங்கமமாக்கொண்டதிருமேனி
கருவொன்றுமேனிநம்பாற்காட்டா - தருவென்று
கண்டவர்க்கேயானந்தங்கண்டுகொளலாமலது
கொண்டவர்க்கிங்கென்னகிடைக்கும். (௨௩)

புலியினதளுடையான்பூதப்படையான்
பலிபிரந்துமெல்லாம்புரிப்பான் - மலிபுனல்சேர்
பொன்முடியான்முக்கட்புனிதன்சரண்புகுந்தோர்க்
கென்முடியாதேதுமுளதே. (௨௪)

சொல்லுக்கடங்காச்சுகப்பொருளைநாமெனவே
யல்லும்பகலுமாற்றுவதென் - னல்லசிவ
ஞானமயம்பெற்றோர்களுமில்லையென்பரந்தோ
மோனமயமானமுறை. (௨௫)

ஐயாவருணகிரியப்பாவுனைப்போல
மெய்யாகவோர்சொல்விளம்பினரியார் - வையகத்தோர்
சாற்றரிதென்றேசற்றார்தன்னையாய்முக்கணெந்தை
நாற்றிசைக்குங்கைகாட்டினான். (௨௬)

காதற்றுப்போனமுறிகட்டிவைத்தாலாவதுண்டோ
தீதற்றகாயமுமச்செய்கையே - போதமாய்
நிற்பரல்லாலிச்சகத்திலோரார்கணேரிடினுந்
தற்பரமாக்கண்டிருப்பார்தாம். (உஎ)

வெள்ளங்குலாவுசடைவெள்ளக்கருணையினான்
கள்ளங்குலாவுவஞ்சக்கள்ளனே - யுள்ளத்தி
லில்லனென்றாலன்னவன்றானெங்கும்வியாபகத்தா
னல்லனென்றுஞ்சொல்லவழக்காம். (உஅ)

தத்துவப்பேயோடேதலையடித்துக்கொள்ளாமல்
வைத்தவருண்மௌனவள்ளலையே - நித்தமன்பு
பூணக்கருதுநெஞ்சுபோற்றக்கரமெழும்புங்
காணத்துடிக்குமிருகண். (உகூ)

தொல்லைவினைக்கிடாய்ச்சுழல்கின்றநாயொருவ
னெல்லையிலாநின்கருணையெய்துவனோ - வல்லவனா
மோனகுருவேமுழுதினையுந்தானுணர்ந்த
ஞானகுருவேநவில். (௩0)

மூன்றுகண்ணுமுத்தொழிலாமுழுமுதலாமூவுலகுந்
தோன்றக்கருணைபொழிதோன்றலே - யீன்றவனை
தன்னைப்போலன்புதழைத்தோயொருதெய்வ
முன்னைப்போலுண்டோவுரை. (௩க)

நேசிக்குஞ்சிந்தைநினைவுக்குளுன்னைவைத்துப்
பூசிக்குந்தாவிறைந்துபூர்ணமா - யோசித்து
நின்றதல்லான்மோனநிருவிகற்பநிட்டைநிலை
யென்றுவருமோவறியேனே. (௩உ)

அறிவிலறியாமையற்றறிவாய்நின்று
பிரிவறவானந்தமயம்பெற்றுக் - குறியவிழ்ந்தா
லன்றைக்குடல்வேண்டேனையாவிவ்வாக்கையையே
யென்றைக்கும்வேண்டுவேனியான். (௩௩)

உடலைப்பழித்திங்குணவுங்கொடாமல்
விடவிடவேநாடுவரோமெய்யைப் - படபடென
வேண்டுவேனித்தவுடன்மெய்யுணராப்பொய்யரு
ளுண்டநீதானேயறி. (௩௪)

அறியாயோவென்னையுநீயாண்டநீசுத்த
வெறியாய்மயங்கவுமேன்விட்டாய் - நெறிமயங்கிக்
குன்றுஞ்செடியுங்குறுகுமோவையாவே
கன்றுகெட்டாற்றுயருகேகாண். (௩௫)

ஏதுக்குடற்சுமைகொண்டேனிருந்தேனையனே
யாதிக்கமோனவருட்டாயே - சோதியா
மன்னநிருவிகற்பவானந்தநிட்டையிலே
பின்னமறநில்லாதபின். (௩௬)

பின்னுமுடற்சுமையாப்பேசும்வழக்கதனு
லென்னபலனுமுற்றிருந்தோமே - யன்னதனு
லானந்தந்தானேதானாகுமெம்மையனே
யேனித்தத்துன்பமினி. (௩௭)

துன்பக்கடலிற்றுளைந்ததெல்லாந்தீர்ந்ததே
யின்பக்கடலிலிருமென்ன - வன்பிற்
கரைந்துகரைந்துருகிக்கண்ணருவிகாட்ட
விரைந்துவருமானந்தமே. (௩௮)

கரைந்துகரைந்துருகிக்கண்ணீராருக
விரைந்தேநிருவிகற்பமெய்த - நிரந்தரமு
நின்னையேசிந்திக்கநீகொடுத்தாய்மோனுநா
னென்னைமுழுதுங்கொடுத்தேனே. (ஙகூ)

அல்லும்பகலும்பேரன்புடனேதானிருந்தாற்
கல்லுமுருகாதோகன்னெஞ்சே - பொல்லாத
தப்புவழியேநினைந்தாய்சந்ததமுநீயிறந்த
வெப்பிலேயானந்தமே. (ச0)

கொடுத்தேனேயென்னைக்கொடுத்தவுடனின்ப
மடுத்தேனேநீடூழிவாழ்ந்தே - யடுத்தேனே
பெற்றேனேபெற்றுப்பிழைத்தேனேசன்மவல்ல
விற்றேனேயேழையடியேன். (சக)

பெற்றோம்பிறவாமைபேசாமையாயிருக்க
கற்றோமெனவுரைக்கக்காரியமேன் - சற்றேனு
நீக்கற்றவின்பநிலைபொருந்தியேசற்று
வாக்கற்றாற்பேசுமோவாய். (சஉ)

காலன்றனையுதைத்தான்காமன்றனையெரித்தான்
பாலன்பசிக்கிரங்கப்பாற்கடலை-ஞாலமெச்சப்
பின்னேநடக்கவிட்டான்பேரருளைநாடாதார்க்
கென்னேநடக்கையினி. (சங)

விண்ணருவிமேன்மேல்விளங்குவபோலேயிரண்டு
கண்ணருவிவெள்ளமொடுகைகூப்பித் - தண்ணமிர்த
வெள்ளமேயானந்தவெற்பேயெனத்தொழுவோ
ருள்ளமேஞானவொளி. (சச)

பிள்ளைமதிச்செஞ்சடையான்பேசாப்பெருமையினன்
கள்ளவிழும்பூங்கொன்றைக்கண்ணியா - னுள்ளபடி
கல்லாலின்கீழிருந்துகற்பித்தானோர்வசன
மெல்லாருமீடேறவே. (சரு)

புலனைந்துந்தானேபொரமயங்கிச்சிந்தை
யலமந்தழுலுமடிமை - நலமிருந்த
சித்தானமோனசிவனேநின்சேவடிக்கே
பித்தானுலுண்டோபிறப்பு. (சசு)

நிறைகுடந்தானீர்கொளுமோநிச்சயமாமோன
முறையுணர்ந்தார்யாதைமுயல்வார் - பிறையணிந்த
மிக்ககைலாயமலைவித்தகனேவேதியனே
செக்கரணிமேனியனேசெப்பு. (சஎ)

தூங்கமழுமானுடையாய்சூலப்படையுடையாய் [ரு
திங்களணிசெஞ்சடையாய்சேவுடையாய்-மங்கையொ
பாலுடையாய்செங்கட் பணியாயென்சென்னியின்மே
ற், காலுடையாய்நீயேகதி. (சஅ)

இனியகருணைமுகிலெம்பிரான்முக்கட்
கனியமிர்தவாரியின்பக்கட்டி - தனிமுதல்வ
னித்தன்பரமனிமலனிறைவாய்நிறைந்த
சுத்தனமக்கென்றுந்துணை. (சகூ)

நீதியாய்க்கல்லாலினீழலின்கீழேயிருந்து
போதியாவுண்மையெல்லாம்போதித்தா - னேதில்
சனகாதியாயதவத்தோர்க்குஞான
தினகரனுமெளனசிவன். (ருo)

தேகச்செயமுனுஞ்சிந்தையுடனேகுழையில்
யோகநிலைஞானிகளுக்கொப்புவதோ - மோகநிலை
யல்லலிலேவாழ்வாரோவப்பனேநீயற்ற
வெல்லையிலேசும்மாவிரு. (௫௧)

சும்மாவிருக்கச்சுகமுதயமாகுமே
யிம்மாயாயோகமினியேனடா - தம்மறிவின்
சுட்டாலேயாகுமோசொல்லவேண்டாங்கன்ம
நிட்டாசிறுபிள்ளாய்நீ. (௫௨)

நீயற்றவந்நிலையேநிட்டையதினியிலையோ
வாயற்றவனேமயங்காதே - போயற்
றிருந்தாலுநீபோகாயென்றுமுள்ளாய்சும்மா
வருந்தாதேயின்பமுண்டுவா. (௫௩)

வாவாவென்றின்பம்வரவழைக்குங்கண்ணீரோ
டாவாவென்றேயமுதவப்பனே - நீவாடா
வெல்லாநமக்கெனவேயீந்தனையேயீந்தபடி
நில்லாயதுவேநிலை. (௫௪)

நில்லாப்பொருளைநினையாதேநின்னையுள்ளோர்
சொல்லாப்பொருட்டிரளைச்சொல்லாதே - கல்லாத
சிந்தைகுழைந்துசுகஞ்சேரக்குருவருளால்
வந்தவழிநல்லவழி. (௫௫)

வழியிதென்றுமல்லாவழியிதென்றுஞ்சொல்லிற்
பழிபழியாநல்லருளாற்பார்த்தோர் - மொழியுனக்கே
யேற்றிருக்கச் சொன்னவன்றே யெங்கும் பெருவெளி
யாம், பார்த்தவிடமெல்லாநீபார். (௫௬)

பாரனைத்தும்பொய்யெனவே பட்டினத்துப்பிள்ளையை
லாருந்துறக்கையரிதரிது - நேரே [ப்போ
மனத்துறவுமப்படியேமாணுவிவற்றி
லுனக்கிசைந்தவாறென்றேயோர். (ருஎ)

ஓராமலேயொருகாலுன்னுமலுள்ளொளியைப்
பாராமலுள்ளபடிபார்த்திருந்தால் - வாராதோ
பத்துத்திசையும்பரந்தெழுந்தானந்தவெள்ளந்
தத்திக்கரைபுரண்டுதான். (ருஅ)

தானான தன்மைவந்துதாக்கினாலவ்விடத்தே
வானாதிமாயைவழங்காதோ - ஞானாகே
ளுன்னுள்ளேதானுருவுறவாகிநின்றதென
வென்னுள்ளேயென்றுமிரு. (ருகூ)

என்னையுன்னையின்னதிதுவென்னுமனிற்குநிலை
தன்னையருளென்றதருணத்தி - லன்னைபெற்ற
பிள்ளைக்குஞ்சொல்லாதபெற்றிகண்டாயையனே
யுள்ளத்தினுள்ளேயுணர். (சுO)

சொன்னவர்தாநிட்டைதொகுத்திராநிட்டையிலே
மன்னினவர்போதியார்மாமௌனன் - றன்னுள்
விருப்பாகக்கைகாட்டிமிக்கவடநீழ
லிருப்பானிருவிகற்பத்தே. (சுக)

இந்தநிருவிகற்பத்தெந்தையிருக்கநிட்டை
சிந்தைநீதேருய்செகமனைத்தும் - வந்ததொடர்ப்
பாடுகெடவன்றேவோர்பாத்திரத்துக்காடலல்லா
லாடுவதேனுட்டுமவன். (சுஉ)

அவனேபரமுமவனேகுருவு
மவனேயகிலமனைத்து-மவனேதா
மானவரோசொன்னாலவரோகுருவெனக்கு
நானவனாய்நிற்பதெந்தநாள். (கூ௩)

நாளவங்கள்போகாமனாடோர்றுந்தமையே
யாளவந்தார்தாளின்கீழாட்புகுந்தாய்-மீளவுன்னைக்
காட்டாமனிற்குங்கருத்தறிந்தானெஞ்சேயுன்
னாட்டானையமில்லையால். (கூ௪)

யான்றானென்னலறவேயின்பநிட்டையென்றருளைக்
கோன்றானுரைத்தமொழிகொள்ளாயோ-தோன்றி
யிழுக்கடித்தாய்நெஞ்சேநீயென்கலைகள்சோர
வழுக்கடிக்கும்வண்ணார்போலாய். (கூ௫)

எங்குஞ்சிவமேயிரண்டற்றுநிற்கினெஞ்சே
தங்குஞ்சுகநீசலியாதே-யங்கிங்கென்
றெண்ணாதேபாழிலிறந்துபிறந்துழலப்
பண்ணாதேயானுன்பரம். (கூ௬)

மெய்யைப்பொய்யென்றிடவுமெய்யனையாப்பொய்ந்
நெஞ்சே, பொய்யைத்தான்மெய்யெனவும்போகுமோ-
வையமறத், தன்மயத்தைமெய்யனவே சார்ந்தனையே
லானந்த, மென்மயமுநின்மயமுமே. (கூ௭)

பூங்காவனநிழலும்புத்தமுதுஞ்சாந்தபதம்
வாங்காதவானந்தமாமழையு - நீங்காவாஞ்
சொல்லிறந்துமாண்டவர்போற்றுமௌனபூமியினா
னில்லையெனநின்றவிடம். (கூ௮)

இடம்வானநல்லபொருளின்பமெனக்கேவ
லடங்காக்கருவியனைத்து-முடனுதவ
மந்தாரதாருவெனவந்தமவுனகுரு
தந்தானோர்சொற்கொண்டுதான். (௬௯)

தானந்தவஞானஞ்சாற்றரியசித்திமுத்தி
யானவையெல்லாந்தாமேயாகும்-மோனகுரு
சொன்னவொருசொல்லாற்சுகமாயிருமனமே
யின்னமயக்கமுனக்கேன். (௭0)

உன்னையுடலையுறுபொருளைத்தாவெனவே
யென்னையடிமைக்கிருத்தினான்-சொன்னவொரு
சொல்லைமறவாமற்றோய்ந்தானெஞ்சேயுன்று
வில்லைபிறப்பதெனக்கே. (௭௧)

எனக்குமுனக்குமுறவில்லையெனத்தேர்ந்து
நினைக்கவரிதானவின்பநிட்டை-தனைக்கொடுத்தே
யாசான்மவுனியளித்தானெஞ்சேயுனையோர்
காசாமதியேனுன்காண். (௭௨)

ஆனந்தமோனகுருவாமெனவேயென்னறிவின்
மோனந்தனக்கிசையமுற்றியதாற் - றேனுந்து
சொல்லெல்லாமோனந்தொழிலாதியுமோன
மெல்லாநன்மோனவடிவே. (௭௩)

எல்லாமேமோனநிறைவெய்துதலாலெவ்விடத்து
நல்லார்கண்மோனநிலைநாடினார் - பொல்லாத
நானெனவிங்கொன்றைநடுவேமுளைக்கவிட்டிங்
கேனலைந்தேன்மோனகுருவே. (௭௪)

மோனகுருவளித்தமோனமேயானந்த
ஞானவருளுமதுநானுமது-வானாதி
நின்றநிலையுமதுநெஞ்சப்பிறப்புமது
வென்றறிந்தேனானந்தமே. (௭௫)

அறிந்தவறிவெல்லாமறிவன்றியில்லை
மறிந்தமனமற்றமவுனஞ்-செறிந்திடவே
நாட்டினானந்தநாட்டிற்குடிவாழ்க்கை
கூட்டினான்மோனகுரு. (௭௬)

குருவாகித்தண்ணருளைக்கூறுமுன்னேமோனா
வுருநீடுயிர்பொருளுமொக்கத்-தருதியென
வாங்கினையேவேறுமுண்மைவைத்திடவுங்கேட்டிடவு
மீங்கொருவருண்டோவினி. (௭௭)

இனியகருப்புவட்டையென்றுவிலிட்டா
னனியிரதமாறுநானுந்-தனியிருக்கப்
பெற்றிலேன்மோனம்பிறந்தவன்றேமோனமல்லாற்
கற்றிலேனேதுங்கதி. (௭௮)

ஏதுக்குஞ்சும்மாவிருநீயெனவுரைத்த
சூதுக்கோதோன்றாத்துணையாகிப்-போதித்து
நின்றதற்கோவென்னையாநீக்கிப்பிரியாமற்
கொன்றதற்கோபேசாக்குறி. (௭௯)

குறியுங்குணமுமறக்கூடாதகூட்டத்
தறிவறிவாய்நின்றுவிடவாங்கே-பிறிவறவுஞ்
சும்மாவிருத்திசுகங்கொடுத்தமோனநின்பாற்
கைம்மாறுநானொழிதல்காண். (௮௦)

நான்றானெனுமயக்கநண்ணுங்காலென்றனை
வான்றனெனநிறையமாட்டாய்நீ—யூன்றமல்
வைத்துமவுனத்தாலேமாயைமனமிறந்து
துய்த்துவிடுஞானசுகம். (அக)

ஞானநெறிக்கேற்றகுருநண்ணரியசித்திமுத்தி
தானந்தருமந்தமைத்தகுரு—மானமொடு
தாயெனவும்வந்தென்னைத்தந்தகுருவென்சிந்தை
கோயிலெனவாழுங்குரு. (அஉ)

சித்துஞ்சடமுஞ்சிவத்தைவிடவில்லையென்ற
நித்தன்பரமகுருநேசத்தாற்—சுத்தநிலை
பெற்றேமேநெஞ்சேபெரும்பிறவிசாரமற
கற்றேமேமோனக்கரு. (அரு)

ஏசற்றவந்நிலை.

கொச்சகக்கலிப்பா.

ஏசற்றவந்நிலையேயெந்தைபரிபூரணமாய்
மாசற்றவானந்தவாரிவழங்கிடுமே
யூசற்சுழல்போலுலகநெறிவாதனையாற்
பாசத்துட்செல்லாதேபல்காலும்பாழ்நெஞ்சே. (க)

பாழாகியண்டப்பரப்பையெல்லாம்வாய்மடுத்து
மாழாதுநின்பதத்தூழ்ந்தப்படியாயோ
தாழாயோ வெந்தையருட் டாட்கீழ்நெஞ்சே யெனைப்
வாழாதுவாழ்ந்துநியாவண்ணமிருப்பாயே. [போல்

இருப்பாயிருந்திடப்பேரின்பவெளிக்கேநமக்குக்
குருப்பார்வையல்லாமற்கூடக்கிடைத்திடுமோ
வருட்பாய்நமக்காகவ்வாளவந்தார்பொன்னடிக்கீழ்
மருட்பேயர்போலிருக்கவாகண்டாய்வஞ்சநெஞ்சே. ()

வஞ்சமோபண்டையுளவாதனையானீயலைந்து
கொஞ்சமுற்றாயுன்னைக்குறைசொல்லவாயுமுண்டோ
வஞ்சலஞ்சலென்றிரங்குமானந்தமாகடற்கீழ்
நெஞ்சமேயென்போலநீயழுந்தவாராயோ. (௪)

வாராவரவாய்வடநிழற்கீழ்வீற்றிருந்த
பூராயநம்மைப்புலப்படுத்தவேண்டியன்றோ
வோராயோநெஞ்சேயுருகாயோவுற்றிருந்து
பாராயோவவ்வுருவைப்பார்க்கநிறைவாய்விடுமே. (௫)

வாயாதோவின்பவெள்ளம்வந்தூன்வழியாகப்
பாயாதோநானும்பயிராய்ப்பிழையேனோ
வோயாமலுன்னியுருகுநெஞ்சேயந்நிலைக்கே
தாயானமோனனருள்சந்திக்கவந்திடுமே. (௬)

வந்தவரவைமறந்துலகாய்வாழ்ந்துகன்ம
பந்தமுறவுன்னைப்படிப்பிக்கக்கற்றவர்யா
ரிந்தமதியேனுனக்கிங்கென்மதிகேளொன்றுலே
சந்ததநெஞ்சேபரத்திற்சாரினின்பமுண்டாமே. (எ)

இன்பமயமாயுலகமெல்லாம்பிழைப்பதற்குன்
னன்புநிலையென்பாரதுவுநிலையன்றியுண்டோ
வுன்புலத்தையோரினருட்கொப்பாவாய்நெஞ்சேநீ
தென்புலத்தாரோடிருந்துசெய்பூசைகொண்டருளே.

அருளையோராலயமாவானந்தமாயிருந்த
பொருளோடியானிருக்கப்போயொளித்தநெஞ்சேநீ
மருடேர்முயற்கோடோவான்மலரோபேய்த்தேரோ
விருடரநீயுறைந்ததெவ்விடமோகாணேனே. (௯)

எவ்விடத்தும்பூரணமாமெந்தைபிரான்றண்ணருளை
யவ்விடத்தேயுன்னைநெஞ்சேயாராயிற்கண்டிலனே
யவ்விடத்துமாயையிலேமாண்டனையோவவ்விடமுஞ்
செவ்விடமேநீயுஞ்செனனமற்றுவாழியவே. (க௰)

காடுங்கரையும்.

காடுங்கரையுமனக்குரங்குகால்விட்டோடவதன்பிறகே, யோடுந்தொழிலாற் பயனுளதோவொன்றாய்ப்பலவாயுயிர்க்குயிரா, யாடுங்கருணைப்பரஞ்சோதியருளைப்பெறுதற்கன்புநிலை, தேடும்பருவ மிதுகண்டீர்சேரவாருஞ்சகத்தீரே. (க)

சைவசமயமேசமயஞ் சமயாதீதப்பழம்பொருளைக், கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப், பொய்வந்துழலுஞ்சமயநெறிபுகுதவேண்டாமுத்திதருந், தெய்வசபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்சகத்தீரே. (உ)

காசமுறவுகலந்துண்ணக்கண்டீரகண்டாகாரசிவ
போகமெனும்பேரின்பவெள்ளம்பொங்கித்ததும்பிப்பூர
ணமா, யேகவுருவாய்க்கிடக்குதையோ வின்புற்றிட

நாமினியெடுத்த, தேகம்விழுமுன் புசிப்பதற்குச்சே வாருஞ்சகத்தீரே. (ரு

எடுத்ததேகம்.

கட்டளைக்கலிப்பா.

எடுத்ததேகம்பொருளாவிமூன்றுநீ யெனக்கொன்று மில்லையெனமோனநன்னெறி, கொடுத்தபோதுகொடுத்த தன்றேபினுங் குளறிநானென்றுகூத்தாடமாயையை விடுத்தவாறுங்கண்ணீரொடுகம்பலை விலகுமாறுமெனை வேட்கைப்ரவாகத்தைத், தடுத்தவாறும்புகலாய்சிரகிரித் தாயுமானதயாபரமூர்த்தியே. (க)

நோயுவெங்கலிப்பேயுந்தொடரநின் னூலிற்சொன்ன முறையியமாதிநான், றோயும்வண்ணமெனைக்காக்கு ங்காவலுந் தொழும்புகொள்ளுஞ் சுவாமியு நீகண்டாய், பேயுஞ்சன்மபினியஞ்சலஞ்சலென் றுலகங்கண்டுதொ ழுவோருருவிலே, தாயுந்தந்தையுமாஞேய்சிரகிரித் தா யுமானதயாபரமூர்த்தியே. (உ)

முகமெலாம்.

முகமெலாங்கணீர்முத்தரும்பிடச்செங்கைகூம்பிடப்ப வகமெலாங்குழைந்தானந்தமாகநல்லறிஞ ரிகமெலாந்தவமிழைக்கின்ற பொன்செய்கோவேழை சகமெலாம்பெறநல்லருளுதரமாச்சமைந்தோய். (க)

திடமுறவே.

கொச்சகக்கலிப்பா.

திடமுறவேநின்னருளைச் சேர்த்தென்னைக்காத்தாளக், கடனுனக்கென்றெண்ணிநின்னைக்கைகுவித்தேனலேனோ, வடைவுகெட்டபாழ்மாயையாழியிலேயின்னமல்லற், படமுடியாதென்னாவிப்பற்றேபராபரமே. (௧)

ஆராமைகண்டிங்கருட்குருவாய்நீயொருகால்
வாராயோவந்துவருத்தமெல்லாந்தீராயோ
பூராயமாகவருட்பூரணத்திலண்டமுதற்
பாராதிவைத்தபதியேபராபரமே (௨)

வாழாதுவாழவினைவந்தடைந்தோரெல்லாரு
மாழாழியென்னவருளாறுரைமுக்காற்றே
டேழாயெனவுலகமேசுமினியாரொருவன்
பாழாசராவாறுமுசம்பார்நீபராபரமே. (௩)

உள்ளத்தினுள்ளேயொளித்தென்னையாட்டுகின்ற
கள்ளக்கருணையையான்காணுந்தரமாமோ
வெள்ளத்தைமாற்றிவிடக்குண்பார்நஞ்சூட்டும்
பள்ளத்தின்மீன்போற்பதைத்தேன்பராபரமே. (௪)

வாவிக்கமலமலர்வண்டாய்த்துவண்டுழுவண் [ப்
டாவிக்குணின்றவுனக்கன்புவைத்தார்க்கஞ்சலென்பா
பூவிற்கும்வான்கடையிற்புல்விற்பார்போலவொன்
றைப், பாவிக்கமாட்டேன்பதியேபராபரமே. (௫)

விண்ணூறுவெற்பின்விழுந்தாங்கெனமார்பிற்
கண்ணூறுபாச்சிடுமென்காதல்வெள்ளங்கண்டிலையோ

தண்ணுறுசாந்தபதத்தற்பரமேநால்வேதப்
பண்ணுறுமின்பப்பதியேபராபரமே. (௬)

கூடியநின்சீரடியார்கூட்டமென்றோவாய்க்குமென
வாடியவென்னெஞ்சமுகவாட்டமுநீகண்டிலையோ
தேடியநின்சீரருளைத்திக்கனைத்துங்கைகுவித்துப்
பாடியநான்கண்டாய்பதியேபராபரமே. (௭)

நெஞ்சத்தினூடேநினைவாய்நினைவூடு
மஞ்சலெனவாழுமெனதாவித்துணைநீயே
சஞ்சலமாற்றினையினிமேற்றாய்க்குபசாரம்புகன்று
பஞ்சரிக்கநாணூர்பதியேபராபரமே. (௮)

புத்திநெறியாகவுனைப்போற்றிப்பலகாலு
முத்திநெறிவேண்டாதமூடனேனுகெடுவேன்
சித்திநெறிக்சென்கடவேன்சீரடியார்க்கேவல்செயும்
பத்திநெறிக்கேனுமுகம்பார்நீபராபரமே. (௯)

கண்டறியேன்கேட்டறியேன்காட்டுநினையேயிதயங்
கொண்டறியேன்முத்திகுறிக்குந்தரமுமுண்டோ
தொண்டறியாப்பேதைமையேன்சொல்லேனின்றோன்
மையெல்லாம்,பண்டறிவாய்நீயேபகராய்பராபரமே.!)

தன்னை.

கொச்சகக்கலிப்பா.

தன்னையறியத்தனதருளாற்றானுணர்த்து
மன்னைப்பொருளெனவேவாழாமற்பாழ்நெஞ்சே
பொன்னைப்புவியைமடப்பூவையரைமெய்யெனவே
யென்னைக்கவர்ந்திழுத்திட்டென்னபலன்கண்டாயே()

ஆக்குவை.

ஆக்குவைமாயையாவுநொடிதனிலதனைமாள
நீக்குவைநீக்கமில்லாநினைப்பொடுமறப்புமாற்றிப்
போக்கொடுவரவுமின்றிப்புனிதநல்லருளானந்தந்
தாக்கவுஞ்செய்வாயன்றோசச்சிதானந்தவாழ்வே. (க)

கற்புறுசிந்தை.

கற்புறுசிந்தைமாதர்கணவரையன்றிவேறு
ரிற்புறத்தவரைநாடார்யாங்களுமின்பவாழ்வுந்
தற்பொறியாகநல்குந்தலைவநின்னலதோர்தெய்வம்
பொற்புறக்கருதோங்கண்டாய்பூரணானந்தவாழ்வே. ()

முருந்திளநகையார்பாரமுலைமுகந்தழுவிச்செவ்வாய்
விருந்தமிர்தெனவருந்திவெறியாட்டுக்காளாய்நாளு
மிருந்தலோகாயதப்பேரினத்தனுயிருந்தவேழை
பொருந்தவுங்கதிமேலுண்டோபூரணானந்தவாழ்வே. ()

நிதெலாமொன்றும்வன்மை செறிந்திருட்படலம்போர்
பாதகசிந்தைபெற்றபதகனும்பாதநீழ [த்த

லாதரவுடையவுள்ளன்பருள்கிலையாயின்மற்றியார்
போதனைசெய்யவல்லார்பூரணானந்தவாழ்வே. (ங)

நாதனைநாதாந்திதநண்பனைநடுவாய்நின்ற
நீதனைக்கலந்துநிற்கநெஞ்சமேநீவாவென்றால்
வாதனைபெருக்கியென்னைவசஞ்செய்துமனந்துன்மார்க்
க. போதனைசெய்தனன்றோபூரணானந்தவாழ்வே. (ச)

எண்ணியவெண்ணமெல்லாமிறப்புமேற்பிறப்புக்கா
சை, பண்ணியென்னறிவையெல்லாம்பாழாக்கியென்னை
ப்பாழாக்குந், திண்ணியவினையைக்கொன்றுசிறியனையு
ய்யக்கொண்டாற், புண்ணியநினக்கேயன்றோபூரணா
நந்தவாழ்வே. (ரு)

பத்திநீபத்திக்கானபலனுநீபலவாச்சொல்லுஞ்
சித்திநீசித்தர்சித்தித்திறமுநீதிறமார்மோன
முத்திநீமுத்திக்கானமுதலுநீமுதன்மையான
புத்திநீயெனக்கொன்றுண்டோபூரணானந்தவாழ்வே.()

தாயினுமினியநின்னைச்சரணெனவடைந்தநாயேன்
பேயினுங்கடையனாகிப்பிதற்றுதல்செய்தனன்றோ
நீயிடைமெழுகாய்நொந்தேன்றெளிவிலேன்வீணேகால
ம், போயினதாற்றுகில்லேன்பூரணானந்தவாழ்வே. (எ)

மலைவளர்காதலி.

பதியுண்டுநிதியுண்டுபுத்திரர்கண்மித்திரர்கள்
பக்கமுண்டெக்காலமும்

பசுவுண்டுதவிசுண்டுதிட்டாந்தமாகயம
படனொனுந்திமிரமனுகாக்
கதியுண்டுஞானமாங்கதிருண்டுசதுருண்டு
காயசித்திகளுமுண்டு
கறையுண்டகண்டர்பாலம்மைநின்றனிற்
கருத்தொன்றுமுண்டாகுமே
னதியுண்டகடலெனச்சமயத்தையுண்டபர
ஞானவானந்தவொளியே
நாதாந்தரூபமேவேதாந்தமோனமே
நானெனுமகந்தைதீர்த்தென்
மதியுண்டமதியானமதிவதனவல்லியே
மதுசூதனன்றங்கையே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே. (க)

தெட்டிலேவலியமடமாதர்வாய்வெட்டிலே
சிற்றிடையிலேநடையிலே
சேலொத்தவிழியிலேபாலொத்தமொழியிலே
சிறுபிறைநுதற்கீற்றிலே
பொட்டிலேயவர்கட்டுபட்டிலேபுனைகந்த
பொடியிலேயடியிலேமேற்
பூரித்தமுலையிலேநிற்கின்றநிலையிலே
புந்திதனைநுழையவிட்டு
நெட்டிலேயலையாமலறிவிலேபொறையிலே
நின்னடியர்கூட்டத்திலே

நிலைபெற்றவன்பிலேமலைவற்றமெஞ்ஞான
ஞேயத்திலேயுனிருதாண்
மட்டிலேமனதுசெலநினதருளுமருள்வையோ
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே. (உ)

பூதமுதலாகவேநாதபரியந்தமும்
பொய்யென்றெனைக்காட்டியென்
போதத்தினடுவாகியடியீறுமில்லாத
போதபூரணவெளிக்கு
[illegible]துமறநில்லென்றுபாயமாவைத்துநினை
வெல்லாஞ்செய்வல்லசித்தா
மின்பவுருவைத்தந்தவன்னையேநின்னையே
யெளியேன்மறந்துய்வனோ
வேதமுதலானநல்லாகமத்தன்மையை
விளக்குமுட்கண்ணிலார்க்கு
மிக்கநின்மகிமையைக்கேளாதசெவிடர்க்கும்
வீறுவாதம்புகலும்வாய்
வாதநோயாளர்க்குமெட்டாதமுக்கணுடை
மாமருந்துக்கமிர்தமே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே. (௩)

மிடியிட்டவாழ்க்கையாலுப்பிட்டகலமெனவு
மெய்யெலாமுள்ளுடைந்து

வீறிட்டசெல்வர்தந்தலைவாயில்வாசமாய்
 வேதனைகளுறவேதனூந்
துடியிட்டவெவ்வினையையேவினூன்பாவிநான்
 றொடரிட்டதொழில்களெல்லாந்
துண்டிட்டசாண்கும்பியின்பொருட்டாயதுன்
 றொண்டர்பணிசெய்வதென்றோ
வடியிட்டசெந்தமிழினருமையிட்டாருரி
 லரிவையோர்பரவைவாயி
லம்மட்டுமடியிட்டுநடைநடந்தருளடிக
 ளடியீதுமுடியீதென
வடியிட்டமறைபேசுபச்சிளங்கிள்ளையே
 வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
 வளர்காதலிப்பெண்ணுமையே. (௬)

பூரணிபுராதனிசுமங்கலைசுதந்தரி
 புராந்தகித்ரியம்பகியெழிற்
புங்கவிவிளங்குசிவசங்கரிசகஸ்ரதள
 புஷ்பமிசைவீற்றிருக்கு
நாரணிமனாதீதநாயகிகுணாதீத
 நாதாந்தசத்தியென்றுன்
னாமமேயுச்சரித்திடுமடியர்நாமமே
 நானுச்சரிக்கவசமோ
வாரணிசடைக்கடவுளாரணியெனப்புகழ
 வகிலாண்டகோடியீன்ற

வன்னையேபின்னையுங்கன்னியெனமறைபேசு
மானந்தரூபமயிலே
வாரணியுமிருகொங்கைமாதர்மகிழ்கங்கைபுகழ்
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (௫)

பாகமோபெறவுனைப்பாடவறியேன்மல
பரிபாகம்வரவுமனதிற்
பண்புமோசற்றுமிலைநியமமோசெய்திடப்
பாவியேன்பாபரூப
தேகமோதிடமில்லைஞானமோகனவிலுஞ்
சிந்தியேன்பேரின்பமோ
சேரவென்றுற்கள்ளமனதுமோமெத்தவுஞ்
சிந்திக்குதென்செய்குவேன்
மோகமோமதமோகுரோதமோலோபமோ
முற்றுமாற்சரியமோதான்
முறியிட்டெனைக்கொள்ளுநிதியமோதேடவெனின்
மூசுவரிவண்டுபோல
மாகமோடவும்வல்லனெனையாளவல்லையோ
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (௬)

தூளேறுதூசிபோல்வினையேறுமெய்யெனுந்
தொக்கினுட்சிக்கினளுஞ்

சுழலெறுகாற்றினிடையழலேறுபஞ்செனச்
சூறையிட்டறிவையெல்லா
நாளேறநாளேறவார்த்திகமெனுங்கூற்றி
னட்பேறவுள்ளஞ்சடைந்து
நயனங்களற்றதோருரோறுபோலவே
நானிலந்தனிலலையவோ
வேளோறுதந்தியைக்கணந்தியுடன்வென்று
விரையேறுமாலைசூடி
விண்ணேறுமேகங்கள்வெற்பேறிமறைவுற
வெருட்டியகருங்கூந்தலாய்
வாளேறுகண்ணியேவிடையேறுமெம்பிரான்
மனதுக்கிசைந்தமயிலே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (௭)

பூதமொடுபழகிவளரிந்திரியமாம்பேய்கள்
புந்திமுதலானபேய்கள்
போராடுகோபாதிராக்ஷசப்பேய்களென்
போதத்தையூடழித்து
வேதனைவளர்த்திடச்சதுர்வேதவஞ்சன்
விதித்தானிவ்வல்லலெல்லாம்
வீழும்படிக்குனதுமௌனமந்த்ராதிக்ய
வித்தையைவியந்தருள்வையோ
நாதவடிவாகியமஹாமந்த்ரரூபியே
நாதாந்தவெட்டவெளியே

நற்சமயமானப்யிர்தழையவருமேகமே
ஞானவானந்தமயிலே
வாதமிடுபரசமயம்யாவுக்குமுணர்வரிய
மகிமைபெறுபெரியபொருளே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (௮)

அகிலாண்டநாயகி.

சந்தவிருத்தம்.

வட்டமிட்டொளிர்பிராணவாயுவெனு
நிகளமோடுகமனஞ்செயு
மனமெனும்பெரியமத்தயானையையென்
வசமடக்கிடின்முமண்டலத்
திட்டமுற்றவளராஜயோகமிவன்
யோகமென்றறிஞர்புகழவே
யேழையேனுலகினீடுவாழ்வனினி
யிங்கிதற்குமனுமானமோ
பட்டவர்த்தனர்பராவுசக்ரதர
பாக்யமானசுகயோகமும்
பாரகாவியகவித்வநான்மறை
பராயணஞ்செய்மதியூகமு
மட்டசித்தியுநலன்பருக்கருள
விருதுகட்டியபொன்னமே

யண்டகோடிபுகழ்காவைவாழுமகி
லாண்டநாயகியெனம்மையே. (௬)

பெரியநாயகிவிருத்தம்.

காற்றைப்பிடித்துமட்கரகத்தடைத்தபடி
கன்மப்புனற்குளூறுங்
கடைகெட்டநவவாயில்பெற்றபசுமட்கலக்
காயத்துளௌனயிருத்திச்
சோற்றைச்சுமத்திநீபந்தித்துவைக்கத்
துருத்திக்குண்மதுவென்னவே
துள்ளித்துடித்தென்னபேறுபெற்றேனருட்
டோயநீபாய்ச்சல்செய்து
நாற்றைப்பதித்ததெனஞானமாம்பயிரதனை
நாட்டிப்புலப்பட்டியு
நமனுனதீப்பூடுமனுகாமன்முன்னின்று
நாடுசிவபோகமான
பேற்றைப்பகுந்தருளியெனையாளவல்லையோ
பெரியவகிலாண்டகோடி
பெற்றநாயகிபெரியகபிலைமாநகர்மருவு
பெரியநாயகியம்மையே. (௬)

தந்தைதாய்.

தந்தைதாய்மகவுமனைவாழ்க்கையாக்கை
சகமனைத்துமௌனியருடழைத்தபோதே
யிந்திரசாலங்கனவுகானனீரா
யிருந்ததுவேயிவ்வியற்கையென்னேயென்னே. (க)

என்னைநான்கொடுக்கவொருப்பட்டகால
மியாதிருந்தென்னைவைபோயென்னென்னைநீங்கா
வன்னைபோலருள்பொழியுங்கருணைவாரி
யானந்தப்பெருமுகிலேயரசேசொல்லாய். (உ)

அரசேநின்றிருக்கருணையல்லாதொன்றை
யறியாதசிறியேனைதனுன்முத்திக்
கரைசேரும்படிக்குனருட்புணையைக்கூட்டுங்
கைப்பிடியேகடைப்பிடியாக்கருத்துட்கண்டேன். ( )

கண்டேனிங்கென்னையுமென்றனையுநீங்காக்
கருணையுநின்றன்னையுநான்கண்டேன்கண்டேன்
விண்டேனென்றெனைப்புறம்பாத்தள்ளவேண்டாம்
விண்டதுநின்னருட்களிப்பின்வியப்பாலன்றே. (ச)

ஓவென்றசுத்தவெளியொன்றேநின்றிங்
குயிரையெல்லாம்வம்மினெனவுவட்டாவின்பத்
தேவென்றநீகலந்துகலந்துமுத்தி
சேர்த்தனையேற்குறைவாமோசெகவிலாசம். (ரு)

செகத்தையெல்லாமணுவளவுஞ்சிதருவண்ணஞ்
சேர்த்தணுவில்லைப்பையணுத்திரளையெல்லா
மகத்துவமாப்பிரமாண்டமாகச்செய்யும்
வல்லவாநீநினைந்தவாறேயெல்லாம். (சு)

சொல்லாலேவாய்துடிப்பதல்லானெஞ்சந்
துடித்திருகணீரருவிசொரியத்தேம்பிக்
கல்லாலேயிருந்தநெஞ்சுங்கல்லான்முக்கட்
கனியேயுனக்குருகிடவுங்காண்பேன்கொல்லோ. (எ)

பெற்றவட்கே.

பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளை
பெறும்பேறந்தையறிவாரோபேரானந்த
முற்றவர்க்கேகண்ணீர்கம்பலையுண்டாகு
முறாதவரோகன்னெஞ்சமுடையராவார். (௧)

ஆவாவென்றழுதுதொழுங்கையராகி
யப்பனேயானந்தவடிகளேநீ
வாவாவென்றவர்க்கருளுங்கருணையெந்தாய்
வன்னெஞ்சர்க்கிரங்குவதெவ்வாறுநீயே. (௨)

நீயேயிங்கெளியேற்குந்தாகமோக
நினைவூடேநின்றுணர்த்திநிகழ்த்தலாலே
பேயேற்குந்தனக்கெனவோரன்புமுண்டோ
பெம்மானேயின்னமன்புபெருகப்பாராய். (௩)

பாராயோவென்றுயரமெல்லாமையா
பகருமுன்னேதெரியாதோபாவியேன்முன்
வாராயோவின்னமொருகாலாயினு
மலர்க்காலென்சென்னிமிசைவைத்திடாயோ. (௪)

வைத்திடுங்காலைப்பிடித்துக்கண்ணின்மார்பில்
வைத்தணைத்துக்கொண்டுகையால்வளைத்துக்கட்டிச்
சித்தமிசைப்புகவிருத்திப்பிடித்துக்கொண்டு
தியக்கமறவின்பசுகஞ்சேர்வதென்றோ. (ரு)

சேராமற்சிற்றினத்தைப்பிரித்தெந்நாளுந்
திருவடிப்பேரின்பத்துடனேசேராவண்ண
மாராகநானலைந்தேனரசேநீதா
னறிந்திருந்துமாயையிலேனழுந்தவைத்தாய். (சு)

வைத்தபொருளுடலாவிமூன்றுநின்கை
வசமெனவேயான்கொடுக்கவாங்கிக்கொண்டு
சித்தமிசைப்புகுந்ததுதான்மெய்யோபொய்யோ
சிறியேற்கிங்குளவுரையாய்திகையாவண்ணம். (எ)

திகையாதோவென்னாளும்பேரானந்தத்
தெள்ளமுதமுதவாமற்றிவலைகாட்டி
வகையாகவலக்கழித்தாயுண்டுடுத்து
வாழ்ந்தேனுனிரண்டுகான்மாடுபோலே. (அ)

மாடுமக்கள்சிற்றிடையார்செம்பொனுடை
வைத்தகனதனமேமேடைமாடகூடம்
வீடுமென்பாற்றொடர்ச்சியோவிடைவிடாமன்
மிக்ககதிவீடன்றோவிளங்கல்வேண்டும். (கூ)

விளங்கவெனக்குள்ளுள்ளேவிளங்காநின்ற
வேதகமேபோதகமேவிமலவாழ்வே
களங்கரகிதப்பொருளேயென்னைநீங்காக்
கண்ணுதலேநாதாந்தக்காட்சிப்பேறே. (கக)

நாதமேநாதாந்தவெளியேசுத்த
ஞானருபவேஞானமேஞேயமேநல்
வேதமேவேதமுடிவானமோன
வித்தேயிங்சென்னையினிவிட்டிடாதே. (கக)

கல்லாலின்.

கல்லாலினீழறனிலொருநால்வர்க்குங்
கடவுணியுணர்த்துவதுங்கைக்காட்டென்றாற்
சொல்லாலேசொலப்படுமோசொல்லுந்தன்மை
துரும்புபற்றிக்கடல்கடக்குந்துணிபேயன்றே. (க)

அன்றேவாமோவெனவுஞ்சமயகோடி
யத்தனையும்வெவ்வேறாயரற்றநேரே
நின்றாயேநினைப்பெறுமாறெவ்வாறிங்கே
நின்னருள்கொண்டறிவதல்லா னெறிவேறுண்டோ.

நெறியார்க்கினின்னையன்றியகிலம்வேறே
நிலநீர்தீக்கால்வானுநீயலாத
குறியாதுமில்லையென்றால்யாங்கள்வேறே
கோதையொருகூறுடையாய்கூறாய்கூறாய். (ங)

கூறாயவைம்பூதச்சுமையைத்தாங்கிக்
குணமிலாமனமெனும்பேய்க்குரங்கின்பின்னே
மாறாதகவலையுடன்சுழலவென்னை
வைத்தனையேபரமேநின்மகிமைநன்றே. (ச)

நன்றெனவுந்தீதெனவுமெனக்கிங்குண்டோ
நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே
யின்றெனக்குவெளியானாலெல்லாம்வல்ல
விறைவாநின்னடியருடனிருந்துவாழ்வேன். (௫)

வாழ்வெனவுந்தாழ்வெனவுமிரண்டாப்பேசும்
வையகத்தார்கற்பனையாமயக்கமான
பாழ்வலையைக்கிழித்துதறிச்செயல்போய்வாழப்
பரமேநின்னனந்தப்பார்வையெங்கே. (௬)

எங்கேயெங்கேயருளென்றெமையிரந்தா
னேழையிவனெனவுமெண்ணியிச்சைகூரு
மங்கேயெங்கேயெளிவந்தென்னையாண்ட
வாரமுதேயுனைக்காண்பானலந்துபோனேன். (௭)

போனநாட்கிரங்குவதேதொழிலாவிங்ஙன்
பொருந்துநாளத்தனையும்போக்கினேனென்
ஞானநாயகனேநின்மோனஞான
நாட்டமுற்றுவாழ்ந்திருக்குநாளெந்நாளோ. (௮)

நாட்பட்டகமலமென்னவிதயமேவு
நறுந்தேனேதுன்மார்க்கநாரிமார்கண்
வாட்பட்டகாயமிந்தக்காயமென்றே
வன்கூற்றுயிர்பிடிக்கவருமந்நீதி. (௯)

நீதியெங்கேமறையெங்கேமண்விண்ணெங்கே
நித்தியராமவர்களெங்கேநெறிதப்பாத
சாதியெங்கேயொழுக்கமெங்கேயாங்களெங்கே
தற்பரநீபின்னுமொன்றைச்சமைப்பதானால். (௧௦)

ஆறாலும்யானெனதிங்கற்றவெல்லை
 யதுபோதுமதுகதிதானல்லவென்று
போறாலும்யான்போவனல்லான்மோனப்
 புண்ணியனேவேறுமொருபொருளொட்டேன். (கக)

பொருளோநின்பூரணமேலிட்டகாலம்
 போக்குவரவுண்டோதற்போதமுண்டோ
விருட்டாணுண்டோவல்லால்வெளிதானுண்டோ
 வின்பமுண்டோதுன்பமுண்டோயாமங்குண்டோ.

உண்டோநீபடைத்தவுயிர்த்திரளிலென்போ
 லொருபாவிதேகாதியுலகம்பொய்யாக்
கண்டேயுமெள்ளளவுத்துறவுமின்றிக்
 காசினிக்குளலைந்தவரார்காட்டாய்தேவே. (க௩)

தேவரெல்லாந்தொழச்சிவந்தசெந்தாண்முக்கட்
 செங்கரும்பேமொழிக்குமொழிதித்திப்பாக
மூவர்சொலுந்தமிழ்கேட்குந்திருச்செவிக்கே
 மூடனேன்புலம்பியசொன்முற்றுமோதான். (க௪)

முற்றுமோவெனக்கினியானந்தவாழ்வு
 மூதறிவுக்கினியாய்நின்முளரித்தாளிற்
பற்றுமோசற்றுமில்லையையோவையோ
 பாவிபடுங்கட்கலக்கம்பார்த்திலாயோ. (க௫)

பார்த்தனவெல்லாமழியுமதனுற்சுட்டிப்
 பாராதேபார்த்திருக்கப்பரமேமோன
மூர்த்திவடிவாயுணர்த்துங்கைக்காட்டுண்மை
 முற்றியெனதல்லல்வினைமுடிவதென்றோ. (க௬)

என்றுனை நீயென்றுளம்யாமென்பதென்னை
விருநிற்கவெல்லாந்தாமில்லையென்றே
பொன்றிடச்செய்வல்லவனீயெமைப்படைக்கும்
பொறுப்புடையாயென்னினதுபொருந்திடாதே. (௧௭)

பொருந்துசகமனைத்தினையும்பொய்பொய்யென்று
புகன்றபடிமெய்யென்றேபோதரூபத்
திருந்தபடியென்றிருப்பதன்றேயன்றோ
வெம்பெருமான்யான்கவலையெய்தாக்காலம். (௧௮)

காலமேகாலமொருமூன்றுங்காட்டுங்
காரணமேகாரணகாரியங்களில்லாக்
கோலமேயெனைவாவாவென்றுகூவிக் [லாய்
குறைவறநின்னருள்கொடுத்தாற் குறைவோசொல்

சொல்லாயதகுதியெல்லாங்கடந்துநின்ற
சொரூபானந்தச்சுடரேதொண்டனேனைக்
கல்லாகப்படைத்தாலுமெத்தநன்றே
கரணமுடனுறவுகலக்கமாட்டேன். (௨0)

கலங்காதநெஞ்சுடையஞானதீரர்
கடவுளுனைக்காணவேகாயமாதி
புலங்காணார்நானொருவன்ஞானம்பேசி
பொய்க்கூடுகாத்ததென்னபுதுமைகண்டாய். (௨௧)

கண்டிலையோயான்படும்பாடெல்லாமூன்று
கண்ணிருந்துந்தெரியாதோகசிந்துள்ளன்பார்
தொண்டரடித்தொண்டனன்றோகருணைநீங்காச்
சுத்தபரிபூரணமாஞ்சோதிநாதா. (௨௨)

சோதியாயிருட்பிழம்பைச்சூறையாடுந்
தூவெளியேயெனைத்தொடர்ந்துதொடர்ந்தெந்நாளு[ம்
வாதியாநின்றவினைப்பகையையென்ற
வாழ்வேயிங்குனைப்பிரிந்துமயங்குகின்றேன். (௨௩)

மயக்குறுமென்மனமணுகாப்பாதைகாட்டி
வல்வினையைப்பறித்தனையேவாழ்வேநானென்
செயக்கடவேன்செயலெல்லாநினதேயென்று
செங்கைகுவிப்பேனல்லாற்செயல்வேறில்லை. (௨௪)

வேறுபடுஞ்சமயமெல்லாம்புகுந்துபார்க்கின்
விளங்குபரம்பொருளேநின்விளையாட்டல்லால்
மாறுபடுங்கருத்தில்லைமுடிவின்மோன
வாரிதியினதித்திரள்போல்வயங்கிற்றம்மா. (௨௫)

அம்மாவீதநிசயந்தானன்றோவன்றோ
வகண்டநிலையாக்கியென்னையறிவாம்வண்ணஞ்
சும்மாவேயிருக்கவைத்தாயையாவாங்கே
சுகமயமாயிருப்பதல்லாற்சொல்வானென்னே. (௨௬)

என்னேநான்பிறந்துழலவந்தவாறிங்
கெனக்கெனவோர்செயலிலையேயேழையென்பான்
முன்னேசெய்வினையெனவும்பின்னேவந்து
மூளும்வினையெனவும்வரமுறையேனெந்தாய். (௨௭)

தாயானதண்ணருளைநிரம்பவைத்துத்
தமியேனைப்புரவாமற்றள்ளித்தள்ளிப்
போயானதென்கொலையாவேகதேசம்
பூரணத்துக்குண்டோதான்புகலல்வேண்டும். (௨௮)

புகலரியநின் விளையாட்டென்னையெந்தாய்
புன்மையறிவுடையவென்னைப்பொருளாப்பண்ணி
யிகல்விளைக்குமலமாயைகன்மத்தூடே
யிடருறவுஞ்செய்தனையேயிரக்கமீதோ. (உக)

இரக்கமொடுபொறையீதலறிவாசார
மில்லேனுனல்லோர்களீட்டங்கண்டாற்
கரக்குமியல்புடையேன்பாழ்நெஞ்சமெந்தாய்
கருந்தாதோவல்லுருக்கோகரியகல்லோ. (௩0)

பராபரக்கண்ணி.

சீராருந்தெய்வத்திருவருளாம்பூமிமுதற்
பாராதியாண்டபதியேபராபரமே. (க)

கண்ணாரக்கண்டோர்கருப்பொருள்காணமலருள்
விண்ணூடிருந்தவின்பவெற்பேபராபரமே. (உ)

சிந்தித்தவெல்லாமென்சிந்தையறிந்தேயுதவ
வந்தகருணைமழையேபராபரமே. (௩)

ஆராவமுதேயரசேயானந்தவெள்ளப்
பேராறேமோனப்பெருக்கேபராபரமே. (ச)

ஆரறிவாரென்னவனந்தமறையோலமிடும்
பேரறிவேயின்பப்பெருக்கேபராபரமே. (ரு)

உரையிறந்தவன்பருளத்தோங்கொளியாயோங்கிக்
கரையிறந்தவின்பக்கடலேபராபரமே. (சு)

எத்திக்குந்தானுகியென்னிதயத்தேயூறித்
தித்திக்குமானந்தத்தேனே பராபரமே. (எ)

திக்கொடுகீழ்மேலுந்திருவருளாம்பொற்பறிந்தோர்
கைக்குள்வளர்நெல்லிக்கனியேபராபரமே. (அ)

முத்தேபவளமேமொய்த்தபசும்பொற்சுடரோ
சித்தேயென்னுள்ளத்தெளிவேபராபரமே. (கூ)

கண்ணேகருத்தேயென் கற்பகமேகண்ணிறைந்த
விண்ணேயானந்தவியப்பேபராபரமே. (க0)

வாக்காய்மனதாய்மனவாக்கிறந்தவர்பாற்
றூக்காதேதாக்குந்தனியேபராபரமே. (கக)

பார்த்தவிடமெல்லாம்பரவெளியாய்த்தோன்றவொரு
வார்த்தைசொல்லவந்தமனுவேபராபரமே. (கஉ)

வானந்தமண்ணினந்தம்வைத்துவைத்துப்பார்க்கவெனக்,
கானந்தந்தந்தவரசேபராபரமே. (கங)

அன்பைப்பெருக்கியெனதாருயிரைக்காக்கவந்த
வின்பப்பெருக்கேயிறையேபராபரமே. (கச)

வானமெல்லாங்கொண்டமௌனமணிப் பொட்டகத்துக்,
கானபணியானவணியேபராபரமே. (கரு)

ஓடுமிருநிதியுமொன்றாகக்கண்டவர்க
ணாடும்பொருளானநட்பேபராபரமே. (கசா)

சித்தநினைவுஞ்செயுஞ்செயலுநீயெனவா
மூத்தமர்கட்கானவுறவேபராபரமே. (கஎ)

போதாந்தப்புண்ணியர்கள்போற்றிசயபோற்றியெனும்
வேதாந்தவீட்டில்விளக்கேபராபரமே. (௧௮)

முத்தாந்தவீதிமுளரிதொழுமன்பருக்கே
சித்தாந்தவீதிவருந்தேவேபராபரமே. (௧௯)

ஈனந்தருமுடலமென்னதியானென்பதற
வானந்தம்வேண்டியலந்தேன்பராபரமே. (௨௦)

என்புருகிநெஞ்சமிளகிக்கரைந்துகரைந்
தன்புருவாய்நிற்கவலந்தேன்பராபரமே. (௨௧)

சுத்தவறிவாய்ச்சுகம்பொருந்தினல்லாலென்
சித்தந்தெளியாதென்செய்வேன்பராபரமே. (௨௨)

மாறாவனுபூதிவாய்க்கினல்லாலென்மயக்கந்
தேறாதென்செய்வேன்சிவமேபராபரமே. (௨௩)

தாகமறிந்தின்பநிட்டைதாராயேலாகெடுவேன்
றேகம்விழுந்திடினென்செய்வேன்பராபரமே. (௨௪)

அப்பாவென்னெய்ப்பில்வைப்பேயாற்றுகிலேன்போற்றியென்று, செப்புவதல்லால்வேறென்செய்வேன்பராபரமே. (௨௫)

உற்றறியுமென்னறிவுமுட்கருவிபோற்சவிமாண்
டற்றுமின்பந்தந்திலையேயையாபராபரமே. (௨௬)

சொல்லாலடங்காச்சுகக்கடலில்வாய்மடுக்கி
னல்லாலென்றுகமறுமோபராபரமே. (௨௭)

பாராயோவென்னைமுகம்பார்த்தொருகாலென்கவலை
தீராயோவாய்திறந்துசெப்பாய்பராபரமே. (௨௮)

ஓயாதோவென் கவலையுள்ளே யானந்தவெள்ளம்
பாயாதோவையா பகராய்பராபரமே. (௨௯)

ஓகோவுனைப்பிரிந்தா ருள்ளங்கனலில்வைத்த
பாகோமெழுகோ பகராய்பராபரமே. (௩௦)

கூர்த்தவறிவத்தனையுங் கொள்ளைகொடுத்துன்னருளைப்
பார்த்தவனென்னை முகம்பாராய்பராபரமே. (௩௧)

கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியாதென்னை முகம்பார்நீபராபரமே. (௩௨)

உள்ளமறிவாயுழப்பறிவாய் நானேழை
தள்ளிவிடின்மெத்தத்தவிப்பேன்பராபரமே. (௩௩)

கன்றினுக்குச்சேதா கனிந்திரங்கல்போலவெனக்
கென்றிரங்குவாய்கருணையெந்தாய்பராபரமே. (௩௪)

எண்ணுதவெண்ணமெலாமெண்ணியெண்ணியேழை
நெஞ்சம், புண்ணாகச்செய்ததினிப்போதும்பராபரமே.

ஆழித்துரும்பெனவேயங்குமிங்குமுன்னடிமை
பாழிற்றிரிவதென்னபாவம்பராபரமே. (௩௬)

கற்றவறிவாலுனைநான்கண்டவன்போற்கூத்தாடிற்
குற்றமென்றென்னெஞ்சேகொதிக்கும்பராபரமே. ( )

ஐயோவுனைக்காண்பானாசைகொண்டதத்தனையும்
பொய்யோவெளியாப்புகலாய்பராபரமே. (௩௮)

அன்பக்கண்ணீரிற்றுளைந்தேற்குன்னானந்த
வின்பக்கண்ணீர்வருவதெந்நாள்பராபரமே. (௩௯)

வஞ்சனையும்பொய்யுமுள்ளேவைத்தழுக்காறாயுளறு
நெஞ்சனுக்குமுண்டோநெறிதான்பராபரமே. (௪0)

பாசம்போய்நின்றவர்போற்பாராட்டியானாலு
மோசம்போனேனான்முறையோபராபரமே. (௪௧)

நன்றறியேன்றீதறியேனானென்றுநின்றவனா
னொன்றறியேனானேழையென்னேபராபரமே. (௪௨)

இன்றுபுதிதன்றேயெளியேன்படுந்துயர
மொன்றுமறியாயோவுளாயாய்பராபரமே. (௪௩)

எத்தனைதான்சன்மமெடுத்தெத்தனைநான்பட்டதுய
ரத்தனையுநீயறிந்ததன்றோபராபரமே. (௪௪)

இந்தநாட்சற்றுமிரங்கிலையேற்காலன்வரு
மந்தநாட்காக்கவல்லாரார்காண்பராபரமே. (௪௫)

உற்றுற்றுநாடியுளமருண்டபாவியைநீ
சற்றிரங்கியாளத்தகாதோபராபரமே. (௪௬)

எள்ளளவுநின்னைவிடவில்லாவெனைமயக்கிற்
றள்ளுதலாலென்னபலன்சாற்றாய்பராபரமே. (௪௭)

பாடிப்படித்துலகிற்பாராட்டிநிற்பதற்கோ
தேடியெனையடிமைசேர்த்தாய்பராபரமே. (௪௮)

சொன்னத்தைச் சொல்வதல்லாற் சொல்லறவென் சொல்லிறுதிக், கென்னத்தைச்சொல்வே னெளியேன் பராபரமே. (௪௯)

சொல்லும்பொருளுமற்றுச்சும்மாவிருப்பதற்கே
யல்லும்பகலுமெனக்காசைபராபரமே. (௫0)

நேசநிருவிகற்பநிட்டையலலாலுன்னடிமைக்
காசையுண்டோநீயறியாதன்றேபராபரமே. (ருக)

தூச்சனெனவேண்டாமித்தொல்லுலகிலல்லல்கண்டா
லச்சமிகவுடையேனையாபராபரமே. (ருஉ)

கண்ணுவாரோனுமுனைக்கைகுவியாராயினந்த
மண்ணுவார்நட்பைமதியேன்பராபரமே. (ருங)

கொல்லாவிரதங்குவலயமெல்லாமோங்க
வெல்லார்க்குஞ்சொல்லுவதென்னிச்சைபராபரமே. ()

எத்தாற்பிழைப்பேனோவெந்தையேநின்னருட்கே
பித்தானேன்மெத்தவுநான்பேதைபராபரமே. (ருரு)

வாயினாற்பேசாமௌனத்தைவைத்திருந்துந்
தாயிலார்போனுன்றளர்ந்தேன்பராபரமே. (ருசா)

அன்னையிலாச்சேய்போலலக்கணுற்றேன்கண்ணூர
வென்னகத்திற்ருய்போலிருக்கும்பராபரமே. (ருஎ)

உற்றுநினைக்கிற்றுயரமுள்ளுள்ளேசெந்தீயாய்ப்
பற்றநொந்தேனென்னைமுகம்பார்நீபராபரமே. (ருஅ)

பொய்யனிவனென்றுமெள்ளப் போதிப்பார்சொற்கே
கைவிடவும்வேண்டாமென்கண்ணேபராபரமே. [ட்டுக்

எண்ணமறிந்தேயிளைப்பறிந்தேயேழையுய்யும்
வண்ணந்திருக்கருணைவையாய்பராபரமே. (சா0)

நாட்டாதேயென்னையொன்றினாட்டியிதமகிதங்
காட்டாதேயெல்லாநீகண்டாய்பராபரமே. (சாக)

உன்னைநினைந்துன்னிறைவினுள்ளேயுலாவுமென்னை
யன்னைவயிற்றின்னமடைக்காதேபராபரமே. (௬உ)

பரமுனக்கென்றெண்ணும்பழக்கமேமாறா
வரமெனக்குத்தந்தருளென்வாழ்வேபராபரமே. (௬௩)

வந்தித்துநின்னைமறவாக்கடனாகச்
சிந்திக்கநின்னருள்செய்யாய்பராபரமே. (௬௪)

எவ்வுயிருமென்னுயிர்போலெண்ணியிரங்கவுநின்
றெய்வவருட்கருணைசெய்யாய்பராபரமே. (௬௫)

வெட்டவெளிப்பேதையன்யான் வேறுகபடொன்ற
றியேன், சிட்டருடன்சேரனந்ததெண்டன்பராபரமே.

இரவுபகலற்றவிடத்தேகாந்தயோகம்
வரவுந்திருக்கருணைவையாய்பராபரமே. (௬௭)

மால்காட்டிச்சிந்தைமயங்காமனின்றுசுகக்
கால்காட்டிவாங்காதேகண்டாய்பராபரமே. (௬அ)

எப்பொருளுநீயெனவேயெண்ணிநான்றோன்றாத
வைப்பையழியாநிலையாவையாய்பராபரமே. (௬௯)

சும்மாவிருப்பதுவேசுட்டற்றபூரணமென்
றெம்மாலறிதற்கெளிதோபராபரமே. (எ0)

முன்னொடுபின்பக்கமுடியடிநாப்பண்ணறநின்
றன்னொடுநாணிற்பதென்றோசாற்றாய்பராபரமே. (எக)

மைவண்ணந்தீர்ந்தமௌனிசொன்னதெவ்வண்ண
மவ்வண்ணநிட்டையருளாய்பராபரமே. (எஉ)

வித்தன்றியாதும்விளைவதுண்டோநின்னருளாஞ்
சித்தன்றியாங்களுண்டோசெப்பாய்பராபரமே. (எ௩)

ஆங்காரமற்றுன்னறிவானவன்பருக்கே
தூங்காததூக்கமதுதூக்கும்பராபரமே. (எ௪)

சிந்தையவிழ்ந்தவிழ்ந்து சின்மயமாநின்னடிக்கே
வந்தவர்க்கேயின்பநிலைவாய்க்கும்பராபரமே. (எ௫)

சொல்லாடாலுமனைப்போற்சொல்லிறந்துநீயாகி
னல்லாலெனக்குமுத்தியாமோபராபரமே. (எ௬)

பேச்சாகாமோனம்பிறவாமுளைத்தென்றற்
காச்சாக்ஷமேற்பயனுண்டாமோபராபரமே. (எ௭)

கெட்டியென்றுன்னன்பர்மலங் கெட்டயர்ந்தோர்பூ
ரணமாந், தொட்டிலுக்குட்சேய்போற் றுயின்றார்பரா
பரமே. (எ௮)

காட்டவருளிருக்கக்காணாதிருண்மலத்து
நாட்டமெனக்குவரனன்றோபராபரமே. (எ௯)

எத்தன்மைக்குற்றமியற்றிடினுந்தாய்பொறுக்கு
மத்தன்மைநின்னருளுமன்றோபராபரமே. (௮0)

எத்தனையோதேர்ந்தாலுமென்னாலேயின்பமுண்டோ
சித்துருவேயின்பச்சிவமேபராபரமே. (௮௧)

மண்ணொடுவிண்காட்டிமறைந்துமறையாவருளைக்
கண்ணொடுகண்ணாகவென்றுகாண்பேன்பராபரமே. ()

பஞ்சரித்துநின்னைப்பல்காலிரந்ததெல்லா
மஞ்சலெனும்பொருட்டேயன்றோபராபரமே. (௮௩)

எங்கெங்கேபார்த்தாலுமெவ்வுயிர்க்குமவ்வுயிரா
யங்கங்கிருப்பதுநீயன்றோபராபரமே. (௮௪)

அனைத்துமாய்நின்றாயேயான்வேறோநின்னை
நினைக்குமாறெங்கேநிகழ்த்தாய்பராபரமே. (௮௫)

நின்போதத்தாலேநினைப்புமறப்புமென்றா
லென்போதமெங்கேயியம்பாய்பராபரமே. (௮௬)

ஒன்றைநினைந்தொன்றைமறந்தோடுமனமெல்லாநீ
யென்றறிந்தாலெங்கேயியங்கும்பராபரமே. (௮௭)

கொழுந்தில்வயிரமெனக்கோதறவுள்ளன்பி
லழுந்துமவர்க்கேசுகமுண்டாகும்பராபரமே. (௮௮)

பற்றும்பயிர்க்குப்படர்கொழுந்துபோற்பருவம்
பெற்றவர்க்கேநின்னருடான்பெறும்பராபரமே. (௮௯)

யோகியர்க்கேஞானமொழுங்காம்பேரன்பான
தாகியரும்யோகமுன்னேசார்ந்தோர்பராபரமே. (௯0)

அல்லும்பகலுமறிவாகிநின்றவர்க்கே
சொல்லும்பொருளுஞ்சுமைகாண்பராபரமே. (௯௧)

எச்சிலென்றுபூவையிகழ்ந்தோர்க்குனைப்போற்றப்
பச்சிலையுங்கிள்ளப்படுமோபராபரமே. (௯௨)

அந்தக்கரணமடங்கத்துறப்பதுவே
யெந்தத்துறவினுநன்றெந்தாய்பராபரமே. (௯௩)

தன்னையறிந்தாற்றலைவன்மேற்பற்றலது
பின்னையொருபற்றுமுண்டோபேசாய்பராபரமே. ( )

அன்பாற்கரைந்துகண்ணீராறுகண்டபுண்ணியருக்
குன்பால்வரவழிதானுண்டோபராபரமே. (௯௫)

தன்னையறிந்தருளேதாரகமாநிற்பதுவே
யுன்னையறிதற்குபாயம்பராபரமே. (௯௬)

கற்றகலையானிலைதான்காணுமோகாண்பதெல்லா
மற்றவிடத்தேவெளியாமன்றோபராபரமே. (௯௭)

கண்மூடிக்கண்விழித்துக்காண்பதுண்டோநின்னருளா
ம், விண்மூடினெல்லாம்வெளியாம்பராபரமே. (௯௮)

நேரோநினதருளென்னெஞ்சைக்கவரினென்றும்
பாரோன்சுகமும்படைப்பேன்பராபரமே. (௯௯)

வான்காணவேண்டின்மலையேறலொக்குமுன்னை
நான்காணப்பாவனைசெய்நட்டம்பராபரமே. (௧00)

வாதனைவிட்டுன்னருளின் மன்னினல்லால்வேறுமொரு
சாதனைதானுண்டோநீசாற்றாய்பராபரமே. (௧0௧)

பாரகமும்விண்ணகமும்பற்றாகநிற்பதருட்
டாரகத்தைப்பற்றியன்றோசாற்றாய்பராபரமே. (௧0௨)

விளக்குந்தகளியையும்வேறென்றார்நின்னைத்
துளக்கமறச்சீவனென்றுசொல்வார்பராபரமே. (௧0௩)

பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவு
மாராயுஞ்சீவனுநீயாங்காண்பராபரமே. (௧0௪)

பொய்யைப்பொய்யென்றறியும்போதத்துக்காதரவுன்
மெய்யருளேயன்றோவிளம்பாய்பராபரமே. (௧0௫)

வருவான்வந்தேனெனல்போன்மன்னியபுவியுஞ்சகத்
தைத், தெரிவாகவில்லையென்றதிரம்பராபரமே.(க0கூ)

மாயாசகமில்லையென்மற்றெனக்கோர்பற்றுமில்லை
நீயேநானென்றுவந்துநிற்பேன்பராபரமே. (க0எ)

வாறுதிநீயெனவேவைத்தமறையென்னையுநீ
தானாகச்சொல்லாதோசாற்றாய்பராபரமே. (க0அ)

வெள்ளக்கருணைமதவேழமாநின்னருட்கென்
கள்ளக்கருத்தேகவளம்பராபரமே. (க0கூ)

வண்டாய்த்துவண்டுமௌனமலரணைமேற்
கொண்டார்க்கோவின்பங்கொடுப்பாய்பராபரமே. ()

மாயைமுதலாம்வினைநீமன்னுயிர்நீமன்னுயிர்தேர்ந்
தாயுமறிவானதுநீயன்றோபராபரமே. (கக௧)

என்னறிவும்யானுமெனதென்பதுவுமாமிவைக
ணின்னவையேயன்றோநிகழ்ந்தாய்பராபரமே. (ககஉ)

பாரறியாதண்டப் பரப்பறியாதுன்பெருமை
யாரறிவார்நானோவறிவேன்பராபரமே. (கக௩)

அண்டமனைத்திலுமாயப்பாலுக்கப்பாலுங்
கொண்டநின்னையாரறிந்துகொள்வார்பராபரமே. ()

ஒப்புயர்வொன்றின்றியொலிபுகாமோனவட்டக்
கப்பலுக்காம்வான்பொருணீகண்டாய்பராபரமே. ()

என்போலெளியவருமெங்கெங்கும்பார்த்தாலு
முன்போல்வலியவருமுண்டோபராபரமே. (சககூ)

பார்க்கினண்டபிண்டப்பரப்பனைத்துநின்செயலே
யார்க்குஞ்செயலிலையேயையாபராபரமே. (ககஎ)

ஒன்றேபலவேயுருவேயருவேயோ
வென்றேயழைப்பதுன்னையென்றுபராபரமே. (ககஅ)

செப்புவதெல்லாஞ்செபநான்சிந்திப்பதெல்லாநின்
ஞெப்பிறியானமெனவோர்ந்தேன்பராபரமே. (ககக)

ஆரிருந்தென்னார்போயென்னாரமுதாநின்னருளின்
சீரிருந்தாலுய்வேன்சிவமேபராபரமே. (கஉ0)

வஞ்சநமன்வாதனைக்கும்வன்பிறவிவேதனைக்கு
மஞ்சியுனையடைந்தேனையாபராபரமே. (கஉக)

எந்தப்படியுன்னிதயமிருந்ததெமக்
கந்தப்படிவருவதன்றோபராபரமே. (கஉஉ)

எந்தெந்தநாளுமெனைப்பிரியாதென்னுயிராய்ச்
சிந்தைகுடிகொண்டவருட்டேவேபராபரமே. (கஉங)

அஞ்சலஞ்சலென்றடிமைக்கப்போதைக்கப்போதே
நெஞ்சிலுணர்த்துநிறைவேபராபரமே. (கஉச)

என்னையுன்றன்கைக்களித்தார்யாவரொன்னையான்கொடு
த்துப், பின்னையுன்னாற்பெற்றநலம்பேசேன்பராபரமே.

வாய்பேசாவூமையெனவைக்கவென்றோநீமௌனத்
தாயாகவந்தருளைத்தந்தாய்பராபரமே. (கஉசு)

தன்னைத்தந்தென்னைத்தடுத்தாண்டநின்கருணைக்
கென்னைக்கொண்டென்னபலனெந்தாய்பராபரமே. ( )

மார்க்கண்டர்க்காகமறலிபட்டபாட்டையுன்னிப்
பார்க்கினன்பர்க்கென்னபயங்காண்பராபரமே. (கஉஅ)

சுட்டியுணராமற்றுரியநிலையாய்வெளியில்
விட்டநின்னையானோவியப்பேன்பராபரமே. (கஉகூ)

சூதொன்றுமின்றியென்னைச்சும்மாவிருக்கவைத்தா
யீதொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (கங0)

வாயொன்றும்பேசாமௌனியாய்வந்தாண்ட
தேயொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (கஙக)

என்றுமிருந்தபடிக்கென்னையெனக்களித்த
தொன்றும்போதாதோவுனையாய்பராபரமே. (கஙஉ)

எண்டிசைகீழ்மேலானவெல்லாம்பெருவெளியாக்
கண்டவிடத்தென்னையுநான்கண்டேன்பராபரமே. ( )

பித்தனையேதும்மறியாப்பேதையனையாண்டவுனக்
கெத்தனைதான்றெண்டனிடுவேன்பராபரமே. (கஙச)

தாயர்கர்ப்பத்தூடனமுந்தண்ணீருந்தந்தருளு
நேயவுனையாரோநினையார்பராபரமே. (கஙரு)

விரிந்தமனமொடுங்கும்வேளையிறுஞ்சுகப்
பரந்தவருள்வாழிபதியேபராபரமே. (கஙசா)

சிந்தனைபோய்நானெனல்போய்த்தேக்கவின்பமாமழை
யை, வந்துபொழிந்தனைநீவாழிபராபரமே. (கஙஎ)

தந்தேனேயோர்வசனந்தந்தபடிக்கின்பமுமாய்
வந்தேனேயென்றனைநீவாழிபராபரமே. (கஙஅ)

மண்ணும்விண்ணும்வந்துவணங்காவோநின்னருளைக்
கண்ணுறவுட்கண்டவரைக்கண்டாற்பராபரமே. (கஙகூ)

என்றுங்கருணைபெற்றவின்பத்தபோதனர்சொல்
சென்றசென்றதிக்கனைத்துஞ்செல்லும்பராபரமே. ()

ஆடுவதும்பாடுவதுமானந்தமாகநின்னைத்
தேடுவதுநின்னடியார்செய்கைபராபரமே. (கசக)

பொங்கியநின்றண்ணருளைப்புட்கலமாய்ப்பெற்றவர்க
ட், கெங்கெழுந்தென்ஞாயிறியம்பாய்பராபரமே. ()

பாலரொடுபேயர்பித்தர்பான்மையெனநிற்பதுவே
சீலமிகுஞானியர்தஞ்செய்கைபராபரமே. (கசங)

உண்டுடுத்துப்பூண்டிங்குலகத்தார்போற்றிரியுந்
தொண்டர்விளையாட்டேசுகங்காண்பராபரமே. (கசச)

கங்குல்பகலற்றதிருக்காட்சியர்கள்கண்டவழி
யெங்குமொருவழியேயெந்தாய்பராபரமே. (கசரு)

காயநிலையல்லவென்றுகாண்பாருறங்குவரோ
தூயவருட்பற்றுத்தொடர்வார்பராபரமே. (கசசா)

அப்புமுப்பும்போன்றவயிக்யபரானந்தர்தமக்
கொப்புவமைசொல்லவும்வாயுண்டோபராபரமே. ()

சித்தந்தெளிந்துசிவமானஞானமுள்ளோர்க்குங்
கொத்தடிமையானகுடிநான்பராபரமே. (கசஅ)

தம்முயிர்போலெவ்வுயிருந்தாமென்றுதண்ணருள்கூர்
செம்மையருக்கேவலென்றுசெய்வேன்பராபரமே. ()

விண்ணுக்கும்விண்ணாகிமேவுமுனக்கியான்பூசை
பண்ணிநிற்குமாறுபகராய்பராபரமே. (௧௫0)

நெஞ்சகமேகோயினினைவேசுகந்தமன்பே
மஞ்சனநீர்பூசைகொள்ளவாராய்பராபரமே. (௧௫௧)

கெட்டவழியாணவப்பேய்கீழாகமேலான
சிட்டருனைப்பூசைசெய்வார்பராரபரமே. (௧௫௨)

கால்பிடித்துமூலக்கனலைமதிமண்டலத்தின்
மேலெழுப்பிற்றேகம்விழுமோபராபரமே. (௧௫௩)

பஞ்சசுத்திசெய்துநின்னைப்பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சியஞானம்விளங்கும்பராபரமே. (௧௫௪)

அன்பர்பணிசெய்யவெனையாளாக்கிவிட்டுவிட்டா
லின்பநிலைதானேவந்தெய்தும்பராபரமே. (௧௫௫)

மூர்த்திதலந்தீர்த்தமுறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச்சற்குருவும்வாய்க்கும்பராபரமே. ()

விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே. (௧௫௭)

தானந்தவந்தருமஞ்சந்ததமுஞ்செய்வர்சிவ
ஞானந்தனையணையநல்லோர்பராபரமே. (௧௫௮)

சொன்னத்தைச்சொல்லித்துடிக்கின்றவாணவப்பேய்க்
கின்னல்வருவதெந்நாளெந்தாய்பராபரமே. (௧௫௯)

இன்றோவிருவினைவந்தேறியதுநானென்றோ
வன்றேவிளைந்ததன்றோவாற்றேன்பராபரமே. (௧௬0)

எண்ணமுந்தானின்னைவிட வில்லையென்றால்யான்மு
னமே, பண்ணவினையேதுப்கராய்பராபரமே. (கசுக)

என்னையின்னதென்றறியாவேழைக்குமாகெடுவேன்
முன்னைவினைகூடன்முறையோபராபரமே. (கசுஉ)

அறியாநான்செய்வினையையையாநீகூட்டுங்
குறியேதெனக்குளவுகூறாய்பராபரமே. (கசுங)

என்னைக்கெடுக்கவிசைந்தவிருவினைநோய்
தன்னைக்கெடுக்கத்தகாதோபராபரமே. (கசுச)

வல்லமையேகாட்டுகின்றமாமாயைநானொருவ
னில்லையெனினெங்கேயிருக்கும்பராபரமே. (கசுரு)

முக்குணத்தாலெல்லாமுளைக்கப்பிரகிருதிக்
கிக்குணத்தைநல்கியதாரொந்தாய்பராபரமே. (கசுசு)

ஆற்றப்படாதுதுன்பமையவென்றாலென்மனது
தேற்றப்படாதினியென்செய்வேன்பராபரமே. (கசுஎ)

பூராயமாய்மனதைப்போக்கவறியாமலேயோ
யாராயலைந்தேனரசேபராபரமே. (கசுஅ)

சினமிறக்கக்கற்றாலுஞ்சித்தியெல்லாம்பெற்றாலு
மனமிறக்கக்கல்லார்க்குவாயேன்பராபரமே. (கசுகூ)

வாதுக்குவந்தெதிர்த்தமல்லரைப்போற்பாழ்த்தமன
மேதுக்குக்கூத்தாடுதேந்தாய்பராபரமே. (கஎ0)

சூதாடுவார்போற்றுவண்டுதுவண்டுமனம்
வாதாடினென்னபலன்வாய்க்கும்பராபரமே. (கஎக)

கொள்ளித்தேள்கொட்டிக் குதிக்கின்றபேய்க்குரங்
காய்,கள்ளமனந்துள்ளுவதென்கண்டாய்பராபரமே.

வந்ததையும்போனதையும்வைத்துவைத்துப்பார்த்தி
ருந்தாற், சிந்தையிசமகிதஞ்சேரும்பராபரமே. (கஎ௩)

ஏறுமயிர்ப்பாலமுணர்விந்தவிடயங்களெருப்
பாறெனவுநன்றுவறிந்தேன்பராபரமே. (கஎச)

பொறிவழியேயேழைபொறியாயுழல்வதுநின்
னறிவின்விதித்தவிதியாமோபராபரமே. (கஎரு)

பாசசாலங்களெல்லாம்பற்றுவிடஞானவைவாள்
வீசநாளெந்நாள்விளம்பாய்பராபரமே. (கஎசு)

எந்தவுடலேனுமெடுத்தவுடனல்லதென்று
சிந்தைசெயவந்ததிறஞ்செப்பாய்பராபரமே. (கஎஎ)

பொய்யெல்லாமொன்றாய்ப்பொருத்திவைத்தபொய்யு
டலை, மெய்யென்றுன்மெய்யாய்விடுமோபராபரமே. ()

மின்னனையபொய்யுடலைமெய்யென்றுநம்பினையோ
நின்னைமறக்கைநெறியோபராபரமே. (கஎகூ)

நித்தியமொன்றில்லாதநீர்க்குமிழிபோன்றவுடற்
கித்தனைதான்றுன்பமுண்டோவென்னேபராபரமே. ()

தேகமிறுமென்றுசடர்தேம்புவதென்னித்திரையி
னூகமறிந்தாற்பயந்தானுண்டோபராபரமே. (கஅக)

ஏதைச்சுமையாவெடுப்பாரெடுத்தவுடற்
சேதமுறின்யாதுபின்னேசெல்லும்பராபரமே. (கஅஉ)

தோற்பாவைகூத்தாட்சுமையாகுஞ்சீவனென்றிங்
கார்ப்பாலெடுத்ததெவராலேபராபரமே. (௧௮௩)

ஞாலத்தைமெய்யெனவேநம்பிநம்பிநாளுமென்றன்
காலத்தைப்போக்கியென்னகண்டேன்பராபரமே. ()

பொய்யுலகவாழ்க்கைப்புலைச்சேரிவாதனைநின்
மெய்யருளின்மூழ்கின்விடுங்காண்பராபரமே. (௧௮௫)

நூலேணிவிண்ணேறநூற்குப்பருத்திவைப்பார்
போலேகருவிநன்னூற்போதம்பராபரமே. (௧௮௬)

சின்னஞ்சிறியார்கள்செய்தமணற்சோற்றையொக்கு
மன்னுங்கலைஞானமார்க்கம்பராபரமே. (௧௮௭)

வாசகஞானத்தால்வருமோசுகம்பாழ்த்த
பூசலென்றுபோமோபுகலாய்பராபரமே. (௧௮௮)

கேட்டதையேசொல்லுங்கிளிபோலநின்னருளி
னூட்டமின்றிவாய்பேசனன்றோபராபரமே. (௧௮௯)

வெளியாயருளில்விரவுமன்பர்தேக
மொளியாய்ப்பிறங்கியதுமுண்டோபராபரமே. (௧௯0)

காலமொருமூன்றுங்கருத்திலுணர்ந்தாலுமதை
ஞாலந்தனக்குரையார்நல்லோர்பராபரமே. (௧௯௧)

கொல்லாவிரதமொன்றுகொண்டவரேநல்லோர்மற்
றல்லாதார்யாரோவறியேன்பராபரமே. (௧௯௨)

இல்லாதகாரியத்தையிச்சித்துச்சிந்தைவழி
செல்லாமைநல்லோர்திறங்காண்பராபரமே. (௧௯௩)

ஏதுவந்துமேதொழிந்துமென்னதியானென்றோர்கள்
போதநிலைகண்டபுலத்தோர்பராபரமே. (ககூச)

ஆயிரஞ்சொன்னாலுமறியாதவஞ்சநெஞ்சப்
பேயரொடுகூடிற்பிழைகாண்பராபரமே. (ககூரு)

மாயமயக்கொழிந்தார்மற்றொன்றைநாடுவரோ
நேயவருணிலையினிற்பார்பராபரமே. (ககூசா)

நித்திரையிற்செத்தபிணநேருமுடற்கிச்சைவையாச்
சுத்தர்களேநல்லதுறவோர்பராபரமே. (ககூஎ)

என்னெஞ்சமேனுமிரங்குமேநின்னருட்குக்
கன்னெஞ்சருமுளரோகாட்டாய்பராபரமே. (ககூஅ)

மந்தவறிவாகியின்பம்வாயாதிருந்தலைந்தாற்
சிந்தைமயங்காதோவென்செய்வேன்பராபரமே. ()

தேடினேன்றிக்கனைத்துந் தெண்டனிட்டேன்சிந்தை
நைந்து; வாடினேனென்மயக்கமாற்றாய்பராபரமே. ()

மடிமையெனுமொன்றைமறுத்தன்றோவென்னை
யடிமைகொளல்வேண்டுமரசேபராபரமே. (உ0க)

காலர்பயந்தீரவின்பக்காற்கபயமென்றெழுந்த
மாலைவளர்த்தனையேவாழிபராபரமே. (உ0உ)

நீர்ப்புற்புதமாய்நினைவருட்கேநின்றழியப்
பார்ப்பதல்லால்வேறுமொன்றைப்பாரேன் பராபரமே.

நீர்க்குமிழிபோலென்னினைவுவெளியாய்க்கரையப்
பார்க்குமிடமெல்லாமென்பார்வைபராபரமே. (உ0ச)

ஆடியோய்பம்பரம்போலாசையுடனெங்குமுனைத்
தேடியோய்கின்றேனென்செய்வேன்பராபரமே. ()

வேதாந்தஞ்சித்தாந்தம்வேறென்னார்கண்களிக்கு
நாதாந்தமோனநலமேபராபரமே. (உ0சு)

ஆனந்தமானநின்னையன்றியொன்றையுன்னாத
மோனந்தமியேற்குமுத்திபராபரமே. (உ0எ)

ஏதுக்குமுன்னைவிடவில்லையென்றாலென்கருத்தைச்
சோதிக்கவேண்டாநான்சொன்னேன்பராபரமே. ()

முத்தியிலுந்தேகமிசைமூவிதமாஞ்சித்திபெற்றோ
ரொத்தனைபேரொன்றுரைப்பதெந்தாய்பராபரமே. (உ0கூ)

நீயன்றிநானார்நினைவாரென்னெஞ்சகமார்
தாயன்றிச்சூலுமுண்டோசாற்றாய்பராபரமே. (உக0)

அங்கமேநின்வடிவமானசுகர்கூப்பிடநீ
யெங்குமேனென்றதென்னேபராபரமே. (உகக)

கொள்ளைவெள்ளத்தண்ணருண்மேற்கொண்டுசுழித்
தார்த்திழுத்தாற், கள்ளமனக்கப்பலெங்கேகாணும்பரா
பரமே. (உகஉ)

எக்கலையுங்கற்றுணர்ந்தோமென்றவர்க்குஞ்சம்மதஞ்
சொல், வக்கணையாலின்பம்வருமோபராபரமே. ()

கல்லெறியப்பாசிகலைந்துநன்னீர்காணுநல்லோர்
சொல்லுணரின்ஞானம்வந்துதோன்றும்பராபரமே. ()

நின்னையுணர்ந்தோர்கடமைநிந்தித்தபேயரிரு
ளென்னகதிபெறுவாரோர்ந்தாய்பராபரமே. (உகரு)

என்னதியானென்னலற்றோரெங்கிருந்து பார்க்கினுநின்
சன்னிதியாநீபெரியசாமிபராபரமே. (உகசு)

சோற்றுத் துருத்திச்சுமைசுமப்பக்கண்பிதுங்கக்
காற்றைப்பிடித்தலைந்தேன் கண்டாய்பராபரமே. (உகஎ)

உள்ளபடியொன்றையுரைக்கினவர்க்குள்ளூறவாய்க்
கள்ளமின்றியன்பாய்க்களிப்பேன்பராபரமே. (உகஅ)

அடுத்தவியல்பாகவொன்றையான்பகர்வதல்லாற் [ரமே.
றெடுத்ததொன்றையான்வேண்டிச் சொல்லேன்பராப

உள்ளமறியாதொருவரொன்றையுன்னிப்பேசிலையோ
துள்ளியிளங்கன்றாய்த்துடிப்பேன்பராபரமே. (உஉ0)

எல்லாருமின்புற்றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன்றறியேன்பராபரமே. (உஉக)

முன்னாண்மெய்ஞ்ஞானமுனிவர்தவமீட்டுதல்போ
லிந்நாளிற்காணவெனக்கிச்சைபராபரமே. (உஉஉ)

கன்மமென்பதெல்லாங்கரிசறவேமெய்ஞ்ஞான
தன்மநிலைசார்ந்ததன்பர்தன்மைபராபரமே. (உஉங)

கண்டுயிலாதென்னறிவின்கண்ணூடேகாட்சிபெற
மண்டியபேரொளிநீவாழிபராபரமே. (உஉச)

நானானதன்மையென்றுநாடாமனாடவின்ப
வானாகிநின்றனைநீவாழிபராபரமே. (உஉரு)

அகத்தூடணுவணுவாயண்டமெல்லாந்தானாய்
மகத்தாகிநின்றனைநீவாழிபராபரமே. (உஉசு)

காரகமாங்கர்ப்பவறைக்கண்ணூடுமென்கண்ணே
வாரம்வைத்துக்காத்தனை நீவாழிபராபரமே. (உஉஎ)

புரந்தோர்தந்தேசமென்பார்பூமியைப்போராடி
யிரந்தோருந்தம்மதென்பாரென்னேபராபரமே. (உஉஅ)

மூர்த்தியெல்லாம்வாழியெங்கண்மோனகுருவாழிய
ருள்,வார்த்தையென்றும்வாழியன்பர்வாழிபராபரமே.

சொல்லும்பொருளுந்தொடராவருணிறைவிற்
செல்லும்படிக்கருணீசெய்தாய்பராபரமே. (உ௩௦)

இற்றைவரைக்குள்ளாகவெண்ணரியசித்திமுத்தி
பெற்றவர்களைத்தனைப்பேர்பேசாய்பராபரமே. (உ௩க)

நாடுநகருநிசாளுட்டியபாளயமு
மீடுசெயுமோமுடிவிலெந்தாய்பராபரமே. (உ௩உ)

தேடுந்திரவியமுஞ்சேர்ந்தமணிப்பெட்டகமுங்
கூடவருந்துணையோகூறாய்பராபரமே. (உ௩௩)

தேடாதத்தேட்டினரோசெங்கைத்துலாக்கோல்போல்
வாடாச்சமநிலையில்வாழ்வார்பராபரமே. (உ௩௪)

நீராய்க்கசிந்துருகிநெட்டுயிர்த்துநின்றேனைப்
பாராததென்னோபகராய்பராபரமே. (உ௩௫)

உள்ளபொருளாகியுடன்மூன்றுமன்றேதான்
கொள்ளைகொண்டநீயென்குறைதீர்பராபரமே. (உ௩௬)

ஆழ்ந்தாயேயிவ்வுலகிலல்லலெல்லாந்தீர்ந்தருளால்
வாழ்ந்தாயேயென்றனைநீவாழிபராபரமே. (உ௩எ)

தாராவருளையெல்லாந்தந்தெனையுநின்னருளில்
வாராயோவென்றனைநீவாழிபராபரமே. (உருஅ)

ஆசையுன்மீதல்லாலருளறியவேறுமொன்றிற்
பாசம்வையேனின்கருணைப்பாங்காற்பராபரமே(உருகூ)

ஆதியந்தநீகுருவாயாண்டதல்லானின்னையன்றிப்
போதனையுமுண்டோபுகலாய்பராபரமே. (உசு0)

தானாகவந்துதடுத்தாண்டெனையின்ப
வானாகச்செய்தவின்பவானேபராபரமே. (உசுக)

பற்றற்றிருக்குநெறிபற்றிற்கடன்மலையுஞ்
சுற்றநினைக்குமனஞ்சொன்னேன்பராபரமே. (உசுஉ)

படிப்பற்றுக்கேள்வியற்றுப்பற்றற்றுச்சிந்தைத்
துடிப்பற்றார்க்கன்றோசுகங்காண்பராபரமே. (உசுரு)

சத்தாகிநின்றோர்சடங்களிலிங்கமென
வைத்தாருமுண்டேயென்வாழ்வேபராபரமே. (உசுசு)

சித்தநிருவிகற்பஞ்சேர்ந்தாருடற்றீயம்
வைத்தகர்ப்பூரம்போல்வயங்கும்பராபரமே. (உசுரு)

ஆதிகாலத்திலெனையாண்டனையேயிப்பானீ
போதியெனினெங்கேநான்போவேன்பராபரமே. ()

நாவழுத்துஞ்சொன்மலரோநாளுநிக்கும்பொன்மல
ரோ, தேவையுனக்கின்னதென்றுசெப்பாய்பராபரமே.

கன்னறரும்பாகாய்க்கருப்புவட்டாய்க்கற்கண்டா
யின்னமுதாயென்னுளிருந்தாய்பராபரமே. (உசுஅ)

சிற்பரமேதற்பரமேதெய்வசுருதிசொன்ன
வற்புதமேயன்பேயறிவேபராபரமே. (உசகூ)

அறிவிப்பானீயென்றாலைம்புலன்கடந்த்
நெறிநிற்பார்யாரேநிகழ்த்தாய்பராபரமே. (உரு0)

அந்தக்கரணமெனுமாகாதபேய்களெனை
வந்துபிடித்தாட்டவழக்கோபராபரமே. (உருக)

ஐவரொடுங்கூடாமலந்தரங்கசேவைதந்த
தெய்வவறிவேசிவமேபராபரமே. (உருஉ)

அருளாகிநின்றசுகமாகாமலேயோ
விருளாகிநிற்கவியல்போபராபரமே. (உருங)

அன்பரெல்லாமின்பமருந்திடவும்யானொருவன்
றுன்புறுதனன்றோநீசொல்லாய்பராபரமே. (உருச)

சந்ததமுநின்கருணைசாற்றுவதல்லால்வேறு
சிந்தையறியேனுன்சித்தம்பராபரமே. (உருரு)

நானெனக்குளாறுநாட்டத்தாலென்னைவிட்டுப்
போனாலுமுன்னைவிட்டுப்போகேன்பராபரமே. (உருசா)

இக்காயம்பொய்யன்றோவீட்டத்துனக்கபயம்
புக்காதாருண்டோபுகலாய்பராபரமே. (உருஎ)

தானாதல்பூரணமேசாருமிடமுண்டுயிரும்
வானாதியுமொழுங்காய்மன்னும்பராபரமே. (உருஅ)

உன்னுமனங்கர்ப்பூரவுண்டைபோலேகரைய
மின்னுமானந்தவிளக்கேபராபரமே. (உருகூ)

நாட்பட்டலைந்தநடுக்கமெலாந்தீரவுனக்
காட்பட்டுந்துன்பமெனக்காமோபராபரமே. (௨௬௦)

பாவிபடுங்கண்கலக்கம்பார்த்துமிரங்காதிருந்தா
லாவிக்குறுதுணையாரையாபராபரமே. (௨௬௧)

நின்னிறைவேதாரகமாய்நின்றுசுகமெய்தாம
லென்னிறைவேபாவித்தேனென்னேபராபரமே (௨௬௨)

நின்னைச்சரண்புகுந்தானீகாக்கல்வேண்டுமெல்லா
லென்னைப்புறம்விடுதலென்னேபராபரமே. (௨௬௩)

மாறுததுன்பமெல்லாம்வந்துரைத்தானின்செவியி
லேறுதவாறேதியம்பாய்பராபரமே. (௨௬௪)

விஞ்சுபுலப்பாடனைத்தும்வீறுதுன்பஞ்செய்யவந்த
வஞ்சுபுலவேடருக்குமாற்றேன்பராபரமே. ௨௬௫)

கன்னங்கரியநிறக்காமாதிராக்ஷசப்பேய்க்
கென்னையிலக்காகவைத்ததென்னேபராபரமே.(௨௬௬)

சித்திநெறிகேட்டல்செகமயக்கஞ்சன்மமற
முத்திநெறிகேட்டன்முறைகாண்பராபரமே. (௨௬௭)

சிந்தைசிதையச்சிதையாதவானந்த
மெந்தவகையாலேவந்தெய்தும்பராபரமே. (௩௬௮)

கூர்த்தவறிவாலறியக்கூடாதெனக்குரவன்
தேர்த்தபடிதானேதிரிந்தேன்பராபரமே' (௨௬௯)

பத்தருந்தும்பரமசுகம்யானருந்த
வெத்தனைநாள்செல்லுமியம்பாய்பராபரமே. (௨௭௦)

தீரத்தினாற்றுறவுசேராமலிவ்வுலகிற்
பாரத்தனம்பேசல்பண்போபராபரமே. (௨௭௧)

இந்தவெளியினையுண்டேப்பமிடப்பேரறிவாத்
தந்தவெளிக்கேவெளியாய்ச்சார்ந்தேன்பராபரமே. ()

உணர்த்துமுனைநாடாதுணர்ந்தவையேநாடி
யிணக்குறுமென்னேழைமைதானென்னேபராபரமே. ()

உண்டுபோலின்றுமுலைகைத்திரமௌனவுட்
கொண்டுநான்பெற்றபலன்கூறாய்பராபரமே. (௨௭௪)

உள்ளபடியாதுமெனவுற்றுணர்ந்தேனக்கணமே
கள்ளமனம்போனவழிகாணேன்பராபரமே. (௨௭௫)

சித்தமவுனஞ்செயல்வாக்கெலாமவுனஞ்
சுத்தமவுனமென்பாற்றோன்றிற்பராபரமே. (௨௭௬)

எண்ணில்பலகோடியுயிரொத்தனையோவத்தனைக்குங்
கண்ணிற்கலந்தவருட்கண்ணேபராபரமே. (௨௭௭)

எனக்கினியாருன்போலுமில்லையென்றால்யானு
முனக்கினியனாகாவுளவேன்பராபரமே. (௨௭௮)

அண்டபிண்டங்காணேனகமும்புறமுமொன்றாக்
கண்டவென்னைநீகலந்தகாலம்பராபரமே. (௨௭௯)

எத்தனையோகோடியெடுத்தெடுத்துச்சொன்னாலுஞ்
சித்தமிரங்கிலையென்செய்வேன்பராபரமே. (௨௮0)

அன்றந்தநால்வருக்குமற்புதமாநீயுரைத்த
தொன்றந்தவார்த்தையெனக்குண்டோபராபரமே. ()

அப்பனென்றுமன்னையென்றுமாரியனென்றும்முனை
யே, செப்புவதுமுன்னிலையின்சீர்காண்பராபரமே. ()

கட்டுங்கனமுமந்தக்காலர்வரும்போதெதிர்த்து
வெட்டுந்தளமோவிளம்பாய்பராபரமே. (உஅங)

பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம்
வாசாமகோசரந்தான்வாய்க்கும்பராபரமே. (உஅச)

கற்றாலுங்கேட்டாலுங்காயமழியாதசித்தி
பெற்றாலுமின்பமுண்டோபேசாய்பராபரமே. (உஅரு)

கண்டவடிவெல்லாங்கரைக்கின்றவஞ்சனம்போ
லண்டமெல்லாநின்னருளேயன்றோபராபரமே. (உஅசா)

தன்செயலாலொன்றுமிலைதானென்றுஞன்பாவி
நின்செயலாய்நில்லாநினைவேன்பராபரமே. (உஅஎ)

கொலைகளவுகட்காமங்கோபம்விட்டாலன்றோ
மலையிலக்காநின்னருடான்வாய்க்கும்பராபரமே. ()

தன்னையறியாதுசகந்தானுயிருந்துவிட்டா
லுன்னையறியவருளுண்டோபராபரமே. (உஅகூ)

ஒன்றிரண்டென்றுன்னுவுணர்வுகொடுத்துள்ளபடி
யென்றுமென்னைவையாயிறையேபராபரமே. (உகூ0)

கருதுமடியார்களுளங்காணவெளியாகுந்
துரியநிறைவானசுகமேபராபரமே. (உகூக)

பொய்குவித்தநெஞ்சனருட்பொற்பறிந்துதிக்கனைத்
துங், கைகுவித்துநிற்பதெந்தக்காலம்பராபரமே, ()

அத்துவிதமானவயிக்யவனுபவமே
சுத்தநிலையந்நிலையார்சொல்வார்பராபரமே. (உ௯௩)

வைத்தசுவரலம்பின்மண்போமோமாயையினோர்க்
கெத்தனைபோதித்துமென்றுமெந்தாய்பராபரமே. ()

பூட்டற்றுத்தேகமற்றுப்போகுமுன்னேநின்னருளைக்
காட்டத்தகாதோவென்கண்ணேபராபரமே. (உ௯௫)

சொல்லிற்பதர்களைந்துசொன்முடிவுகாணுதார்
நெல்லிற்பதர்போலநிற்பார்பராபரமே. (உ௯௬)

அழுக்காற்றானெஞ்சமழுங்கியபுன்மாக்க
ளிழுக்காற்றலின்பலமெய்தார்பராபரமே. (உ௯௭)

தேகாதிபொய்யெனவேதேர்ந்தவுபசாந்தருக்கு
மோகாதியுண்டோமொழியாய்பராப்ரமே. (உ௯௮)

சாதனையெல்லாமவிழத்தற்போதங்காட்டாதோர்
போதனைநீங்குவதெப்போதோபராபரமே. (உ௯௯)

ஒன்றுமறியாவிருளாமுள்ளம்படைத்தவெனக்
கென்றுகதிவருவதெந்தாய்பராபரமே. (௩௦௦)

சிந்திக்குந்தோறுமென்னுட்சிற்சுகமாயூற்றூறிப்
புந்திக்குணின்றவருட்பொற்பேபராபரமே. (௩௦௧)

என்றுமடைந்தோர்கட்கிரங்கார்குறிப்பனைத்துங்
கன்றையுதைகாலிகதைகாண்பராபரமே. (௩௦உ)

குற்றங்குறையக்குணமேலிடவருளை
யுற்றவரோயாவிக்குறவாம்பராபரமே. (௩௦௩)

ஒருணையால்வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல்கோடி
ப், பேருணையாற்பேசிலென்னபேராம்பராபரமே. ()

சொல்லுஞ்சமயநெறிச்சுற்றுக்குளேசுழலு
மல்லலொழிவதென்றைக்கையாபராபரமே. (௩0௫)

பிடித்ததையேஸ்தாபிக்கும்பேராணவத்தை
யடித்துத்துரத்தவல்லாரார்காண்பராபரமே. (௩0௬)

நேசத்தானின்னைநினைக்குநினைவுடையார்
ஆசைக்கடலிலழுந்தார்பராபரமே. (௩0௭)

கள்ளாதுகட்டுணவுங்காரியமோநானொருசொல்
கொள்ளாததோஷமன்றோகூறாய்பராபரமே. (௩0௮)

சென்றவிடமெல்லாந்திருவருளேதாரகமா
நின்றவர்க்கேயானந்தநிட்டைபராபரமே. (௩0௯)

நீட்சிகுறுகலில்லாநித்யசுகாரம்பசக
சாக்ஷியாமுன்னைவந்துசார்ந்தேன்பராபரமே. (௩௧0)

வாறுநிதத்துவமாய்மன்னிநின்றகாரணநீ
நாறுநிற்பதெந்தநாளோபராபரமே. (௩௧௧)

காட்டத்திலங்கிகடையவந்தாலென்னவுன்னும்
நாட்டத்தினூடுவந்தநட்பேபராபரமே. (௩௧௨)

நித்திரையாய்த்தானேநினைவயர்ந்தானித்தநித்தம்
செத்துபிழைப்பானதெங்கள்செய்கைபராபரமே. ()

இன்பநிட்டையெய்தாமல்யாதெனினுஞ்சென்றுமனம்
துன்புறுதல்வன்பிறவித்துக்கம்பராபரமே. (௩௧௪)

பொய்யகலமெய்யானபோதநிலைகண்டோர்க்கோ
ரையமிலையையமிலையையாபராபரமே. (௩க௫)

மந்திரத்தையுன்னிமயங்காதெனக்கினியோர்
தந்திரத்தைவைக்கத்தகாதோபராபரமே. (௩கசு)

விண்கருணைபூத்ததென்னமேவியுயிர்க்குயிராய்த்
தண்கருணைதோன்றவருடாய்நீபராபரமே. (௩கஎ)

தன்மயமாய்நின்றநிலைதானேதானாகிநின்று
ன்மயமாயெல்லாநிகழும்பராபரமே. (௩கஅ)

ஏங்கியிடையுநெஞ்சவேழையைநீவாவென்றே
பாங்குபெறச்செய்வதுன்மேற்பாரம்பராபரமே. ()

ஆண்டநின்னைநீங்காவடிமைகள்யாமாணவத்தைப்
பூண்டதென்னகன்மம்புகலாய்பராபரமே. (௩உ0)

எங்கணுநீயென்றாலிருந்தபடியெய்தாம
லங்குமிங்குமென்றலையலாமோபராபரமே. (௩உக)

கற்குமதுவுண்டுகளித்ததல்லாநின்னருளி
னிற்குமதுதந்ததுண்டோநீதான்பராபரமே. (௩உஉ)

அண்டபகிரண்டமறியாதநின்வடிவைக்
கண்டவரைக்கண்டாற்கதியாம்பராபரமே. (௩உ௩)

கலக்கமுறநெஞ்சைக்கலக்கித்திரும்பத்
துலக்குபவனியலேபோசொல்லாய்பராபரமே. (௩உச)

சிந்தையுமென்போலச்செயலற்றடங்கிவிட்டால்
வந்ததெலாநின்செயலாவாழ்வேன்பராபரமே. (௩உ௫)

பந்தமெலாந்தீரப்பரஞ்சோதிநீகுருவாய்
வந்தவடிவைமறவேன்பராபரமே. (௩௨௬)

தானந்தமானசகசநிருவிகற்ப
வானந்தநிட்டையருளையாபராபரமே. (௩௨௭)

அல்லலெல்லாந்தீரவெனக்கானந்தமாகவொருபரமே.
சொல்லையென்பால்வைத்ததையென் சொல்வேன்பரா

சிந்தைமயக்கமறச்சின்மயமாய்நின்றவுன்னைத்
தந்தவுனக்கென்னையுநான்றந்தேன்பராபரமே. (௩௨௯)

மைகாட்டுமாயைமயக்கமறநீகுருவாய்க்
கைகாட்டவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩0)

மால்வைத்தசிந்தைமயக்கறவென்சென்னிமிசைக்
கால்வைக்கவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩௧)

மண்ணுணமாயையெல்லாமாண்டுவெளியாகவிரு
கண்ணுரவுங்கனவுகண்டேன்பராபரமே. (௩௩௨)

மண்ணீர்மையாலேமயங்காதுன்கையாலென்
கண்ணீர்துடைக்கவுநான்கண்டேன்பராபரமே (௩௩௩)

உள்ளதுணராவுணர்விலிமாபாவியென்றோ
மெள்ளமெள்ளக்கைநெகிழவிட்டாய்பராபரமே. ()

எல்லாநினதுசெயலென்றெண்ணுமெண்ணமுநீ
அல்லாலெனக்குளதோவையாபராபரமே. (௩௩௫)

பந்தமயக்கிருக்கப்பற்றொழிந்தேனென்றாளாறு
மிந்தமயக்கமெனக்கேன்பராபரமே. (௩௩௬)

காட்சியெல்லாங்கண்ணைவிடக் கண்டதுண்டோயா
தினுக்கு; மாட்சியுளதருளேயன்றோபராபரமே. ( )

எட்டுத்திசையுமொன்றாயின்பமாய்நின்றவுன்னை
விட்டுப்பிரியவிடம்வேறோபராபரமே. (௩௩௮)

பிரியாதுயிர்க்குயிராய்ப்பின்னமறவோங்குஞ்
செறிவெய்திவேசிவமேபராபரமே. (௩௩௯)

ஏதேதுசொன்னாலுமெள்ளளவுநீயிரங்காச்
சூதேதெனக்குளவுசொல்லாய்பராபரமே. (௩௪௦)

கற்பனையாப்பாடுகின்றேன் கண்ணீருங் கம்பலையும்
சொற்பனத்துங்காணேனென்சொல்வேன்பராபரமே.

வன்பொன்றுநீங்காமனதிறப்பமாறும்பேர்
அன்பொன்றும்போதுமெனக்கையாபராபரமே. ( )

ஏதுந்தெரியாவெளியேனைவாவெனநின்
போதநிலைகாட்டிற்பொறாதோபராபரமே. (௩௪௩)

ஓராமலெல்லாமொழிந்தேற்குன்றெய்வவரு
டாராதிருக்கத்தகுமோபராபரமே. (௩௪௪)

மோனந்தருஞானமூட்டியெனக்குவட்டா
வானந்தவாழ்க்கையருளாய்பராபரமே. (௩௪௫)

வாடுமுகங்கண்டென்னைவாடாமலேகாத்த
நீடுங்கருணைநிறைவேபராபரமே. (௩௪௬)

புந்தியினின்னடியைப்போற்றுகின்றமெய்யடியார்
சிந்தையிறப்போநின்றியானம்பராபரமே. (௩௪௭)

உனக்குவமையாக்கருணையுள்ளவரும்வன்மைக்
கெனக்குவமையானவருமில்லைபராபரமே. (௩௪௮)

தாயிருந்தும்பிள்ளைதளர்ந்தாற்போலெவ்விடத்து
நீயிருந்துநான்றளர்ந்துநின்றேன்பராபரமே. (௩௪௯)

வாயாற்கிணறுகெட்டவாறேபோல்வாய்பேசிப்
பேயானார்க்கின்பமுண்டோபேசாய்பராபரமே.(௩௫௦)

பாவமென்றாலேதும்பயமின்றிச்செய்யவிந்தச்
சீவனுக்கார்போதந்தெரித்தார்பராபரமே. (௩௫௧)

இன்பநிருவிகற்பமின்றேதாவன்றெனிலோ
துன்பம்பொறுப்பரிதுசொன்னேன்பராபரமே. ()

கற்குநிலைகற்றாற்கருவியவிழாதருளாய்
நிற்குநிலைகற்பதுவேநீதம்பராபரமே. (௩௫௩)

காச்சச்சுடர்விடும்பொற்கட்டிபோனின்மலமாய்ப்
பேச்சற்றவரோபிறவார்பராபரமே. (௩௫௪)

பற்றொழிந்துசிந்தைப்பதைப்பொழிந்துதானேதா
னற்றிருப்பதென்றைக்கமைப்பாய்பராபரமே (௩௫௫)

உருவெளிதான்வாதவூருத்தமர்க்கல்லாலினமுங்
குருவழிநின்றார்க்குமுண்டோகூறாய்பராபரமே. ()

தேகமியாதேனுமொருசித்திபெறச்சீவன்முத்தி
யாகுநெறிநல்லநெறியையாபராபரமே. (௩௫௭)

உலகநெறிபோற்சடலமோயவுயிர்முத்தி
யிலகுமெனல்பந்தவியல்போபராபரமே. (௩௫௮)

பரமாப்பரவெளியாய்ப்பார்ப்பதல்லான்மற்றெவர்க்குந்
திரமேதுமில்லைநன்றாத்தேர்ந்தேன் பராபரமே. (நடுகூ)

தேடுவேனின்னருளைத்தேடுமுன்னேயெய்தினட
மாடுவேனானந்தமாவேன்பராபரமே. (நசா0)

உள்ளங்குழையவுடல்குழையவுள்ளிருந்த
கள்ளங்குழையவென்றுகாண்பேன் பராபரமே.(நசாக)

பட்டப்பகற்போலப்பாழ்த்தசிந்தைமாளினெல்லாம்
வெட்டவெளியாகவிளங்கும்பராபரமே. (நகூஉ)

பார்க்கினனுப்போற்கிடந்தபாழ்ஞ்சிந்தைமாளினெ
ன்னை, யார்க்குச்சரியிடலாமையாபராபரமே. (நசாந)

பாட்டுக்கோவன்பினுக்கோபத்திக்கோவன்பர்தங்க
ணீட்டுக்கெல்லாங்குறுகின்றாய்பராபரமே. (நசாச)

மூத்தாந்தவித்தேமூலைக்குநிலமாயெழுந்த
சித்தாந்தமார்க்கச்சிறப்பேபராபரமே. (நசாரு)

உன்றாவெளியாயுறங்காதபேருணர்வா
யென்னாவிக்குள்ளேயிருந்தாய்பராபரமே. (நசாசா)

தத்துவமெல்லாமகன்றதன்மையர்க்குச்சின்மயமா
நித்தமுத்தசுத்தநிறைவேபராபரமே. (நசாஎ)

உள்ளக்கொதிப்பகலவுள்ளேயானந்த
வெள்ளமலர்கருணைவேண்டும்பராபரமே. (நசாஅ)

என்னைப்புரப்பதருளின்கடனென்கடனு
நின்னிற்பணியரவேநிற்கைபராபரமே. (நசாகூ)

தானேயாநன்னிலையைத்தந்தவருளானந்த
வானேமறுதீதவாழ்வேபராபரமே. (௩௭0)

மண்ணாதிபூதமெல்லாம்வைத்திருந்தநின்னிறைவைக்
கண்ணாரக்கண்டுகளித்தேன்பராபரமே. (௩௭௧)

அறியாமையீதென்றறிவித்தவன்றேதான்
பிரியாவருணிலையும்பெற்றேன்பராபரமே. (௩௭௨)

தீதெனவுநன்றெனவுந்தேர்ந்துநான்றேர்ந்தபடி
யேநடக்கவொட்டாதென்னேபராபரமே. (௩௭௩)

கண்டவறிவகண்டாகாரமெனமெய்யறிவிற்
கொண்டவர்க்கேமுத்திகொடுப்பாய்பராபரமே. (௩௭௪)

ஈருகவல்வினைநானென்னுமலின்பசுகம்
பேரும்படிக்கடிமைபெற்றேன்பராபரமே. (௩௭௫)

பெற்றாரனுபூதிபேசாதமோனநிலை
கற்றாருனைப்பிரியார்கண்டாய்பராபரமே. (௩௭௬)

நீயேநானென்றுநினைப்புமறப்புமறத்
தாயேயனையவருடந்தாய்பராபரமே. (௩௭௭)

சஞ்சலமற்றெல்லாநீதானென்றுணர்ந்தேனென்
னஞ்சலியுங்கொள்ளாயரசேபராபரமே. (௩௭௮)

பூதமுதனாதவரைபொய்யென்றமெய்யரெல்லாங்
காதலித்தவின்பக்கடலேபராபரமே. (௩௭௯)

வாக்குமனமொன்றுபட்ட வார்த்தையல்லால்வெவ்வேறாய்ப், போக்குடையவார்த்தை பொருந்தேன்பராபரமே. (௩௮0)

வன்மையின்றியெல்லா மதித்துணர்வாய்க்காகெடுவே
ன், றன்மையொன்றுந்தோயாத்தடையோபராபரமே.

பத்தர்சித்தர்வாழிபரிபக்குவர்கள்வாழிசெங்கோல்
வைத்தவர்கள்வாழிகுருவாழிபராபரமே. (௩அ௨)

கல்லாதேனுனுலுங்கற்றுணர்ந்தமெய்யடியார்
சொல்லாலேநின்னைத்தொடர்ந்தேன்பராமரமே. ()

சொல்லிறப்பச்சற்குருவாய்த் தோன்றிச்சுகங்கொடுத்
து, நல்லுரைக்கேகொத்தடிமைநான்காண்பராபரமே.()

முத்திக்குவித்தானமோனக்கரும்புவழி
தித்தித்திடவிளைந்ததேனேபராபரமே. (௩அ௫)

நித்திரையும்பாழ்த்தநினைவுமற்றுநிற்பதுவோ
சுத்தவருணிலைநீசொல்லாய்பராபரமே. (௩அ௬)

மண்ணுமறிகடலுமற்றுளவுமெல்லாமுன்
கண்ணிலிருக்கவுநான்கண்டேன்பராபரமே. (௩அ௭)

பூட்டிவைத்துவஞ்சப்பொறிவழியேயென்றனைநீ
யாட்டுகின்றதேதோவறியேன்பராபரமே. (௩அஅ)

பொய்யுணர்வாயிந்தப்புழுக்கூட்டைக்காத்திருந்தே
யுய்யும்வகையுமுளதோபராபரமே. (௩அ௯)

பைங்கிளிக்கண்ணி.

அந்தமுடனாதியளவாமலென்னறிவிற்
சுந்தரவான்சோதிதுலங்குமோபைங்கிளியே. (க)

அகமேவுமண்ணலுக்கென்னல்லலெல்லாஞ்சொல்லிச்
சுகமானநீபோய்ச்சுகங்கொடுவாபைங்கிளியே. (உ)

ஆவிக்குளாவியெனுமற்புதனார்சிற்சுகந்தான்
பாவிக்குங்கிட்டுமோசொல்லாய்நீபைங்கிளியே. (௩)

ஆருமறியாமலெனையந்தரங்கமாகவந்து
சேரும்படியிறைக்குச்செப்பிவாபைங்கிளியே. (௪)

ஆறான கண்ணீர்க்கென்னங்குபங்கமானதையுங்
கூறுதலென்றேதுதலைமொழிப்பைங்கிளியே. (௫)

இன்பருளவாடையழுக்கேறுமெமக்கண்ணல்சுத்த
வம்பரமாமாடையளிப்பானோபைங்கிளியே. (௬)

உன்றுமலொன்றிரண்டென்றோராமல்வீட்டுநெறி
சொன்னான்வரவும்வகைசொல்லாய்நீபைங்கிளியே.(௭)

ஊருமிலார்பேருமிலாருற்றூர்பெற்றூருடனே
யாருமிலாரென்னையறிவாரோபைங்கிளியே. (௮)

ஊனைப்பாராமலெனக்குள்ளகத்துநாயகனார்
சீனைப்பார்த்தாற்கருணைசெய்வாரோபைங்கிளியே. (௯)

என்றுவிடியுமிறைவாவோவென்றன்று
நின்றநிலையெல்லாநிகழ்த்தாய்நீபைங்கிளியே. (௧௦)

எந்தமடலூடுமெழுதாவிறைவடிவைச்
சிந்தைமடலாவெழுதிச்சேர்ப்பேனோபைங்கிளியே. ()

கண்ணுண்மணிபோலின்பங்காட்டியெனைப்பிரிந்த
திண்ணியருமின்னம்வந்துசேர்வாரோபைங்கிளியே. ()

ஏடார்மலர்சூடேனெம்பெருமான்பொன்னடியாம்
வாடாமலர்முடிக்குவாய்க்குமோபைங்கிளியே. (௧௫)

கல்லேன்மலனோன்கனிந்தவன்பேபூசையென்ற
நல்லோர்பொல்லாவெனையுநாடுவரோபைங்கிளியே. ( )

கண்டதனைக்கண்டுகலக்கந்தவிரனவே
விண்டபெருமானையுநான்மேவுவனோபைங்கிளியே. ( )

காணாதகாட்சிகருத்துவந்துகாணாமல்
வீணாள்கழித்துமெலிவேனோபைங்கிளியே. (௧௬)

காந்தமிரும்பைக்கவர்ந்திழுத்தாலென்னவருள்
வேந்தனெமையிழுத்துமேவுவனோபைங்கிளியே. (௧௭)

காதலால்வாடினனுங்கண்டனையேயெம்மிறைவர்
போதரவாயின்பம்புசிப்பேனோபைங்கிளியே. (௧௮)

கிட்டிக்கொண்டன்பருண்மைகேளாப்பலவடிகொள்
பட்டிக்குமின்பமுண்டோசொல்லாய்நீபைங்கிளியே.)

கிட்டேராய்நெஞ்சிற்கிளவார்தழுவவென்று
னெட்டேராவரவர்நேசமென்னோபைங்கிளியே. (௨௦)

கூறுங்குணமுமில்லாக்கொள்கையினனொன்கவலை
யாறும்படிக்குமணைவாரோபைங்கிளியே. (௨௧)

சின்னஞ்சிறியேன்றன்சிந்தைகவர்ந்தாரிறைவர்
தன்னந்தனியேதவிப்பேனோபைங்கிளியே. (௨௨)

சிந்தைமருளைத்தெளிவித்தெனையாள
வந்தகுருநாதனருள்வாய்க்குமோபைங்கிளியே. (௨௩)

சொல்லிறந்துநின்றசுகரூபப்பெம்மானை
யல்லும்பகலுமணைவேனோபைங்கிளியே. (உச)

தற்போதத்தாலேதலைகீழதாகவைய
னற்போதவின்புவரநாட்செலுமோபைங்கிளியே. (உரு)

தன்னையறியுந்தருணந்தனிற்றலைவ [யே.
ரென்னையணையாதவண்ண மெங்கொளித்தார்பைங்கிளி

தாங்கரியமையலெல்லாந் தந்தெனைவிட்டின்னருளா
ம், பாங்கியைச்சேர்ந்தாரிறைக்குப்பண்போசொல்பை
ங்கிளியே. (உஎ)

தாவியதோர்மர்க்கடமாந்தன்மைவிட்டேயண்ணலிடத்
தோவியம்போனிற்கினெனையுள்குவரோ பைங்கிளியே.

தீராக்கருவழக்கைத்தீர்வையிட்டங்கென்னையினிப்
பாரோருதாண்டானைப்பற்றுவனோபைங்கிளியே. (உக)

தூங்கிவிழித்தென்னபலன்றூங்காமற்றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே.

தொல்லைக்கவலைதொலைத்துத்தொலையாத
வெல்லையிலாவின்பமயமெய்துவனோபைங்கிளியே. ()

நன்னெஞ்சத்தன்பரொல்லாநாதரைச்சேர்ந்தின்பணை
ந்தார், வன்னெஞ்சத்தாலேநான்வாழ்விழந்தேன்பைங்
கிளியே. (௩உ)

நானேகருதின்வரநாடார்சும்மாவிருந்தாற்
றானேயணைவரவர்தன்மையென்னோபைங்கிளியே. ()

நீர்க்குமிழிபோன்றவுடனிற்கையிலேசாசுவதஞ்
சேர்க்கவறியாமற்றிகைப்பேனோபைங்கிளியே. (௫௪)

நெஞ்சகத்தில்வாழ்வார்நினைக்கின்வேறென்றனையார்
வஞ்சகத்தாரல்லரவர்மார்க்கமென்னோபைங்கிளியே. ()

பன்முத்திரைச்சமயம்பாழ்படச்சல்லாலடிவாழ்
சின்முத்திரையரசைச்சேர்வேனோபைங்கிளியே. (௫௬)

பச்சைகண்டநாட்டிற்பறக்குமுனைப்போற்பறந்தே
னிச்சையெல்லாமண்ணற்கியம்பிவாபைங்கிளியே. ()

பாசபந்தஞ்செய்ததுன்பம்பாராமலெம்மிறைவ
ராசைதந்ததுன்பமதற்காற்றேனென்பைங்கிளியே. ()

பாராசையற்றிறையைப்பற்றறநான்பற்றிநின்ற
பூராயமெல்லாம்புகன்றுவாபைங்கிளியே. (௫௯)

பேதைப்பருவத்தேபின்றொடர்ந்தென்பக்குவமுஞ்
சோதித்தவண்ணல்வந்துதோய்வாரோபைங்கிளியே. ()

பைம்பயிரைநாடுமுன்போற்பார்பூத்தபைங்கொடிசேர்
செம்பயிரைநாடித்திகைத்தேனென்பைங்கிளியே. (௬௧)

பொய்க்கூடுகொண்டுபுலம்புவனோவெம்மிறைவர்
மெய்க்கூடுசென்றுவிளம்பிவாபைங்கிளியே. (௬௨)

பொய்ப்பணிவேண்டேனைப்பொருட்படுத்தியண்ணலென்பான், மெய்ப்பணியுந்தந்தொருகான்மேவுவனோபைங்கிளியே. (௬௩)

மண்ணுறங்கும்விண்ணுறங்கு மற்றுளவெலாமுறங்குங்
கண்ணுறங்கேனெம்மிறைவர்காதலாற்பைங்கிளியே. ()

மட்டுப்படாதமயக்கமெல்லாந்திரவென்னை [யே.
வெட்டவெளிவீட்டி லண்ணன்மேவுவனோ பைங்கிளி

மாலைவளர்த்தென்னைவளர்த்திறைவர்பன்னெறியாம்
பாலைவனத்தில்விட்டபாவமென்னோபைங்கிளியே. ()

மெய்யினோய்மாற்றவுழ்தமெத்தவுண்டெம்மண்ணறந்த
மையனோய்தீர்க்கமருந்துமுண்டோபைங்கிளியே. ()

மேவுபஞ்சவண்ணமுற்றாய்வீண்சிறையாலல்லலுற்றாய்
பாவிபஞ்சவண்ணம்பகர்ந்துவாபைங்கிளியே. (சஅ)

வாய்திறவாவண்ணமெனைவைத்தாண்டார்க்கென்று
யனை, நீதிறவாச்சொல்லினிசமாங்காண்பைங்கிளியே.

வாட்டப்படாதமவுனவின்பங்கையாலே
காட்டிக்கொடுத்தானைக்காண்பேனோபைங்கிளியே. ()

வாராவரவாகவந்தருளுமோனருக்கென்
பேராசையெல்லாம்போய்ப்பேசிவாபைங்கிளியே. ()

விண்ணவர்தம்பாலமுதம் வேப்பங்காயாகவென்பா
ற், பண்ணியதெம்மண்ணன்மயல் பார்த்தாயோபைங்
கிளியே. (ருஉ)

விண்ணுள்வளிபடங்கிவேறற்றதென்னவருட்
கண்ணுளடங்கிடவுங்காண்பேனோபைங்கிளியே.(ருங)

விண்ணார்நிலவுதவழ்மேடையிலெல்லாருமுற [யே.
மண்ணானவீட்டிலென்னை வைத்ததென்னோ பைங்கிளி

உள்ளத்தினுள்ளேயொளித்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளலறிந்தாலெனக்குவாயுமுண்டோ பைங்கிளியே.

ஆகத்தைநீக்குமுன்னேயாவித்துணைவனாநான்
றாகத்தின்வண்ணந்தழுவுவனோ பைங்கிளியே. (௫௬)

தானேசுபாவந்தலைப்படநின்றான்ஞான
வாணனவரும்வருவாரோ பைங்கிளியே. (௫௭)

கள்ளத்தலைவரவர்கைகாட்டிப்பேசாம
லுள்ளத்தில்வந்தவுபாயமென்னோ பைங்கிளியோ. (௫௮)

எந்நாட்கண்ணி.

தெய்வவணக்கம்.

நீர்பூத்தவேணிநிலவெறிப்பமன்றாடுங்
கார்பூத்தகண்டனையான்காணுநாளெந்நாளோ. (௧)

பொன்னாருமன்றுண்மணிப்பூவைவிழிவண்டுசுற்று
மென்னாரமுதினலமிச்சிப்பதெந்நாளோ. (௨)

நீக்கிமலக்கட்டறுத்துநேரேவெளியிலெம்மைத்
தாக்கிவைக்குந்தாளைத்தொழுதிடுநாளெந்நாளோ. (௩)

கருமுகங்காட்டாமலென்றுங்கர்ப்பூரம்வீசுந்
திருமுகமேநோக்கித்திருக்கறுப்பதெந்நாளோ. (௪)

வெஞ்சேலெனும்விழியார்வேட்கைநஞ்சுக்கஞ்சினனா
யஞ்சேலெனுங்கைக்கபயமென்பதெந்நாளோ. (௫)

ஆறுசமயத்துமதுவதுவாய்நின்றிலங்கும்
வீறுபரைதிருத்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

பச்சைநிறமாய்ச்சிவந்தபாகங்கலந்துலகை
யிச்சையுடனீன்றாளையாங்காண்பதெந்நாளோ. (௭)

ஆதியந்தங்காட்டாதகண்டிதமாய்நின்றுணர்த்தும்
போதவடிவானடியைப்போற்றுநாளெந்நாளோ. (௮)

கங்கைநிலவுசடைக்காட்டானைத்தந்தையெனும்
புங்கவெண்கோட்டானைபதம்புந்திவைப்பதெந்நாளோ

அஞ்சுமுகங்காட்டாமலாறுமுகங்காட்டவந்த
செஞ்சரணச்சேவடியைச் சிந்தைவைப்பதெந்நாளோ.

தந்தையிருதாடணித்துத்தம்பிரான்றாள்சேர்ந்த
வெந்தையிருதாளிணைக்கேயின்புறுவதெந்நாளோ. (௧௧)

குருமரபின்வணக்கம்.

துய்யகரமலராற்சொல்லாமற்சொன்னவுண்மை
யையனைக்கல்லாலரசையாமணைவதெந்நாளோ. (௧)

சிந்தையினுக்கெட்டாதசிற்சுகத்தைக்காட்டவல்ல
நந்தியடிக்கீழ்க்குடியாய்நாமணைவதெந்நாளோ. (௨)

ஏந்தைசனற்குமரனாதியெமையாட்கொள்வான்
வந்ததவத்தினரைவாழ்த்துநாளெந்நாளோ. (௩)

பொய்கண்டார்காணாப்புனிதமெனுமத்துவித
மெய்கண்டநாதனருண்மேவுநாளெந்நாளோ. (௪)

பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ.( )

சிற்றம்பலமன்னுஞ்சின்மயராந்தில்லைநகர்க்
கொற்றங்குடிமுதலைக்கூறுநாளெந்நாளோ. (௬)

குறைவிலருண்ஞானமுதல்கொற்றங்குடியடிக
ணறைமலர்த்தாட்கன்புபெற்று நாமிருப்பதெந்நாளோ.

நாளவங்கள்போகாமனன்னெறியைக்காட்டியெமை
யாளவந்தகோலங்கட்கன்புவைப்பதெந்நாளோ. (௮)

என்னறிவையுள்ளடக்கியென்போல்வருமவுனி
தன்னறிவுக்குள்ளேநான்சாருநாளெந்நாளோ. (௯)

ஆறுமொன்றைநாடினதற் காறுமுண்டாமென்றெமக்கு
க், கூறுமவுனியருள்கூடுநாளெந்நாளோ. (௧௦)

நில்லாமனின்றருளைநேரேபாரென்றவொரு
சொல்லான்மவுனியருடோற்றுநாளெந்நாளோ. (௧௧)

வைதிகமாஞ்சைவமவுனிமவுனத்தளித்த
மெய்திகழ்ந்தென்னல்லல்விடியுநாளெந்நாளோ. (௧௨)

வாக்குமனமற்றமவுனிமவுனத்தருளே
தாக்கவுமென்னல்லலெல்லாந் தட்டழிவதெந்நாளோ.

அடியார்வணக்கம்.

வெம்பந்தந்தீர்த்துலகாள்வேந்தன்றிருஞான
சம்பந்தனையருளாற்சாருநாளெந்நாளோ. (௧)

ஏரின்சிவபோகமிங்கிவர்க்கேயென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ.

பித்தரிறையென்றறிந்துபேதைபாற்றூதனுப்பு
வித்ததமிழ்ச்சமர்த்தர்மெய்புகழ்வதெந்நாளோ. (௩)

போதவூர்நாடறியப்புத்தர்தமைவாதில்வென்ற
வாதவூரையனன்பைவாஞ்சிப்பதெந்நாளோ. (௪)

ஓட்டுடன்பற்றின்றியுலகைத்துறந்தசெல்வப்
பட்டினத்தார்பத்ரகிரிபண்புணர்வதெந்நாளோ. (௫)

கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே
விண்டசிவவாக்கியர்தாண்மேவுநாளெந்நாளோ. (௬)

சக்கரவர்த்திதவராசயோகியெனு
மிக்கதிருமூலனருண்மேவுநாளெந்நாளோ. (௭)

கந்தரனுபூதிபெற்றுக்கந்தரனுபூதிசொன்ன
வெந்தையருணடியிருக்குநாளெந்நாளோ. (௮)

எண்ணரியசித்தரிமையோர்முதலான
பண்ணவர்கள்பத்தருள்பாலிப்பதெந்நாளோ. (௯)

யாக்கையைப்பழித்தல்.

சுக்கிலமுநீருஞ்சொரிமலமுநாறுமுடற்
புக்குழலும்வாஞ்சையினிப் போதுமென்பதெந்நாளோ.

நீர்க்குமிழிபூணமைத்துநின்றுனுநில்லாமெய்
பார்க்குமிடத்திதன்மேற்பற்றறுவதெந்நாளோ. (௨)

காக்கைநரிசெந்நாய்கழுகொருநாள்கூடியுண்டு
தேக்குவிருந்தாமுடலைச்சீயென்பதெந்நாளோ. (௩)

செங்கிருமியாதிசெனித்தசென்மபூமியினை
யிங்கெனுடலென்னுமிழுக்கொழிவதெந்நாளோ. (௪)

தத்துவர்தொண்ணூற்றறுவர் தாமாய்வாழிந்நாட்டைப்
பித்தநானென்னும்பிதற்றொழிவதெந்நாளோ. (௫)

ஊறொன்றிநாதனுணர்த்துமதைவிட்டறிவே
றுனென்றபாவிதலைநாணுநாளெந்நாளோ. (௬)

வேலையிலர்வேதன்விதித்தவிந்த்ரசாலவுடன்
மாலைவியாபாரமயக்கொழிவதெந்நாளோ. (௭)

ஆழ்ந்துநினைக்கினரோசிகமாமிவ்வுடலில்
வாழ்ந்துபெறும்பேற்றைமதிக்குநாளெந்நாளோ. (௮)

மும்மலச்சேறுனமுழுக்கும்பியாகமெனு
மிம்மலகாயத்துளிகழ்ச்சிவைப்பதெந்நாளோ. (௯)

நாற்றமிகக்காட்டுநவவாயில்பெற்றபசுஞ்
சோற்றுத்துருத்திசுமையென்பதெந்நாளோ. (௰)

உருவிருப்பவுள்ளேதானூறுமலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுநாளெந்நாளோ.

மாதரைப்பழித்தல்.

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப்
பொய்வீசும்வாயார்புலையொழிவதெந்நாளோ. (௧)

திண்ணியநெஞ்சப்பறவைசிக்கக்குழற்காட்டிற்
கண்ணிவைப்போர்மாயங்கடக்குநாளெந்நாளோ. (௨)

கண்டுமொழிபேசிமனங்கண்டுகொண்டுகைவிலையாக்
கொண்டுவிடுமானார்பொய்க் கூத்தொழிவதெந்நாளோ.

காமனைவாவென்றிருண்டகண்வலையைவீசுமின்னார்
நாமமறந்தருளைநண்ணுநாளெந்நாளோ. (௪)

கண்களில்வெண்பூளைகரப்பக்கருமையிட்ட
பெண்கண்மயறப்பிப்பிழைக்குநாளெந்நாளோ. (௫)

வீங்கித்தளர்ந்துவிழுமுலையார்மேல்வீழ்ந்து
தூங்குமதன்சோம்பைத்துடைக்குநாளெந்நாளோ. (௬)

கச்சிருக்குங்கொங்கைகரும்பிருக்குமின்மாற்றம்
வைச்சிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ. (௭)

பச்சென்றகொங்கைப்பசப்பியர்பாழானமய
னச்சென்றறிந்தருளைநண்ணுநாளெந்நாளோ. (௮)

உந்திச்சுழியாலுளத்தைச்சுழித்தகன
தந்தித்தனத்தார்தமைமறப்பதெந்நாளோ. (௯)

தட்டுவைத்தசேலைகொய்சகத்திற்சிந்தையெல்லாங்
கட்டிவைக்குமாயமின்னார்கட்டழிவதெந்நாளோ. (௧௦)

ஆழாழியென்னவளவுபடாவஞ்சநெஞ்சப்
பாழானமாதர்மயற்பற்றொழிவதெந்நாளோ. (கக)

தூயபனித்திங்கள்சுடுவதெனப்பித்தேற்று
மாயமடவார்மயக்கொழிவதெந்நாளோ. (கஉ)

ஏழைக்குறும்புசெயுமேந்திழையார்மோகமெனும்
பாழைக்கடந்துபயிராவதெந்நாளோ. (கங)

விண்டுமொழிகுளறிவேட்கைமதுமொண்டுதருந்
தொண்டியர்கள்கட்கடையிற்சுற்றொழிவதெந்நாளோ.

மெய்யிற்சிலம்பிறக்கமேவுமின்பம்போன்மாதர்
பொய்யிலின்பின்றென்றுபொருந்தாநாளெந்நாளோ.()

தத்துவமுறைமை.

ஐம்பூதத்தாலேயலக்கழிந்ததோஷமற
வெம்பூதநாதனருளெய்துநாளெந்நாளோ. (க)

சத்தமுதலாம்புலனிற்சஞ்சரித்தகள்வரெனும்
பித்தர்பயந்தீர்ந்துபிழைக்குநாளெந்நாளோ. (உ)

நாலும்பொறிவழியைநாடாதவண்ணமெமை
யாளும்பெரியாலருள்வருவதெந்நாளோ. (ங)

வாக்காதியானகன்மமாயைதம்பால்வீண்காலம்
போக்காமலுண்மைபொருந்துநாளெந்நாளோ. (ச)

மனமானவானரக்கைம்மாலையாகாம
லெனையாளடிகளடியெய்துநாளெந்நாளோ. (ரு)

வேட்டைப்புலப்புலையர்மேவாதவண்ணமனக்
காட்டைத்திருத்திக்களைகாண்பதெந்நாளோ. (௬)

உந்துபிறப்பிறப்பையுற்றுவிடாதெந்தையருள்
வந்துபிறக்கமனமிறப்பதெந்நாளோ. (௭)

புத்தியெனுந்துத்திப்பொறியரவின்வாய்த்தேரை
யொத்துவிடாதெந்தையருளோங்குநாளெந்நாளோ. ()

ஆங்காரமென்னுமதயானைவாயிற்கரும்பா
யேங்காமலெந்தையருளெய்துநாளெந்நாளோ. (௯)

சித்தமெனும்பௌவத்திரைக்கடலில்வாழ்துரும்பாய்
நித்தமலையாதருளினிற்குநாளெந்நாளோ. (௧௦)

வித்தியாதத்துவங்களேழும்வெருண்டோடச்
சுத்தபரபோகத்தைத்துய்க்குநாளெந்நாளோ. (௧௧)

சுத்தவித்தையேமுதலாத் தோன்றுமோரைந்துவகைத்
தத்துவத்தைநீங்கியருள்சாருநாளெந்நாளோ. (௧௨)

பொல்லாதகாமப்புலைத்தொழிலிலென்னறிவு
செல்லாமனன்னெறியிற்சேருநாளெந்நாளோ. (௧௩)

அடிகளடிக்கீழ்க்குடியாயாம்வாழாவண்ணங்
குடிகெடுக்கும்பாழ்மடிமைக்கூறொழிவதெந்நாளோ. ()

ஆனபுறக்கருவியாறுபத்துமற்றுளவும்
போனவழியுங்கூடப்புன்முளைப்பதெந்நாளோ. (௧௫)

அந்தகனுக்கெங்குமிருளானவாறுவறிவில்
வந்தவிருள்வேலைவடியுநாளெந்நாளோ. (௧௬)

புன்மலத்தைச்சேர்ந்துமலபோதம்பொருந்துதல்போய்
நின்மலத்தைச்சேர்ந்துமலநீங்குநாளெந்நாளோ. (கஎ)

கண்டுகண்டுந்தேருக்கலக்கமெல்லாந்தீர்வண்ணம்
பண்டைவினைவேரைப்பறிக்குநாளெந்நாளோ. (கஅ)

பைங்கூழ்வினைதான்படுசாவியாகவெமக்
கெங்கோன்கிரணவெயிலெய்துநாளெந்நாளோ. (கக)

குறித்தவிதமாதியாற்கூடும்வினையெல்லாம்
வறுத்தவித்தாம்வண்ணமருள்வந்திடுநாளெந்நாளோ.( )

சஞ்சிதமேயாதிசரக்கானமுச்சேரும்
வெந்தபொறியாகவருண்மேவுநாளெந்நாளோ. (உக)

தேகமுதனுன்காத்திரண்டொன்ருய்நின்றிலகு
மோகமிகுமாயைமுடியுநாளெந்நாளோ. (உஉ)

சத்தமுதலாத்தழைத்திங்கெமக்குணர்த்துஞ்
சுத்தமாமாயைதொடக்கறுவதெந்நாளோ. (உந)

எம்மைவினையையிறையையெம்பாற்காட்டாத
வம்மைதிரோதையகலுநாளெந்நாளோ. (உச)

நித்திரையாய்வந்துநினைவழிக்குங்கேவலமாஞ்
சத்துருவைவெல்லுஞ்சமர்த்தறிவதெந்நாளோ. (உரு)

சன்னல்பின்னலானசகலமெனுங்குப்பையிடை
முன்னவன்ஞானக்கனலேமூட்டுநாளெந்நாளோ. (உசு)

மாயாவிகாரமலமொழிசுத்தாவத்தை
தோயாவருளைத்தொடருநாளெந்நாளோ. (உஎ)

தன்னுண்மை.

உடம்பறியுமென்னுமந்தவூழலெல்லாந்தீரத்
திடம்பெறவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (க)

செம்மையறிவாலறிந்துதேகாதிக்குள்ளிசைந்த
வெம்மைப்புலப்படவேயாமறிவதெந்நாளோ. (உ)

தத்துவமாம்பாழ்த்தசடவுருவைத்தான்சுமந்த
சித்துருவாமெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௩)

பஞ்சப்பொறியையுயிரென்னுமந்தப்பஞ்சமறச்
செஞ்செவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (௪)

அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க
சிந்தைக்கணத்திலெம்மைத்தேர்ந்தறிவதெந்நாளோ. ()

மூக்குணத்தைச்சீவனென்னுமூடத்தைவிட்டருளா
லக்கணமேயெம்மையறிந்துகொள்வதெந்நாளோ. (௬)

காலையுயிரென்னுங்கலாதிகள்சொற்கேளாமற்
சிலமுடனெம்மைத்தெளிந்துகொள்வதெந்நாளோ. (௭)

வான்கெடுத்துத்தேடுமதிகேடர்போலவெமை
நான்கெடுத்துத்தேடாமனன்கறிவதெந்நாளோ. (௮)

அருளியல்பு.

ஈனந்தருநாடிதுநமக்குவேண்டாமென்
றுனந்தநாட்டிலவதரிப்பதெந்நாளோ. (க)

பொய்க்காட்சியானபுவனத்தைவிட்டருளா
மெய்க்காட்சியாம்புவனமேவுநாளெந்நாளோ. (உ)

ஆதியந்தங்காட்டாமலம்பரம்போலேநிறைந்த
நீதிலருட்கடலைச்சேருநாளெந்நாளோ. (௩)

எட்டுத்திசைக்கீழ்மேலெங்கும்பெருகிவரும்
வெட்டவெளிவிண்ணூற்றின்மெய்தோய்வதெந்நாளோ.

சூதானமென்றுசுருதியெல்லாமோலமிடு
மீதானமானவெற்பைமேவுநாளெந்நாளோ. (௫)

வெந்துவெடிக்கின்றசிந்தைவெப்பகலத்தண்ணருளாய்
வந்துபொழிகின்றமழைகாண்பதெந்நாளோ. (௬)

சூரியர்கள்சந்திரர்கடோன்றாச்சொயஞ்சோதிப்
பூரணதேயத்திற்பொருந்துநாளெந்நாளோ. (௭)

கன்றுமனவெப்பக்கலக்கமெலாந்தீரவருட்
டென்றல்வந்துவீசுவெளிசேருநாளெந்நாளோ. (௮)

கட்டுநமன்செங்கோல்கடாவடிக்குங்கோலாக
வெட்டவெளிப்பொருளைமேவுநாளெந்நாளோ. (௯)

சாலக்கபாடத்தடைதீரவெம்பெருமா
னோலக்கமண்டபத்துளோடுநாளெந்நாளோ. (௧௦)

விண்ணவன்றானென்னும்விரிநிலாமண்டபத்தில்
தண்ணீரருந்தித்தளர்வொழிவதெந்நாளோ. (௧௧)

வெய்யபுலிபார்த்துவிழித்திருந்தவல்லலறத்
துய்யவருளிற்றுயிலுநாளெந்நாளோ. (௧௨)

வெய்யபிறவிவெயில்வெப்பமெலாம்விட்டகல
வையனடிநீழலணையுநாளெந்நாளோ. (௧௩)

வாதைப்பிறவிவினைகடலைநீந்தவையன்
பாதப்புணையிணையைப்பற்றுநாளெந்நாளோ. (கசு)

ஈனமில்லாமெய்ப்பொருளையிம்மையிலேகாணவெளி
ஞானமெனுமஞ்சனத்தைநான்பெறுவதெந்நாளோ. ()

எல்லாமிறந்தவிடத்தெந்தைநிறைவாம்வடிவைப்
புல்லாமற்புல்லிப்புணருநாளெந்நாளோ. (கரு)

சடத்துளுயிர்போலெமக்குத்தானுயிராய்ஞான
நடத்துமுறைகண்டுபணிநாம்விடுவதெந்நாளோ. (கஎ)

எக்கணுமாந்துன்பவிருட்கடலைவிட்டருளாம்
மிக்ககரையேறிவெளிப்படுவதெந்நாளோ. (கஅ)

பொருளியல்பு.

கைவிளக்கின்பின்னேபோய்க்காண்பார்போன்மெய்ஞ்ஞான், மெய்விளக்கின்பின்னேபோய்மெய்காண்பதெந்நாளோ. (க)

கேடில்பசுபாசமெல்லாங்கீழ்ப்படவுந்தானேமே
லாடுஞ்சுகப்பொருளுக்கன்புறுவதெந்நாளோ. (உ)

ஆணவத்தைநீக்கியறிவூடேயைவகையாக்
காணவத்தைக்கப்பாலைக்காணுநாளெந்நாளோ. (ங)

நீக்கப்பிரியாநினைக்கமறக்கக்கூடாப்
போக்குவரவற்றபொருளணைவதெந்நாளோ. (ச)

அண்டருக்குமெய்ப்பில்லைப்பாமாரமுதையென்னகத்திற்; கண்டுகொண்டுநின்றுகளிக்குநாளெந்நாளோ.

காட்டுந்திருவருளேகண்ணாகக்கண்டுபர
வீட்டின்பமெய்ப்பொருளைமேவுநாளெந்நாளோ. (௬)

நானானதன்மைநழுவியேயெவ்வுயிர்க்குந்
தானானவுண்மைதனைச்சாருநாளெந்நாளோ. (௭)

சிந்தைமறந்துதிருவருளாய்நிற்பவர்பால்
வந்தபொருளெம்மையுந்தான்வாழ்விப்பதெந்நாளோ. ()

எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்வியாபகமா
யுள்ளவொன்றையுள்ளபடியோருநாளெந்நாளோ. (௯)

அருவுருவமெல்லாமகன்றதுவாய்யான
பொருளெமக்குவந்துபுலப்படுவதெந்நாளோ. (௧௦)

ஆரணமுங்காணாவகண்டிதாகாரபரி
பூரணம்வந்தெம்மைப்பொருந்துநாளெந்நாளோ. (௧௧)

சத்தொடுசித்தாகித்தயங்கியவானந்தபரி
சுத்தவகண்டசிவந்தோன்றுநாளெந்நாளோ. (௧௨)

எங்கெங்கும்பார்த்தாலுமின்புருவாய்நீக்கமின்றித்
தங்குந்தனிப்பொருளைச்சாருநாளெந்நாளோ. (௧௩)

அடிமுடிகாட்டாதசுத்தவம்பரமாஞ்சோதிக்
கடுவெளிவந்தென்னைக்கலக்குநாளெந்நாளோ. (௧௪)

ஒன்றனையுங்காட்டாவுளத்திருளைச்சூறையிட்டு
நின்றபரஞ்சோதியுடனிற்குநாளெந்நாளோ. (௧௫)

எந்தச்சமயமிசைந்துமறிவூடறிவாய்
வந்தபொருளேபொருளாவாஞ்சிப்பதெந்நாளோ. (௧௬)

எவ்வாறிங்குற்றுணர்ந்தார்யாவரவர்தமக்கே
யவ்வாறாய்நின்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ. ()

பெண்ணுணலியெனவும்பேசாமலென்னறிவின்
கண்ணூடேநின்றவொன்றைக்காணுநாளெந்நாளோ. ( )

நினைப்புமறப்புமறநின்றபரஞ்சோதி
தனைப்புலமாவென்னறிவிற்சந்திப்பதெந்நாளோ. (கக)

ஆனந்தவியல்பு.

பேச்சுமூச்சில்லாதபேரின்பவெள்ளமுற்று
நீச்சுநிலைகாணுமனிற்குநாளெந்நாளோ. (க)

சித்தந்தெளிந்தோர்தெளிவிற்றெளிவான
சுத்தசுகக்கடலுட்டோயுநாளெந்நாளோ. (உ)

சிற்றின்பமுண்டுழ்சிதையவனந்தங்கடல்போன்
முற்றின்பவெள்ளமெமைமூடுநாளெந்நாளோ. (ங)

எல்லையில்பேரின்பமயமெப்படியென்றோர்தமக்குச்
சொல்லறியாவூமர்கள்போற்சொல்லுநாளெந்நாளோ.

அண்டரண்டகோடியனைத்துமுகாந்தவெள்ளங்
கொண்டதெனப்பேரின்பங்கூடுநாளெந்நாளோ. (ரு)

ஆதியந்தமில்லாதவாதியனாதியெனுஞ்
சோதியின்பத்தூடேதுளையுநாளெந்நாளோ. (சா)

சாலோகமாதிசவுக்கியமும்விட்டநம்பான்
மேலானஞானவின்பமேவுநாளெந்நாளோ. (எ)

தற்பரத்தினுள்ளேயுஞ்சாலோகமாதியெனும்
பொற்பறிந்தானந்தம்பொருந்துநாளெந்நாளோ. (அ)

உள்ளத்தினுள்ளேதானூறுஞ்சிவானந்த
வெள்ளந்துளைந்துவிடாய்தீர்வதெந்நாளோ. (கூ)

கன்னலுடன்முக்கனியுங்கற்கண்டுஞ்சீனியுமாய்
மன்னுமின்பவாரமுதைவாய்மடுப்பதெந்நாளோ. (க0)

மண்ணூடுமூன்றமயக்கமெல்லாந்தீர்ந்திடவும்
விண்ணூடெழுந்தசுகமேவுநாளெந்நாளோ. (கக)

கானற்சலம்போன்றகட்டுமூலப்பொய்தீர
வானமுதவாவிமருவுநாளெந்நாளோ. (கஉ)

தீங்கரும்பென்றாலினியாதின்றாலினிப்பனபோற்
பாங்குறும்பேரின்பம்படைக்குநாளெந்நாளோ. (கங)

புண்ணியபாவங்கள்பொருந்தாமெய்யன்பரொல்லா
நண்ணியபேரின்பசுகநாமணைவதெந்நாளோ. (கச)

அன்புநிலைமை.

தக்கரவிகண்டசரோருகம்போலென்னிதய
மிக்கவருள்கண்டுவிகசிப்பதெந்நாளோ. (க)

வானமுகில்கண்டமயூரபக்ஷிபோலவையன்
ஞானநடங்கண்டுநடிக்குநாளெந்நாளோ. (உ)

சந்திரனைநாடுஞ்சகோரபக்ஷிபோலறிவில்
வந்தபரஞ்சோதியையாம்வாஞ்சிப்பதெந்நாளோ. (ந)

சூத்திரமெய்ப்புற்றகத்துக் குண்டலிப்பாம்பொன்றா
ட்டுஞ், சித்தனையென் கண்ணுற்றுத்தெரிசிப்பதெந்நாளோ.

அந்தரத்தேநின்றுமானந்தக்கூத்தனுக்கென்
சிந்தைதிறைகொடுத்துச்சேவிப்பதெந்நாளோ. (௫)

கள்ளனிவனென்றுமெள்ளக்கைவிடுதல்காரியமோ
வள்ளலேயென்றுவருந்துநாளெந்நாளோ. (௬)

விண்ணாடர்காணாவிமலாபரஞ்சோதி
யண்ணாவாவாவென்றரற்றுநாளெந்நாளோ. (௭)

ஏதேதுசெய்தாலுமென்பணிபோய்நின்பணியா
மாதேவாவென்றுவருந்துநாளெந்நாளோ. (௮)

பண்டுங்காணேனுன்பழம்பொருளேயின்றுமுனைக்
கண்டுங்காணேனெனவுங்கைகுவிப்பதெந்நாளோ. (௯)

பொங்கேதமானபுழுக்கமெல்லாந்தீரவின்ப
மெங்கேயெங்கேயென்றிரங்குநாளெந்நாளோ. (௧௦)

கடலின்மடைகண்டதுபோற்கண்ணீராறாக
வுடல்வெதும்பிமூர்ச்சித்துருகுநாளெந்நாளோ. (௧௧)

புலர்ந்தேன்முகஞ்சருகாய்ப்போனேனிற்காணா
வலர்ந்தேனென்றேங்கியழுங்குநாளெந்நாளோ. (௧௨)

புண்ணீர்மையாளர்புலம்புமாபோற்புலம்பிக்
கண்ணீருங்கம்பலையுங்காட்டுநாளெந்நாளோ. (௧௩)

போற்றேனென்றாலுமென்னைப்புந்திசெய்யும்வேத
னைக்கின், காற்றேனாற்றேனென்றரற்றுநாளெந்நாளோ.

பொய்முடங்கும்பூமிசிலபோட்டலறப்பூங்கமலன்
கைமுடங்கநான்சனனக்கட்டறுவதெந்நாளோ. (௧௫)

கற்குணத்தைப்போன்றவஞ்சகக்காரர்கள்கைகோவாம
னற்குணத்தார்கைகோத்துநான்றிரிவதெந்நாளோ. ( )

துட்டனைமாமாயைச்சுழனீக்கியந்தரமே
விட்டனையோவென்றுவியக்குநாளெந்நாளோ. (௧௭)

அன்பர்நெறி.

அத்துவாவெல்லாமடங்கச்சோதித்தபடிச்
சித்துருவாய்நின்றார்தெளிவறிவதெந்நாளோ. (௧)

மூச்சற்றுச்சிந்தைமுயற்சியற்றுமூதறிவாய்ப்;பேச்ச
ற்றோர்பெற்றவொன்றைப்பெற்றிடுநாளெந்நாளோ. ( )

கோட்டாலையானகுணமிறந்தநிர்க்குணத்தோர்
தேட்டாலேதேடுபொருள்சேருநாளெந்நாளோ. (௩)

கெடுத்தேபசுத்துவத்தைக்கேடிலாவானந்த
மடுத்தோரடுத்தபொருட்கார்வம்வைப்பதெந்நாளோ.

கற்கண்டாலோடுகின்றகாக்கைபோற் பொய்ம்மாயச்
சொற்கண்டாலோடுமன்பர்தோய்வறிவதெந்நாளோ.( )

மெய்த்தகுலங்கல்விபுனைவேடமெல்லாமோடவிட்ட
சித்தரொன்றுஞ்சேராச்செயலறிவதெந்நாளோ. (௬)

குற்றச்சமயக்குறும்படர்ந்துதற்போத
மற்றவர்கட்கற்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ. ( )

தர்க்கமிட்டுப்பாழாஞ்சமயக்குதர்க்கம்விட்டு
நிற்குமவர்கண்டவழிநேர்பெறுவதெந்நாளோ. (அ)

வீறியவேதாந்தமுதன்மிக்ககாலாந்தவரை
யாறுமுணர்ந்தோருணர்வுக்கன்புவைப்பதெந்நாளோ.

கண்டவிடமெல்லாங்கடவுண்மயமென்றறிந்து,கொ
ண்டநெஞ்சர்நேயநெஞ்சிற்கொண்டிருப்பதெந்நாளோ

பாக்கியங்களெல்லாம்பழுத்துமனம்பழுத்தோர்
நோக்குந்திருக்கூத்தைநோக்குநாளெந்நாளோ. (கக)

எவ்வுயிருந்தன்னுயிர்போலெண்ணுந்தபோதனர்கள்
செவ்வறிவைநாடிமிகச்சிந்தைவைப்பதெந்நாளோ. ()

அறிஞருரை.

இருநிலனாய்த்தீயாகியென்றதிருப்பாட்டின்
பெருநிலையைக்கண்டணைந்துபேச்சறுவதெந்நாளோ.()

அற்றவர்கட்கற்றசிவனுமென்றவத்துவித
முற்றுமொழிகண்டருளின்மூழ்குநாளெந்நாளோ. (உ)

தானென்னைமுன்படைத்தானென்றதகவுரையை
நானென்றுவுண்மைபெற்றுநாமுணர்வதெந்நாளோ.()

என்னுடையதோழனுமாயென்றதிருப்பாட்டி
னன்னெறியைக்கண்டுரிமைநாஞ் செய்வதெந்நாளோ.

ஆருடனேசேருமறிவென்றவவ்வுரையைத்
தேரும்படிக்கருடான்சேருநாளெந்நாளோ. (ரு)

அறிவோடறியாமையற்றறிவினூடே
குறியிலறிவுவந்துகூடுநாளெந்நாளோ. (௨

சொல்லான்மனத்தாற்றொடராச்சம்பூரணத்தி
னில்லாநிலையாய்நிலைநிற்பதெந்நாளோ. (௩

செங்கதிரின்முன்மதியந்தேசடங்கிநின்றிடல்போ
லங்கணனார்தாளிலடங்குநாளெந்நாளோ. (௪

வானூடடங்கும்வளிபோலவின்புருவாங்
கோனூடடங்குங்குறிப்பறிவதெந்நாளோ, (௫)

செப்பரியதன்கருணைச்சிற்சுகனார்பூரணத்தி
லப்பினிடையுப்பாயணையுநாளெந்நாளோ. (௬)

தூயவறிவானசுகரூபசோதிதன்பாற்
றீயினிரும்பென்னத்திகழுநாளெந்நாளோ. (௭)

தீதணையாக்கர்ப்பூரதீபமெனநானகண்ட
சோதியுடனொன்றித்துரிசறுவதெந்நாளோ. (௮)

ஆராருங்காணாதவற்புதனார்பொற்படிக்கீழ்
நீரார்நிழல்போனிலாவுநாளெந்நாளோ. (௯)

எட்டத்தொலையாதவெந்தைபிரான்சந்நிதியில்
பட்டப்பகல்விளக்காய்ப்பண்புறுவதெந்நாளோ. (௧௦)

கருப்புவட்டைவாய்மடுத்துக்கண்டார்நாப்போல
விருப்புவட்டாவின்புருவைமேவுநாளெந்நாளோ. (௧௧)

துச்சப்புலனாற்சுழலாமற்றண்ணருளா
லுச்சிக்கதிர்ப்படிகமொவ்வுநாளெந்நாளோ. (௧௨)

இம்மாநிலத்திலிருந்தபடியேயிருந்து
சும்மாவருளைத்தொடருநாளெந்நாளோ. (௧௩)

தானவனுந்தன்மையெய்தித் தண்டமெனவண்டமெங்
கு, ஞானமதயானைநடத்துநாளெந்நாளோ. (௧௪)

ஒன்றிரண்டுமில்லதுவாயொன்றிரண்டுமுள்ளதுவாய்
நின்றசமத்துநிலைநேர்பெறுவதெந்நாளோ. (௧௫)

பாசமகலாமற்பதியிற்கலவாமன்
மாசில்சமத்துமுத்திவாய்க்குநாளெந்நாளோ. (௧௬)

சிற்றறிவுமெள்ளச்சிதைந்தெம்மான்பேரறிவை
யுற்றறியாவண்ணமறிந்தோங்குநாளெந்நாளோ. (௧௭)

தந்திரத்தைமந்திரத்தைச்சாரினவையாமறிவென்
றெந்தையுணர்வேவடிவாவெய்துநாளெந்நாளோ. (௧௮)

போக்குவரவற்றவெளிபோனிறைந்தபோதநிலை
நீக்கமறக்கூடிநினைப்பறுவதெந்நாளோ. (௧௯)

காண்பானுங்காட்டுவதுங்காட்சியுமாய்நின்றவந்த
வீண்பாவம்போயதுவாய்மேவுநாளெந்நாளோ. (௨0)

வாடாதேநாறுவாய்மாயாதேயெங்கோவை
நாடாதேநாடிநலம்பெறுவதெந்நாளோ. (௨௧)

ஆடலையேகாட்டியெமதாடலெலாழித்தாண்டான்பொற்
றாடலைமேற்சூடித்தழைக்குநாளெந்நாளோ. (௨௨)

மேலொடுகீழில்லாதவித்தகனார்தம்முடனே
பாலொடுநீர்போற்கலந்துபண்புறுவதெந்நாளோ. (௨௩)

அறியாதறிந்தெமையாளண்ணலைநாமாகக்
குறியாதவண்ணங்குறிக்குநாளெந்நாளோ. (உ

ஓராமன்மந்திரமுமுன்றுமனம்பரனைப்
பாராமற்பார்த்துப்பழகுநாளெந்நாளோ. (உ

ஊன்பற்றுமென்னோடுறவுபற்றும்பூரணன்பால்
வான்பற்றுங்கண்போன்மருவுநாளெந்நாளோ. (உ

ஆண்டான்மவுனியளித்தவறிவாலறிவைத்
தாண்டாமற்றாண்டித்துலங்குநாளெந்நாளோ. (உ

ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ. (உ

நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்.

கன்மநெறிதப்பிற்கடுநரகென்றெந்நாளு
நன்மைதருஞானநெறிநாமணைவதெந்நாளோ. (

ஞானநெறிதானேநழுவிடினுமுப்பதத்து
ஈனமுத்திநல்குமெனவன்புறுவதெந்நாளோ. (

பன்மார்க்கமானபலவடிபட்டேனுமொரு
சொன்மார்க்கங்கண்டுதுலங்குநாளெந்நாளோ. (

அத்துவிதமென்றவனியச்சொற்கண்டுணர்ந்து
சுத்தசிவத்தைத்தொடருநாளெந்நாளோ. (

கேட்டன்முதலுன்காலேகேடிலாநாற்பதமும்
